கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை


125

மார்சி 2019

ஜீவநதி

200/-

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



12 ஆவது ஆண்டு மலர்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2019 - மாசி

பொருளடக்கம்



சிறுகதைகள்

சிவ.ஆரூரன் - 05
வி.ஜீவகுமாரன் - 14
சர்மிளா வினோதினி - 39
யோகேஸ்வரி சிவப்பிரகாசம் - 51
சாந்தி நேசக்கரம் - 61
தெணியான்- 80
தமிழ்க்கவி - 86
பிரசன்னராஜ் - 94
திக்குவல்லை கமால் - 100

கவிதைகள்

சு.முரளிதரன் - 10
வேல்.சாரங்கன் - 28
எஸ்.சிவசேகரன் - 45
சி.ஜெயசங்கர் - 46
சு.க.சிந்துதாசன் - 56
செல்லக்குட்டி கணேசன் - 56
புலோலியூர் வேல்நந்தன் - 56
யாழவன் - 64
த.ஜெயசீலன் - 68
த.கலாமணி - 72
அ.யேசுராசா - 82
வதிரி சி.ரவீந்திரன் -89
விலெட்சுமி -97
என்.தர்மராஜ் - 89
வர்ணன் -89
சேரன் - 102
சதகன் - 109

தொடர் நாவல்

க.சட்டநாதன் - 45

நேர்காணல்

குப்பிழான் ஐ.சண்முகன் - 57

அட்டைப்படம்

எம் சந்திரகாந்தா - 90
எம்.கே.முருகானந்தன் - 98
வெற்றி துஷ்யந்தன் - 110

பேசும் இதயங்கள்

அட்டைப்படம்


த.ரிலக்சன்

கட்டுரைகள்

நுகர்வோர் வாதமும் இலக்கியமும்
பேராசிரியர் சபா ஜெயராசா - 03

நெஞ்சில் கனக்கும் காதற்காவியம் லியோ டால்ஸ்ராயின் "அன்னா கரீரினா" - சில இரசனைக் குறிப்புகள்
மு.அநாதரட்சகன் - 11

அழகியலில் மெய்யியல் தரிசனத்தை ஆராய்ந்த ஆனந்தகுமாரசாமி
ஈழக்கவி - 17



ஆரம்ப காலத் தமிழ் சிறுகதைகள் பார்வையும் பதிவும்
சி.ரமேஷ் - 30

ஈழகேசரி: சமூகம் - பண்பாடு - மொழி சார்ந்த சில குறிப்புகள்
திசெல்வமனோகரன் - 47

தமிழ் சினிமா : 2018 ஒரு பார்வை
இ.சு.முரளிதரன் - 65

சாமானியரின் குரலாக ஒலிக்கும் சமூக ஊடகம்
க.நவம் - 69

மாக்சிய அழகியல்
கொ.றொ.கொன்ஸ்ரன்ரைன் - 73

தற்கொலையின் திசைபால் பறத்தல் சில்வியா ப்ளாத் - ஒரு பார்வை
கெகிறாவ ஸ்லைஹா - 83

காலங்கள் செய்யும் கோலங்கள்
முருகபூபதி - 92

ஜீவநதி

2019 மாசி இதழ் – 125

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்

துணை ஆசிரியர்கள்
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

பதிப்பாசிரியர்
கலாநிதி த.கலாமணி

தொடர்புகளுக்கு :
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

ஆலோசகர் குழு:
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

தொலைபேசி : 0775991949
0212262225

E-mail : jeevanathy@yahoo.com

வங்கித் தொடர்புகள்
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY

இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 1500/=
வெளிநாடு – $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
K .Bharaneetharan,
Kalaiaham ,
Alvai North west, Alvai.
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan
Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY

ஜீவநதி

(கலை இலக்கிய மாத சஞ்சிகை)

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

ஜீவநதியின் பயணம்...

ஜீவநதி 125 ஆவது சிறப்பிதழ் பன்னிரண்டாவது ஆண்டுமலராக மலர்கிறது. இத்தருணத்தில், ஜீவநதியின் நீண்ட இப்பயணத்தில் எனது அனுபவங்களில் சிலவற்றை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஜீவநதியை ஆரம்பித்தவேளை பத்திரிகைத்துறையில் எமது அனுபவம் போதியதாக இல்லை. ஆனால், யாழ்ப்பாணத்திலிருந்து ஒழுங்காக காலம் தவறாது, தொடர்ச்சியறாது வெளிவருகின்ற சஞ்சிகை ஒன்று இல்லையே என்ற ஆதங்கத்துடனும், ஒரு சஞ்சிகையை தொடர்ச்சியாக வெளியிட வேண்டும் என்ற ஓர்மத்துடனும் தான் ஜீவநதியை ஆரம்பித்தோம். ஆயினும், சஞ்சிகை வெளியீடு அவ்வளவு இலகுவான விடயமல்ல என்பதையும் உணர்ந்து கொள்ளத் தொடங்கினோம். விடயதானங்களைப்பெறல், பொருத்தமானவற்றை தெரிதல், கணினியில் தட்டச்சுப்பிரதியாக்கம் செய்தல், சரவை பார்த்தல், அச்சிடுதல், விநியோகித்தல் என பலவேலைகள் மன அழுத்தத்தையே தந்தன. தனி மனிதனாக அனைத்தையும் ஒரு சவாலாகவே ஏற்றுக் கொண்டேன். எனது அறிவையும் விரிவாக்கம் செய்வதற்கும் முயன்றேன். பக்கம் அமைத்தல், வடிவமைத்தல், அட்டை வடிவமைத்தல் போன்றவை பல்பரிமாணமுள்ளவையாகத் தெரிந்தபோது அவற்றில் ஈடுபாடும் அதிகரித்தது. ஆரம்ப கால இதழ்களையும் இன்றைய இதழ்களையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, ஜீவநதியின் வளர்ச்சி நிலையைக் கண்டு எனக்குள் புளகாங்கிதம் அடையாமல் இருக்க முடியவில்லை. இன்று, ஜீவநதிக்கு ஈழத்தின் பல்வேறு பாகங்களிலும், வெளிநாடுகளிலும் வாசகர்கள் இருக்கின்றார்கள். பல்வேறு எழுத்தாளர்களும் ஜீவநதிக்கு விடயதானங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். புதிய எழுத்தாளர்கள் பலர் ஜீவநதியில் அறிமுகமாகியிருக்கிறார்கள். இப்புதிய எழுத்தாளர்களோடு மூத்த எழுத்தாளர்களும் ஜீவநதியில் எழுதி வருகிறார்கள். குறிப்பாக, இஸ்லாமிய சகோதர எழுத்தாளர்களும் வாசகர்களும் ஜீவநதியில் கொண்டிருக்கும் அபிமானம் வரவேற்கத்தக்கது. ஜீவநதியின் சிறப்பு மலர்கள் அதன் இலக்கியப்பயணத்தில் முத்திரை பதித்தவை. ஆண்டுமலர்கள், பிரதேச மலர்கள், வெளிநாட்டுச் சிறப்பிதழ்கள், குறிப்பிட்ட எழுத்தாளர்களுக்கான சிறப்புமலர்கள், உளவியல், கவிதை, சிறுகதை, ஹைக்கூ, சிறுவர் இலக்கியம் போன்ற விடயதானங்கள் குறித்த சிறப்புமலர்கள், பெண் எழுத்தாளர்களின் சிறப்பு மலர்... என இவை விரியும்.

இந்த இலக்கியப் பயணத்தில் எனக்குக்கிடைத்த இலக்கிய உறவுகளும், தொடர்பு களும், அனுபவங்களும் மறக்கப்பட முடியாதவை. பல மூத்த எழுத்தாளர்களுடன் தாய்-மகன் உறவு, தந்தை மகன் உறவு என உறவுகள் துளிர்த்தன. பலர் எனக்கு ஊக்கம் தருபவர்களாக, நான் துவண்டு போகும் நேரங்களில் ஆறுதல் சொல்பவர்களாக இருந்து வருகின்றனர். ஜீவநதிக்கு கிடைத்த மூன்று விருதுகளும் எனக்குப் பெரும் உந்து சக்தி.

ஜீவநதிக்கு ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளால் ஜீவநதியை கைவிடுவோமா என்றும் எண்ணங்கள் தோன்றும். அச்சடிக்கும் தாள், மை, கூலி என பலவற்றினது விலை உயர்வு என்னைத் திணறடிக்கச் செய்கிறது. திடீர் தீடிரென ஒரு சஞ்சிகையின் விலையை உயர்த்த முடியாது. விளம்பரதாரர்கள் ஒரு சஞ்சிகைக்கு விளம்பரங் கொடுப்பதற்கு பின் நிற்கிறார்கள். வாசகர் வட்டம் விரிவு பெறும் வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. வாசிப்பு பழக்கம் அருகிப் போயிருக்கிறது. மாணவர்களிடம் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். விரிவுபடுத்த வேண்டும் என்ற எண்ணம் ஆசிரியர்களிடம் இல்லை. ஆசிரியர்களிடமே வாசிப்புப்பழக்கமும் தேடல் முயற்சிகளும் இல்லாதபோது, மாணவர்களை வாசிப்பில் ஈடுபாடு கொள்ளச் செய்வார்கள் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும். சில எழுத்தாளர்கள் உட்பட சில கனவான்கள் தமக்கு இலவசமாகப் பிரதிகள் தரப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். மாதம் ஒரு நூறு ரூபா கொடுத்து ஒரு சஞ்சிகையை வாங்க அவர்கள் தயாராக இல்லை. இவை யாவுமே தொடர்ச்சியாக ஒரு சஞ்சிகையை வெளிக்கொண்டு வருவதற்கு உவப்பாக இல்லை.

எமது நாட்டில் வெளிவரும் சஞ்சிகைகளையும் நூல்களையும் சந்தைப்படுத்துவதற் கான பொறிமுறைகள் எதுவுமே இல்லை என்பதும் கவலைக்குரிய விடயம். பாடசாலைகள், பிரதேச சபைகள் கூட ஈழத்து நூல்கள், சஞ்சிகைகளை கவனத்தில் எடுப்பது மிகச் சொற்பம்.

இத்தனை சவால்களுக்கும் மத்தியில் தான் ஜீவநதி வெளிவந்து கொண்டிருக்கிறது. தனி ஒருவனாக பக்கம் அமைத்தல், வடிவமைத்தல், அட்டை வடிவமைத்தல், தட்டச்சு செய்தல், விநியோகித்தல், பிற்ற பணத்தை கடைகளில் இருந்து மீளப் பெறுவதற்காக நாயிலும் விட கேவலமாய் காத்திருத்தல் என அனைத்து வேலைகளையும் செய்து கொள்வதனால் - என்னுடைய உழைப்புக்குரிய ஊதியத்தினால் - ஜீவநதி வெளியீட்டின் ஒரு பகுதிச் செலவைச் "சரிக்கட்டிக் கொள்ள" முடிகிறது. இருப்பினும் ஒவ்வொரு இதழுக்கும் எனது 6000/- பணமும் ஜீவநதியின் தொடர் வருகை வேண்டி செலவழிக்கப்படுகிறது. ஆனால், இது எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது தெரியவில்லை. ஒழுங்கான நித்திரையின்மை உடல் ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கிறது. மன உளைச்சல் உற்சாகத்தைத் தட்டிக் கொண்டு போய் விடுகின்றது.


உண்மையில், இந்த மலருக்குக் குறிக்கப்பட்டுள்ள விலையின் இருமடங்கு செலவு இதன் தயாரிப்புக்குத் தேவைப்படுகிறது ஆனால் அவ்வாறு விலை குறிக்க முடியுமா???

ஆனால் இத்தனை சவால்களுக்கு மத்தியிலும் இச்சஞ்சிகையை தொடர்ந்து வெளிக்கொண்டு வரவேண்டும் என்ற ஓர்மமே துணையாக எஞ்சி நிற்கின்றது. இந்த ஓர்மம் நிலைபேறடைய இறைவன் மீதான நம்பிக்கையே கைகொடுக்கும்.

– க.பரணீதரன்

நுகர்வோர் வாதமும் இலக்கியமும்

பேராசிரியர் சபா. ஜெயராசா



நவீன சமூக பொருளாதார முறைமையை வெளிப்படுத்தும் குறியீடாக அமைவது நுகர்வியம் அல்லது நுகர்வோர் வாதம் (Consumerism). பொருள் களையும் சேவைகளையும் கூடுதல் கூடுதலாக நுகர்ச்சி செய்யத் தூண்டும் ஒரு சமூக முறைமை நவீன உலக மயமாக்கலோடு இணைந்த கருத்தியலாகவுள்ளது.

அந்தக் கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட கலை இலக்கிய ஆக்கங்கள் அதன் எதிர் மறைப் பண்புகளையும் உளவியல் சார்ந்த தாக்கங் களையும் புனைவு வெளிக்குக் கொண்டு வருகின்றன.

மக்களின் நுகர்ச்சியைத் தூண்டுதல், பெரு மெடுப்பு உற்பத்தி முறைமையின் நோக்காவுள்ளது அதற்கு இயைந்தவாறு விளம்பரம் என்பது உணர்ச்சி யூட்டும் கலையாக மாற்றம் பெற்று வருகின்றது.

நுகர்ச்சி என்பது சமூகத்தில் ஓர் அந்தஸ்து சின்னமாகவும்(Status Symbol) வளர்க்கப்பட்டு வரு கின்றது.

மரபு வழியான கிராமிய பொருளாதாரப் பின் புலத்தில் தோற்றம் பெற்ற விழுமியங்களுக்கும் இலக்கியங்களுக்கும் நவீன நுகர்ச்சிச் சமூகத்தின் வேர்களில் இருந்து மேலெழும் இலக்கியங்களுக்கு மிடையே வேறுபாடுகள் உண்டு.

நவீன நுகர்ச்சிச் சமூகத்தில் மனித நடத்தை களும் விழுமியங்களும் விரைந்து மாற்றமடைந்த வண்ணமிருக்கும் நடை, உடை, பாவனைகள், முதலிய வற்றில் விரைவான மாற்றங்கள் ஊக்குவிக்கப்பட்ட வண்ணமிருக்கும். அத்தகைய மாற்றங்களுக்கு ஈடு கொடுக்க முடியாதவர்கள் "காலாவதியானவர்கள்" என அடையாளப்படுத்தப்படும் உளவியற் கோலம் உரு வாக்கப்பட்டுள்ளது.

நுகர்வியம் உருவாக்கும் உளவியற் செயற்பாடு களில் முக்கியமானது அங்கலாய்ப்பு அல்லது பதகளிப்பு (Anxiety). புதிய புதிய பொருள்களை வாங்க முனையும் அவாவும், அவற்றை வாங்குவதற்குரிய கொள்வனவு வலு இல்லாத அவலமும், வறுமையும் பதகளிப்பைத் தூண்டிய வண்ணமிருக்கும் அவற்றை அடியொற்றிய கலை இலக்கியங்கள் மேலெழல் தவிர்க்க முடியாததாகும்.

உலகமயமாதற் செயற்பாடுகள் நுகர்வியத்தை விரிந்து பரவலடையச் செய்து வருகின்றன. நுகர்ச்சிச் செயற்பாடுகள் நகரங்களோடும், புறநகரங்களோடும் கட்டுப்பட்டிருக்கவில்லை. கிராமத்துப்பட்டி தொட்டி களில் எல்லாம் நவீன நுகர்ச்சிச் செயற்பாடுகள் நீட்சி கொண்டு வருகின்றன.

எண்ணிமப் புரட்சியும் நவீன தொடர்பாடல் முறை களும் நவீன நுகர்வுப் பண்பாடும் கிராமங்களை நோக்கி விரிவாக்கம் பெறுவதற்கு விசையூட்டி வருகின்றன.


நவீன கைப்பேசிகளும் அவற்றின் வழியாகப் பொருள்களைக் கொள்வனவு செய்தலும், வங்கிக் கடனட்டைகளும், கிராமங்களிலே பரவலடையத் தொடங்கின. அந்த வளர்ச்சிகளினூடே சமூகத்தின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மேலும் துலக்கமடையத் தொடங்கியுள்ளன.

நுகர்ச்சி என்பது பொருள்களோடு மட்டும் கட்டுப்பட்டிருக்கவில்லை, சேவைகளோடும் அழகியல் நுகர்ச்சியோடும் அது விரிவெழல் கொண்டுள்ளது. அந்நிலையில் கலையாக்கங்களும் வர்த்தக நோக்கிலே

தயாரிக்கப்பட்டு நுகர்ச்சிச் சந்தையிலே பரவவிடப்படுகின்றன.

அந்நிலையில், நுகர்ச்சி வாழ்க்கையின் அவலங்கள், நாவல் எழுத்தாக்கங்களுக்குரிய பன்முக வாழ்க்கைப் பதிவுகளை அள்ளிக் கொடுக்கின்றன.

ஆங்கில இலக்கிய மரபில் நுகர்வியத்தை அடிப்படையாகக் கொண்ட பல நாவல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன. அந்த வகையில் 'வெள்ளைக் குழப்பொலி' (White Noise) என்ற நாவல் குறிப்பிடத்தக்கது. டொன்டிலில்லோ என்பவரால் எழுதப்பட்டது அந்த நாவல். சிறந்த நாவல் வரிசையில் அது இடம்பிடித்துக் கொண்டது.



சமகாலக் குடும்ப வாழ்க்கை திருமணங்கள், சமகால அமெரிக்கப் பண்பாடு, நவீன அங்காடிக் கடைகள் முதலியவற்றை புலமைநிலை அங்கதச் சுவையோடு நாவல் சித்திரிக்கின்றது. 'நுகருங்கள் அல்லது உயிர் விடுங்கள்' என்ற சமகால அமெரிக்க வாழ்க்கை முறை சித்திரிப்புக்கு உள்ளாக்கப் பட்டுள்ளது.

நுகர்வியத்தை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்த நாவல்களுள் 'அமெரிக்க உளக்கோலம்' (American Psycho) என்பதும் முக்கியமானதொன்று. பிரெட் ஈஸ்டன் எலிஸ் அதனை எழுதினார்.

முதலாளியத்தின் வேதனை தரக்கூடிய பண்புகள் அந்நாவலில் இடம்பெற்றுள்ளன. நுகர்வியத்தில் மனிதர் உட்பட அனைத்துப் பொருள்களும் விற்பனைப் பண்டங்களாக மாற்றப்பட்டுள்ளன.


மனித உளக்கோலத்தில் விரவியுள்ள 'இட்' என்ற மிருக உந்துலம் அதனோடு இணைந்த பாலியல் வேட்கை, வன்செயல், போதைப்பொருள் நுகர்ச்சி, விலகல் நடத்தை முதலியவை நாவலில் உள்ளடக்கப் பட்டுள்ளன. வாழ்க்கையே பொருள் சார் நலன்களுடன் முற்றாகக் கலந்து நிறைந்து விட்ட துடிப்புடன் நாவல் நீட்சி கொண்டுள்ளது. மேலோட்டமான வாழ்க்கையே உன்னத வாழ்க்கை என்ற போலிமை உருவாக்கத்தை நாவலின் சித்திரிப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. நவீன நுகர்வியத்தின் போலித்தனங்களும், மனித அவலங்களும் விகாரமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

அந்த நாவலுக்குப் பல துறைகளில் இருந்தும் எதிர்ப்புகள் மேலெழுந்தன. நாவலாசிரியருக்குக் கொலை அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டன. பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்கள் அந்த நாவலை வாசிப்பதற்கு நூலகங்களிலே தடைகள் விதிக்கப் பட்டன.

மூடிய உறையுடன் அந்த நாவல் விற்பனைக்கு விடப்பட்டது. பிரச்சினைக் குரியதாகக் கருதப்பட்ட அது சில மாற்றங்களுடன் திரைப்படமாக்கப்பட்டது.

"அமெரிக்க உளக்கோலம்" நாவலை அடி யொற்றி இசையாக்கமும் மேற் கொள்ளப்பட்டது.

அந்த நாவல் ஒரு விகாரமான சித்திரிப்பு என்று கருதப்பட்டாலும், அது தாங்கி நிற்கும் நுகர்வியம் பற்றிய செய்தி கனதியானது.



நுகர்வியப் பண்பாட்டின் அவலங்களுக்கு எதிராக புதிய இயக்கங்கள் வளர்ச்சி கொள்ளலாயின. அவ்வகையில் தோன்றியவை எதிர்நுகர்வியம், சூழல் பாதுகாப்பு இயக்கம், எதிர் உலகமயமாதல் இயக்கம் முதலியவையாகும்.

நுகர்வியம் தோற்றுவிக்கும் சமூக அவலங்களும் எதிர் மானிடப் பண்புகளும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன. அவற்றை அடியொற்றிய புதிய இலக்கியங்கள் புனையப்படுகின்றன. மிகை இலாப மீட்டும் உற்பத்திச் செயற்பாடுகளினால் இயற்கையும் சூழலும் சூறையாடப்படுதல் தொடர்பாடல் சாதனங்கள் வழியாக அறியச் செய்யப்படுகின்றன. பள்ளிக்கூடக் கலைத்திட்டத்தில் எதிர் நுகர்விய உள்ளடக்கம் இடம் பெறல் வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

நுகர்வியத்தின் அவலங்கள் தொடர்பான உற்றுணர்வை வளர்ப்பதற்கு மாணவரிடையே கட்டுரைப் போட்டிகளும் கருத்தரங்குகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

நுகர்ச்சி தொடர்பான அவா தூண்டப்படுதலும், நுகர்ச்சிக்கு முகம் கொடுக்க முடியாத பொருளாதார வறுமையும் சமூகத்தில் வன்செயல்களைத் தூண்டுகின்றன. ஒழுக்கப் பிறழ்வுகளைத் தோற்றுவிக்கின்றன. நுகர்ச்சி சார்ந்த அவா, சமகால இளைஞர்களிடத்தே அமைதியின்மையைத் தோற்றுவிக்கின்றது.

நுகர்விய எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்ட சமூகச் செயற்பாட்டு இயக்கங்கள், சமய இயக்கங்கள், உளவியற் சீர்மிய நடவடிக்கைகள் முதலியவை வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன.

நுகர்வியம் உளவியல் நிலையிலே தோற்றுவிக்கும் பிரச்சினைகள் விரிவாக ஆராயப்படுகின்றன. மனமுறிவு தாழ்வுச் சிக்கல், உளநெருக்கீடு, அன்னிய மயப்படல், எதிர்நிலையான இசைவாக்கமுறைகள், என்றவாறு பல்வேறு உளவியற் பிரச்சினைகள் மேலெழத் தொடங்கியுள்ளன.


அந்நிலையில் நகர்வியம் பற்றிய பிரச்சினையை தனித்த ஒரு கூறாக நோக்காது முழுச் சமூகக் கட்டமைப்புடனும் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியுள்ளது. பொருண்மியத்தளமே சமூகத்தை உருவாக்கும் அடிக்கட்டுமானமாக இருக்கும் கருத்தியல் முன்மொழிவு மீள் எழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது.

பொருளாதார அடிக்கட்டுமானமே மனித நடத்தைகளைத் தீர்மானிக்கின்றது என்பதை வாழ்க்கைக் கோலங்கள் தெளிவுபடுத்துகின்றன.

நுகர்வியம் பற்றிய ஒரு வரி பின்வருமாறு:

"நுகர்வியம் மனிதரையே
நுகர்ந்து விட்டது"

இலக்கியமும் கலைகளும் புதிய உலகக் கோலங்களுடன் நீட்சி கொள்ளத் தொடங்கியுள்ளன. சமகாலத் தமிழ் இலக்கியங்களிலும் கலையாக்கங்களிலும் நுகர்விய எதிர் விசைகள் கருத்தாடல்களாக்கப்படுதலைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.



மாய எழுச்சி

சிவ.ஆளுரன்

1996 இன் நடுப்பகுதி; ஒரு மாலை வேளை நெல்லியடிச் சந்தியை நோக்கி வடக்குத் தெற்காகக் கிடக்கும் வீதியின் வழியே என் சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்தேன்.

"இப்ப காலம் வேறை எண்டதை நினைவிலை வைச்சுக்கொண்டு பொழுது பட முன்னம் வீட்டை வரப்பார், தம்பி" என நான் சைக்கிளை வெளியே எடுத்துவந்தபோது அம்மா எச்சரித்தமை என் நினைவில் நின்று கொண்டிருந்தது.

நெல்லியடிச் சந்தியில் மிதந்து, சைக்கிளை யாழ் வீதிக்கு திருப்பியவேளை கதிரவனின் ஒளி பளிச் என்று முகத்தில் பாய்ந்தது. கண்களைச் சற்றுக் கூசியவாறே சைக்கிளை மிதித்தேன். மாலை வெய்யில் பொன் திரவம் போல் சூழல் எங்கும் வழிந்து கொண்டிருந்தது. கடந்த இரு நாள்களாகக் காய்ச்சலினால் படுக்கையில் வீழ்ந்து கிடந்த களைப்பு சைக்கிளை மிதிக்கும் போது தெரிந்தது. உடல் இளைப்பாக விருந்தது; மூச்சு வாங்கியது.

பிரதான வீதியில் மக்கள் நடமாட்டம் ஓரளவிற்குக் காணப்பட்டது. கடை வரிசைக் கட்டடங்களின் நீள் நிழல் வீதியில் பாதியை நிரப்பியிருந்தமையால் இடது பக்கமாகச் செல்லும் எனக்கு அவை நிழலளித்துக் கொண்டிருந்தன. சற்று ஆறுதலாகவிருந்தது.

என் நண்பன் சிவதாசனைச் சந்திக்க வேண்டி நாவலர் மடத்திலிருக்கும் அவனது வீட்டை நோக்கியே சென்று கொண்டிருந்தேன். நாம் இருவரும் அடுத்த ஆண்டு க.பொ.த உயர்தரம் பரீட்சைக்குத் தோற்றவிருந்தோம். அதற்கப்பால் நாம் பால்ய கால நண்பர்கள். எப்போதும் ஒன்றாகவே இருப்போம்.

நான் காய்ச்சல் காரணமாக பாட சாலைக்கோ ரீயூசனுக்கோ சமூகமளித்திருக் காமையால் அங்கு கற்பிக்கப்பட்ட பாடங்கள் குறித்து அறிய வேண்டியிருந்தது. சிவதாசனிட மிருந்து பயிற்சிக் கொப்பிகளை வாங்கிச் சென்று இரவோடு இரவாக எழுதி முடித்து விட்டால் நாளை முதல் வழமையான எனது கற்றல் செயற் பாடுகளில் ஈடுபட முடியும் எனத் தீர்மானித்த வாறே வீட்டிலிருந்து புறப்பட்டிருந்தேன்.

பிரதான வீதியிலிருக்கும் சிவதாசனின் வீட்டுப் படலையை அண்மித்தேன் சைக்கிளை நிறுத்தி விட்டுப் படலையூடு எட்டிப் பார்த்தேன். அவனது அம்மம்மா வீட்டு முகப்பில் காலை நீட்டியவாறு அமர்ந்திருந்து பாக்கு உரலை இடித்துக்கொண்டிருந்தார்.

" அம்மம்மா! தாசன் எங்கை?" என்று கேட்டேன்

அவர் படலையைக் கூர்ந்து பார்த்த வாறே "தம்பி நீயே... நான் தனியத்தான் வீட்டுக்குக் காவலாக இருக்கிறன். மற்றவர்கள் எல்லாம் ஏதோ பாட்டுக்கோஸ்டி பாக்க

போறம் எண்டிட்டு உதில மூத்த விநாயகர் கோயிலுக்குப் போட்டினம்" என்றார்.

"சரி அம்மம்மா, நான் அங்க போய்ச் சந்திக்கிறன்" என்றுவிட்டு மூத்தவிநாயகர் கோயிலை நோக்கி மீண்டும் சைக்கிளை மிதித்தேன்.

கோயிலுக்கு அருகமைவாக முச்சந்தியில் நின்ற பெரிய ஆலமரம் தொலைவிலேயே என் கண்களுக்குப் புலப்பட்டது. ஒலிப்பெட்டிகளிருந்து "கும்கும்" என்ற இடியொலி காற்றில் கலந்த வந்து கொண்டிருந்தது.

அந்த ஆலமரம் என்னுள் அந்த நினைவைக் கிளறிவிட்டது.

1996 இன் முற்பகுதி...

யாழ் நகரை அரச படை சென்ற ஆண்டின் இறுதியில் கைப்பற்றியதோடு குடாநாட்டின் மூன்றி லொரு பகுதி, அதாவது முந்நூறு சதுர கிலோ மீற்றர்கள் அரசின் வசமாகியிருந்தது. வலிகாமத்தில் வாழ்ந்து வந்த ஐந்தரை லட்சம் மக்களும் அங்கிருந்து முற்றாக இடம்பெயர்ந்து தென்மராட்சி வடமராட்சி வன்னி ஆகிய பிரதேசங்களில் சிதறி வாழ நேரிட்டது.

வலிகாமம் முற்றாக இழக்கப்பட்டிருந்த நிலையில் இயக்கத்தினர் தமது ஆளணிகளைப் பெருக்கிக் கொள்ளும் முயற்சிகளில் மும்முரமாக ஈடு பட்டுக் கொண்டிருந்தனர். போர்க்காலக் கருத்தரங்கு களை நடாத்துதல், போராட்டம் சார்ந்து திரைப்படங் களையும், ஒளி வீச்சுக்களையும் பொதுவிடங்களில் காட்சிப்படுத்துதல், வீதி நாடகங்களை அரங்கேற்றுதல் போன்ற வழிமுறைகளைக் கைக்கொண்டு இரவு பகலாக இடையறாது பரப்புரைகளைச் செய்து வந்தனர்.

அக்காலப் பகுதியில் தென்னிந்திய சினிமாத் திரைப்படங்கள் முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்தன. சினிமாப்பாடல்களை சத்தமாக ஒலிக்க விடுதல்; இசைக் குழுக்களில் மேடையேறிப் பாடுதல் போன்றவையும் இயக்கத்தினரால் தடைசெய்யப்பட்டிருந்தன. இந்நிலையில் போராட்டம் சார்ந்த திரைப்படங்கள் என்றாலும் மக்கள் திரண்டு சென்று பார்வையிட்டனர். திரைப்படங்களை எவ்வாறேனும் பார்க்கவேண்டும் என்ற தவிப்பையே அது காட்டியது. ஏனெனில் அதை ஒரு பொழுது போக்காகவே மக்கள் பார்த்தனர். அத் திரைப்படங்களைப் பார்த்தவர்கள் மீண்டும் தத்தம் வீடுகளுக்குத்திரும்பினரே ஒழிய போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்ள முன்வரவில்லை.

பின்னர் மேலும் ஒருபடி சென்று தனி மனித பரப்புரைகளைச் செய்யத் தொடங்கினர். வீதியில் சைக்கிள்களில் பயணிக்கும் இளைஞர்களை வழி மறித்து இயக்கத்தில் இணைந்து கொள்ளுமாறு கோரினர்; கெஞ்சியும் பார்த்தனர். கிடைத்த பயன் என்னவென்பது அவர்களுக்கே வெளிச்சம். எனக்குத் தெரிந்த மட்டில் மூவர் மாத்திரமே இயக்கத்தில் இணைந்து கொண்டனர்.

இவ்வாறான ஒரு சூழலில் தான் ஒரு நாள் சிவதாசனும் நானும் எம் ரியூசன் வகுப்பை முடித்துக் கொண்டு கரணவாயிலிருந்து புறப்பட்டு மூத்த விநாயகர் கோயில் ஆலமர முச்சந்தியில் ஏறி நெல்லி யடிப் பக்கமாகத் திரும்பிய போது அந்த ஆலமரத்தின் கீழ் நின்றிருந்த இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஓர் இளைஞன் எங்களின் சைக்கிள்களின் முன்பாகக் கையை நீட்டி மறித்தான். நாம் இருவரும் அவனைக் கவனித் தோம். கறுப்பு நிற நீளக்காற்சட்டையும் பருத்தித் துணியிலான பச்சை நிற மேலாடையும் அணிந்திருந் தான் கழுத்தில் கறுப்பு நூல் ஒன்று தொங்குவது தெரிந்தது. கைக்கடிகாரத்தினை உள்ளங்கைப் பக்கமாகக் கட்டியிருந்தான். சாதாரண பாதணிகளையே (slippers) அணிந்தும் இருந்தான். அவன் ஓர் இயக்க உறுப்பினனாக இருக்கக் கூடுமென எண்ணினோம்.

"வணக்கம்! தம்பியவை உங்களோட கொஞ்சம் கதைக்கலாமோ?" என்று கேட்டான். அவன் கேட்ட தொனியும் மொழிக்கையாட்சியும் எங்கள் சந்தேகத்தைப் போக்கின. நாங்கள் சைக்கிள்களோடு வீதியோரமாக நின்று கொண்டோம். அவன் எங்களின் சைக்கிள் கரியரில் கிடந்த பயிற்சிக் கொப்பிகளைக் கண்களால் நோட்டம் விட்டுக் கொண்டே ஒவ்வொரு கேள்வியாக எங்களிடம் கேட்கத் தொடங்கினான்.

" எங்கை போட்டு வாறியள்?" என்று கேட்டான்.

"ரியூசன் முடிஞ்சு வீட்டை திரும்பப்போறம்" என்றேன்.

"எத்தனையாம் வகுப்பு?"

அடுத்த வருசம் ஏ.எல் எடுக்கப்போறம்"

"என்ன பாடம்?"

"கணிதம்"

அவனது கேள்விகளுக்கு நானே பதில் கூறிக்கொண்டிருந்தேன். சிவதாசனோ நானே அவனது பிரதிநிதி என்றாற்போல அமைதியாக நின்றிருந்தான்.

"கணிதம் படிக்கிறதால நீங்கள் கெட்டிக்காறராத்தான் இருப்பீங்கள்" என்று இலேசான சிரிப்போடு கூறி விட்டு, "ஏ.எல் சோதினைக்கு முன்னம் ஆமி இஞ்சை வந்திடுவான் போல தெரியுது" என்றான்.

அதற்கு எங்களின் பதில் மௌனம்.

"தம்பியவை பதிலைச் சொல்லுங்கோவன்" என்றான் அழுத்தமான குரலில்.

சிவதாசனும் நானும் ஆளையாள் பார்த்துக்கொண்டோம்.

அவன் மீண்டும் "எதிரி பாட்டோடையும் கூத்தோடையும் வந்து உங்கட வாசற் கதவைத் தட்டுவான் அப்ப நீங்கள் என்ன செய்யப்போறியள்?" என்று கேட்டான்.

எமது பதில் மௌனமே.

அவன் தொடர்ந்தான்: "தம்பியவை வலிகாமத்தைப் பிடிச்ச ஆமிக்கு வடமராட்சியையும் தென்மராட்சியையும் பிடிக்கிறது பெரிய வேலை யில்லை. இயக்கம் அடிக்கும் எண்டிட்டு நீங்கள் சும்மா இருக்கேலாது. இயக்கத்திட்ட ஆயதம் இருக்க அதை ஏந்துற கரங்கள் தான் இல்லை. உங்களைப்போன்ற ஆற்றல் பொருந்திய இளைஞர்கள் ஆயுதம் ஏந்த முன்வர வேணும் என்ன சொல்லுறியள்?"

அவன் நேரடியாகவே விடயத்திற்கு வந்தான்.

"நாங்கள் படிக்க விரும்புறம்" என்றேன்.

"தம்பி கல்வி கற்கிறதுக்கு உரிய சூழல் முதலில் உருவாக வேணும். நீங்கள் வந்து போராடுங்கோ. உங்கட அடுத்த தலைமுறை சுதந்திர நாட்டில படிக்குங்கள். தம்பி! எங்கட மக்களைப்பற்றியும் நீங்கள்

கொஞ்சம் யோசிக்க வேணும் சமூகத்தைப் பற்றி முதலில் யோசிக்க வேணும். உங்களைப்பற்றிப் பிறகு யோசிக்கலாம். வலிகாமத்துச் சனம் எல்லாம் இடம்பெயர்ந்து சரியாகக் கஸ்ரப்படுகுதுகள். நாங்கள் தான் அவையளின்ர இடத்தை மீட்கவேணும்"

சிவதாசன் இப்போது மௌனத்தைக் கலைத்தான்.

"அண்ணா வலிகாமத்துச் சனம் இடம் பெயர்ந்து இஞ்சையும் வந்திருக்கினம். அவையள் பின்னேரம் கடற்கரைக்குப் போய் காற்று வாங்கி யினம். பொய் எண்டால் பருத்தித்துறைத் துறைமுகத் துக்குப் போய்ப்பாருங்கோ. எத்தனைப்பேர் பின்னேரம் கப்பல் பாக்க வருகினம் எண்டு தெரியும். அவை சந்தோசமாகத்தான் இருக்கினம்"

"தம்பி சிலபேர் அப்படித்தான் இருப்பினம்"

"இல்லை பல பேர் அப்படித்தான்" சிவதாசன் மறுத்துரைத்தான்."

அந்தப் பலபேரில நீங்களும் ஓராளாக இருக்கப்போறியளோ? நீங்கள் முதலில் வாங்கோ. அவையள் உங்களைப் பின்தொடர்ந்து வருவினம்" அவன் ஏதோவொரு நம்பிக்கையில் பேசினான்.

"நாங்கள் உழைச்சுக் குடும்பத்தைப் பாக்க வேணும்" என்றான் சிவதாசன் கதையை மாற்றும் பொருட்டு.

அவன் சிரித்தபடி "எனக்கும் குடும்பம் இருக்குத்தான். உங்களைப்போல தான் நானும்; ஒரு தமிழ்த் தாயின் வயிற்றில் பிரசவிக்கப்பட்ட குழந்தை. எனக்கு இருக்கிற பொறுப்பு ஏன் உங்களுக்கு இல்லை எண்டு நினைக்கிறியள்?" என்று கேட்டான்.

"நாங்கள் சண்டைக்குப் போனால் ஆமி எங்களைச்சுட்டுக் கொல்லுவான் செத்தாப்பிறகு என்ன வாழ்க்கை கிடக்கு" என்று சிவதாசன் கூறியதும் அவன் புன்னகை மாறாத முகத்தோடு "அது பிரச்சனையில்லை நீங்கள் இயக்கத்துக்கு வந்து இப்ப நான் செய்யிற அரசியல் பணியைச் செய்யுங்கோ நான் சண்டைக்குப் போறன்" என்றான்.

சிவதாசன் பதில் கூறவில்லை.

அவன் மீண்டும் தம்பிக்கு இயக்கத்துக்கு வர விருப்பம். ஆனா பயம், என்ன?" என்று கூறிச் சிரித்தான்.

பிறகு அவன் என்னையும் பார்த்து "தம்பிக்கும் பயமோ?" என்று கேட்டான்.

எனக்குச் சிவதாசன் மீதே கோபம் வந்தது. சும்மா வாயை வைத்திராது பேசுகின்றானே என்றெண்ணி எரிச்சலுற்றேன்.

"பதிலைச் சொல்லுங்கோவன்" அவன் தூண்டினான்.


நான் அமைதியைக் கடைப்பிடிக்கவே விரும்பினேன். அவன் பேசுவதைப்பேசி முடிக்கட்டும் எப்படியாவது மத்தியானச் சாப்பாடுக்கு அவன் எங்களை விட்டு விடத்தானே வேண்டும் என்ற நம்பிக்கை என் மனதிலிருந்தது சிவதாசனும் என்னையே பின் பற்றி நடந்து கொண்டான்.

அவனோ சற்றேனும் மனந்தளராது பேசிக் கொண்டிருந்தான். மக்கள் படும் அவலங்களை மிகவும் சோகமாக விவரித்தான். இடையிடையே உணர்ச்சி வசப்பட்டுங் கொண்டான். இருமணி நேரமாகத் தொடர்ந்து எங்களோடு பேசித்தான் பார்த்தான். எங்களுடைய மனங்களை அவனால் கரைக்கவே முடிய வில்லை.

இறுதியாக அவன் "இப்ப என்ன சொல்லுறியள்" என்று கேட்டான்.

நாங்கள் அவனைப் பார்த்துச் சிரித்தோம்.

"சரி, நீங்கள் இண்டைக்குப் போங்கோ வீட்டை போயிருந்து நான் சொன்னதைப்பற்றி ஆழமாக



யோசியுங்கோ. வேறையொரு நாள் சந்திப்போம்" என்று கூறி எங்களைச் செல்ல அனுமதித்தான்.

நாங்கள் சைக்கிள்களில் ஏறி மிதித்தோம். இடை வழியில் சிவதாசன் என்னிடம் கூறினான்.

"மச்சான்! பாலாவியில இருக்கிற பொம்பிளைப் பிள்ளையளின்ர பயிற்சி முகாம் சாமானுகள் எல்லாத்தையும் வாகனத்தில் ஏத்துகினம். சீற்றூகள், தகரங்கள், மரந்தடி எண்டு எல்லாத்தையும் ஏத்துகினம். வன்னிக்குக் கொண்டு போறதாகக் கேள்விப்பட்டேன்."

"அப்படியெண்டால் ஆமி வடமராட்சிக்கு வந்திடும் எண்டு இயக்கமும் நம்புது போல" நான் அவனின் முகத்தைப் பார்த்து அதிர்ச்சியோடு கேட்டேன்.

"ஆமி வந்தால் கரைச்சல் இல்லை போல" என்று சிவதாசன் வாயைச் சுழித்தவாறே கூறினான்.

" என்னடா சொல்லுறாய்!?" நான் வியப்போடு கேட்டேன்.

" பின்ன என்னடா? முதலில் சினிமாப் படத்தைத் தணிக்கை செய்தாங்கள். பிறகு அதை முற்றாகத் தடைசெய்தாங்கள் பொதுவிடயங்களில சினிமாப்பாட்டு ஒலிபரப்புறதை நிப்பாட்டினாங்கள். இசைக் குழுக்களில சினிமாப்பாட்டு பாடத் தடை போட்டாங்கள். இப்ப படிப்பையும் நிப்பாட்டப் போறாங்கள் போல தெரியுது" அவனின் குரலில் சினம் வெளிப்பட்டது.

"சினிமாப் படத்தால என்ன பயன்? சின்ன ஜமீனில் தக்காளிப்பழம் உறுட்டுறதையும் ஜென்ரில் மேனில முள்ளுப்பாக்கிறதையும் பாக்க விடாதது தான் இப்ப உனக்குப் பிரச்சினை போல" என்றேன் சற்று எரிச்சலோடு.

"அப்படியெண்டில்லை, இயக்கம் இஞ்சை இருக்கும் வரையில் பொருளாதாரத் தடை இருக்கும் அரசாங்கம் ஒருக்காலும் அதை எடுக்காது. கறண்ட் இல்லை; சீமேந்து இல்லை; பெற்றோல் இல்லை; அங்கு வவுனியா, திருகோணமலைப்பக்கம் சனங்கள் ஆமியோடு தானே இருக்குதுகள் சகலதையும் அனுபவிச்சுக் கொண்டு சந்தோசமாகத்தானே இருக்குதுகள்..." இவ்வாறு சிவதாசன் நலன்கள் குறித்தே பேசி கொண்டு வந்தான். நான் பதிலேதும் கூறாது மௌனமாகக்கேட்டுக்கொண்டு வந்தேன்.

தொடர்ந்து வந்த நாள்களில் இயக்கத்தினரின் பரப்புரை தீவிரப்படுத்தப்பட்டது. பொதுவாக நீளக்காற்சட்டை அணிந்து வீதி வழியே உலாவும் இளைஞர்களே இலக்கு வைக்கப்பட்டனர். அதே வயதுடைய இளைஞர்கள் சறம் உடுத்தபடி சைக்கிள் களில் சென்றால் அவ்விளைஞர்களை இயக்கங்கள் தத்தம் வேலை நிமித்தம் செல்பவர்களாகவோ அல்லது குடும்பத்தைத் தாங்குபவர்களாகவோ கருதப்பட்டனர். நாம் இந்த ஓட்டையை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கினோம். நாமும் சறத்தோடு ஒரு பின்னல் பையை சைக்கிள் கை பிடியில் தொங்க விட்டபடி வீதியில் நடமாடத் தொடங்கினோம். அப்பின்னல் பையிலேயே எம் புத்தகங்கள் இருந்தன. எம்மை யாரும் வீதியில் மறிப்பது கிடையாது. எங்களால் அவர்களை இலகுவாக உச்ச முடிந்தது.

இவ்வாறிருக்க அரச படை வலிகாமத்திலிருந்து தென்மராட்சி நோக்கி முன்னேறியது இயக்கத்தினர் எதிர்ப்பு ஏதும் காட்டவில்லை. மாறாக மக்களைத் தம்மோடு வன்னிப்பெருநிலப்பரப்பிற்கு வருமாறு அழைத்தனர். பெரும்பான்மையான மக்கள் வன்னிக்குச் சென்று இடர்பட விரும்பவில்லை. அரச கட்டுப் பாட்டுப் பிரதேசத்திற்கு செல்லவே விரும்பினர்.

ஈற்றில் வலிகாம மக்கள் அரச படையினர் பகுதியை நோக்கி நகரத் தொடங்கினர். இயக்கத்தவரும் அதைத் தடுக்கவில்லை. அவர்கள் வன்னிக்குப் பின்னகர்ந்தனர். மே மாதம் அளவில் அரச படை எவ்வித இழப்புமின்றி தென்மராட்சியையும் வடமராட்சியையும் கைப்பற்றி யாழ் குடா நாட்டைப் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.

குடா நாட்டின் மீதான பொருளாதாரத் தடை அரசினால் நீக்கப்பட்டது. கப்பல் மூலம் பொருட்கள் கொண்டு வரப்பட்டமையால் விலைகள் உயர்வாகவே காணப்பட்டன. திரையரங்குகளில் தென்னிந்திய சினிமாப்படங்கள் தணிக்கைகள் எதுவுமின்றிக் காண்பிக் கப்பட்டன. மக்களிடம் திரைப்படம் பார்க்கும் ஆசை அதிகமாகக் காணப்பட்டமையால் மினி சினிமாக்கள் முளைத்தன. (மினி) சினிமா- சிறிய தகர/ கிடுகுக் கொட்டகைகளில் தொலைக்காட்சி மூலம் திரைப்படம் காண்பிக்கப்படும் இடம்.) இசைக்குழுக்களில் சினிமாப்பாடல்கள் பாட்ப்பட்டன. மூன்று மாத இடைவெளியில் குடாநாட்டின் நிலைமை இவ்வாறு மாறியிருந்தது. "அப்பன் எப்போது சாவான், திண்ணை எப்போது காலியாகும்" என்றாற் போல் இருந்தது.

என் பழைய நினைவிலிருந்து நான் மீண்ட போது என் சைக்கிள் அந்த ஆலமரத்தடியை அடைந் திருந்தது. ஆனால் அந்த அவன் இப்போது இல்லை. மாறாக இருபடைச்சிப்பாய்கள் அவ்விடத்தில் நின்றிருந்தனர். ஒரு சிப்பாய் கையைக் குறுக்காக நீட்டி என்னை மறித்தான். நான் சைக்கிளிலிருந்து இறங்கிப் பவ்வியமாக நின்றேன்.

"மல்லி! ஐடி காட்டுறது" என்றான்.

நான் தேசிய அடையாள அட்டையையும் பிறிகேட்பாஸையும் (Brigade pass) அவனிடம் காட்டி நான் இப்பிரதேச வாசி என உறுதிப்படுத்தினேன்.

"எங்கை போறது?" என்று கேட்டான்

"கோயிலுக்கு" நான் கோயிலிருக்கும் திசை நோக்கிக் கையை காட்டிக் கூறினேன்.

"நல்லம்...நல்லம்...பாட்டுக் கேக்கிறது; என்ஜோய் பண்ணுறது" என்று சிரித்தபடி கூறி என்னைக் கடந்து செல்ல அனுமதித்தான்.

ஆலய முன்றலில் அமைக்கப்பட்டிருந்த மேடை யில் இசைக்குழுவினர் இன்னிசை மழை பொழிந்து கொண்டிருந்தனர். தேர்முட்டியை அண்மித்தாற் போல வடக்கு நோக்கிச் செல்லும் பாடசாலை வீதியில் சைக்கிளை உருட்டியபடி சென்றேன். தேர்முட்டிக்கு அருகே வீதியோரமாகச் சைக்கிளை நிறுத்திவிட்டு அதனருகே நின்று கொண்டேன். என்னருகே இன்னொரு வயதான நபரும் நின்றிருந்தார். அப்போது பாடல் நிறைவு பெற்று, அடுத்த பாடலுக்கான அறிவிப்பைச் செய்யத் தொகுப்பாளர் மேடைக்கு வந்தார். அந்நேரத்தில் கோப்ரல் தர அதிகாரி ஒருவன்

என்னருகே வந்து, "பாட்டு நல்லமா?" என்று கேட்டான்.

நான் இலேசாகச் சிரித்தபடி மேலுங்கீழுமாகத் தலையை அசைத்தேன்.

பிறகு அவன் சிங்களத்தில் ஏதோ கேட்டான்.

எனக்கு எதுவும் புரியவில்லை. என்னருகே நின்றிருந்த பெயரிவர் என்னிடம் " அவர் என்ன சொல்லுறார் எண்டால், எல்.ரீ.ரீ. இஞ்ச இருந்தால் இந்த மாதிரிப் பாட்டுக் கேக்க முடியுமோ? இப்ப நீங்கள் எல்லாரும் சந்தோசமாத்தானே இருக்கிறியள்" என்றார்.

அக்கோப்ரல் மீண்டும் என்னிடம் தன் மொழியில் ஏதோ கூறினான். நான் மீண்டும் என்னருகே நின்றவரையே பார்த்தேன். "சந்திரிக்கா அம்மணி தான் இந்த வரப்பிரசாதத்தைத் தந்தவா. அவ செய்ததை நீங்கள் ஒருநாளும் மறக்கக் கூடாது. நீங்கள் அவவை மதிக்க வேணும்" என்று அவர் மொழி பெயர்த்துக் கூறினார்.

அக் கோப்ரல் மீண்டும் என்னிடம், "தம்பி! ஆமி நல்லமா? எல்.ரீ.ரீ. நல்லமா?" என்று கேட்டான் நானோ வாயைச் சற்றுக் கோணியவாறு நாணிச் சிரித்தேன்.

அப்போது மேடையில் ஒரு பாடகர், "ஐ லவ் யூ லவ்யூ லவ்யூ லவ்யூ சொன்னாளே... உள்ளத்தை அள்ளியள்ளித் தந்தாளே..." என்று தொடங்கிப் பாடினார். இரசிகர்கள் ஆரவாரம் செய்தனர்.

இருபதுவரையான சிப்பாய்கள் ஆலயத்தைச் சூழ நின்றிருந்தனர். பாடசாலை வீதியில் ஓரிரு சிப்பாய்கள் இலேசாக நடனம் ஆடிக் கொண்டிருந்தனர். ஒதுக்குப் புறமான ஓர் இடத்தில் இரு சிப்பாய்கள் புகைத்துக் கொண்டிருந்தனர். சிப்பாய்கள் அனைவரும் ஆயுதம் தரித்திருந்தனர். ஆயினும் ஒரு சிலரே ஆலயத்துக்கு முதுகு காட்டியவாறு, T56 2 றைபிள்களை கைகளில் ஏந்தி உசார் நிலையிலிருந்தனர். ஏனையோர் (றைபிள்களைத்) தோளில் தொங்க விட்டிருந்தனர்.

கோயிலில் பக்தர்களில் பெரும்பான்மையினர் இரசிகர்களாக மாறியிருந்தனர். அந்த இரசிகர்கள் மத்தியில் சிவதாசனைக் கண்களால் தேடிக் கண்டு கொண்டேன். அவன் தனது ஊர் நண்பர்களோடு தரையில் அமர்ந்தபடியே பாடலை உற்சாகமாக இரசித்துக் கொண்டிருந்தான். நான் வேட்டி அணியாது நின்றமையால் கோயில் வீதிக்குள் நுழைய விரும்பவில்லை. அருகிலிருந்தவரிடம், "எப்ப இது முடியும்?" என்று கேட்டேன்.

"எப்பிடியும் ஐஞ்சு மணிக்கு முன்னம் முடியத்தானே வேணும். இது யாழ்ப்பாணத்து இசைக்குழு. ஊரடங்குச் சட்டத்துக்கு முன்னம் திரும்பிப் போக வேணும் தானே. இந்த ஊரடங்குச் சட்டத்தால தானே இப்ப நடக்குது. இல்லாட்டி கோஷ்ரி இரவு தானே நடந்திருக்கும்" அவர் ஒரு சிறுவிளக்கம் தந்து என் சந்தேகத்தைப் போக்கினார். பிறகு, "ஏன் தம்பி நேரத்தோட வரேல்லை? இப்ப முடியிற நேரமா வந்திருக்கிறியள்" என்றார். நான் சிறந்த இசையைத் தவற விட்டு விட்டேன் என்று கவலையடைவது போல் தெரிந்தது. நான் பதில் கூறாது சிரித்தேன். நிகழ்ச்சி நிறைவடையும் வரை காத்திருக்க முடிவு செய்தேன்.



நூல்
ஒரு தோட்டத்தின் கதை
(சிறுகதைத் தொகுதி)
ஆசிரியர்
குப்பிழான் ஐ. சண்முகன்
வெளியீடு
ஜீவநதி
விலை: 300/-

மேலும் இரு பாடல்கள் நிறைவடைந்த பின்னர் அந்த அறிவிப்பாளர் மேடைக்கு வந்து பேசினார். "இரசிகப் பெருமக்களே! உங்கள் உற்சாகத்தைக் காணும் போது இன்னும் இன்னும் இசை மழை பொழிய வேண்டும் போல் தோன்றுகிறது. ஆயினும் நாட்டின் சூழ்நிலை குறுக்கிடுகிறதே. ஆகையால் நாம் நிகழ்ச்சியை நிறைவு செய்ய வேண்டிய தருணத்தில் உள்ளோம். உங்கள் செவிகளுக்கு மட்டுமல்லாது, உங்கள் மன உணர்வுகளுக்கும் விருந்தாக இதோ இறுதிப் பாடல் வருகிறது. "அச்சம் என்பது மடமையடா" இதோ அந்தப் பாடல் உங்களுக்காக. பாடலைத் தர வருகிறார் உங்கள் அலெக்ஸ்"

என் அருகில் நின்றவர், "தம்பி! அலெக்ஸ் ரீ.எம்.எஸ். இன்ர பாட்டை அவர் மாதிரியே பாடுவான்" என்று அலெக்ஸிற்குப் புகழ் மாலை சூடினார்.

அலெக்ஸ் மேடைக்கு வந்து பாடத் தொடங்கினார்.

"அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடமையடா..." என்று தொடர்ந்தது. அலெக்ஸின் குரல் ரீ.எம்.சௌந்தரராஜன் ஐயாவின் குரலை அசப்பில் ஒத்திருந்தது. இரசிகர்கள் கரவொலி எழுப்பிக் கொண்டிருந்தனர்.

அலெக்ஸ் அப்பாடலை முடிக்கும் போது,
"ஆறிலும் சாவு நூறிலும் சாவு
ஈழம் காப்பது கடமையடா; தமிழ்
ஈழம் மீட்பது உறுதியடா!" என்று சபையை நோக்கி ஒலி வாங்கியைப் பிடித்திராத மறுகையை உயர்த்திக் காட்டி பாடினார்.

இரசிகர்களின் கரவொலி, சீழ்க்கையொலி எழுந்து வானைப் பிளந்து கொண்டிருந்தன. படைச் சிப்பாய்களிற் சிலர் இரசிகர்களை மேலும் உற்சாக மூட்டும் பொருட்டு கரவோலி எழுப்பினர். நான் கூட்டத்திலிருந்த சிவதாசனை அப்போது பார்த்தேன். அவன் கூக்குரல் இட்டு, அவ்வப்போது படைச் சிப்பாய் களையும் பார்த்தவாறு மூர்க்கத்தனமாக கரவொலி எழுப்பிக் கொண்டிருந்தான்.

அப்போது என் மனதில் தோன்றிய உணர்விற்கு என்ன பெயரென்று இன்றுவரை எனக்குத் தெரியவில்லை.

அழுக்கு மனிதன் ஆசனம்



வாரநாட்களில்
காலை நேர
அவசரங்களையும்
அவஸ்தைகளையும்
சுமந்தவர்களை
அடுக்கி அடுக்கி
பின் வேக வேகமாக
தரிப்பிடங்களில்
துப்பித்துப்பிச்சென்ற பேரூந்து
வந்த திசையில்
மீளப்பணிக்கும் போது
ஏறி இறங்குவோர்களில்
பலர் ஒரு வகையில்
ஏதிலிகள் போலவே தெரிகின்றார்கள்.

அயர்ன் பண்ணிய ஆடைக்குள்
நுழைத்துக்கொண்ட
தோல் சுருக்கங்களுடனான
ஓய்வு பெற்றவர்கள்
இருமிக் களைத்த நோயாளர்கள்
சந்தைக்கு செல்லும்
வாழ்ந்து களைத்த தாய்மார்கள்
பாலர்களை மீட்டு வர
முன்பள்ளி செல்லும்
வாலிப அன்னைமார்கள்
வேலை தேடிச்செல்லுதலையே
வேலையாகக் கொண்டவர்கள்
பரீட்சை பெறுபேறு வரும்வரை
பொறுத்திருப்போர்
இத்தியாதிகளை
ஐதாக அடுக்கியபடி
அங்குலம் அங்குலமாக
அசையும் அந்த
மத்தியான பேரூந்தில்
அரைநாள் லீவு போட்ட
நானும்
என்னை செருகிக்கொள்கின்றேன்
நின்று கொண்டு செல்லும்
ஒரு பயணியாக...

அடுத்த நிறுத்தத்தில்
ஏறுகின்றான்
ஓர் அழுக்கு மனிதன்!
அவனின் ஆடையும் வாடையும்
எல்லோர் முகத்திலும்
பூக்க வைத்த வெளிப்பாடுகள்
எல்லோரையும்
ஒரு கணம் ஒருங்குசேர
முகமூடியிட வைத்தது!

அவன் நின்ற இடத்தின்
அருகே
அமைந்த ஆசனத்தில்
இருந்த இருவரும் போட்டியிட்டு
எழும்பி அவனை
அமர வைத்தனர்.

அவர்களும் நின்று
பயணித்தவர்களும்
மிக நிதானமான தூரத்தில்
மறுபுறமாக திரும்பி
மேற்பிடி கம்பியில்
ஒவ்வாமை நோயாளர்களாக
தொங்கிக்கொண்டார்கள்....

அடுத்த நிறுத்தத்தில்
அவன் இறங்கிக்கொண்டான்
நின்றவர்கள்
குருடர்களானார்கள்
வெற்று ஆசனத்தை
விழித்திரைகள் விழுங்க
மறுத்தன
தொடர்ந்த இரண்டு நிறுத்தங்கள்
மௌனமாக
கடக்கப்பட்டன

அடுத்த நிறுத்தத்தில்
காப்புறுதி முகவர் போன்ற
டிப் டொப் இளைஞன்
ஏறினான் – சட்டென
அதில் அமர்ந்தான் –
அவன் முக மலர்ச்சிக்கும்
அழுக்கு மனிதனுக்கும்
தொடர்பில்லை

ஆனால்
குனிந்த நிலையில்
நின்று கொண்டிருந்தோர்
அவனுக்கு
கேள்விக்குறிகள் போல
தெரிந்தார்கள்

இவைகள்

தெருக்கள்
விபத்துகளால்
அலங்கரிப்படுகின்றன

வீடுகள்
வன்முறைகளால்
வெள்ளையடிக்கப்படுகின்றன

பாடசாலைகள்
துஷ்பிரயோகங்களால்
பூத்துக்கொள்கின்றன

அலுவலகங்கள்
கையூட்டுகளால் கம்பீரம்
கொள்கின்றன

கோயில்கள்
விஷமூட்டப்பட்ட பிரசாதங்களால்
ஆசிர்வதிக்கப்படுகின்றன

வைத்தியசாலைகள்
மேன்மட்ட குற்றவாளிகளால்
வனப்பூட்டப்படுகின்றன


சிறைச்சாலைகள்
கொள்கை வகுப்போரின்
முகவரிகளாகின்றன

தொழிற்சாலைகள்
நோயாளர்களைத்தரும்
அமுதசுரபிகளாகின்றன

பாராளுமன்றங்கள்
பிரஜைகளின்
சுவாரஷ்ய களங்களாகின்றன

மிருகாட்சிசாலைகள்
விலங்கு கழிவுகளால்
நாற்றமடிக்கின்றன.

■ மு. அநாதரட்சகன்



நெஞ்சில் கனக்கும் காதற் காவியம், லியோ டால்ஸ்ராயின் "அன்னா கரீரினா" (Anna Karenina) சில இரசனைக் குறிப்புக்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியை ரஷ்ய இலக்கியத்தின் பொற்காலம் என ஆய்வாளர்கள் கணிப்பர். உலக இலக்கியங்களுள் மிகப்பிந்திய காலத்தில் பிறப்பெடுத்து உலகத்தரவரிசையில் முன்னிலை வகிப்பது 'ரஷ்ய இலக்கியம்' எனில் மிகையல்ல. குறிப்பாக, 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றி 19ஆம் நூற்றாண்டில் செழுமை அடைந்த குறுகிய கால வரலாறு ரஷ்ய இலக்கியத்துக்கு உண்டு. இக் குறுகிய காலத்தில் உலகின் கவனத்தை ஈர்த்ததற்குக் காரணம் வாழ்க்கையை வாழ்க்கையாகவும், உலகை உலகாகவும் அவற்றின் உண்மையான அர்த்தத்தில் கண்டமையே ஆகும்.

இக்காலகட்டத்தில் தான் ரஷ்ய இலக்கியத்துக்கு டால்ஸ்ராய், டாஸ்டா யெவஸ்கி என்ற இரு மேதமைகள் தங்களது பங்களிப்பினை வழங்கியிருந்தனர். இதில் டால்ஸ்ராயின் படைப்புக்கள் தனித்துவமானவை.

தமிழ் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ரஷ்ய எழுத்தாளர்களில் இவர் முக்கியமானவர். அவரது படைப்புக்கள் பலவும் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு ஒரு காலத்தில் பரவலான வாசிப்புக்கும் உள்ளானவை. டால்ஸ்ராய் மகாத்மா காந்தியின் குரு எனக் கூறுமளவுக்கு எமக்கு அறிமுகமானவர். 1828ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28ஆந் திகதி ரஷ்யாவின் தென்பகுதியில் பிறந்த டால்ஸ்ராய் உலகப்புகழ்பெற்ற எழுத்தாளராக 82 ஆண்டுகள் வாழ்ந்து 1910ஆம் ஆண்டில் இறந்து போனார்.

அவரது படைப்புகளின் சிறப்பு யாதெனில், மனித வாழ்வின் விரிந்த தளமும் மாறுபட்ட பாத்திரங்களின் சித்தரிப்பு முறையும் செழுமை பெற்றிருந்தமை எனலாம். தவிர, உலகளவில் அவரது படைப்புகளுக்குக் கிடைத்த வரவேற்பும் ஏனையவர்களிலிருந்து அவரைத் தனித்துவமானவராகக் காட்டியது. அத்துடன், அவரது படைப்புக்கள் பல கருத்தியல் கோட்பாடுகளைக் கொண்டிருந்தாலும், அவற்றில் அவரது வாழ்வியல் அனுபவங்கள் இழையோடியிருந்தன. அவற்றின் களங்களும் உள்ளடக்கங்களும் கூட அவரது வாழ்வில் ஏற்பட்ட மாறுதல்களின் பதிவுகளே ஆகும்.

அவரது படைப்புக்களான குழந்தைப்பருவம் (Childhood), நில உடமையாளனின் முற்பகல் (Morning of a land owner) ஆகியவை அவரது இளமைக் காலம் பற்றிய பதிவுகளாக இருந்தன. கசாக்கியர் (Cossaks) என்ற படைப்பு, அவர் காக்கசஸ் என்ற இடத்தில் போர்வீரனாக இருந்தபோது, நேரில் கண்ட போர்வீரர்களின் வாழ்க்கை பற்றிய பதிவாக இருந்தது.

டால்ஸ்ராயின் பேரிலக்கியங்கள் என்ற வகையில், 'போரும் சமாதானமும்' (War and Peace), 'அன்னா கரீரினா' (Anna Karenina) என்பவை விதந்துரைக்கப்படுகின்றன. இவற்றில் அவரது போர் எதிர்ப்புக் கருத்துக்களும் பிரபுத்துவ உயர்குடி வாழ்க்கை மீதான வெறுப்பும் அதன் போலித்தனங்களும் சிக்கல்களும் நுட்பமாக எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

இதில் 'அன்னா கரீரினா' என்ற நாவல் உலகின் சிறந்த காதற்காவியமெனப் போற்றப்படுகின்றது. படைப்பிலக்கியத்தில் காதற்கதை எழுதுவதென்பது சாதாரண காரியமல்ல. காதற்கதைகளில் உலாவரும் பாத்திரங்கள்

உயிரோட்டமுள்ளவையாகவும் அழகியல் தன்மை யுடனும் படைக்கப்படவேண்டும். இது அவ்வளவு சுலபமானதல்ல. டால்ஸ்ராய் போன்ற மேதமைமிக்க ஒரு தெய்வக்கலைத்தச்சனால் தான் இதனைப் படைக்கமுடியுமென தாஸ்த்தாயேவஸ்கி ஒரு தடவை கூறினார்.

இந்நாவலில் வருகின்ற பாத்திரங்கள் வாழ்க்கையின் மீதான ஆசாபாசங்களைக் கொண்டவர் களாகவே படைக்கப்பட்டுள்ளார்கள். நித்தமும் பழகு கின்ற மனிதர்களே இந்நாவலில் வந்துபோகிறார்கள். இப்படைப்பின் சிறப்பு, டால்ஸ்ராய் தனது பாத்திரங் களை வர்ணிக்க முயலவில்லை என்பதுதான். பாத்தி ரங்களே தம் இயல்பினால் தம்மை வெளிப்படுத்தி விடுகின்றன. பாத்திரங்களைப் பேசவைத்து, சிரிக்க வைத்து, அழவைத்து அவற்றின் குணாம்சங்களை இனங்காண வைத்துவிடுகிறார்.

நாவலின் முதல் வரியிலேயே கதையின் சோகம் வெளிப்பட்டுவிடுகின்றது.

"எல்லா மகிழ்ச்சியான குடும்பங்களும் ஒன்றோடு ஒன்று ஒத்திருக்கின்றன. ஒவ்வொரு மகிழ்ச்சியற்ற குடும்பமும் அதற்கே உரித்தான முறை யில் சந்தோசமின்றி இருக்கிறது"


நாவலின் கதைச்சுருக்கம் இவ்வாறு அமை கின்றது. ஸ்ரிபன் அர்க்காதியேவிச் (ஸ்டீவ்) வீட்டு வேலைக்காரியோடு காதல் கொண்டு விடுகிறான். இச் செய்தி அவன் மனைவி டாலிக்குத் தெரிந்துவிடுகிறது. தன் கணவனோடு ஒரே வீட்டில் வாழ அவள் விரும்ப வில்லை. அவளுக்கு வாழ்க்கை கசந்துபோய்விடுகிறது. இவர்களது பிரச்சனையைச் சமாதானம் செய்துவைக்க ஸ்டீவின் உடன்பிறந்தவளான அன்னா கரீரினா வரு கிறாள். அவள் பீட்டர்ஸ்பேக்கில் உயர்ந்த பதவி யிலுள்ள அரச அலுவலர் கரீனின் என்பவரது மனைவி. கல்யாணமாகி ஒன்பது வருடங்கள் ஓடிவிட்டன. அவளுக்குச் செரேஷா என்ற குழந்தையும் இருக்கிறது. ஆனால் இந்த வாழ்க்கை அன்னாவுக்குப் பிடிக்க வில்லை. இன்பமளிக்கவில்லை. அன்னா ஒரு அழகு தேவதை. வனப்புமிக்கவள். விரான்ஸ்கியின் தாயா ரோடு அன்னா சேர்ந்து புகைவண்டியில் பயணம் செய்ய நேர்கிறது. தனது தாயை மாஸ்கோ நகரத்து ரயில் நிலையத்தில் பார்க்க வந்த விரான்ஸ்கியை அன்னா சந்திக்கிறாள். அவனது அழகில் மயங்கி விடுகிறாள். இருவரும் காதல்வயப்பட்டு விடுகிறார்கள். டாலியின் சகோதரி கிட்டி (Kitty) அவனிடத்தில் காதல் கொண்டிருக்கிறாள் என்பதையறிந்த அன்னா அவர் களுக்கு உதவ முன்வருகிறாள். ஆனால், அன்னாவின் பேரழகில் ஆழ்ந்துவிட்ட விரான்ஸ்கி கிட்டியை மறந்து விடுகிறான். கிட்டியின் மீது உண்மைக்காதல் கொண்ட லெவின் (Levin) அவளை மணக்கிறான். விரான்ஸ்கியை அன்னா நடனவிருந்தொன்றில் மீண்டும் சந்திக்கிறாள். இருவரும் அடிக்கடி சந்தித்துக்கொள்கிறார்கள். கரை கடந்த காதல் வெள்ளம் பாய்கிறது. ஒரு நாள் தன் காதல் பற்றி கணவன் கரீரினிடத்தில் தெரிவித்து விடு கிறாள். "நான் உனக்கு மனைவியல்ல விரான்ஸ்கிக்கே உரியவள்" என்கிறாள்.

ஒரு சமயம் அன்னாவுக்குச் சுகவீனம் ஏற்படு கிறது. அதைக் கேள்வியுற்று கணவன் கரீரின் மனைவியைப் பார்க்கப்போகிறான். அவளது காதலன் விரான்ஸ்கியும் அங்கே வருகிறான். மூவரும் சந்தித்துக் கொள்கிறார்கள். விரான்ஸ்கி குற்றவுணர்வால் தன்னைத் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலைக்கு முயல்கிறான். கடும் நோயிலிருந்து அன்னா சுகமடைந்து விடுகிறாள். அதேவேளை விரான்ஸ்கியும் தப்பிப் பிழைத்து விடுகிறான். மறுபடியும் அவர்களிடையே காதல் புத்துயிர் பெறுகிறது. அணைந்து கொண்டிருந்த தணல் சுடர் விட்டெரிகிறது. இருவரும் இத்தாலிக்கும் போய் வாழ் கிறார்கள். பின்னர், சில நாட்களிலேயே ரஷ்யாவுக்குத் திரும்பி வந்து விடுகின்றனர். ஆனால், அன்னாவின் மனம் அமைதியை இழந்து விடுகிறது. காதல் இன்பமும் தேய்ந்துகொண்டு வருகிறது. காமசுகம் அவளுக்குச் சஞ்சலத்தையே தருகிறது. அவன் மனதில் ஐயம் குடிகொண்டு நம்பிக்கை வரட்சி ஏற்படுகிறது. காதலன் விரான்ஸ்கியையும் சந்தேகிக்கின்றாள். தன்னையும் நொந்துகொள்கிறாள். அவளை மனச்சாட்சி துரத்தியபடி யிருக்கிறது. இருவருக்குமிடையில் ஒரு சந்தர்ப்பத்தில் சிறுவிடயத்தில் மனஸ்தாபம் ஏற்பட்டுவிடுகிறது. கிராமத்திலுள்ள தன் தாயைப் பார்க்கப் போகிறான் விரான்ஸ்கி. அன்னாவும் அவனைப் பின் தொடர்ந்து செல்கிறாள். ரயில் நிலையத்தில் தன் காதலன் இனி மேல் திரும்பி வரமாட்டான் என்ற செய்தியை உணர் கிறாள். இதனை அவளால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. தாங்கொணாத்துயர் அன்னாவை ஆட் கொள்கிறது. துயரின் உச்சத்தில் ரயில் சக்கரங் களுக்குள் விழுந்து தன்னை மாய்த்துக்கொள்கிறாள்.

இந்நாவல் 1875இலிருந்து புகழ்பெற்ற பத்திரிகை யொன்றில் பகுதிபகுதியாக வெளிவந்து 1877இல் தான் முழுநாவலாக வெளிவந்தது. இந்நாவலில் அன்னா விரான்ஸ்கியைக் காதலிக்கும் சந்தர்ப்பங்கள், அன்னா வுக்கும் கணவனுக்கும் ஏற்படுகின்ற வாக்குவாதங்கள், அன்னாவை விரான்ஸ்கி கைவிடும் தருணம், அன்னா கணவன் கரீரினைச் சந்திக்கும் வேளை இடம்பெறும் உரையாடல் என எல்லாச் சம்பவங்களும் நாவலில் உச்சஸ்தானத்தை அடைகின்றன. டால்ஸ்டாயின் எழுத் தின் மேதமையை இந்த இடங்களில் தரிசிக்க முடிகிறது. அத்துடன், காதலுடன், ரஷ்யநாட்டின் வரலாற்றையும் அதன் பொருளாதார நிலைமைகளையும் நிலவுடைமை யாளர்களது நிலைமைகளையும் இந்நாவலில் விபரித் துள்ளார்.

அன்னாவின் கணவன் கரீரின் நல்ல மனிதராக வும் உயர் அரச அதிகாரியாகவும் கருணை மிகுந்தவராக வும் படைக்கப்பட்டுள்ளார். எனினும், தன் மனைவி யையோ மகனையோ நேசிக்கவில்லை. அவர்களை அடிக்கடி சந்திப்பதுமில்லை. தன்னுடைய பதவியிலேயே கண்ணாயிருந்தவர், குடும்பத்தை நேசிக்கவில்லை. ஒரு கண்ணியமான மனிதனாகவும் நடந்து கொள்ளவில்லை. அதனை மறைக்க மதத்தை ஒரு கேடயமாகப் பயன் படுத்துகிறார். இறுதியில் இவரை மன்னிக்கும்படி அன்னா கடவுளைப் பிரார்த்திக்கிறாள்.


கணவனுடனும் கள்ளக்காதலனுடனும் வாழ்வது அன்னாவுக்கு முடியாத காரியமாகிப் போகிறது. அவளால் அது இயலவில்லை. அவள் காதலனும் இதை விரும்பவில்லை. காதலன் கணவனை விவாகரத்துச் செய்துவிட்டுத் தன்னுடன் வந்துவிடுமாறு கூறுகிறான்.



ஆனால், அவள் கணவன் கரீரினோ விவாகரத்துக்கு மறுத்து விடுகிறான். தனது குடும்பக் கௌரவத்துக்குக் களங்கம் ஏற்படுத்திய அன்னா நிம்மதியாக வாழக்கூடாது என்ற வன்மம் அவனிடத்தில் தெரிகிறது.

உயர்குடியில் பிறந்து உயர்ந்த இடத்தில் வாழ்க்கைப்பட்ட ஒரு பெண் ஒழுக்கநெறியை மீறிவிடுகிறாள். அப்பெண்ணின் இக்குற்றத்தைப் பெரிதாகச் சித்திரிக்காது, அவளது பரிதாபகரமான நிலையையே இந்நாவலில் டால்ஸ்ராய் முன்னிலைப்படுத்தியுள்ளார்.

டால்ஸ்டாயின் காதல் காவியமான இக்கதை திரைப்படமாகவும் வெளிவந்தது. இந்நாவல் அநேக உலகமொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டதுடன், உலகிலேயே அதிக பிரதிகள் விற்கப்பட்ட நூல்களில் ஒன்று என்ற பெருமைக்கும் உரியது. இதில் வருகின்ற பாத்திரங்கள் முற்றிலும் கற்பனையானவையல்ல. அன்னா, விரான்ஸ்கி, கரீரின், அப்லான்ஸ்கி, கிட்டி, டாலி, லெவின் போன்ற பாத்திரங்கள் என்றும் நினைவில் நிற்பவை. உயிர்ப்புள்ள பாத்திரங்களாக அவற்றைப் படைத்துள்ளார். இக்கதையில் வரும் லெவின் என்ற பாத்திரம் தன்னையே ஒத்ததாகப் படைத்துள்ளார். டால்ஸ்டாயின் பழக்கவழக்கங்கள், நடத்தைகள், சிந்தனைகளைக் கொண்டதாகவே அதனைப் படைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



நாவலில் அன்னாவின் காதலன் விரான்ஸ்கி தான் தோன்றித்தனமாகத் திரிந்த ஒருவனாகவும் அன்னாவின் புனிதமான காதலைப் புரிந்துகொண்டு அந்த வாழ்க்கையை அனுபவிக்காதவனாகவும் இறுதியில் தன் காதல் தேவதை அன்னாவை இழந்துவிட்டு, தன்னையும் அழித்துக்கொள்ளும் நோக்குடன், போருக்குப் போகிறான் என்பதும் நாவலில் அழகாக வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

ரஷ்யப் புரட்சியின் நாயகனான லெனின் தனது 'லியோ டால்ஸ்ராயும் அவரது சகாப்தமும்' என்ற கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"'அன்னா கரீரினா'வில் வரும் லெவின் பாத்திரம் மூலம் டால்ஸ்ராய் கடந்த அரைநூற்றாண்டில் ரஷ்ய வரலாற்றில் நடந்த திருப்புமுனையின் இயற்கைத்தன்மையினை வெகு நேர்த்தியாக வெளிப்படுத்தியிருக்கின்றார். தான் வாழ்ந்த காலத்தில் இருந்த ரஷ்யாவின் பொருளாதாரப் பிரச்சனைகள், விவசாயப் பிரச்சினைகளை மிகவும் சாதாரணமாகப் பேசு கின்றனர் இந்த நாவலில் வருகின்ற பாத்திரங்கள்" என லெனின் எழுதினார்.

அந்த வகையில், இந்நாவல் என்றும் அழியாக் காதற் காவியமாக நூற்றாண்டுகள் பல கடந்தும் வாசகர்களால் விரும்பிப்படிக்கப்படும் உன்னதங்களைக் கொண்டுள்ளது.



அலைகள்

வி.ஜீவகுமாரன்

ஆத்திசூடியும் பாரதியார் பாப்பா பாடல்களும் சுகந்தாவின் காலடியில் கிடந்தன.

அவற்றை தனது சின்ன வயது புத்தக அலுமாரியில் இருந்து எடுத்து வந்து வீசியெறிந்த சுசானாவின் கண்கள் சிவந்திருந்தன. உதடுகள் துடித்தபடி இருந்தது. சுகந்தாவை ஆதரவாக கட்டிப் பிடித்து அழுது கொண்டிருந்தாள்.

"அறம் செய விரும்பு"

"ஆறுவது சினம்"

"இயல்வது கரவேல்"

20 வருடங்களுக்கு முன்னால் இருவரும் வெள்ளைச் சட்டையுடனும் கறுத்த கழுத்துப் பட்டியுடனும் வெள்ளை நிற காலணிகளுடனும்... சுகந்தா கைகளை பின்னால் கட்டிய படியும்... சுகந்தா கைகளை முன்னால் கட்டியபடியும் தனித் தனியே பேச்சுப் போட்டியில் பேசியவை இன்று போலுள்ளது.

சுகந்தா பாரதியாராக... சுசானா ஔவையாராக...

ஜேர்மனி முழுக்க உள்ள தமிழ் பாட சாலைகளில் அன்று மனனம் செய்து ஒப்புவிக்கும் போட்டியில் குறைந்தது ஆயிரம் சிறுவர்களின் குரலில் "அறம் செய விரும்பும்...", "பொய் சொல்லக் கூடாது பாப்பாவும்" ஒலித்துக் கொண்டிருந்தன.

ஒவ்வோர் பிரதேச ஆசிரியர்கள் மற்றைய பிரதேச மாணவர்களுக்கு மத்தியஸ்தர் களாய் கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள்.

முதலில் நகரசபைகள் மட்டத்தி லும் பின்பு மாவட்ட மட்டத்திலும் அதன் பின்பு மகாண மட்டத்திலும் இந்தப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இறுதிப் போட்டியில் ஜேர்மனி யின் வட பகுதியில் இருந்து சுகந்தாவும் தென்பகுதியில் இருந்து சுசானாவும் பங்கு பற்றியிருந்தார்கள்.

சுகந்தா இலங்கையில் பிறந்து தனது பெற்றோருடன் கைக் குழந்தையாக இருக்கும் பொழுது ஜேர்மனிக்கு வந்தவள்.

சுசானா இலங்கையில் இருந்து வந்த ஒரு குடும்பத்தின் அருகே சிறுவயதில் இருந்து பழகி விளையாடி அந்தப் பிள்ளைகளின் பாட்டியின் பாடல்களால் கவரப்பட்டு தமிழ் படிக்க விரும்பியவள்.

இறுதிப் போட்டியில் முதல் பரிசு இருவருக்கும் என அறிவிக்கப்பட்ட வேளை யில் இருவரும் முதன் முதலில் மேடையில் இருவரும் கட்டித் தழுவிக் கொண்டதில் ஆரம்பமானது தான் இந்த உறவு.

போட்டியில் சுசானாதான் வெற்றியாளராக அறிக்கப் பட்டிருக்க வேண்டும் என்பது மக்களின் தீர்ப்பாயும்... "என்னதான் சொன்னா லும் ஒரு ஜேர்மன் பிள்ளையை முதலிடத்திற்கு வரவிடக் கூடாது", என்று திரைக்குப் பின்னால் நடந்த கருத்தாடல்கள் பின்னாளில் இருநடுவர் குடும்பங்களுக்கு இடையில் நிர்வாக மோதல் வந்த பொழுது வெளிக்கசிந்த உபசெய்தி.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தாம் சென்ற நாடுகள் எல்லாவற்றி லும் தமிழையும் கலாசாரத்தை யும் பேணிக்காப்பாற்றுகிறார்கள் என லங்காசிறி பெருமைப்பட்டுக் கொண்டு இருந்தது.

*

குழந்தைப் பருவத்தையும், குமரிப் பருவத்தை யும் தாண்டி பல்கலைக்கழக நுழைவாயில் வயது வந்த பொழுது மீண்டும் அவர்கள் இருவரும் ஒரே பல்கலைக்கழகத்தில் ஒரே துறையில் இணைந்தார்கள்.

"காலமையோடை எழும்பி படி... ரி. வி. பார்க்காதே... கைத்தொலை பேசியை நோண்டிக் கொண்டு இராதே" என்ற தாயின் கண்டிப்போ...

"மற்ற ஜேர்மன் பிள்ளையள் மாதிரி நீ உழைச்சுப் படிக்க வேண்டும் என்ற நிலை உனக்கில்லை... உனக்காகவும் சேர்த்து தான் நான் இரண்டு வேலை பார்க்கிறன்... நீ நல்ல ரிசல்ட் எடுத்தால் போதும்" என்ற தகப்பனின் அரவணைப்பும் அதன் பின்பு இருந்த எதிர்ப் பார்ப்புகளோ...

எந்த திருப்பள்ளியெழுச்சியோ திரு வெம்பாவையோ

இல்லாத காலைப்பொழுதாக பல்கலைக்கழக காலைப்பொழுதுகள் எப்போதும் அமைதியாக அமைந்திருந்தன சுகந்தாவிற்கு.

காலையில் பல்கலைக்கழகம்... மாலையில் சுசானாவுடன் அரட்டைகள்... மாலையில் ஒன்றாக இணைந்து விடுதியில் சமையல்... சனி - ஞாயிறுகளில் நகரத்தினுள் ஒரு சுற்று சுற்றி அங்கு உணவுண்டு சில வேளை படமும் பார்த்து... விடுதிக்கு திரும்பி வந்த பின்பு என்னதான் தூக்கங்களை இருந்தாலும் முகத்தைக் குளிர்ந்த தண்ணீரால் கழுவி விட்டு பாடப்புத்தகங் களுடன் போராடிக் கொண்டிருந்த பொழுது தான் அந்த சுனாமி வந்தது.

ஒன்றாக சமைக்கும் அந்த சமையலறையில் தான் அது நிகழ்ந்தது.

அந்த ஜேர்மனிய இளைஞன் அடிக்கடி வந்து சுகந்தாவிடம், "அதனை இரவலாக தாருங்கள்... இதனை இரவலாக தாருங்கள்", எனக் கேட்கும் பொழுது அவனுடன் சேர்ந்து 'அது'வும் தன்னை நெருங்குவதை அவள் உணர்ந்த பொழுது... அதனிட மிருந்து தள்ளி தள்ளி பின்னாலேயே சென்றாள்.

"இதுக்குத்தானா உன்னைப் படிக்க விட்டனாங்கள்" என தாயும் தகப்பனும் மோலாக அவர்கள் வாழ்ந்த நகரமே அவளை மிரட்டுவார்கள் என்று எண்ணிய பொழுது இன்னமும் இன்னமும் பின்னாலேயே சென்றாள்.

புத்தகத்தினுள் ஒன்ற கண்கள் மறுத்தன. கணனியில் கட்டுரை எழுதும் பொழுது கைவிரல்கள் மெதுவாகவே இயங்கியன.

இவள் மறுக்க மறுக்க 'அது' மேலும் மேலும் அவளை நோக்கி நோக்கி வந்தது.

அடுத்த சிலநாள் அவன் சுசானாவுடன் பேசிக்கொண்டு திரிந்த பொழுது மனதினுள் சின்னப் பொறுமையாயும் இருந்தது.

"ஆம்பிளையே இப்பிடித்தான் ஒருத்தி இல்லாவிட்டால் இன்னொருத்தியிடம் போய் விடுவான்" என மனத்தினுள் திட்டினாலும் சுசானா மீது தான் பொறாமைப்படுவது போல உணர்ந்தாள்.

அடுத்த சனி சுசானாவுடன் கோப்பி பாரில் இருந்து கதைத்துக் கொண்டிருந்த பொழுது சுசானாவே கேட்டாள், "நீ அவனை விரும்புறியா?" என.

"என்ன" என்பது போல தலையை நிமிர்த்தினாள்.

"உண்மையைச் சொல்லு... பி ஒனஸ்ற்.... அவன் எல்லாம் எனக்கு சொல்லி விட்டான்.... "

சுகந்தாவின் உதடுகள் துடித்து கண்கள் கலங்கின.

நடுங்கிய அவளது கைகளை சுசானா ஆறுதலாகப் பிடித்துக் கொண்டாள்.

"அப்பா அம்மாவை நினைத்தால் தான்....." சொல்லி முடிக்க முடியாது திக்கித்தபடி தவித்தவள், "நோ... நோ... என்னாலை எதுவும் சொல்ல முடியாது" உறுதியாகச் சொல்லி விட்டு குனிந்த தலைநிமிராமல் தனது கோப்பிக் கிண்ணத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

"நீ இப்படியே அழுது கொண்டிருந்து விட்டு அப்பா அம்மா கொண்டுவாற ஒரு எஞ்சியினரை அல்லது டொக்டரைக் கட்டிக் கொண்டு இரு... இப்படி ஒருத்தன் எனக்கு கிடைத்திருந்தால் இத்தருணம் அவனுடன் எனக்கு முதலிரவு முடிந்திருக்கும்"

சுசானாவை சுட்டெரிப்பது போல சுகந்தா பார்த்தாள்.

"வேண்டாமடி... உன்ரை ரோமியோ எனக்கு வேண்டாம்... எனக்கும் ஒரு ஹம்லட் கிடைப்பான்" என்ற வாறு எழுந்து செல்ல நினைத்தவளை சுகந்தாவின் கைகள் இறுக்கமாகப் பற்ற மீண்டும அவளை அரவணைத்த படியே இருந்தாள் - கன்னங்கள் வழியே கண்ணீர் ஓட.

*

சுகந்தாவுக்கும் அவனுக்கும் இடையேயான தாச்சி மறிப்பு அடுத்த விடுமுறைவரை தொடர்ந்து கொண்டே யிருந்தது.

இவளால் மறுக்கவும் முடியாது ஏற்கவும் முடியாது இருந்தது.

அலைகள் எழுந்தும் தாழ்ந்தும் கொண்டேயிருந்தன.

அவன் அவளை முழுமையாக ஏற்றுக் கொண்ட விதமாகவே அவளுடன் பேசியும் பழகிக் கொண்டும் இருந்தான்.

பொதுச் சமையறையில் சுகந்தாவும் சுகானாவும் சமைப்பதை எடுத்து சுவைப்பதும் தான் சமைப்பதை இவர்களுக்கு இடைக்கிடை பரிமாறுவது மாக நடந்து கொண்டே இருந்தான்.

நாளாக நாளாக சுகந்தாவின் கைகள் அவளையும் அறியாமல் ஒரு அரைச்சிறங்கை அரிசியை அதிகமாகவே பாத்திரத்தில் போடத்தொடங்கியது.

கண்களும் அவனைச் சாப்பாட்டு வேளையில் தேடத்தொடங்கியது.

சுசானா விளையாட்டாக "ஏன் அதிகமாக சமைத்திருக்கிறாய்" எனக் கேட்பதும்... "நாளைக்குமாய் சேர்த்து சமைத்தேன் " என சமாளிப்பதும்... சுசானா உதட்டினுள் நமுட்டுச் சிரிப்பு சிரிப்பதாயும் நாட்கள் ஓடிக் கொண்டு இருந்தது.

முதலாம் ஆண்டு வின்ரர் விடுமுறைக்கு அனை வரும் கிறிஸ்மஸ் லீவு நெருங்கிக் கொண்டு இருந்த பொழுது "அவளின் சம்மதம் எனக்கு இந்த வருட கிறிஸ் மஸ் பரிசாக கிடைக்குமா" என சுசானாவிடம் கேட்டான்.

அன்னம் தூது வந்து தமயந்தியின் தோளில் உட்கார்ந்து கொண்டது.

அன்றிரவு முழுக்க சுகந்தா தூங்கவேயில்லை.

அவளது கனவில் அலைகள் எழுந்தும் தாழ்ந்தும் வந்து கொண்டேயிருந்தன.

பெரிய இராட்சதக் கப்பலில் தகப்பன் - தாய் - அண்ணன் - தம்பி - அக்கா சித்தப்பா பெரியப்பா- சின்ன மாமா பெரிய மாமா அனைவரும்...

அந்த இளைஞன் சிறிய துடுப்புபடகில்...

இவள் கரையில் கதறியபடி...

நடுநிசியில் திடுக்கிட்டு எழும்பியவளின் தேகமெல்லாம் வியர்த்திருந்தது.

மிகுதி இரவு தூக்கமில்லாத இரவாக கழிந்தது.

அடுத்தநாள் காலையில் தத்தம் நகரங்களுக்கு செல்வதற்கு புகையிரநிலையத்தில் சுகந்தாவும் சுசானாவும் காத்திருந்த பொழுது அவன் சின்ன 2 பாசல்களுடன் வந்து "ஹப்பி கிறிஸ்மஸ்" என்றபடியே இவர்களிடம் நீட்டினான்.

தயங்கியபடியே சுகந்தா பெற்றுக் கொண்டாள்.

"எனக்கு ஒன்றுமில்லையா?" சிரிந்தபடியே கேட்டான்.

"சிலவேளை புதுவருடப் பரிசு கிடைக்கலாம்" என அர்த்தம் புரிய இருவரையும் பார்த்தபடி சுசானா சொன்னாள்.

சுகந்தா மெதுவாக தலையை நிமிர்ந்து பார்க்க தூரத்தில் புகையிரதம் வந்து கொண்டிருந்தது.

அவன் தன் தலையைக் கோர்த்தபடி, தன் வாயில் ஒரு சிகரட்டை எடுத்து வைக்கும் பொழுது," சிகரட் பெட்டியில் உடலுக்கு தீமை பயக்கும்" என்று எழுதி யிருப்பதை பார்ப்பதில்லையா" என மெதுவாக கேட்டாள்.

புகையிரதம் கிட்டவந்த பொழுது வாயில் இருந்த சிகரட்டையும் பொக்கற்றில் இருந்த சிகரட் பெட்டியையும் தண்டவாளத்தில் போட்டான்.

"ஏன் வீணாக எறிந்தனீங்கள். காசுக்கு வேண்டி யதுகளை முடிச்ச பிறகு பிறகு புகைக்காமல்விடலாம்தானே"

"நான் எந்த முடிவையும் சரி என்றால் அப்போதே எடுத்திடுவன்"

எதற்காக சொன்னவன் என்பது சுசானாக்கும் தெரியும் சுகந்தாவுக்கும் தெரியும்.

புகை கக்காத அந்த மின்சார புகையிரத்தில் மனப்புகைச்சலுடன் சுகந்தாவின் பயணம் தொடர்ந்தது.

*

கிறிஸ்மஸ் தினத்தின் ஒரு நாள் மாலைப் பொழுதில் சீட்டு விளையாடிக் கொண்டிருந்த பொழுது பக்கத்து வீட்டு கனகம் மாமியின் மகள் ஒரு டெனிஸ் காரரைக் கட்டி விட்டு விட்டு ஒரு வருடத்தின் பின்பு வந்து விட்டாள் என்ற கதை வந்த பொழுது சுகந்தா வின் கைகள் நடுங்கி சீட்டைத் தவறவிட்டு விட்டன.

"கனகம் மாமியின் மகளின்டை கதை சொல்ல நீ ஏன் நடுங்கிறாய்" என தமக்கையார் கேட்க, கடந்த ஆறு மாதமாக அவளை தடுமாற வைத்துக் கொண்டிருந்த சீட்டை எடுத்து மேசையில் போட்டாள்.

அவ்வளவு தான்!

பாலன் பிறப்பு சிலுவையில் கழுவேற்றமாக மாறியது.

ஆளுக்காள் தங்கள் தங்கள் நியாயங்கள்... அறிவுரைகள்... கவலைகள்.... மிரட்டல்கள் என அத்தனையும் வந்து விழுந்து கொண்டிருந்தது.

"இப்ப உன்ரை முடிவைச் சொல்லவா வந்தனி"

"எல்லாம் முடிஞ்சுதா... மிச்ச மீதி ஏதும் இருக்கா"

"இதுக்காகத்தானா உன்னை படிக்க வைச்சனாங்கள்"

ஆளுக்காள் விளாசிக் கொண்டிருக்க மூத்த மருமகன், "இப்ப ஏதும் நடக்கேல்லை என்று சுகந்தா சொல்லுறாள்... ஏன் அவளுக்கு ஒரு 3 வருட தவணை கொடுத்துப் பார்க்க கூடாது. அந்த நேரம் அவளின்ரை படிப்பும் முடிஞ்சிடும். இந்தக் காதலும் உண்மை எண்டால் பிறகு செய்து கொடுக்கிறதைப் பற்றி பிறகு யோசிக்கலாம்", என சொல்லி முடிக்க முதல்...

"ஓம்... ஒரு வருசத்துக்கிடையிலை தான் ஒருவனைப் பிடிச்சிட்டன் என்று சொல்லுறவள் 3 வருசத்துக்கிடையிலை இரண்டு பிள்ளைகளோடை வந்து இறங்குவள்....அதைத் தூக்கி பேரப்பிள்ளை என்று கொஞ்ச சொல்லுறிங்களோ மாப்பிள்ளை" தகப்பன் மருமகனின் ஆலோசனைக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

"குளிசைகள் ஒழுங்காய்ப் போடுறளா இல்லை யூனிவேசிற்றி கொஸ்பிற்றலிலை அடிக்கடி வயிற்றைக் கழுவுறாளா" என்று கேளுங்கோ குசினியுள் நின்று தலை தலையாய் தாய் அடித்தபடி கடைசியாக தாய் கேட்ட கேள்வி அவளைத் தூக்கி தலைகீழாக அடித்தது.

அவள் கல்லாய் சமைந்து போனாள்.

இத்தனை நாட்களாக சின்னதாயும் பெரிதாயும் எழுந்து வந்த அலைகள் எல்லாம்



நூல்
ஒரு சமநிலை வைத்தியம்
(சிறுகதைத்தொகுதி)
ஆசிரியர்
ஆனந்தி
வெளியீடு
ஜீவநதி
விலை: 300/-

அமைதியாக கீழிறங்கிக் கொண்டு இருந்தன.

"என்ன எதுவும் சொல்லாமல் எழுந்து போறாய்?"

"என்ன சொல்ல வேணும் என்று எதிர்பார்க்கிறி யள்... 26 வருசம் நீங்கள் வளர்ந்த பிள்ளையை... அதுவும் எதுவும் நடக்காமலே இருக்க பெத்த பிள்ளையை ஒரு வேசி என்றளவிலை கேள்வியள் கேட்கிறியள்... நான் அவனை விட்டுட்டன் என்று ஒரு பொய் சொல்ல வேணும்... நீங்கள் கைகாட்டுற ஒருத்தனை கை பிடிச்சுக் கொண்டு அக்கினியை வலம் வர வேணும் என்று எதிர்பார்க்கிறியளா" என்றவாறு தனது அறைக்குள் போய் அறைக்கதவை இறுக்க சாத்திக் கொண்டாள்.

*

அடுத்த நாள் அதிகாலையில் சுசானா வீட்டிக் கதவை சுகந்தா தட்டிய பொழுது சுசானா அதிர்ந்து போனாள் - இரவு முழுக்க நித்திரையில்லாத வீங்கிய அவள் முகத்தைப் பார்த்த பொழுது.

புறப்படும் பொழுது தாய் கேட்டார், "திரும்பி வருவியா... அல்லது இதோடை சரியா... நாங்கள் எல்லாம் தற்கொலை செய்யுறதா" என்று.

"ஒருத்தனை விரும்புறனா இல்லாயா என நானே தடுமாறி உங்களோடை கதைக்க வந்த எனக்கு எல்லாப் பட்டமும் சுமத்தின நீங்கள் ஒரு நாளும் தற்கொலை செய்ய மாட்டியள். திரும்பி வந்தாள் கண்டு கொள்ளுங்கள். இல்லாட்டி என்ரை பிள்ளைக்கு சீதனம் சேர்த்து வைச்சிறன்... வைச்சிருக்கிறன் என்று அப்பா அடிக்கடி சொல்லுவாரே... அதனை மற்றச் சகோதரங்களுக்கு கொடுங்கோ..."

சுகந்தா வீட்டில் நடந்த அனைத்தையும் கேட்டு சுசானா ஆத்திரத்தில் துடித்துப் போனாள்.


"நீங்கள் எல்லாரும் இங்கை வந்து 30 வருசம் ஆகி உன்ரை சகோதரங்கள் எல்லாம் நல்லாய் படிச்சு... இதுக்குப் பிறகும் காட்டேறி சனங்கள் போல நடக்கி னமா? பிறகும் ஏன் இப்பவும் உங்கள் பிள்ளையளுக்கு பேச்சுப் போட்டியள் வைச்சுக் கொண்டு உங்களையும் அதுகளையும் ஏமாத்திக் கொண்டு இருக்கிறியள்?

சுசானா மிகவும் ஆவேசமாக தனது அறைக்கு சென்று தனது சின்ன வயது புத்தக அலுமாரியில் இருந்த ஆத்திசூடியையும் பாரதியார் பாப்பா பாடல்களையும் எடுத்து வந்து வீசியெறிந்தாள்.

சுகந்தாவின் காலடியில் அவை பரவிக் கிடந்தன.

பின் சுசானா வேகம் குறைந்தவளாக சுகந்தா விடம் வந்து அவளை ஆதரவாக கட்டிப் பிடித்தாள்.

சிறிது நேர மௌனத்திற்கு பின் சுகந்தா பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினாள்.



அழகியலில் மெய்யியல் தரிசனத்தை ஆராய்ந்த ஆனந்த குமாரசாமி

■ ஈழக்கவி

"ஆனந்த குமாரசாமியின் வாழ்க்கையின் ஆரம்பத்தை, ஒரு பெரிய மாளிகையின் முன் அடியெடுத்து வைப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள். அதோ உங்கள் முன்வாசலின் முன்கதவைப் பார்க்கிறீர்கள். அதன் அருகில் சென்று அதனைத் திறக்கிறீர்கள். திறந்ததுமே அந்த மாளிகையின் ஒரு பகுதி, ஒரு கூடம் உங்கள் பார்வையில் படுகிறது. அது எவ்வளவோ பொருட்களை உங்கள் முன் வைக்கிறது. இந்த அறிமுகங்கள் மூலம் இன்னும் பல அறிமுகங்கள், உலகங்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. இவற்றின் வழியே ஒரு ஆச்சரியத்துடன் பின் தொடர்வீர்களானால் அப்பகுதிகள் அனைத்தும் ஒன்றினை ஒன்று இணைத்து மாளிகையின் முழுமையை உங்களுக்கு உணர்த்திச் செல்லும், ஆனந்த குமாரசாமியின் சஞ்சாரத்தின் வழியே நீங்களும் சஞ்சரிப்பீர்கள். இது முற்றிலும் நிஜம் என்பது ஆனந்தகுமாரசாமி குறித்து ஒரு சொற்பொழிவு தயார் செய்யும்போது நிதரிசனமாக உணரமுடிகிறது. ஆனந்த குமாரசாமி பற்றி முழுமையாகவும் நியாயமாகவும் சொல்வது அல்லது பதிவு செய்வது என்பது நிஜமாகவே ஒரு நூலாகத்தான் முடிய வேண்டும் - அது ஆனந்த குமாரசாமியின் நினைவு சஞ்சாரங்களைப் பின் தொடர்ந்து செல்லும்போது. அவரது எழுத்துக்களை அவரது தரிசனங்களை முழுமையாக பின்தொடரும் போது அவரைப்பற்றி எழுதப்படும் எல்லாமே முழுமை யடையாத ஒன்றாகவேதான் இருக்கும். அந்த அளவு ஆழமும் செறிவும் கொண்டது ஆனந்த குமாரசாமியின் கலைப் பயணம். அவருடைய அழகியல் தரிசனங்கள்." இது வெங்கட்சாமிநாதனின் கருத்துக்களை முன்மொழிந்து ராகவன் தம்பி "ஆனந்த குமாரசாமி" பற்றி நிகழ்த்திய சொற்பொழிவொன்றின் பதிவு (இணையம்: ஜூன் 14 2007).

ஆனந்த குமாரசாமியைப் பற்றி ரவீந்திரநாத் தாகூர் இப்படிக் குறிப்பிடு கின்றார்: "கலைத் திறனாய்வாளர், அல்லது கலை வரலாற்றாசிரியர்; ஆழ்ந்து அகன்ற பலதுறைப் படிப்பாளி; என்று என்னவெல்லாம் அவரைப் பற்றிச் சொன்னா லும் அவரைப் பற்றி ஏதோவொன்று சொல்லப்படாமலே விடுபட்டுப் போய்விடுகிறது. அவர் எழுதியவற்றை என்னதான் ஆராய்ந்து சொன்னாலும் இன்னும் எதுவோ வரையறுக்க முடியாமல் இருக்கிறது. எனவே, அவர் நம் எல்லா வரையறைகளையும் விஞ்சி நிற்கிறார்." "தொடர்ச்சியான பல அவதாரங்களைக் கொண்டிருக்கிறது டாக்டர் குமாரசாமியின் வாழ்க்கை" என்று எழுதுகிறார், "இந்தியாவின் கலை கட்டடங்கள்" என்ற நூலின் ஆசிரியர் பெஞ்சமின் ரோலன்ட். அதுபோல் விஞ்ஞானி யாய், சமூகவாதியாய், மெய்யியலாளராய், விமர்சகராய், சிறந்த அழகியல் (கலை) ஆராய்ச்சியாளராய் தனியான முத்திரை பதித்துப் பிரகாசித்தவர் ஆனந்த குமாரசாமி.

மலேசியாவைச் சேர்ந்த துரைராஜ்சிங்கம், ஆனந்த குமாரசாமியின் எழுத்துகளைக் காலவரிசைப்படி, ஆயிரம் பக்கங்கள் கொண்ட இரண்டு

கலாயோகி ஆனந்த குமாரசாமியின் தந்தை சர். முத்துக்குமாரசாமி ஆவார். முத்துக் குமாரசாமியின் மூதாதையர் யாழ்ப்பாணம் மானிப்பாயில் செல்வாக்கோடு வாழ்ந்திருந்தனர். ஆறுமுகம்பிள்ளை குமாரசாமி முதலியார் (1783-1836), விசாலாட்சி அம்மையார் ஆகி யோருக்கு மகனாக முத்துக்குமாரசாமி 23, ஜனவரி 1834இல் பிறந்தார்.

பாகங்களாக வெளியிட்டிருக்கிறார். ஆனந்த குமாரசாமி எழுதிய நூல்கள் மொத்தம் 90. இது தவிர 96 சிறு அறிக்கைகள், 999 கட்டுரைகள், நூல்மதிப்புரைகள், கலை தொடர்பாக அவர் எழுதிய ஆயிரத்துக்கும் மேலான கடிதங்கள் இன்னபிறவும் உள்ளன. இவற்றில் சில இன்னும் அச்சில் வராதவை. இவர் கீழைத்தேசக் கல்விமுறை, கலாசாரம், மதம் என்பன தொடர்பாக பல கட்டுரைகளையும் எழுதியதுமல்லாமல், ஆங்கிலத்தில் அரிச்சந்திர புராணத்தையும் எழுதினார். அத்தோடு தாயுமானவர் சுவாமிகளின் அரிய பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். ஆனந்த குமாரசாமி கற்ற மொழிகள் பல. பிரெஞ்சு, ஜெர்மன், லத்தீன், கிரீக், சம்ஸ்கிருதம், பிராகிருதம், பாலி மற்றும் ஹிந்தி போன்ற மொழிகளை அவர் வலிந்து கற்றிருக்கிறார். ஏற்கனவே அவருக்குத் தெரிந்திருந்த மொழிகள் ஸ்பானிஷ், டட்ச், பெர்சியன், மற்றும் ஆங்கிலம், தமிழ், சிங்களம் போன்ற மொழிகளாகும். இந்தமொழிகளில்பெரும்பாண்டித்யமும்பெற்றிருந்தார்.

அழகியலை அதன் மெய்யியல் அடிப்படையில் ஆராய்ந்த மூலவர் ஆனந்த குமாரசாமி. அதனால்தான் அவர் பின்வருமாறு குறித்துள்ளார்: "அழகியல், மெய்யியலின் ஒரு விஷேட துறையாகும். கலைஞனும் சாதாரண மனிதனும் தமது பொதுத்தேவைகளாலும் சுவைகளாலும் முற்றாக வழிப்படுத்தப்பட வேண்டும்." வெங்கட் சாமிநாதன் "கலை, வாழ்க்கை, அனுபவம், வெளிப்பாடு"(1982) என்ற நூலில் எழுதியுள்ள ஒரு கருத்து அவதானிக்கத்தக்கது: "இந்தியக் கலைப்படைப்புகளின் தத்துவார்த்த அடிப்படைகளைப் பற்றியும் அவை நம்முன் விரிக்கும் மெய்ஞ்ஞான தரிசன உலகம் பற்றியும் முதன் முதலாகப் பேசியவர் ஆனந்த குமாரசாமி என்பது மட்டுமல்ல. இதன் மறுபுறமாக, ஒரு இந்திய சிற்றோவியத்தில், அந்தப்பெண்ணின் புருவங்களைத் தீட்டியவன் ஒரு ஓவியன், ஆனால் இமைகளைத் தீட்டியவன் வேறு ஒரு ஓவியன் என சட்டென தீட்டியவனின் கை முத்திரையைப் பிரித்து இனங்காட்டிவிடக் கூடும் கூரிய பார்வை கொண்டவரும் அவர்தான். இந்திய ஓவியம் வரைந்தவனின் பெயர் மறுக்கப்பட்டு படைப்பு ஒரு கூட்டுமுயற்சியாக சமூக முழுமையின் சொத்தாகக்கருதப்படும் கலைமரபின் பின்னணியில், ஆனந்த குமார சுவாமியின் இவ்வினம் பிரித்து ஓவியனின் கைத்திறனைக் கண்டு சொல்லும் திறனை, கூரிய பார்வையைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இது அவ்வளவும் நடந்தது, இந்திய சுவர்ச் சித்திரங்களைப்பற்றி, ஏதும் அதிகம் பேசப்படும் அளவிற்குத்தெரியாத காலத்தில். உண்மையில் சொல்லப் போனால் கீழ்த்தேய, இந்திய, ஓவியங்களுக்கும் கலைப் படைப்புக்களுக்கும், கலைப்படைப்புக்கள் என்ற அங்கீகாரத்தையும் கௌரவத்தையும் சம்பாதித்துக் கொடுத்ததே ஆனந்த குமாரசாமிதான்."

பிளேட்டோ போல ஆனந்த குமாரசாமி ஒரு முழுமையான பரிபூரண உலகத்தைப் பற்றிச் சிந்தித்தார். மேலைத்தேய விஞ்ஞானப் போக்கையும் கீழைத்தேய உள்ளுணர்வான தரிசனப் போக்கையும் குமாரசாமி ஒன்றெனக் குவிமையப்படுத்தியிருந்தார். கலை, ஒரு தனி மனிதனின் வேலையின் வெளிப்பாடாக, வேலை, ஒரு தனிமனிதனின் கலையாக, கலை ஒரு சமூக நடவடிக்கையாக ஆராய்ந்தவர். தியானம் - வேலை - கலை இவற்றின் பிரிக்க முடியாத முழுமை பற்றி எழுதினார். மெய்யியல், அழகியல், மொழி, கலாச்சாரம், ஓவியம், சிற்பம், சிலை, அன்றாட இயக்கம் இவை அனைத்திலும் ஒளிரும் முழுமை பற்றி முதன்முதலாகச் சிந்தித்து எழுதியவர் கலாயோகி.

2

கலாயோகி ஆனந்த குமாரசாமியின் தந்தை சர். முத்துக்குமாரசாமி ஆவார். முத்துக் குமாரசாமியின் மூதாதையர் யாழ்ப்பாணம் மானிப்பாயில் செல்வாக்கோடு வாழ்ந்திருந்தனர். ஆறுமுகம்பிள்ளை குமாரசாமி முதலியார் (1783-1836), விசாலாட்சி அம்மையார் ஆகியோருக்கு மகனாக முத்துக்குமாரசாமி 23, ஜனவரி 1834இல் பிறந்தார். (முதலியார் என்பது அரசில் உயர் பதவி வகித்தவர் கொண்ட பட்டமாகும்.) மூன்று ஆண்டுகள் நிரம்புவதற்கு முன்பே முத்துக்குமாரசாமியின் தந்தை ஆறுமுகம்பிள்ளை குமாரசாமி முதலியார் மரணமடைந்தார். தாயார் விசாலாட்சி இசைபட வாழ்ந்த காரளசிங்க முதலியாரின் மூன்றாவது தலைமுறைப் பேத்தி ஆவார். வசதிபடைத்த குடும்பத்தில் பிறந்த காரணத்தால் முத்துக்குமாரசாமிக்குச் சிறந்த முறையில் கல்வி கற்க வாய்ப்புக்கிடைத்தது. இராணி கல்லூரியில் பயின்ற அவர் தமிழ், ஆங்கிலம், பாலி, லத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளையும் கற்றார். வழக்கறிஞரான அவர், 1861 ஆம் ஆண்டு இலங்கை சட்டமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றார். முத்துக்குமாரசாமி 26, ஜனவரி 1863இல் இங்கிலாந்தில் பாரிஸ்டர் ஆனார். ஆசியக்கண்டத்தைச் சேர்ந்த முதலாவது பாரிஸ்டர் என்ற பெருமை இவரையே சாரும். 1867ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் தம்மை வழக்கறிஞராகப் பதிவு செய்துகொண்டார். 1874ஆம் ஆண்டு இங்கிலாந்துக்குச் சென்றபோது விக்டோரியா மகாராணியாரால் அவருக்கு 'சர்' பட்டம் வழங்கப்பட்டது. இது பற்றிய பதிவு பின்வருமாறு அமைந்துள்ளது:

"இலங்கையைச் சேர்ந்த சர் முத்துக்குமார சாமிக்கு அரசி வீரர் (Knight) விருதை வழங்கினார். இந்திய இலக்கியத்தை மேலை நாட்டு உலகம் அறிந்துகொள்ள அவர் உதவினார். இந்திய - பௌத்த மெய்யியல்கள் பற்றி அவர் பல நூல்கள் எழுதியுள்ளார். 'அரிச்சந்திரா' என்ற இந்திய நாடகத்தை ஆங்கிலத்தில் எழுதி அதனை அரசிக்கு சமர்ப்பணம் செய்தார்" (The Times, London, *12.08.1974*).

இத்தகைய ஆளுமைபடைத்த முத்துக்குமார சாமிக்கும் எலிசபெத் கிளே பீபி என்பவருக்கும் மகனாக 22, ஒகஸ்ட் 1875 அன்று ஆனந்த 'கென்டிஷ்' குமாரசாமி பிறந்தார். இவரது பெயரில் மூன்று நாமங்கள் இருக்கின்றன. ஆனந்த என்பது சிறப்புப் பெயர்; 'கென்டிஷ்' என்பது தாயின் ஊரை குறிக்கின்றது (இங்கிலாந்தின் கென்ட் பகுதியை எலிசபத் கிளே பீபி சேர்ந்தவர். ஆகையால் மனைவியை நினைப்பூட்டும் வகையில் 'கென்டிஷ்' என்ற பெயரையும் மகனது பெயரில் முத்துக் குமாரசாமி இணைத்துக்கொண்டார்); குமாரசாமி என்பது தந்தையின் குடும்பப் பெயராகும்.

சர். முத்துக்குமாரசாமிக்கு இங்கிலாந்து காமன்ஸ் மன்றத்தின் உறுப்பினராக வேண்டுமென்ற விரும்பம் காணமாக மூன்றாவது முறையாக இங்கிலாந்து செல்ல திட்டமிட்டார். மனைவியையும் மகனையும் முன்பதாகவே இங்கிலாந்திற்கு அனுப்பிவைத்தார். இங்கிலாந்திற்குத் தாம் புறப்படவிருந்த நாளன்று (04.05.1879) எதிர்பாராதபடி முத்துக்குமாரசாமி கொழும்பில் அகாலமரணமடைந்தார். அவரது மறைவின் பின்னர் தாயும் மகனும்

இங்கிலாந்திலேயே தங்கிவிட்டனர். முப்பது வயதை அண்மிக்கமுன்னரே (வயது 27) கணவனை இழந்த லேடி முத்துக்குமாரசாமி மறுமணம் புரியாமல், தொண்ணூற்றி ரண்டு வயதுவரை இங்கிலாந்தில் வாழ்ந்தார். ஆங்கிலச் சூழலில் வளர்ந்த ஆனந்த குமாரசாமி பன்னிரண்டாவது வயதில் (1889) விக்ளிப் கல்லூரியில் (Wycliffe College) சேர்க்கப்பட்டு லண்டன் பல்கலைக்கழக இண்டர் மீடியேற் முடியும் வரையில் (1894) அங்கேயே கல்வி கற்றார். தாயாரின் வேண்டுதலின் படி கிரேக்க, லத்தின் மொழி களையும் பயின்றார். இவர் பதினான்கு மொழிகளை அறிந்திருந்தார். இப்பன்மொழித் திறனே பல நாடுகளின் கலை கலாசாரப் பண்புகளைக் கற்றுக் கீழை நாடு களின் கலை, கலாசாரப் பண்பாட்டுடன் ஒப்புநோக்கி அவற்றின் பெருமைகளை உலகறியத் துணையாகத் தூண்டிய தெனலாம். கல்லூரியில் விஞ்ஞான பாடங்களை பயின்ற அவர், "டோவ்ரோ குன்றின் நிலவளம்" (Geology Of Dover Hill) என்ற தன்னுடைய முதலாவது கட்டுரையை "வைக்ளிப் விண்மீன்" (Wycliffe Star) என்னும் பள்ளிக்கூட இதழில் (1895 ஏப்ரல்) எழுதினார். கல்லூரியின் வெளிக்களக் குழுத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட அவர், கல்லூரிச் சுற்றாடலில் காணப்பட்ட அபூர்வமான கற்களையும் கிடங்குகளையும் ஆராய்ந்தார். இதன்போது கண்டெடுத்த புதுமையான கற்களையும் உயிர்ச்சுவடுகளையும் சேகரித்து, கல்லூரி நூதனசாலையில் காட்சிப்படுத் தினார். விஞ்ஞான ஆய்வில் இவருக்கிருந்த ஆற்றலையும் ஆர்வத்தையும் அவதானித்த கல்லூரி அதிபர், கல்லூரிச் சூழலை ஆராய ஊக்குவித்தார். இந்த ஆய்வு முடிவுகள் "ஸ்ரார்" என்ற கல்லூரி சஞ்சிகையில் வெளிவந்தன. இத்தகைய களவேலை அனுபவங்களே இலங்கையில் உலோக ஆராய்ச்சியில் ஈடுபடும் போது அவருக்குப் பெரும் துணையாயிற்று.

முருகபக்தரான முத்துக்குமாரசுவாமியை மணந்த எலிசபெத் ஒரு இந்துப் பெண்மணியாகவே மாறி, இந்துமத வாழ்வு நெறிகளை கடைப்பிடித்தார். முருகனைத் தினமும் வழிப்பட்டார். ஆனந்த குமாரசாமிக்கு அவருடைய தாயாரின் வழியாக இந்து மதத்தின் மீதும் இந்து மத வழிபாட்டின் மீதும் அறிமுகம் கிடைத்தது. தாயார் வழியாக இந்தியாவின் ஆன்மீகப் பெரியவர்கள் பற்றிய கதைகள் ஆனந்த குமாரசாமிக்குக் கிட்டியது. தமிழகத்தைப் பற்றியும் தமிழகத்தின் தொன்மைக் கதைகளைப் பற்றியும் எலிசபெத் தன்னுடைய கணவர் முத்துக்குமாரசாமி மூலமாக அறிந்ததை மகனுக்கு ஆர்வத்துடன் தெரியப்படுத்தினார். இது இந்தியாவைப் பற்றிய அவருடைய ஆர்வத்துக்கு உரம் சேர்த்து, இந்து மதம் பற்றிய தேடலை வளர்த்தது. ஆனந்த குமாரசாமி இளம் வயதில் சமய வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் பகவத் கீதை, ராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களை யும் ஆர்வத்துடன் படித்தார். கல்லூரியின் நூலகங்கள் மற்றும் லண்டன் நகரத்தின் புகழ்வாய்ந்த நூலகங்களில் இந்தியாவைப் பற்றிய நூல்களைத் தேடிப்படித்தார். இந்திய புராணங்கள், வேதங்கள் ஆகியவற்றில் அவருக்கு அலாதி பிரியமிருந்தது. இந்தியத் தொன்மக் கலைகளின் மீதும் இந்து மதத்தின் மீதும் பேரார்வம் கொண்ட இன்னொரு மாணவி எதெல் மேரி. இவரை லண்டன் நூலகத்தில் ஆனந்த குமாரசாமி அடிக்கடி சந்திக்க நேர்ந்தது. இச்சந்திப்பு காதலாக முகிழ்த்து மணவாழ்வில் முடிந்தது.

1900ஆம் ஆண்டில் பி.எஸ்ஸி பரீட்சையில் இவர் முதல் வகுப்பில் தேறினார். மனைவி எதெல் மேரியுடன் 1903இல் இலங்கை திரும்பிய ஆனந்த குமாரசுவாமி, 1906 வரை இலங்கை தாதுப்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத் தலைவராகப் பதவி வகித்தார். இக்காலப் பகுதியில்தான் 'தோரியநைற்' என்னும் புதிய மூலகம் இவரால் கண்டு பிடிக்கப்பட்டது. இவர் லண்டனில் இருந்தபோது கண்டு பிடித்த இன்னொரு புதிய மூலகம் 'செரண்டிபைற்' என்பதாகும். போலந்தைச் சேர்ந்த மேடம் கியூரி, தான் புதிதாய்க் கண்டு பிடித்த மூலகத்திற்கு "போலோனியம்" என்று பெயரிட்டதுபோல், தான் முதன்முதலில் கண்டு பிடித்த மூலகத்திற்கு பழைய இலங்கையின் அராபிப் பெயரான செரண்டிப் என்ற பெயரை அடியொற்றி 'செரண்டிபைற்' என்று பெயரிட்டார் குமாரசாமி. இத்தகைய புதிய கண்டுபிடிப்புகள் காரணமாகவும், தொழில்ரீதியான அறிக்கைகள் காரணமாகவும் லண்டன் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் (D.Sc) பட்டத்தை 1995ஆம் ஆண்டு வழங்கிக் கௌரவித்தது.

இலங்கையில் குமாரசாமி உடைய வாழ்க்கை, தொழில் ஆகியன புவியியல் ஆய்வு சார்ந்ததாக அமைந் திருந்தாலும் அவருடைய ஆர்வங்கள் அழகியலை நோக்கி யதாக மெல்ல மெல்லத் துளிர்த்து வளரத் துவங்கியது. அவர் செய்த ஆய்வுகளும் தயாரித்த ஆய்வு முடிவுகளும் ஒரு நுண்ணிய அறிவும், மூலக் கற்பனைத் திறன் வாய்ந்த விஞ்ஞானியாகவும் அவரை நிரூபித்தாக சொல்வார்கள். தன்னுடைய உத்தியோக நிமித்தமாக இலங்கையின் பல குகை அழிவுப்பகுதிகளைப் பார்வையிட்டார். புவியியல் நிபுணராக அவரது அலைச்சல்கள் பல்வேறு புராதன சரித்திரச் சின்னங்களையும் சிதைவுகளையும் அவரை எதிர்கொள்ள வைத்தன. அந்தப் புராதன சரித்திரச் சின்னங்கள், சிற்பங்களில் அவருக்கு ஆழ்ந்த ஈடு பாட்டினை ஏற்படுத்தின. இவ்வாறு அழகியலுடன் அல்லது கலையுடன் ஆனந்தகுமாரசாமிக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பு சிற்பங்களுடன் நிகழ்ந்திருக்கிறது. சிற்பக்கலை ஆனந்த குமாரசாமிக்குள் பல மாற்றங்களை உருவாக்கியது. இது அவருடைய வாழ்க்கைப் பாதையை முற்றிலுமாக மாற்றி, அந்த பிரம்மாண்டமான கலை வடிவங்களின் அழகியலைப் பற்றி, அவற்றில் மையம் கொண்டுள்ள மெய்யியல் தரிசனம் பற்றி உலகத்துக்குச் சொல்ல வேண்டும் என்கிற வேட்கையை உருவாக்கி, அவரைக் கலாயோகி ஆக்கியது.

3

கலாயோகி ஆனந்த குமாரசாமி இலங்கையில் இருந்த மூன்றரை ஆண்டுகளுக்குள் பல கலைப்பொருட் களைச் சேகரித்ததுடன் பின்னால் வெளிவந்த அவருடைய நூல்களுக்குத் தேவையான தகவல்களையும் திரட்டினார். அவரது மனைவி எதெல் கண்டியின் கலைப் பள்ளியில் பணியாற்றினார். கணவனும் மனைவியும் இலங்கைக் கலைகளிலும் கைவண்ணம் பெற்ற பொருள்களிலும் ஆர்வம் காட்டினர். குமாரசாமியின் "இந்திய - இலங்கைக் கலைகளும் கைவண்ணம் பெற்ற பொருள்களும்" (The Arts and Crafts of India and Ceylon) என்ற நூல் எதெல் மேரி கண்டியில் பணியாற்றிய போது பெற்ற அறிவை ஓரளவு வெளிப்படுத்து கின்றது. இலங்கையின் தங்கிய காலப்பகுதி அவருக்கு 'டாக்டர்' பட்டத்தினைப் பெற வாய்ப்பு அளித்தபோதும்,

அவரது ஆழ்மனம் கலையை நோக்கிய படிமங்களை காட்சிநிலைப்படுத்தத் துவங்கியது. விஞ்ஞானியாக வாழ்க்கையை தொடங்கிய அவர், அத்துறையின் வழியாக வேறுபாதையில் பயணிக்கத் தொடங்குவதை 1907ஆம் ஆண்டிற்குப் பின் வெளியான அவரது நூல்களும் கட்டுரைகளும் துல்லியமாக வெளிப்படுத்துகின்றன. அழகியல் மெய்யியலாளராக மலர இலங்கை அவருக்குப் பயிற்சிக் களமாக அமைந்தது. பௌத்தச் சிற்பங்களும் சின்னங்களும், சிங்களவர்களின் கைவண்ணப் பொருள்களும் கலைமாட்சியும் சோழர் காலச் செப்புத்திருமேனிகளும் அவரைத்திசைதிருப்பிவிட்ட கலங்கரைவிளக்கங்கள் ஆயின.

உத்தியோக நிமித்தமாக இலங்கையின் பல பாகங்களுக்குச் செல்லும் பொழுது பாழடைந்து கிடந்த கோயில்களையும், தாதுகோபங்களையும், விகாரைகளையும், அவற்றின் சிற்பத் திறனையும் இவர் ஆராயத் தொடங்கினார். அத்துடன் கிராமப்புறங்களிலிருந்து தொழில் புரிந்து வந்த சிற்போவியப் பரம்பரையினர் சிலரையும் சந்தித்து அவர்களது குருகுலக் கல்வி முறையைப் பற்றியும் ஆராய்ந்துள்ளார். இச் சுதேசக் கலைகளுக்குப் புத்துயிர் அளிப்பதுடன் மேல்நாட்டு நாகரிகத்தில் நாட்டம் கொண்டுள்ள இலங்கை மக்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தும் எண்ணத்துடனும் "இலங்கைச் சீர்திருத்தச் சபை" என்னும் கழகத்தை 1905இல் ஆரம்பித்தார். அச் சபையின் வெளியீடான 'இலங்கைத் தேசிய சஞ்சிகை' யில் வெளிவந்த 'இலங்கையில் வரைதல் கற்பித்தல்' என்னும் கட்டுரையில் இந்நாட்டிலே நிலவி வந்துள்ள குருகுலக் கல்விமுறையைப் பற்றி மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார். சிங்களக் குரு (ஆசிரியர்) முதலாவது பாடமாகக் கொடுக்கும் வேக வேத என்னும் சித்திர அம்சம் தமிழர்தம் அகத்திருக்கருக்கு என்னும் அம்சத்திலிருந்து பெறப்பெற்றது என்பதைத் தக்க ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். சுதேசிப் பொருள்களை ஆதரிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும், இந்தியக் கலைகளைப் பற்றியும் பல கட்டுரைகளை எழுதினார். இவையே கலையும் சுதேசியும், தேசிய இலட்சியக் கட்டுரைகள் என்னும் ஆங்கில நூல்களாக வெளிவந்து இந்திய மக்களிடம் ஒரு உள்ளக் கிளர்ச்சியை உருவாக்கினது.

"1815ஆம் ஆண்டில் கண்டிப் பிரதேசத்தை ஆங்கிலேயர் கைப்பற்றியதற்கு முன்னும் பின்னும் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையில் பல கட்டிடங்கள் பாழடைந்தன. இப்படிப் பாழடைந்து வரும் கட்டிடங்களில் விலைமதிக்க முடியாத சுவர் ஓவியங்களைக் கண்டார். மழையில் நனைந்த சுவர்களிலிருந்து ஓவியங்கள் பூச்சோடு விழுந்து வருவதைக் கண்டார். காலந்தாழ்த்தாது நடவடிக்கை எடுத்தால் அநேக விகாரைகளையும் தேவாலயங்களை யும் அவற்றில் காணப்படும் ஓவியங்களையும் காப்பாற்ற லாம் எனக் கண்ட ஆனந்த குமாரசுவாமி கண்டிப்பிரதேசத் திலுள்ள பிரமுகர்களுக்கு (Kandyan Chiefs) ஒரு பகிரங்கக் கடிதம் எழுதினார். இக் கடிதம் 1905ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி ஒப்சேவர் பத்திரிகையில் வெளிவந்தது. இக்கடிதமே ஆனந்த குமாரசுவாமி கலை பற்றி எழுதிய முதற் கட்டுரை எனக்கொள்ளலாம்" (ச.அம்பிகைபாகன்; 'கலாயோகி ஆனந்த குமாரசுவாமி'; 2006:15).

1908 ஆம் ஆண்டு அவரது முதலாவது கலை வரலாற்று நூலான 'இடைக்காலச் சிங்களக் கலை' (Mediaeval Sinhalese Art) வெளிவந்தது. பதினேழு அதிகாரங்களில் முன்னுரையுடனும் விளக்கப்படங்களுடனும் இந்நூல் அமைந்திருந்தது. இந்நூலிலுள்ள 500க்கும் மேற்பட்ட விளக்கப்படங்கள் எதெல் குமாரசாமியால் இலங்கையில் இருந்த காலத்தில் எடுக்கப்பட்டவை. சிங்களக் கலையையும் மத்தியக்கால சிங்கள சமூகத்தின் அமைப்பையும் இந்நூல் விளக்குகின்றது. இந்நூலில் குமாரசாமி எழுதியுள்ள ஒரு கருத்து குறித்துக்காட்டத்தக்கது:

"இயந்திர அரக்கன் வாய்ப்பட்டும் தொன்மையான புறக்கணிக்கப்பட்டும் தேசியக் கலைகளின் அழிவு தொடங்கிவிட்டது. இந்தியாவைப் போன்று இலங்கையிலும் மேற்கு நாடுகளுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் உண்டான தொடர்பு கலைக்கு யமனாக அமைந்தது. அடிப்படையில் சிங்களக்கலை இந்தியக்கலையே. பௌத்தக் கொள்கைகளைத் தாங்கி நின்றாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்துக்கு முன்பு இந்தியாவின் அழிந்துவிட்ட கலை இங்கு துடிப்புடன் இயங்கிவந்தது. கண்டி நகர ஓவியத்தின் சிறப்பு அதனுடைய குறிக்கோள். இக்குறிக்கோள் இந்தியக்கலை அனைத்துக்கும் பொதுவானது. ஆனால் கண்டியக்கலையில் மிகக் கூடுதலான அளவில் இது காணப்படுகிறது. (மரங்களின் ஓவியங்கள் பற்றி) இவை குறிப்பிட்ட மரங்களின் படங்களல்ல. மரங்கள் பற்றி ஓவியனின் மனதில் எழுந்த தோற்றங்களே. கண்டியக் கலையின் குறிக்கோள் இந்திய நன்கொடையின் ஒரு பகுதி."

அழகியல் விமர்சகர் ரோஜர் பரை (Roger Fry) "இடைக்காலச் சிங்களக் கலை" நூலைப் பற்றி பின்வருமாறு திறனாய்வு செய்துள்ளார்:

"சிறந்த கலைப் பொருள்களின் வரலாற்றைக் குமாரசாமி பொருட்படுத்தவில்லை. அவருடைய நூல் எந்த அளவு சமூகத்தை விவரிக்கின்றதோ அதே அளவு கலை வண்ணத்தையும் போற்றுகின்றது. இயந்திரம் நமது கலையிலும் வாழ்க்கையிலும் ஏற்படுத்தும் விளைவுகள் ரஸ்கின் காட்டிய வழியில் இடைக்காலக் கைத்தொழிற் கலையிலும் அதன் அமைப்பிலும் ஈடுபட நம்மைத் தூண்டுகிறது. இந்தப் போக்கில் டாக்டர் குமாரசாமியின் இந்நூல் மிகப் பயனுள்ள தாய் அமையும்" ('Oriental Art, 'The Quartterly Reiew' No. 422: 1910: 237, 238).

கீழைநாடுகளை எந்த நாகரிகமும் இல்லாத, கலாசார மேம்பாடோ, கலையழகோ கொண்டிராத காட்டுமிராண்டிப் பகுதிகளாக எண்ணிக் கொண்டிருந்த மேலை நாட்டினரின் தவறான பார்வையை விலக்கி கீழை நாடுகளின் அற்புதமான கலாச்சாரம், கலை பற்றிய ஒரு சரியான புரிதலை மேற்கத்திய நாடுகளுக்குத் தந்தது இந்த நூல். அந்த வகையில் மேற்கத்திய நாட்டவரின் கண்களைத் திறந்து கீழை தேசத்துக் கலையின் மகிமையைத் திரும்பிப் பார்க்கச் செய்து, கீழைநாட்டுக் கலைக் கண்ணோட்டம் குறித்த, அதன் அழகியல் மெய்யியல் தரிசனம் குறித்த முதல் தடத்தினை இந்நூலில் பதிவுசெய்தார் கலாயோகி.

4

கலாயோகி ஆனந்த குமாரசாமி "மத்தியகால சிங்களக் கலை" நூலை அச்சில் வெளிக்கொணர்ந்து முடிந்ததும் இந்தியாவுக்குச் சென்றார். நீண்ட காலம் அவர் இந்தியாவில் தங்கவிரும்பியதால் 1910ஆம் ஆண்டு மனைவி எதெல் இங்கிலாந்து போய்விட்டார். இத்தோடு அவர்களது



மணவாழ்வு முறிந்தது. ரத்தன்தேவி என்று இந்தியப் பெயர் சூட்டிக்கொண்ட அலிஸ் ரிச்சர்ட்சன் என்ற ஆங்கிலப் பெண் அவரது இரண்டாவது மனைவி. முறையாக இசை பயின்ற ரத்தன்தேவி இங்கிலாந்தில் இசை கச்சேரிகளில் பங்குகொண்டார். 1916 ஆம் ஆண்டு குமாரசாமியுடன் ரத்தன்தேவி அமெரிக்க இசையரங்குகளில் இந்திய இசைப் பாடல்களைத் தம்புராவுடன் பாடினார். இவர்களது மணவாழ்க்கை 1917ஆம் ஆண்டு முறிந்து போயிற்று.

இந்தியாவில் இருந்தபோது குமாரசாமி ரவீந்திர நாத்தாகூர், அவனீந்திரநாத்தாகூர் ஆகியோருடன் தொடர்பு கொண்டிருந்தார். "அவனீந்திரநாத்தாகூர் பாரம் பரியமான இந்திய ஓவிய முறையைப் பின்பற்றி ஓவியங்கள் வரைந்து இந்திய ஓவியம் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தினார். இவர் ஓவியங்களைப் பாராட்டி 'மொடேன் ரிவியூ' முதலிய சஞ்சிகைகளில் கலா யோகி பல கட்டுரைகளை எழுதினார். இவரும் இவர் மாணவர் நந்தலால் போசும் பின்னர் கலாயோகி எழுதிய 'புத்தரும் புத்தர் கொள்கைகளும்' என்னும் நூலுக்குப் பல ஓவியங்கள் வரைந்து கொடுத்தனர். இக்காலத்தில் கலாயோகி கல்கத்தாவில் பல இடங்களிலும் கலை சம்பந்தமான சொற்பொழிவுகளை ஒளிப்படங்களின் உதவி யோடு (Lantern Lectures) ஆற்றினார். இச்சொற்பொழிவுகள் கலைசம்பந்தமான பெரும் விழிப்பை ஏற்படுத்தியதாக சிறந்த கலாவிமர்சகரான ஓ.சி.கங்குலி கூறியுள்ளார்" (2006: 53).

கலாயோகியின் இந்திய சிற்ப சித்திர ஆராய்ச்சி முடிவுகள் அதுவரை நிலவிய முடிவுகளில் மிகப் பெரிய விளைவுகளை எற்படுத்தின. உதாரணமாக காந்தார சிற்பங்களைப் பற்றிய இவரது ஆராய்ச்சி, காந்தார சிற்பங் கள் பண்டைக் கிரேக்கச் சிற்பக் கலையைப் பின்பற்றியவை என்ற பழைய கருத்தை மாற்றியமைத்தது. அதுபோல் ராஜபுத்திர ஓவியம் பற்றிய ஆராய்ச்சியானது இந்தியாவின் ஓவியக் கலையை உலகுக்கு அறிமுகப்படுத்துவதில் முன்னோடியாக விளங்கியது. இமயமலைச்சாரல் பகுதி களுக்குச் சென்று குமாரசாமி பல ஓவியங்களைத் திரட்டி னார். இராஜபுத்திர ஓவியங்கள் (1916) பற்றிய அவரது நூல் அத்துறைக்கு முதல் வழிகாட்டியாக அமைந்த முன்னோடி யாகும். இராஜபுத்திர ஓவியம் பற்றிய தேடலைத் தொடங்கி வைத்தவர் குமாரசாமி. இராஜபுத்திர, மொகலாய ஓவியங் கள் இரண்டுக்குமுள்ள வேறுபாடுகளைப் பகுத்தறிந்து ராஜஸ்தானி, பகாடி என்ற கிளைகளாக மேலும் பிரித்தார். பகாடி ஓவியத்தை இன்னும் இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தினார். காலத்தால் முந்தியதை ஜம்முவுக்கு உரியதென்றும் பிந்தியதை காங்க்டாவுக்கு உரியதென்றும் வகைப்படுத்தினார். அவரது இராஜபுத்திர ஓவியம் வெளிவந்த பின்னர் கங்க்டா ஓவியங்கள் புதுப்பொலிவைப் பெற்றன. இந்திய ஓவியங்கள் பற்றிய ஆய்வில் குமாரசாமி புதிய பாதை ஒன்றினை வகுத்தார். இராஜபுத்திர ஓவியத்தை முதன்முதல் இந்தியர் களுக்கும், மேலை நாட்டினருக்கும் அறிமுகப்படுத்தி, மெய்யியல் விளக்கம் அளித்து, அதன் அழகியலை நுட்பமாக எடுத்துரைத்து புதியதோர் ஆராய்ச்சியை ஆனந்தகுமாரசாமி தொடக்கிவைத்தார்.

ரவீந்திரநாத்தாகூர் தம் பிற்காலத்தில் ஓவியராக வும் திழ்ந்தவர். இவரது ஓவியக் கண்காட்சியொன்று நடை பெற்றபோது, அதில் சுமார் 1500 ஓவியங்கள் இடம்பெற்றன. இவ் ஓவியங்கள்பற்றி ஆனந்த குமாரசுவாமி எழுதிய விமர்சனமானது இன்றும் மிகச் சிறந்த ஓவிய விமர்சனங் களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அவர் எழுதினார்: "ரவீந்திரரின் ஓவியங்கள் சிறுபிள்ளையினுடையது போன்றி ருக்கின்றன. ஆனால் அவை சிறுபிள்ளைத்தனமானவை யல்ல (child-like but not childish)." இவ்வாறு ரவீந்திரரின் ஓவியங்கள்பற்றி விமர்சித்த ஆனந்தகுமாரசாமிக்கு ஓவியர் ரவிவர்மாவின் சித்திரங்கள் அவ்வளவாகப் பிடித்திருக்க

வில்லை. அவற்றில் இந்தியத் தன்மை குறைவு என மதிப்பீடு செய்தார். ரவிவர்மா இந்திய தேவ தேவியர் களையும் புராண இதிகாசக்கதைகளையும் எண்ணெய் வண்ணப் படங்களாக வரைந்தார். குறிப்பாக இவர் வரைந்த லட்சுமி, சரஸ்வதி படங்கள் இந்தியக்கலைப் பாரம்பரியத்திற்கு மாறானது என்று குமாரசாமி விமர்சித் தார். லட்சுமி, சரஸ்வதி படங்களில் பல கைகள் காணப்பட்ட போதிலும் தேவியரின் தோற்றம் ஓர் அழகான தோற்றத்தையே பிரதி பலிக்கின்றது என்றும், இவற்றில் தெய்வீக தரிசனத்தை தரிசிக்க முடியவில்லை என்றும் விமர்சனம் செய்தார்.

குமாரசாமி ஒரு சிறந்த புகைப்படக் கலைஞரும் கூட. அவரிடம் சலனப்படக் காமிராவும் இருந்தது. அந்தக் காலத்திலேயே பல குறும்படங்கள் எடுத்திருக்கிறார். அவருடைய ஒரு படத்தில் ஜப்பானிய கெய்ஷாப் பெண்கள் தங்கள் நடனங்களின் முத்திரைச் சிறப்புக்களை அவற்றின் நுட்பங்களை அவருக்கு விளக்குகிறார்கள். அவர் காலத்தில் இருந்த தேவதாசிகள் சதிர் ஆடுகிறார் கள். அக்காலத்திய நாட்டிய பாணிகள் படம் பிடிக்கப் பட்டுள்ளன. இந்த சலனப்பட நறுக்குகள் சித்தானந்த தாஸ்குப்தாவின் 'சிவனின் நடனம்' படத்தில் சேர்க்கப் பட்டுள்ளதாக வெங்கட்சாமிநாதன் குறிப்பிடுகிறார். ஸ்பெயினில் நடக்கும் காளைச் சண்டையைப் பற்றியும் ஒரு திரைப்படம் எடுத்திருக்கிறார். மேலை நாடுகள் மற்றும் கீழை நாடுகளின் பலவகை நாட்டிய பாணிகளை அறிந்தவர் அவர். அதில் ஆழ்ந்த ஞானம் அவருக்கு இருந்திருக்கிறது. நாட்டிய முத்திரைகளைப் பற்றி அவர் தனியே ஒரு நூல் எழுதியிருக்கிறார். (மிரர் ஆஃப் கெஸ்சர்ஸ்) நாட்டியக் கலைஞர் உதயஷங்கர் தனக்கு முதன்முதலாக நாட்டியத்தைப் பற்றிய ஒரு சரியான பரிச்சயத்தை ஏற்படுத்தியது ஆனந்தகுமாரசாமியின் இந்த நூல்தான் என்று குறிப்பிட்டு இருக்கிறார். எல்லா தத்துவ மரபுகளையும் அறிந்தவர் ஆனந்த குமாரசுவாமி. எல்லா நுண்கலைகளும், கிராமிய ஆதிகுடிகளின் கலைகள் உட்பட அனைத்து வகைக் கலைகளின் மீதும் ஆழ்ந்த ஞானம் கொண்டு இயங்கியவர் (இணையம்: 2007).

சர். ஜார்ஜ் பேர்ட்வுட் (Sir George Birdwood) என்னும் இங்கிலாந்து கலை விமரிசகர் 1910 ஆம் ஆண்டு மேலை மற்றும் கீழை நாடுகளின் கலைகளைப் பற்றி ஒரு சொற் பொழிவு ஆற்றினார். கீழை நாடுகளின் கலைஞர்கள் ஓவியங்கள் மற்றும் சிற்பங்களைப் படைத்தார்கள். ஆனால் அழகியல் பற்றி ஒன்றும் தெரியாமல் அவர்கள் அவைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்துக்கு ஒரு புத்தரின் சிலையை எடுத்துக் கொண்டால் அது வெறும் மரத்தூளினால் உருட்டிப் போடப்பட்ட பட்டாணி உருண்டைகளாகத் தான் எனக்குக் காட்சியளிக்கின்றன என்று பேர்ட்வுட் அலட்சியமாகவும் கேவலமாகவும் இந்திய சிற்பக் கலையைப் பற்றி குறிப் பிட்டார். இந்திய ஓவியக்கலையில் தென்படுவது பழங் குடித்தன்மை கொண்ட, வழிபாட்டு முறைகளின் தேவைக் காக உருவாக்கிக் கொண்ட, ஒரு முறையே அன்றி எந்தவிதமான கலையடிப்படையும் ஓவியப்பாணியும் அல்ல என்றும் கூறினார். மேலும் இந்திய புராணங்களில் காணப் படுகின்ற உருவங்கள் சிறப்பு மிகுந்த கலைவடிவங்கள் அல்ல; அவை மனித மனத்தின் அழகுணர்வுக்குப் பதிலாக தறிகெட்ட கற்பனைகளையே முன்வைக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். பாரதிய கலை மரபில் ஒரு பெயர் பெற்ற கலைஞன் கூட இல்லை என்றும், ஐதீகப் பெருமை கொண்ட சிற்பியோ கலைஞனோ தென்படவில்லை என்றும் பேர்ட்வுட் குறிப்பிட்டார். இது குமாரசாமியை மிகவும் வேதனையும் கொதிப்பும் அடைய வைத்தது. பேர்ட்வுட் போன்ற விமர்சகர்கள் கீழை நாடுகளின் கலைகளின் மேன்மைகளைப் பற்றி ஏதும் அறியாதவர்கள் என்றும் தங்களுடைய நாட்டில் உலவும் கலை குறித்த பார்வைகள் சார்ந்தே அவர்கள் இயங்குகிறார்கள் என்றும் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்தார். இந்த மேற்கத்திய கலை விமர்சகர்களுக்கு இந்தியக் கலைகளின் மேன்மையைப் பற்றித் தெளிவாகச் சொல்லியாக வேண்டும் என்று தீர்மானித்தார். பேர்ட்வுட்டின் அலட்சியமான பார்வைக்கு பதில்தரும் வண்ணம் Origin of the Buddha Image என்னும் நூலை உடனடியாக எழுதி வெளியிட்டார். இது உலகின் அனைவரின் கவனத்தையும் வெகுவாக ஈர்த்தது.

பேர்ட்வுட் போன்ற ஏகாதிபத்திய கொள்கைவாதி களின் கருத்தியல்களை தீவிரமாக எதிர்கொண்டு, இந்திய அழகியல் மெய்யியலின் தாற்பரியங்களை குமாரசாமி நுட்ப மாக முன்வைத்தார். இந்தியாவின் மெய்யியல் சிந்தனை மரபே கலைகளின் சாரமாக உள்ளது என்பதே குமாரசாமி யின் வாதங்களின் மையமாகும். இதற்கு "சுக்ரநீதி சாரம்" போன்ற தொன்மை நூல்களை ஆதாரமாக எடுத்துக் காட்டினார். இந்திய மெய்யியல் அடிப்படை பயிற்சியும் ஆர்வமும் சிறிதும் இல்லாத ஒருவர் இந்திய ஓவி யத்தையோ சிற்பத்தையோ தரிசிக்க முடியாது. இது பற்றி 'இந்தியக் கலை மரபும் ஆனந்த குமாரசாமியும்' என்ற கட்டுரையில் என். ரவீந்திரன் (சுபமங்களா; ஜூலை 1995) மிகத்தெளிவாக விளக்கியுள்ளார். அவரது கருத்துக்களை சுருக்கமாக அவதானிப்போம்.

பௌத்தக் கலை, இந்துக் கலை ஆகிய இரு மரபுகளும் ஒட்டுமொத்தமாக கலையமைப்பு, அதன் வளஉச்சி பற்றியே பேசுகின்றன. அன்றைய பெரிய கலை வெற்றிகள் எல்லாமே கூட்டு முயற்சிகளாகும். ஒரு பெரிய கற்சிற்பம் பல வருடங்கள், பல சிற்பிகள் இணைந்து உருவாக்குவது. சில சமயம் ஒரு தலைமுறைக்குப் பிறகு அடுத்த தலைமுறையினர் அதனை செய்து முடிப்பார்கள். அக்கலைப் படைப்பின் ஆதாரமான அமைப்பில் மாற்றம் ஏதும் வருவதில்லை. காரணம் அன்றைய கலைஞர்கள் பொதுவான மனோபாவங்கள், பொதுவான பயிற்சிமுறை, பொதுவான தரிசன அடிப்படை ஆகியவற்றால் உருவாக்கப் பட்டவர்கள். அன்றைய கலையில் பொதுவான ஒரு தரிசனத்தின் பல்வேறுவிதமான மலர்ச்சிகளே இடம் பெற்றிருந்தன. எனவேதான் தனிப்பட்ட கலைஞர்களின் பெயர்கள் குறிக்கப்படவில்லை. அன்று அவர்களை தனிப் பட்ட கலைஞர்களாக பார்க்கும் பார்வையே இருக்க வில்லை என்றார் குமாரசாமி. படைப்புக்குத்தான் முக்கியத் துவம் வழங்க வேண்டும், படைப்பாளிக்கு அல்ல என்பதையே அவர் வலியுறுத்தினார். படைப்பாளியின் தனித்தன்மையை அளவு மீறி படைப்பில் தேடுவது படைப் பாளிகளை அத்து மீறிய பரிசோதனைகளைச் செய்யத் தூண்டும். கீழை மரபு படைப்பை படைப்பாளியிடமிருந்து தேவையான அளவு விலக்கிப் பார்க்கிறது என்றார் கலா யோகி. இந்த கருத்தியலை மேலை கலைமரபு, புதிய விமர்சனக் கொள்கைகள் வந்த அண்மையான காலத்தில் தான் புரிந்து கொண்டது.



குமாரசாமி ஒரு சிறந்த புகைப்படக் கலைஞரும் கூட. அவரிடம் சலனப்படக் காமிராவும் இருந்தது. அந்தக் காலத்திலேயே பல குறும்படங்கள் எடுத்திருக்கிறார். அவருடைய ஒரு படத்தில் ஜப்பானிய கெய்ஷாப் பெண்கள் தங்கள் நடனங்களின் முத்திரைச் சிறப்புக்களை அவற்றின் நுட்பங்களை அவருக்கு விளக்குகிறார்கள். அவர் காலத்தில் இருந்த தேவதாசிகள் சதிர் ஆடுகிறார்கள். அக்காலத்திய நாட்டிய பாணிகள் படம் பிடிக்கப் பட்டுள்ளன. இந்த சலனப்பட நறுக்குகள் சித்தானந்த தாஸ்குப்தாவின் 'சிவனின் நடனம்' படத்தில் சேர்க்கப் பட்டுள்ளதாக வெங்கட்சாமிநாதன் குறிப்பிடுகிறார்.

மேலைத்தேய அழகியல் விமர்சகர்கள் திரும்பத் திரும்ப குறிப்பிடும் கலைமீதான 'விஞ்ஞான ரீதி'யான பார்வையை குமாரசாமி விமர்சிக்கின்றார். விஞ்ஞான ரீதியான பார்வை புலன்வழி அணுகுமுறையையும், பௌதிகவாத அணுகு முறையையுமே குறிக்கின்றது என்றார். அவை சார்ந்த பார்வை கலையின் ஆத்மாவை கோட்டை விட்டு விடும் என்று குறிப்பிட்டார். ஓவியக் கலையில் பிரித்தானிய விமர்சகர்கள் 'கண் வழியாகப் பார்க்கும் கோணத்'துக்கு அதீத முக்கியத்துவம் தந்தனர். இது நாம் அறிந்து உணரும் உலகத்தை ஒரு சிறு புள்ளியில் குவிப்பதன்றி வேறல்ல. அது பெரும்பாலும் 'ஸ்திதி' என்ற ஒரு நிலையை மட்டும் இயற்கையில் காண்கிறது. இந்தியக் கலையானது உலகத்தை 'சிருஷ்டி - ஸ்திதி - சம்ஹாரம்' (படைப்பு - நிலை - அழிவு) என்ற முப்பரிமாணத்தில் பார்க்கிறது. புலன் வழி அறிதல், தர்க்கம் வழி அறிதல், உள்ளுணர்வு வழி அறிதல் என்ற மூன்று முறைகளையும் அது பயன்படுத்துகிறது. இந்த அம்சமானது இந்நியக் கலைகளை மேற்கத்தியக் கலைகளிலிருந்து வேறு படுத்திக் காட்டுகிறது என்றார் ஆனந்த குமாரசாமி.

கீழைத்தேய காட்சி கலைகளின் பொது இயல்பாக குமாரசாமி கீழ்க்கண்ட அம்சங்களை முன்வைக் கிறார். சீன, ஜப்பானிய, மலாயக் கலைகளில் இப்பொது அம்சங்களைக் கண்டு அவர் நிறுவியுள்ளார். அவையாவன:

1.தாளம் (Rhythm)

2.உடலின் கோட்டு வடிவம் (Anatomical Drawing)

3.நிறப்பங்கீடு (Appropriate Distribution of Colour)

4.பொருண்மையும் தொகுப்புத் தன்மையும் (Composition)

5.புராதன முன் மாதிரிகள் (Classic Models)

6.ஆன்மீக ஒருமை (Spiritual Harmony))

இந்தியாவில் காட்சிக் கலைகளின் பொது இயல்பாக சில சிறு மாறுதல்கள் கொண்ட ஆறு அம்ச இலக்கணம் இருந்தது. இதற்கு 'சஷடங்கம்' என்று பெயர்.

அஜந்தாவிலுள்ள 'போதிசத்துவ பத்மபாணி' என்ற பிரபல ஓவியத்தைப் பற்றி குமாரசாமி இதன் அடிப்படையில் விரிவாகப் பேசுகிறார். ஓவியத்தில் தாமரை மலர் மலர்கிறது. வெறும் பார்வையாளருக்கு அது தாமரை மலர் மட்டுமே. ஆனால் இந்தியக் கலை மரபில் தாமரை என்பது பல்வேறு உட்பொருட்கள் கொண்டது. அந்த ஓவியத்தில் தாமரை, தாமரை மலரின் "யதார்த்த" உருவத்தில் இல்லை. அழகுபடுத்தப்பட்ட, அர்த்தச் செறிவு ஊட்டப்பட்ட வடிவில் உள்ளது. அந்தக் கலை ரீதியான செறிவுபடுத்தலுக்குக் காரணமாக அமைந்த தத்துவத்தைப் பற்றிய அறிவு இன்றி அதைப் பார்ப்பதில் அர்த்தமே இல்லை. இங்கு தாமரை என்பது ஒரு படிமம் (Metaphour). இன்னொரு வகையில் பார்த்தால் தாமரை என்று புத்த சிந்தனை மரபில் கூறப்படும் படிமத்தினைப் பற்றிய 'மறு படிமம்' அது (Metonym). இம்மலரைப் பார்த்தால் பௌத்தத்தின் தாமரைப் படிமத்தை நாம் மனதால் அடைய வேண்டும். அடுத்த கட்டமாக அப்படிமம் வழியாக பௌத்தம் உத்தேசிக்கும் அமூர்த்தமான கருத்து நிலைகளை அடையலாம். அதன் மூலமே இந்த ஓவியம் உத்தேசிக்கும் மன எழுச்சி, தரிசனம் ஆகியவை நமக்கு கிடைக்கின்றன. பௌத்த மரபில் தாமரை மனித மனத்தின் குறியீடு. பிரமாண்டமான தர்மத்தாமரை (மகாதர்ம புண்டரீகம்) எல்லா மனங்களும் இணைந்த மகத்தான பொதுமனத்திற்கு குறியீடு. புத்தர் சூரியனுக்கு நிகரானவர். அவருடைய ஒளிபட்டு தாமரை விரிகிறது. விரிந்து விரிந்து லட்சம் இதழ்கள் கொண்ட மகாபத்மமாக மாறுகிறது. தாமரையை சூரிய வடிவம் போல வட்டமாகவும் கதிர்கள் கொண்டதாகவும் அமைப்பது பௌத்த மரபு. இங்கு போதிசத்துவன் கையிலுள்ள தாமரை பாதி மொட்டாக உள்ளது. போதிசத்துவனின் அகவிழிப்பு துவங்கி விட்டதை இது குறிக்கிறது. அந்த அறிதலுக்குப் பிறகு இந்த ஓவியத்தை நாம் பார்த்தால் வண்ணங்கள் பயன்படுத்தப் பட்டிருக்கும் முறை, போதிசத்துவனின் அருள் ததும்பும் முகம், உடலின் வளைவு, கைவிரல்களின் நெளிவுகள் எல்லாமே பெரிய அனுபவங்களை தருமளவு விரிவடையும். இவ்வாறு 'போதிசத்துவா பத்ம பாணி' என்ற அஜந்தா ஓவியத்தை விரிவாக விளக்கி நிறுவியுள்ளார் கலாயோகி.

5

கலாயோகி ஆனந்த குமாரசாமி பௌத்தமும் இந்து மதமும், இலங்கையின் வெண்கல உருவங்கள், சிவநடனம், யக்சர்கள், ராஜபுத்திர ஓவியங்கள், இந்திய-இந்தோனேசிய கலை வரலாறு, வேதங்களை நோக்கிய புதிய அணுகுமுறை, அபிநயக் கண்ணாடி முதலான பல அரிய படைப்புகளைத் தந்திருந்தாலும், சிவநடனம், வேதங்களை நோக்கிய புதிய அணுகுமுறை ஆகிய இரண்டு நூல்களுமே மிகச் சிறந்தன என்பது ஆய்வாளர் கருத்தாகும். குமாரசாமி வேறு எதனை எழுதியிருக்கா விட்டாலும் வேதங்களை நோக்கிய புதிய அணுகுமுறை ஒன்றே அவரது எழுத்தாற்றலுக்குச் சான்று பகரும் என் கின்றார் ஏ.ரங்கநாதன். ஆனந்த குமாரசாமியை அடையாளப்படுத்திய நூல் 'சிவ நடனம்' (Dance of Shiva) ஆகும். இந்நூலை 1918ஆம் ஆண்டு அமெரிக்காவில் இருந்த போது வெளியிட்டார். பதினான்கு கட்டுரைகள் அடங்கிய இந்நூல் வெளிவந்த உடனேயே உலக இலக்கியமாய் ஒளி வீசத் தொடங்கியது. 'சிவ நடனம்' என்ற கட்டுரை அந் நூலுக்கு ஒளிக்கற்றைகளை வாரி வழங்கிய வைகறைப் பரிதி. சென்னையிலிருந்து வெளிவந்த 'சித்தாந்த தீபிகா' என்ற அங்கில இதழின் பதின்மூன்றாவது தொகுதியில் 1912 ஆம் ஆண்டு ஜூலை மாத இதழில் இக்கட்டுரை வெளியானது. இந்தியக் கலைகளின் உயிர்நாடியாக கலாயோகி கருதுவது நடராஜ வடிவத்தைத்தான். நடராஜ வடிவம் பற்றியும், அதன் பல்வேறு ஸ்திதிகள் பற்றியும் தத்து வார்த்தமான விளக்கம் அளித்துள்ளார். சிவநடனமானது

படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிகளின தும் ஸ்தூல வடிவமென்கிறார். "ஊழி நெருங்குகையில் தீயின் உருவில் நடனமாடியபடியே பிரபஞ்சத்தை சங்காரம் செய்கிறார் சிவன். அதன்மூலம் சர்வ லோகங் களுக்கும் புதிய அமைதியைக் கொடுக்கிறார்." இவ்வாறு சிவனின் ஊர்த்துவ நடனத்துக்கு விளக்கமளித்தார் ஆனந்த குமாரசுவாமி. சிவநடனம் இந்திய அழகியலின் அடிப்படையாயும், வாழ்க்கைபற்றிய இந்திய தரிசனமாயும் ஆகிறது இவருக்கு. இது விஞ்ஞானம், கலை, மதம் ஆகிய மூன்று துறைகளின் சேர்மதி என்று கூறுகிறார்.

"ஒரு கீழைத்தேய கலைப்படைப்பு என்பது ஒரு இருப்பாகவும் (Being), அதன் சாரத்தைப் (Essence) பிரதி பலிக்கும் குறிப்பான் (Signifier) ஆகவும் ஒரே சமயம் உள்ளது. வெறும் இருப்பாக அதைப் பார்க்கும் போது அது அளிப்பது ஒரு பக்கத்தை மட்டுமே. அது ஒரு குறியீடு என்ற முறையில் விரிவான பின்னணிப் புரிதலோடு அதை அணுகவேண்டும். ஒரு சிற்பத்தின் கை முத்திரைகள், உடல் நிலைகள், முக பாவங்கள், அணிகள் மற்றும் ஆய தங்கள், துணைப் பிம்பங்கள் ஒவ்வொன்றும் முக்கியம். அவை இணைந்து வெளிப்படுத்தும் தரிசனங்கள் அப்படைப்பை உன்னதமான கலைப்படைப்பாக ஆக்கு கிறது. நடராஜர் என்ற சிற்ப வடிவை இவ்வண்ணம் மிக நுட்பமாக ஆராய்கிறார் குமாரசாமி; (1995: 18).

'இந்துக்களின் கலைக் கோட்பாடு' என்பது 'சிவநடனம்' நூலிலுள்ள இன்னுமொரு முக்கிய கட்டுரை ஆகும். இக்கட்டுரையில் அழகியல் வரலாறு பற்றியும், அழகு பற்றிய கொள்கை பற்றியும் விரிவாக எடுத்துரைத் துள்ளார். குமாரசாமி அழகியல் வரலாற்றை வேதகாலத் துடன் தொடங்குகின்றார். மிகப் புராதனமான இந்தியக் கலை வேதகாலத்தைச் சேர்ந்தது. இது பூர்வ திராவிடக் கலையோடு சமகாலத்ததாகும். வேதகாலத்துக் கலை, வாழ்வோடு நெருங்கிய தொடர்புடையதாயிருந்தது. ஓவியம், சிற்பம் என்பவற்றைப் பற்றி ஒன்றும் தெரிய வில்லை. ஆனால் தச்சனும், உலோக வேலை செய்வோ னும், குயவனும், கைக்கோளனும் மக்களுடைய சீவியத் துக்குத் தேவையான பொருள்களைத் திறம்படச் செய்து வழங்கினர். அவர்களுடைய கைவினைப் பண்டங்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தால் அந்த அலங்காரப் புனைவு மந்திர சக்தியையும், பாதுகாப்புச் சக்தியையும் இணைப்ப தாகவே செய்யப்பட்டதென்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

"கவிதையின் பயனும் வாழ்வோடு சம்பந்தப் பட்டதாகவே இருந்தது" என்று கூறும் குமாரசாமி அதனை பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றார். மக்கள் மாட்டுத் தெய்வங்கள் அனுக்கிரகஞ் செய்யும் முறையிலேயே வேதப் பாடல்கள் அமைக்கப்பட்டன. இருக்குவேதப் பாடல்களில் பெரும்பாலானவை வருணனைப் போக் குடையவை. அவை இயற்கைத் தோற்றத்தை வருணிப் பவை. அதனால், அவற்றை இயற்கை பற்றிய பாடல்கள் எனலாம். இங்கே காணப்படும் சிறந்த கவிதை பண்பு அதிசயமும் இயற்கைத் தோற்றத்தைக் கண்டு அற்புத மடையும் இயல்புமாகும். சிந்தனையைத் தூண்டும் அமிசங்களோ, வாழ்வின் துன்பம் மலிந்த தன்மைகளோ கிடையாது. பின் வந்த பாடல்களிலே அவை அருகிக் காணப்படுகின்றன. 'அழகுணர்ச்சி அனுபவம்' (சுவைத்தல் அல்லது இரஸ்வாதனம்) என்ற பேச்சுக்கே அங்கு இட மில்லை. அனுதாபம் என்ற கருத்துப்பொருள் அங்கே அடிக்கடி காட்சி தரும். கைத்திறன் வாய்ந்த சிற்பியால் நிர்மாணிக்கப்பட்டதோர் அழகிய தேர் எனவும், நன்கு நெய்யப்பட்ட அழகிய சேலை எனவும், கலியாண முகூர்த்தத்துக்கு அலங்கரிக்கப்பட்ட மணமகள் எனவும் கவிதை வணிக்கப்படுகின்றது. இத்தகைய அணிகளே கவிதைக்குச் சிறப்பெனவும், இதனாலேயே தேவர்களைப் பிரீதிப்படுத்தத் தொடுக்கப்பட்ட அந்தக் கவிதைகளைத் தேவர்கள் உவந்து ஏற்றனர் எனவும் கருதப்பட்டன. கருமத்தில் திறமை காட்டு வதையே அழகியலாக வேதம் ஒப்புக்கொண்டதாக கலா யோகி குறிப்பிடுகின்றார்.

உபநிடத காலத்திலும் (கி.மு. 800) பாலி பௌத்த காலத்திலும் (கி.மு. 500) உண்மையை ஆராய்வதே கலை யின் நோக்கமாகக் கொள்ளப்பட்டதாக எடுத்துக் காட்டி இக்கால அழகியல் அம்சங்களை ஆராய்கின்றார். கலை என்பது ஒரு யோகம் என்னும் கருத்து இந்தியச் சிந்தனை வளர்ச்சியிலே ஒரு முக்கியமான இடத்தை வகுத்தது என்றும் அதனை விரித்துப் பெரியதொரு நூல் எழுதலாம் என்றும் கூறி, இங்கு சுருக்கமாக விவரிப்போம் எனக்கூறி, யோகம் பற்றி விளித்துப்பேசியுள்ளார். கலை ஒரு யோகம் என்ற இந்தக் கருத்தை விளக்கும் உதாரணங்கள் பல இலக்கியங்களிலே விரிந்து காணப்படுகின்றன. இரா மனுடைய சரிதத்தை முன்னரே அறிந்திருந்த வான்மீகி, இராமாயண காவியத்தை பாடுவதற்கு முன்னர் அச்சரித்தி ரத்தை மனத்திரையிலே ஆழப் பதித்துக் கொள்வதற்காகக் கிழக்குநோக்கியிருந்து விதிப்படி ஆசமனஞ் செய்து கொண்டு, தமது காவியப் பொருளை யோகத்தால் உணர்ந் தார். இந்த யோகத்தினால் அவர் இராமனையும், இலக்கு வனையும், சீதையையும், தசரதனையும், அவன் மனைவி யரையும் அயோத்தியிலே கண்டார். அவர்கள் நிஜவாழ்வில் எவ்வாறு சிரித்துக்கொண்டும், பேசிக்கொண்டும், செயல்களில் ஈடுபட்டுக்கொண்டும் இருந்தார்களோ, அவ்வாறே அவர்களைக் கண்முன் கண்டார். அந்த யோகத்தினால் முன்னே நிகழ்ந்தவற்றையும் இனி நிகழ வேண்டுவன வற்றையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறிந்தார். இவ்வாறு தமது யோகத்தினால் எல்லா வற்றையும் கண்ட வான்மீகிப் பெருந்தகை இராமகாதையை எழுதத்தொடங்கினார்.

தெற்கே அமராவதி, அனுராதபுரம் ஆகிய இடங்களிலே காணப்படும் ஆதி உருவச் சிலைகளிலே தாம் இந்தியக் கலைமரபின் சிறப்பான தன்மைகளைக் காண லாம். இந்தியாவின் வடமேற்கிலே காணப்படுவன உரோமச் சிற்ப மரபு பெரும்பாலும் கலந்தவை. இந்த உருவச் சிலை களை அடிப்படையாகக்கொண்டே அழகும் உருவ சௌந் தரியமும் வாய்ந்த குப்தர்கால உருவங்கள் எழுந்தன. குப்தர்கால ஓவியமும், அதற்கு முற்பட்ட செந்நெறிக்கால ஓவியமும் அஜந்தாக் குகைகளில் இன்றும் பாதுகாக்கப் பட்டுள்ளன என்றும் குமாரசாமி எழுதுகின்றார். அஜந்தா ஓவியங்களிலும் மாமல்லபுரச் சிற்பங்களிலும் மனித இயல்புகளை உணர்ச்சியோடு படம் பிடித்துக் காட்டு மியல்பும், இயற்கைமாட்டுக் காட்டப்படும் ஆராத அன்பும் சிறந்து மேலோங்கி நிற்கின்றன. இதே பண்புகளை அசுவ கோசர், ஆரியசூரர் போன்ற கவிகளிடத்தும், காளிதாசர் போன்ற நாடக ஆசிரியர்களிடத்தும் காணலாம் என இது பற்றிய விடயங்களை உதாரணங்களுடன் துலக்கி, ரவீந்திர நாத் தாகூரின் 'கீதாஞ்சலி' பாடல்களை எடுத்து விளக்கி

இக்கட்டுரையை நிறைவு செய்கின்றார்.

'இந்துக்களின் கலைக் கோட்பாடு' என்ற கட்டுரையின் இரண்டாவது பகுதியில் 'அழகு பற்றிய கொள்கை'களை பின்வருமாறு ஆராய ஆரம்பிக்கின்றார். கலையிற் காணும் அகச் சான்றுகளையே பெரும்பாலும் ஆதாரமாகக் கொண்டு நாம் இதுவரையும் இந்துக்களின் கலையைப்பற்றி ஆராய்ந்தோம். இனிப் பலபட விரிந்துள்ள வடமொழி அலங்கார நாடக சாத்திரங்களிலும் இந்தி அலங்கார நாடக சாத்திரங்களிலும் விளக்கி அமைக்கப் பட்டிருக்கும் அழகியற் கொள்கைகளை ஆராய்வோம். இந் நூல்களிலே கண்ட முடிபுகள் இலக்கியத்துக்கு மாத்திர மன்றிப் பொதுவாக எல்லா அழகியற் கலைகளுக்கும் பொருத்தமுடையனவாம் என்றுச் சொல்லி கவிதையின் அழகியல் அம்சங்கள் பற்றி ஒப்பியல் ரீதியாக ஆராய்ந் துள்ளார்.

கவிதைக்கு இன்றியமையாத அம்சம் எது என்ற கேள்வி எழுகிறது. சில அலங்கார ஆசிரியர் ரீதியே முக்கியம் என்பர்; வேறு சிலர் அணி என்பர்; மற்றுஞ் சிலர் குறிப்புப் பொருளான வியஞ்சனமே முக்கியம் என்பர். (காவிய வகையைப் பற்றி ஆராயுமிடத்து வியஞ்சனார்த்தம் என்னும் குறிப்புப் பொருளைப்பற்றிக் கூறுவோம்.) ஆனால், அணியியலைச் சிறப்பாக ஆராய்ந்த பேரறிஞர்கள் இந்த மதங்களை எல்லாம் கண்டித்து விட்டுச் சுவையே கவிதைக்கு உயிர் என்பர். சுவை என்பது இரசம். இரசம் என்னும் சொல்லை அழகு அல்லது இரச பாவம் எனக் கொள்ளலாம். இது மெய்யியல் சார்புடைய பொருளிற் கொள்ளப்பட வேண்டும். 'இரசவந்த' என்பது சுவைபொருந்தியது எனப் பொருள்படும். கலையிற் காணப்படும் இரசத்தைக் காண்போன் இரசிகன். இந்த இரசத்தை அனுபவிக்கும் சுவையுணர்வை இரசாஸ்வா தனம் என்பர். இவ்வாறு சுவை, இரசம், விபாவங்கள், பாவம், சத்துவபாவம் முதலானவற்றை கவிதை, கலை யோடு மையப்படுத்தி நுண்ணயத்தோடு ஆராய்ந்துள்ளார்.

குரோசேவின் கலை பற்றிய கருத்துக்களோடு முரண்கொண்டு இப்படிச்சொல்கின்றார்: "குரோசே, புலப்பாடே கலை என்றார். ஆனால், குறிப்புணர்த்தும் கவிதையில் இந்த வரைவிலக்கணம் திருத்தமடைவதோடு விரிவாயுமிருக்கின்றது.

"அம்மனிதன் நடக்கின்றான்."

(a+b)2 = a2 + 2 ab + b2

என்ற கூற்றுகள் எவ்வளவு பூரணமாக ஒரு கருத்தைப் புலப்படுத்தினாலும், கவிதைகள் ஆகாது. கவிதை வாக்கியம் எத்தகைய வாக்கியம்? 'இரசாத்மகம் வாசகம்' அஃதாவது சுவைபொதிந்த வாக்கியம். அங்கே ஒன்பது இரசங்களிலே ஒன்று குறிப்பாகக் காட்டப்படும். இந்தச் சுவையுணர்வு உணர்ச்சியில் புகுவதாலுண்டா கிறது; அதனை உணர்ச்சித் திறனுடையவரே அனுப விப்பர். அதுவே இரசத்துக்குரிய நிபந்தனை." இத்தகைய அர்த்தப்புஷ்டியான கருத்துக்கள் இக்கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆனந்தக் குமாரசாமியின் நூற்றுக்கணக்கான கட்டுரைகள் கீழைத்தேய ஆய்வாளர்களை மட்டுமல்ல, மேலைத்தேய ஆய்வாளர்களையும் ஈர்த்துள்ளன. 1923ஆம் ஆண்டு 'கலைசெய்தி' ஏட்டில் அவரெழுதிய (மனைவி ஸ்டெல்லா புளக்குடன் இணைந்து) 'கலையைச் சுவைத்தல்' என்ற கட்டுரை கலையை பற்றிய நுண்மையான கருத்துக்களை ஆராய்கின்றது. இக் கட்டுரையை இவ்வாறு ஆரம்பிக்கின்றார்: "கலையைப் பற்றி நாம் உரையாடும் போது, கலை என்று நாம் கருதுவது என்ன என்பதனைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். அக அனுபவத் தினை குறியீடுகள் மூலம் வெளியிடுவதே கலை. இக்குறியீடுகள் ஒலிகளாக இருக்கலாம். (இசை, வாய், மொழி இலக்கியம்) அல்லது எழுதப்பட்ட அடை யாளங்கள், குறிப்பாக கோடுகளாக இருக்கலாம். (வரை படங்கள், உரு வரைப் படங்கள்) அல்லது வண்ணங்களாக இருக்கலாம் (ஓவியங்கள்) அல்லது செறி தொகுதிகளாக இருக்கலாம் (சிற்பம்) இதற்கு மாறாக, விஞ்ஞானம் என்பது புறநிலை யான அனுபவத்திலிருந்து பெறப்பட்ட கருத்துப் படிவங் களை இணைத்து வெளியிடும் அமைப்பே." ("கலையைச் சுவைத்தல்" என்ற கட்டுரையை ஏ.ஜே. கனகரட்ண தமிழில் பெயர்த்திருக்கிறார்; இது அலை – 1 (கார்த்திகை 1975), அலை – 2 (தை 1976) இல் வெளியானது).

அணி (Ornament) என்ற கட்டுரையில் பல கோணங்களில் அணியைப்பற்றி அவர் ஆராய்கிறார். அணியும் சோடனையும் பொருள் வேறுபாட்டுடன் இன்று கையாளப்பட்டாலும் கலைப்பொருளின் ஒன்றுபட்ட கூறுகளே அவையிரண்டும். அணி (Ornament) என்பது 'அலங்காரம்' என்ற சமஸ்கிருதச் சொல்லால் குறிக்கப் படுகிறது. 'அலங்கார சாஸ்திரம்' என்பது செய்யுள் அணி நூலைக் குறிக்கும். 'அலங்காரம்' என்ற சொல் 'அலம்', 'கிரு' என்ற இரு சொற்களாலானது. 'அலம்' போதுமானது என்றும் 'கிரு' 'செய்ய' என்றும் பொருள்படும். வேத மொழியில் 'அலம்' என்பது 'அரம்' என்று சொல்லப்பட்டது. தேவையானதைக் கொள்வது, அழகுபடுத்திக் கொள்ளுதல் (adornment) என்ற பொருளில் வழங்கியது. "கல்வியினால் மனமும், குற்றத்தினால் மடமையும், கட்படாத்தால் யானை யும், நீரால் ஆறுகளும், திங்களால் இரவும், சலனமின்மை யால் உறுதியும், வழிகாட்டுவதால் அரசும், அழகுபடுத்தப் படுகின்றன," என்ற பஞ்சந்திரக் கூற்று எடுத்துக்காட்டாகும். இப்படியாக அணி பற்றி ஆராய்ந்துள்ளார்.

1908 ஆம் ஆண்டில் கோப்பன்ஹாகனில் (Copen hagen) நடைபெற்ற அனைத்து நாடுகளின் கீழை நாட்டுக் காங்கிரசின் பதினைந்தாவது கூட்டத்தில் 'இந்தியக் கலைமீது கிரேக்கத்தின் தாக்கம்' (The Influence of Greek in Indian Art) என்ற ஆனந்தகுமாரசாமியின் உரை குறிப்பிடத்தக்க தாகும். மேலை நாட்டு அறிஞர்கள் (வின்சென்ட் ஸ்மித் போன்றவர்கள்) இந்திய கலைமீது போலித்துவமாய் முன்வைத்துவந்த கடுமையான விமர்சனங்களை மறுத் துரைப்பதாக அந்த உரை அமைந்தது.

"கிரேக்க – இந்தியக் கலைகளுக்கும் மெய்யியல் களுக்கும் நடுவில் இருதுருவங்களின் இடைவெளியுள்ளது. கிரேக்கக் கடவுளர்களின் உருவங்கள் கிரேக்க சமயத்தின் ஒலிம்பிக் கண்ணோட்டத்தில் அமைந்தவை. அதற்கு மாறாக இந்தியக் கலை காலம், வெளி அனைத்தையும் கடந்து நிற்பது. மாசற்ற மனிதனை அது சுட்டுவதன்று. காண மடியாத தெய்வீகத்தின்– முடிவற்ற அந்தமிலா ஒரு பொருளின் குறியீடாகும் அது."

மேலைநாட்டுக் கலைக்கு அந்நாட்டுச் சிற்பிகள் சிறந்த மனிதத் தன்மையை கொடுத்துள்ளார்கள். ஆனால் இந்தியக் கலைஞர்கள் அவர்களின் கலைப்படைப்புக் களுக்குக் கருத்தைக் கவரும் தெய்வத் தன்மையைக் கொடுத்துள்ளனர் என்பதை நன்கு உணர்ந்து உணர்த்தி

யவர் ஆனந்தக் குமாரசாமி இதனால்தான் இராஜாஜி, "அழகை இறைவனாகக் கண்டவருள் ஆனந்தக் குமார சாமி அவர்கள் முதன்மை பெற்றவர். அவர் ஒரு பெரியார். மற்றையவர்கள் காணாத பலவற்றைக் கண்டவர்" என்று புகழ்ந்துள்ளார். "மேனாட்டுச் சிற்பங்களைப் போல இந்திய சிற்பங்கள் உடலுறுப்புச் சாஸ்திர (Human Anatomy) அமைவுகளுக்கேற்ப அங்க அமைவுகளையும், உறுதி யான நரம்புகளையும், மனித அழகையும், முக பாவத்தை யும் கொண்டிருக்கவில்லை. சாதாரண பொம்மைகளாக அவை இருக்கின்றன என்று கருதி வந்தவர்கள் மேலை நாட்டினர். மேலைத்தேசக் கலைப் படைப்புக்கள் மனிதனது சாதாரண உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய, முப்பரிமாணமுள்ள, தன்மை நவிற்சிப் (Realistic) படைப்புக் களே. அவைகளில் உயிர்த்துடிப்பையோ, உயர்ந்த தத்துவங்களையோ, உள்ளத்தின் உணர்ச்சிகளைக் காட்டும் முகபாவங்களையோ காண முடிவதில்லை. கீழைத்தேசக் கலைகள் – முக்கியமாக இந்தியக் கலைகள் – குறியீட்டு எண்ணமும், அரூபத் தன்மையும், அலங்காரச் சிறப்பும், ஆத்ம உணர்ச்சி வெளிப்பாடும் கொண்ட கற்பிதக் (Idealistic) கலைப் படைப்புக்களே. இவைகளிற் காணப்படும் அங்க அமைப்பும், சாயலும், கால்களின் நிலையும், கைகளிற் காணும் முத்திரைகளும், ஆடை அணிகலன்களும், ஆயுதங்களும், பிறவும் மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட அரும்பெரும் தத்துவங்களை விளக்குவனவே." இவ்வுண்மைகளை மேலை நாட்டினருக் குப் பல கட்டுரைகள் மூலமும் சொற்பொழிவுகள் மூலமும் விளங்க வைத்து அவர்கள் கொண்டிருந்த தவறான கருத்தை மாற்றியவர் குமாரசாமி. இதனால்தான் உலகக் கணித மேதை ஈன்ஸ்டின், பிரஞ்சுப் பேரறிஞர் ரோமைன் ரோலண்ட், ஜேர்மன் பேராசிரியை ஸ்டெல்லா கிராமரிஷ் போன்றோர் இந்தியக் கலைகளைப் போற்றி ஆராய்ச்சி செய்ய வாய்ப்பேற்பட்டது. இன்று மேலை நாடுகளிலே கைக் கொள்ளப்பட்டுவரும் தற்கால ஓவியங்கள், தற் காலச் சிற்பங்கள் ஆகியவற்றிற் காணப்பெறும் குறியீட்டு எண்ணமும், அரூபத் தன்மையும் கீழ் நாட்டினரிட மிருந்தே பெறப்பெற்றவை எனலாம். இதற்கும் குமாரசாமி யின் அழகியல் விளக்கங்களே காரணமாக இருந்திருக் கக்கூடும் ((பார்க்க, கலாகேசரி ஆ. தம்பித்துரை; "கலாயோகி ஆனந்த கெ. குமாரசுவாமி;" 1971).

1912ஆம் ஆண்டில் சிலகாலம் தாகூருடன் அவர்களுடன் தங்கியிருந்தார். (ரவீந்தாநாத் தாகூரின் பாடல்களை முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் ஆனந்தக் குமாரசுவாமியே.) அப்பொழுது வங்கக் கலைகளைப் பற்றி நன்கு ஆராய்ந்து பல உயரிய கலைக் கட்டுரைகளை தம் கலை வெளியீடுகளில் வெளி யிட்டார். இதே காலத்தில் தென் இந்தியாவுக்கு வருகை தந்து திராவிடக் கலைகளின் தாயகமாக அது மிளிர்வதை உணர்ந்தார். பாரதக் கலைகளின் கருவூலம் திராவிடக் கலைகளிற் காணப்படுவதைக் கண்டு களித்தார். இந்தியக் கலைஞன் முதலில் மெய்யியலாளனாகவும் ஞானியாக வும், யோகியாகவும் பின்பு கலைஞனாகவும் தோற்று கின்றான். இது குமாரசாமி கண்டறிந்த உண்மை. எனவே தான் அவரை அக்கலைகளின் அறிவையும், அழகையும், மெய்யியலையும் அறிந்த கலாயோகி என்று உலகம் போற்றுகின்றது. "டாக்டர் குமாரசாமி அவர்கள் எங்கள் உரிமைகளின் உயர்ந்த இலட்சியத்தை எடுத்து அறி வுறுத்தியவரும், இந்தியக் கலையின் சிறந்த அழகினை உலகிற்கு விளக்கியவருமான ஒரு ரிஷியாவார்" என்று இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்த டாக்டர் இராசேந் திரப் பிரசாத் இவரைப் பாராட்டியது இதற்கு எடுத்துக் காட்டாகும். அழகியல் மெய்யியல் மூலமாக ஒரு மறு மலர்ச்சியை காண முயன்றவர் குமாரசாமி. இதற்காக அவர் நூல்களாகவும் கட்டுரைகளாகவும் ஐந்நூறு பிரசுரங்கள் வரை எழுதியுள்ளார். அவற்றில் அவர் தாம் கண்டனவற்றை யும், ஆராய்ந்தவற்றையும் வேறு அபிப்பிராயங்களுக்கு இடமின்றித் திரிகோண கணித தேற்ற வாய்ப்பாடுகள் போலத் தர்க்கமாக விளக்கமாக எழுதியுள்ளார். அவை தீர்க்கதரிசிகளின் ஒரு அருள்வாக்குப் போலக் காலப் போக்கில் நிரூபணமாவதையும் நாம் இன்று காண் கின்றோம். இதைக் கலாநிதி ச. இராதாகிருஷ்ணன் பின்வரு மாறு எடுத்துரைக்கின்றார்: "நான் டாக்டர் ஆனந்தக் குமாரசுவாமி அவர்களின் நூல்களைப் பல வருடங்களாகக் கற்று வந்தேன். அவரைப் போஸ்டன் நகரில் 1946ஆம் ஆண்டிற் சந்திக்கும் பெரு மகிழ்ச்சியைப் பெற்றேன். இந்திய மறுமலர்ச்சிக்கு மாத்திரமன்றி, உலகத்தில் ஒரு புதிய மறுமலர்ச்சிக்கு வழிகோலியவர்களுள் அவருமொரு வராவார். இக்காலத்து நிலையற்ற வேஷங்களில் ஏமாற்றமடையும் எங்கள் மாணவர்கள், உண்மை உணர்ச்சியைப் பெறுவதற்கு, கலாயோகியின் நூல்களைக் கற்க வேண்டுமென நான் விரும்புகின்றேன்."

6

கலாயோகி ஆனந்தக் குமாரசாமி இலங்கை யிலும், இந்தியாவிலும் தங்கிச் சுற்றுப்பிரயாணம் செய்த காலங்களில் சேகரித்த கலைப் பொருட்களைக் கொண்டு இந்தியாவிலேயே ஒரு கலாபவனத்தை நிறுவ முயன்றார். அம்முயற்சிக்குப் போதிய ஆதரவு கிடைக்கப் பெறாமை யினால் அவர் தம் எண்ணம் நிறைவேறவில்லை. மனச் சோர்வுடன் மேல்நாடு சென்றார். அமெரிக்க அரசாங்கத் தின் அழைப்பின் பேரில் 1917ஆம் ஆண்டு போஸ்டன் நகரிலுள்ள நுண்கலை அருங்காட்சியகத்தின் இந்தியக் கலைப்பிரிவின் கலைக்காப்பாளராகப் பதவியேற்றார். 1922ஆம் ஆண்டு தொடக்கம் 1933ஆம் ஆண்டு வரைக்கும் இந்தியக் கலைப்பொருள்களோடு, பாரசீக இஸ்லாமிய பொருள்களுக்கு காப்பாளர் ஆனார். 1937 முதல் 1947ஆம் ஆண்டு வரைக்கும் இந்திய, பாரசீக, இஸ்லாமிய கலைப் பொருள்கள் சம்பந்தமான ஆராய்ச்சியாளராக செயற் பட்டார். பேராசிரியர் டென்மன் வால்டோ ரோஸ் (Dr. Denman Waldo Rose) என்பவர் பெரும் செல்வந்தர்; சிறந்த கலை ரசிகர்; "போஸ்டன்" கலைக் கூடத்தின் தர்மகர்த்தாக்களில் ஒருவர். இவரே குமாரசாமி சேர்த்து வைத்திருந்த கலைப் பொருள்களைப் போஸ்டன் அருங்காட்சியகத்துக்காக விலைக்கு வாங்கி அவரையும் அவ்வருங்காட்சியகத்தில் காப்பாளராக சேரவைத்தார். அவரால் போஸ்டன் நுண் கலை அருங்காட்சியகம் உலகிலே முதன்மை வாய்ந்ததாய் மிளிர்ந்தது. இந்தக் கலைப்பணி காரணமாகப் பல்வேறு நாடுகளுக்கும் சென்று கலைப்பொருள்களைச் சேகரித் தார். இக்கலைப் பொருள்களை வகைப்படுத்தி விளக்கவுரை கள் எழுதினார். கலைக்கூடத்தில் இருந்த பொருள்களை ஆறுபட்டியல்களாக வெளியிட திட்டம் வகுத்து, ஐந்தாக வெளியிட்டார். அவை: பொது அறிமுகம், சிற்பம், சமண வியங்களும் கையெழுத்துப் பிரதிகளும் இராஜபுத்திர

ஓவியம், முகலாவிய ஓவியம் என்பனவாகும். கலைக்கூட சஞ்சிகைக்கு 61 கட்டுரைகள் (1917-1947) எழுதியுள்ளார். தமது கலைஞானத்தையும் ஆராய்ச்சியையும் ஊற்றுத்தாரை போலப் பிரவாகிக்கச் செய்தார்.

1922ஆம் ஆண்டு ஸ்டெல்லா புளாக் (Stella Bloch) பெண்ணை குமாரசாமி மணந்தார். இம்மூன்றாவது திருமணமும் 1930 ஆம் ஆண்டு முறிந்தது. அடுத்து உடனேயே குமாரசாமி டோனாலூயிசா ரன்ஸ்டின் என்ற பெண்ணை மணந்தார். இக்கடைசித் திருமணம் இறுதி வரையில் நிலைத்தது. போஸ்டன் கலை கூடத்திற்காக கலைப் பொருள்களை வாங்குவதற்காக குமாரசாமி கிழக்கு ஆசிய நாடுகளில் 1920ஆம் ஆண்டு சுற்றுப் பயணம் மேற் கொண்டார். 1927 ஆம் ஆண்டு 'இந்திய - இந்தோனேசியக் கலை வரலாறு' என்ற நூலை வெளிக்கொணர்ந்தார். காய்தல் உவத்தல் இன்றி வரலாற்று நூலை எழுதும் அவர் திறன் அந்நூலில் மினுக்கமுறுகின்றது. ஆறு பிரிவுகள் அடங்கிய இந்நூலில் நாட்டுப்படங்கள் ஒன்பதும் நானூறு கலைப் படங்களும் உள்ளன. 'மன் மௌரியர்' என்ற தொடக்கப் பகுதியில், 'இந்தோ-சுமேரியர் திராவிடரும் ஆரியரும்' என்ற உட்பிரிவுகள் காணப்படுகின்றன. இவை தொல்பொருள், வரலாறு துறையினர் ஆழ்ந்து படிக்கத் தக்கது.

ஆனந்தக் குமாரசாமி தமது இறுதிக்காலம் வரையும் (முப்பது ஆண்டுகள்) போஸ்டன் நுண்கலை அருங்காட்சியகத்தில் உலகிலே உயர்ந்த கலைஞராக வும், கலைஞர்களுக்கு எல்லாம் ஒளி விளக்காகவும் திகழ்ந்து வந்தார். கலைத்தொண்டிற்காகத் தமது வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணித்த இவரின் 70ஆவது ஆண்டு நிறைவுவிழா 1947ஆம் ஆண்டில் உலகெங் கணுமுள்ள அறிஞர்களினால் கொண்டாடப்பட்டது. அமெரிக்கக் கலைஞர்கள் போஸ்டன் நகரில் சிறப்பாகக் கொண்டாடினர். அந்நாளையொட்டி பரத ஐயர் சேகரித்த கட்டுரைத் தொகுதியொன்றும் துரை ராஜசிங்கம் வெளிக்கொணர்ந்த புகழ் மாலையொன்றும் குறிப்பிடத் தக்கன. அன்று போஸ்டனில் ஆனந்தக் குமாரசாமி ஆற்றிய உரை உயிர்துடிப்புமிக்கது.

"நம்முடைய நுண்கலை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கலைப் பொருள்கள் ஒரு காலத்தில் தெருக்கடைகளில் விற்கப்பட்டன. ஒவ்வொரு மனிதனும் எந்த வேலையைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்து 'சுதர்ம'த்தைக் கடை பிடிக்கும் சமூகமே உண்மையில் நாகரிகமடைந்தது. நான் ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். நான் என்னுடையதென்று சொல்லக் கூடிய 'மெய்யியல்' எதையும் உண்டாக்க வில்லை. ஒரு புதிய சமயக் கோட்பாட்டை நிறுவ விரும்பவுமில்லை. என்னைப் பற்றி ஒருக்காலும் நான் எண்ணாமலிருக்கக் கற்றுக்கொண்டதே மிகச் சிறந்தது போலும். 'சொல்' பொதுச் சொத்து. மேலெழுந்த வாரியாக வேற்றுமை தோன்றினாலும் மனிதப் பண்பாடு ஒன்றே. உள்ளுரியின் துடிப்பு மொழி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. நான் கலைகளின் வரலாற்றைப் படித்ததன் மூலம் மெய்யியல் ஆராய்ச்சிக்கு இட்டுச் செல்லப்பட்டேன். இதனால் என் வாழ்க்கையில் திருப்பம் ஏற்பட்டது. இனி வேலை செய்வதைக் குறைத்து தியானத்தில் ஈடுபட விரும்புகிறேன். அடுத்த ஆண்டில் அமெரிக்காவில் ஆற்றிவரும் கலைச்சேவையில் இருந்து ஓய்வுபெறப் போகிறேன். அதன் பின்பு நானும் எனது மனைவியும், மகனும் இந்தியாவிற்குப் போவதாக இருக்கின்றோம். என் வாழ்நாளில் மிகுதி நாட்களை சுதந்திர இந்தியாவிற் கழிக்கத் தீர்மானித்துள்ளேன்."

09, செப்டெம்பர் 1947 அன்று எழுபத்தோராவது வயதில் கலாயோகி அமரத்துவம் அடைந்தார். அன்று அவருடன் இருந்த அவரது மாணவர் ராபர்ட் வின்சர் புரூஸ் (Robert Winzer Bruce) பின்வருமாறு எழுதுகின்றார்:

"திருமதி குமாரசாமி கூப்பிடவும் வண்டியின் மீது சாய்த்து வைக்கப்பட்ட என்னுடைய ஓவியங்களைக் காணச்சென்ற குமாரசாமி தலை சுற்றுவதாகச் சொன்னார். திருமதி குமாரசாமி அவரைத் தரையில் அமர வைக்கவும் நினைவிழந்து உயிர் துறந்தார். நானறிந்த முதலாவது உலகப் புகழ்பெற்ற அறிஞர் ஆனந்தக் குமாரசாமி. நான் முதன் முதலாக அவருடன் உரையாடும் பொழுது கலை வரலாறு, சமய, அறிவு, குறியீடு, சமய உணர்வு, கிறிஸ்தவம், கிரேக்கப் பழமை என்பவை பற்றிய அவருடைய விரிந்து பரந்த கல்வி என்னைச் சிலையாக்கியது. கிரேக்கர், ரோமர், மாதா கோயிற் பாதிரிகள், ஞானிகள், என்பவர் பற்றிய நுண்ணிய அறிவோடு ஹிந்து, பௌத்த நெறிகளின் அடர்ந்த காடுகளின் மூலைமுடுக்குகளை எல்லாம் தெரிந்து வைத்திருந்த அவருடைய ஞானம் கண்டு வியப்புற்றேன்" (பார்க்க,. Robert Bruce, AKC- Remembering and Remenberig - Again and Again and Again).

ஆனந்த குமாராசாமியின் முழுமையான வாழ்வும் அழகியல் கலைகளின் மீதான ஆய்வுகளுக்காக சமர்ப் பணம் செய்யப்பட்ட ஒன்று. அவருடைய இறுதிக் காலங் களிலும் கூட அவர் கலைகளைப் பற்றிய தீவிரப் பார்வைகள் கொண்டே இயங்கி வந்திருக்கிறார். அமெரிக்காவில் வாழ்ந்திருந்தாலும் அவருடைய உயிர் இந்தியாவில்தான் அலைந்து கொண்டு இருந்தது என்று சொல்வார்கள். அவருடைய மனவெளி எங்கும் இந்தியா, அதன் ஓவியங் கள், நாட்டியம், நாடகம், இசை, சிற்பங்கள், இலக்கியம், மற்றும் பண்பாடு என்று ஒவ்வொரு நாடித்துடிப்பிலும் ஒலித்துக் கொண்டு இருந்தது. தொடக்கத்திலிருந்தே மேலை நாடுகள் கீழைத்தேசங்கள் மீது செலுத்திய செல்வாக்கை கண்டனம் செய்தவர்களில் முன்னோடியாக விளங்குகிறார் அவர். இந்தியக் கலைகளின் மீதான வெளிச்சத்தை மேலை நாடுகளுக்குப் பாய்ச்சியவர் (இணையம்; 2007).

அழகியல் மெய்யியலுக்கு புதிதாக ஒரு கருத்தி யலை ஆனந்தக் குமாரசாமி உருவாக்கவில்லை. போஸ்டன் நுண்கலை அருங்காட்சியகத்தில் ஆற்றிய இறுதி உரையில் அவரே இதனை வலியுறுத்திக் கூறியுள்ளார். கீழைத்தேய கலை மரபுகள் சிதைந்தும் அழிந்தும் வந்த ஒரு கால கட்டத்தில் அவற்றுக்கு உயிரூட்டி பொலிவை ஏற்படுத்தி யவர். கீழைத் தேயத்தவர்களுக்கும் மேலைத் தேயத்தவர் களுக்கும் தங்கள் மரபு கலைகளின் மேன்மையையும் அவற்றின் அழகியல் மெய்யியல் தரிசனத்தையும் உணர்த்தியவர். இவரது ஆய்வுகளே கீழைத்தேய கலைக்கு குறிப்பாக இந்திய கலைக்கு உலக அளவில் ஒரு பெறுமதியை உருவாக்கித் தந்தன. அவ்வகையில் கலாயோகி ஆனந்தக் குமாரசாமியின் பங்களிப்பு உலக அழகியல் மெய்யியல் சிந்தனைக்கு விசாலமான தாகும்.

தலைமுறைகள்

மானிடம் மரித்த பூமியில்
சீவித்திருக்கிறோம்...
கத்தியின் கூர்நுனியில்
நகரும் பாதங்கள் போல் வாழ்வு...

அந்தகாரத்து திகில் நாள்களில்
அன்னையர்கள் நம் பௌதீகத்தொடர்ப்பறுத்த போது
ஆரத்தி எடுத்துக்கொண்டன
வெடியொலிகளும் கந்தக தூபமும்...

தசாப்தங்கள் பல கடந்த போர் நிலமே வாழ்புலம்
ஆகிப்போனது
பல தலைமுறைகளுக்கு...

போரின் மணமறியா
புதுத்தலைமுறைக்கு
வாளும் வன்முறையும் சொல்லிக்கொடுத்தது யார்...?


புதுப்பூக்களாய் சிரிக்கும் உங்கள்
பிஞ்சுகளுக்கு பூச்செண்டும்
மோட்டார் காரும் வாங்கிக்கொடுங்கள்...
விற்கப்படாமலே கிடக்கட்டும்
விளையாட்டு துப்பாக்கிகள்.....!

சுவரிலோ ஆசனத்திலோ
குழந்தை மோதிவிட்டதா...
மோதியது குழந்தை என சொல்லிக்கொடுங்கள்...
அ·றிணைக்கு உயிர் கொடுக்காமல்...

ஆனால்...
நினைவுகள் பத்திரம்...
மனங்களை விகாரமுறுத்தாத
மென்போதனைகளோடு...
நீள்கனவுகளின் ஆழ்விதைப்பாய்
இருக்கட்டும்
நம் தலைமுறைகளுக்கும் தகவல்கள்...

போரறியா தலைமுறையின்
புலர்வுக்குப்பின்னும்...
நிறைந்தே கிடக்கின்றன
உறவுகள் தேடும் நம் கூடாரங்கள்.....

வழிமாறிய தலைமைகள்
கைகுலுக்கிக்கொள்கையிலும்
மூடியே கிடக்கின்றன
விசாரணையற்ற சிறைக்கூடங்கள்....



மறுபுறம்...
பெரிய பாம்பினால்
விழுங்கப்பட்ட பின்பு...
பூச்சியத்திலிருந்து தாயமுருட்டி
ஏணிகள் விலத்தி
எண் எண்ணாய் நகரத்தலைப்படும்
முதிய வழிகாட்டிகள்...

ஏரிக்கரையில் உக்கிப்போகாமலே
மீட்கப்படுகிறது;
பச்சை சீருடை...
இடைத்தலைமுறையின் நினைவுகளை போல...

மழை

மெல்லப்பொழிகிறாய்...,
மேதினியின் மேனியதில்
செல்லத்தமுவலுடன்...!
சென்றாண்டு எந்தச்
சிறையிருந்து நீ மீண்டாய்....?
**
கடுங்கோடை வெயில் காய்ந்து
களைப்பாகி...
நெடுங்காலம் நீயின்றி
துரும்பாகி...
அருந்தாமல் இருந்தாள் உன்
புவிக்காதலி – பசலை
நெருப்பாகித்தவித்தாள் உன்
அடிச்சேவகி...
***

துளியாகி வீழ்ந்தாய் புவி
மடி மீதிலே...; அவள்
நறுந்துகை தெளித்தாள்
அது மண் வாசமே.....!

துளியாய், தூறலாய்
தழுவிக்கிளர்வுற்று;
பெருக்காய் , பெருமழையாய்
பெருவலியாய் பிரவகித்தாய்....
*****
தெருக்கள் குளிப்பாட்டி,
திண்ணைகளை தூய்தாக்கி,
மண்ணுக்குள் வடிவாய்...
மலர்விப்பாய் இளவேனில்...

பல குளங்கள் நிறைப்பாய்,
பச்சையங்கள் புதுப்பிப்பாய்,
உலகுயிர்கள் வாழ
உவப்பாய் உணவளிப்பாய்....
******
மெல்ல தழுவிடிலோ
வலியுணர்த்தாதுன் சேர்க்கை...
செல்லத்தழுவலுடன் சிந்திப்போ
அது போதும்...
மெல்லப்பிரசவிக்கும் பூமி....!


திறலினைப்பாடல்

காற்றிடை தூவிய கந்தக வாசனை
சாற்றிய செய்தி என்ன.... – மழை
ஊற்றி அடங்கா உறங்கா விழிகளை
தேற்றிட வார்த்தை என்ன ....

கடலிடை தாவிய குருவிகளே அவர்
கரைதொடர் கதைகளை சொல்லீரோ...
படகதன்விசையினில் பகலவ ஒளியுடன்
புனல் அனல் ஆனதை சொல்லீரோ...

புழுதி கிளர்ந்திடப் போயினர் எங்கோ...
புகை வந்த திசையினை பாருங்கள்
அழுது வடிகின்ற கண்களைத்துடைத்து
ஆறுதல் சொல்லிட வாருங்கள்...

வானகம் அளந்த பறவைகளே – தென்
வானை அதிர்த்திய குருவிகளே...
கானகம் எங்கும் காலனை வென்றவர்
காவியமானதை சொல்லீரோ...



வேல். சாரங்கனின் 3 கவிதைகள்

ஆரம்ப காலத் தமிழ் சிறுகதைகள் பார்வையும் பதிவும்

சி.ரமேஷ்

இக்கால கட்டத் தமிழ் எழுத்தாளர்கள் பெரும்பாலோர். கல்லூரிகளில் படித்தவர்கள் தேசிய உணர்ச்சி மிஞ்சியவர்கள் பழமையின் எதிரிகள் வாழ்வின் உண்மை களை நேருக்கு நேர் நின்று தரிசித்து. அவற்றை விமர்சன அடிப்படையில் சர்வதேச இலக்கியத்தின் தரத்திற்குக் கலையழகுடன் தமிழில் சிறுகதை எழுதவேண்டுமெனத் துடித்தவர்கள். இவர்களுடைய சிறுகதைகளில் இயல்பாகவே தத்துவப் போக்கு, சமுதாயச் சிந்தனைகள், விதியின் ஆற்றல், சாவின் அச்சம், கலையின் நிலைபேறும், தீண்டாமை ஒழிப்பு, கிராமச் சீரதிருத்தம், விதவை விவாகம், ஒத்துழையாமை இயக்கம், மேலை இலக்கிய மரபையும் கீழை இலக்கிய மரபையும் கலந்து எழுதுதல், மனித மன உணர்வுகளை வெளிப்படுத்தல் முதலான பண்புகள் வெளிப்பட்டன.

தமிழில் கதை சொல்லும் முறைமை தொல் காப்பியர் காலத்துக்கு முன்னரே இருந்து வந்துள்ளது. "பொருள் மரபில்லா பொய்மொழி"(உண்மையில்லாத பொய்க்கதை) என்றும் "பொருளோடு புணர்ந்த நகை மொழி" (உண்மை கவந்த வேடிக்கைக் கதைகள்) என்றும் தொல்கதைகள் அடையாளங் காணப்பட்டன. பழந்தமிழ் நூலாகிய கலித்தொகையில் காணப்படும் பாடல்கள் பல, சிறுகதைகள் போன்றே காணப்படுகின்றன. சிறுகதைக் குரிய எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்பன முறையே கலி தொகையில் காணப்படும் தரவு, தாழிசை, சுரிதம் ஆகிய வற்றில் அமைந்திருப்பதைக் காணலாம். சிலப்பதி காரத்தில் காணப்படும் பார்ப்பனத்தி கீரிப்பிள்ளைக் கதை, தேவந்திகதை, பராசரன்கதை முதலியனவும் மணி மேகலையில் இடம்பெறும் ஆபுத்திரன் கதை, சாதுவன் கதை, காயசண்டிகைகதை, சுதமதிகதை முதலியனவும் சிறுகதை வடிவில் காணப்பட்டாலும் அவை செய்யுளில் காணப்படுவதாலும் இவற்றினையும் சிறுகதைகளாகக் கொள்ளமுடியாது.

தமிழில் ஆரம்பகால இக்கதைகள் வாய்மொழிக் கதைகளாகவும் கர்ண பரம்பரை இதிகாசக்கதைகளாகவும் காணப்பட்டன. இது போல விக்கிர மாதித்தியன் கதைகள், தென்னாலி ராமன்கதைகள், மரியாதை இராமன் கதைகள், மதுரைவீரன்கதை, அரபிக் கதைகள், தேசிங்குராஜன் கதை, ஈசாப் பின் நீதிக்கதைகள்(1853), மதனகாம ராஜன் கதைகள்(1855), முப்பத்திரண்டு பதுமைக்கதை(1869), மயில்ராவணன் கதை(1869), விவேக சாகரம்(1875), கதா சிந்தாமணி(1879) முதலான வாய் மொழியாக வழங்கி வந்த கதைகள் பல, நூல் வடிவில் அச்சுப் பெற்று வெளியிடப்பட்டன. வாழ்வின் மெய்மையில் இருந்து விலகியதாகவும் மிகை நவிற்சிப் பாங்கோடு அமைந்திருப்பதாலும் நெகிழ்ச்சிப்பின்னல் உடையதாக இருப்பதாலும் இவற்றை யாரும் சிறுகதைகளாகக் கொள்வ தில்லை.



வீரமாமுனிவர்

தமிழின் உரைநடை வரலாற்றில் வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குருகதை ஒரு திருப்பு முனையாய் அமைந்தது. 1621-1695 காலப்பகுதியில் Jean de la Fontaine எழுதிய கதைகளைத் தழுவி தமிழ்ப் பண்பாட்டுக்கேற்ற வகையில் வீரமாமுனிவர் பரமார்த்த குருகதையைப் படைத் தார். 1728-இல் புதுவையில் முதல்முறையாக அச்சிட்டு வெளியிடப்பட்ட "பரமார்த்த குருவின் கதை" என்ற நூல் கற்பனைத்திறன் சார்ந்த படைப்பிலக்கியத்துக்கு உரை நடையும் ஊடகமாக அமையும் என்பதை எடுத்துரைத்தது.

தமிழ் சிறுகதை இலக்கியத்துக்கு வித்திட்டவர் களில் தாண்டவராய முதலியாரின் பணி இன்றியமையாதது. இவர் சோமசன்மாவின் பஞ்சதந்திரக்கதைகள் என்ற நூலை 1826ஆம் ஆண்டு மராத்தி மொழி யில் இருந்து தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். ஆயினும் இக்கதைகளை கன்னடத்தில் இருந்து மொழிபெயர்த்ததாகக் கருதுவாருமுளர். தாண்டவராஜ முதலி யார் "கதாசரிச் சாகரம்" என்ற வடமொழிக் கதைக்கொத்திலிருந்து சில வற்றைத் தொகுத்து "கதாமஞ்சரி" என்ற நூலினை யும் வெளியிட்டார். இவ்விருநூல் களும் பலருக்கு கதை எழும் ஊக்கத்தை அளித்தது எனலாம். இதில் "கதாமஞ்சரி" வாய் மொழிக்கதைகளின் தொகுப்பாக அமைந்தது. அட்டாவ தானம் வீராசாமி

செட்டியார் (1855) தாம் எழுதிய உரை நடைக் கட்டுரை களைத் தொகுத்து 1876இல் "வினோதரச மஞ்சரி" என்ற பெயரில் வெளியிட்டார். இந்நூலில் உள்ள கதைகளும் கட்டுரைகளும் "தினவர்த்தமானி" என்ற ஏட்டில் வெளிவந்தன.

இலங்கையைச் சேர்ந்த ஆர்ணல்ட் சதாசிவம் பிள்ளை தான் எழுதிய நாற்பது கதைகளைத் தொகுத்து "நன்னெறிக் கதாசங்கிரகம்" என்ற நூலை 1869ஆம் ஆண்டு வெளியிட்டார். இக்கதைகள் தமிழ்நாட்டின் சென்னை பட்டினத்தையும் யாழ்ப்பாண சூழலையும் பிரதிபலிக்கும் கதைகளாக அமைந்தன. இத்தொகுப்பில் இடம்பெறும் கதைகளில் பல ஆங்கில மரபுக்கதைகளைத் தழுவி எழுதப்பட்ட கதைகளாகக் காணப்படுகின்றன. யூக பஞ்சாணன் கதை, அமைச்சரின் அருங்குணம், துஷ்ட வாரூடன் கதை என்பன நன்னெறிக் கதாசங்கிரகம் என்ற தலைப்புக்கேற்ற பொருத்தமான கதைகளே ஆகும்.

சி.மாணிக்கமுதலியார் "கதாசிந்தாமணி" என்ற நூலை 1873ஆம் ஆண்டு வெளியிட்டார். நீதிமன்ற நடுவரின் தீர்ப்புக்களை ஒட்டி எழுதப்பட்ட சிலகதைகள் இதில் இடம்பெறுகின்றன. இதேபோல் கேசவராய முதலியார் "அபிநவக்கதைகள்" என்ற தொகுப்பை வெளியிட்டார். இத்தொகுப்பில் "கற்பாலங்காரம்", "தனபாலன்", "கோமளம்", "சுப்பையர்", "கிருஷ்ணன்", "ஆகூஷாடபூதி" போன்ற ஆறு கதைகள் இடம்பெறு கின்றன. இதில் இடம்பெறும் "கற்பாலங்காரம்" கதை ஒரு பெண்ணின் கற்பை கண்டறிய ஓர் அரசன் செய்யும் கொடுஞ் செயல்களை எடுத்துரைக்கிறது. குறிப்பிட்ட மையப் புள்ளியை நோக்கிய முன்னோக்கு இயக்கமும் பண்புநல வெளிப்பாடும் இன்மையால் இத்தொகுப்பில் இடம்பெறும் சிறுகதைகளையும் சிறுகதைகளாகக் கொள்ளமுடியாது.

1897ஆம் ஆண்டு இராஜேந்திரப்பிள்ளை "பூலோக விநோதக் கதைகள்" என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டார். ஆண், பெண் இருபாலரின் பருவ மாறு தலுக்கு ஏற்ப அவர்பால் தோன்றும் குணபேதங்களை நிலைகளனாகக் கொண்டு இக்கதைகள் இயற்றப்பட்டன. ஒவ்வொரு கதையின் தொடக்கத்திலும் அக்கதையின் உட்பொருளை தெரிவிக்கும் "விநோதக்கவி" ஒன்றும் இக்கதைகளின் முன் இடம்பெற்றன.

பண்டிதர் எஸ்.எம்.நடேசசாஸ்திரியார் தமிழ் நாட்டில் பரவலாக வழங்கி வந்த கர்ண பரம்பரைக் கதை களைத் தொகுத்து "தக்காணத்துப் பூர்வ கதைகள்"(1880) "திராவிட மத்திய கால கதைகள்"(1886), திராவிட பூர்வ காலக் கதைகள்(1886) என்ற பெயர்களில் நூல்களை வெளியிட்டார். அத்தோடு தான் எழுதிய மர்மக்கதைகளை 1894ஆம் ஆண்டில் "தானவன்" என்ற "போலிஸ் நிபுணன் கண்டு பிடித்த அற்புதக் குற்றங்கள்" என்ற பெயரில் வெளி யிட்டார். இத்தொகுப்பில் இடம்பெறும் "காணாமற்போன கடிதம்", "மாதா கோயிலில் நடந்த கொலை" முதலான கதைகள் எட்கார் அலன்போவின் சிறுகதைகளை நினை வூட்டுவதாக மா.இராமலிங்கம் அவர்கள் குறிப்பிடுவார்.

தமிழில் சிறுகதைகள் தோன்றுவதற்கு முன் எழுந்த ஆரம்ப காலக் கதைகள் வாசுதேவன் கூறுவது போல் "கதைகள் ஒரு ஒழுங்கான இலக்கணம் அமையாது மாந்தர்களுக்கு இன்பமளிக்கும் எல்லா விடயங்களையும் தன் பாலணிந்து கவினுற விளங்கின". உழைத்து உழைத்து ஓய்ந்த மாந்தர்கள் களைப்பை போக்குவதற் காக எழுதப்பட்ட இக்கதைகள் அன்றிரவே முடிவுறும் வகையில் சிறிய கதைகளாகவும் அமைந்தன.

இந்தியாவில் ஐரோப்பியர் வருகையையடுத்து அரசியல், பொருளாதாரம் சமூக அமைப்பில் ஏற்பட்ட பெருமளவு மாற்றங்கள் நவீன புனைகதைகளுக்கு வித்திட்டன. குறிப்பாக ஐரோப்பியர்களால் உருவாக்கப்பட்ட கல்விமுறை இதனைச் சாத்தியப்படுத்தின. ஆங்கில கல்வி யின் பயனாக படித்த புதிய மத்திய நடுத்தர வர்க்கம் உருவாயிற்று. இவர்கள் தாய்மொழி இலக்கியத்தில் புதிய வடிவங்களை படைக்கத் தொடங்கினர். கிழக்கிந்தியக் கம்பனியின் தோற்றமும் சென்னைக்கல்விச்சங்கத்தின் வளர்ச்சியும் இந்திய இலக்கியத்தின் மறுமலர்ச்சி தூண்டு கோலாக அமைந்தன. மற்றும் 1930களில் தமிழகத்தில் கல்லூரிப் பட்டப்படிப்பிற்கு "இன்றைய சிறுகதைகள்" என்னும் தலைப்பில் ஆங்கிலச்சிறுகதைகள் பாடங்களாக அமைந்தன. அதில் பிரெஞ்சு எழுத்தாளரான மாப்பஸான், ரஸ்ய எழுத்தாளரான அன்டன் செக்காவ்வினுடைய சிறு கதைகள் பாடமாக அமைந்திருந்தன. அச்சியந்திரத்தின் வருகையால் பத்திரிகைகள், சிறுசஞ்சிகைகள் அதி உன்னத வளர்ச்சியைப்பெற்றன. அவ்வகையில் இக்காலப் பகுதியில் மணிக்கொடி(1935), சூறாவளி(1939), பாரததேவி (1939), பாரதமணி(1939), கலாநிதி(1939), கலாமோகினி (1942), சந்திரோதயம் (1945), முல்லை(1945) முதலான சிறு பத்திரிகைகள் தோன்றின. இதன் காரணமாகத் தமிழில் புனைகதைகள் பாங்கிலான இலக்கிய வடிவங்கள் தோற்றம் பெற்றன.

புனைவுவகை உரைநடை இலக்கியமாகக் கருதப் படும் சிறுகதை சம்பவத்தை நிகழ்ச்சியின் அனுபவத்தை, உருவகத்தை அல்லது மையக்கருவினை விவரித்துரைக் கும் ஒரு இலக்கிய வகையாகும். உருவாக்கும் அடிப்படைக் கூறுகளாக கதாபாத்திரம், சூழமைவு, போராட்டம், கதைக் கரு, நோக்குநிலை, கதைப்பின்னல், குறிப்புமுரண், உணர்ச்சிப் பாங்கு முதலானவை அமைகின்றன. தமிழ்ச் சிறுகதைகள் என்பதன் பொருளை வரையறுப்பதற்கு சிறு கதை குறித்து அறிஞர்கள் கூறிய வரைவலிக்கணங்கள் துணை செய்கின்றன. அவ்வகையில்

- "அரைமணி நேரம் முதல் இரண்டு மணி நேரம் உள்ள காலம்வரையில் படித்து முடித்து மகிழக் கூடியதாகச் சிறுகதை இருக்கவேண்டும்". சிறுகதை என்பது தன்னள வில் முழுமை பெற்றதாக இருக்க வேண்டும், கதையைப் படித்து முடிப்பதற்குள் புறத்தேயிருந்து எவ்வித குறிக்கீடு களுமின்றி வாசர்கள் முழுதும் கதையாசிரியனின் ஆதிக்கத்திற்கு கட்டுபட்டிருக்க வேண்டும் - என்று சிறு கதையின் மூலபிதா என்று கருதப்படும் எட்கார் அலன்போ கூறியமை குறிப்பிடத்தக்கது
- வாழ்க்கையின் சாளரம் சிறுகதை" என்பார் புதுமைப்பித்தன்
- பேராசிரியர் வெல்ஸ் "பத்தாயிரம் சொற்களுக்கு மேற்போகாமல் சற்றேறக் குறைய அரைமணி நேரத்தில் வாசித்து முடிக்கக் கூடிய தொன்றாக இருக்கவேண்டும்" என்பார்

• சிறுகதை என்பது சிறிய கதை என்னும் பொருளில்லாமல் ஒரு புதிய இலக்கிய வடிவத்தின் பெயரைக் குறிக்கும் தனிச் சொல் என பிராண்டர் மத்யூ கூறுவார்

• "சுருக்கமும் செறிவும் சிறுகதையின் முக்கிய பண்புகள்" என ஜேம்ஸ் கூப்பர் லோறன்ஸ் கூறுவர்.

• கதையின் கட்டுக்கோப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பவரான ரஸ்ய நாட்டு சிறுகதை ஆசிரியரான ஆன்டன் செக்காவ் கூறும் போது கதையின் ஆரம்பத்தில் சுவரின் மீது ஒரு துப்பாக்கி தொங்கிக் கொண்டிருக்கிறது என்று எழுதுவாயானால் கதை முடிவதற்குள் அது வெடித்தே ஆகவேண்டும் என்பார்.

• சிறுகதை என்பது ஓட்டப் பந்தயம் போல தொடக்கமும் முடிவும் வேகமாக அமையவேண்டும் என்பார் செட்ஜ்விக்.

• சிறுகதை என்றால் "சிறிய கதை" அல்ல. எல்லா சிறிய கதைகளும் சிறுகதைகள் அல்ல. சிறுகதை என்பது ஒரு தனித்துவமான இலக்கிய வடிவம். அதற்கு தனியான வடிவச்சிறப்புகள் உண்டு. சிறிய கதைகள் பலவகை. உதாரணகதைகள் நீதிக்கதைகள், உருவகக் கதைகள், நிகழ்ச்சித்துணுக்குகள் எல்லாமே சிறிய கதைகள்தான் என்பார் ஜெயமோகன்

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணங்கள் சிறுகதை அமைப்பை விளங்கிக் கொள்ள துணைசெய்கின்றன.

தமிழ் மொழியில் கதை என்பது கட்டு, குறிப்பு, கிளவி, புனைவு, கதானகம் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது. தமிழில் கவிதைத் திறனாய்வு வளர்ந்த அளவுக்கு சிறுகதைத் திறனாய்வு வளரவில்லை. ஆரம்பகாலச் சிறுகதைகள் குறித்த மதிப்பீடுகள் அதிக மாக வெளிவந்த போதிலும் நவீன சிறுகதைகளை உள்வாங்கி வெளிவந்த திறனாய்வுகள் மிகக் குறைவே யாகும். ஆரம்பகால சிறுகதைகள் குறித்து வெளிவந்த திறனாய்வின் தொடக்கப்புள்ளியாக முனைவர் சாலை இளந்திரையனின் "தமிழில் சிறுகதை" என்ற நூல் அமைகிறது. இது போல "பேராசிரியர் கார்த்திகேசு சிவத் தம்பியின் தமிழ்ச் சிறுகதைகளின் தோற்றமும் வளர்ச்சி யும், க.செந்தில்நாதனின் தமிழ்ச்சிறுகதைகள் ஒரு மதிப்பீடு(1967), சிசு.செல்லப்பாவின் "தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது" (1974), பெ.கோ.சுந்தரராஜன், சோ.சிவபாத சுந்தரம் ஆகிய இருவரும் சேர்ந்து எழுதிய "தமிழில் சிறுகதை: வரலாறும் வளர்ச்சியும்(1984)", அ.சிதம்பரநாத செட்டியாரின் தமிழிச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் (1977), மா.இராமலிங்கத்தின் "விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள்"இ வேதசகாயகுமாரின் "தமிழ்ச் சிறுகதை வரலாறு" (1979) கூ.இன்னாசியின் சிறுகதைச் செல்வம் (1993) முதலான நூல்கள் தோற்றம் பெற்றன.

இரா. தண்டாயுதத்தின் சிறுகதை முன்னோடி கள், பாரதி முதல் சுஜாதா வரை என்ற இவ்விரு நூல்களும் சிறுகதையாசிரியர் குறித்த விரிந்த பார்வையாக வெளிப் படுகிறது. தமிழ்ச் சிறுகதைகளில் வடிவத்தை முன்வைத்து கோ.கேசவனால் எழுதப்பட்ட "தமிழ் சிறுகதைகளில் உருவம்" என்ற நூல் வ.வே.சு.ஐயர், கல்கி, புதுமைப்பி த்தன், கு.ப.ராஜகோபாலன், மௌனி, தி.ஜானகி ராமன், லா.சா.ரா ஆகிய ஆரம்பகால சிறுகதை ஆசிரியர்களின் சிறுகதைகளில் காணப்படும் கதைப்பின்னல், பாத்திர வார்ப்பு வர்ணனை, மொழிநடை முதலானவற்றை ஆராய்கிறது.

சுதந்திரத்துக்கு முற்பட்ட தமிழ்ச் சிறுகதையின் போக்குகள்

ஆசிரியர் சி.வி.சுவாமிநாதய்யர் 1892இல் "விவேக சிந்தாமணி" என்ற சஞ்சிகையைத் தொடங்கினார். இதில் மாதவையர், பி.ஆர்.ராஜமையர், எல்.சாம்பன், டி.ஜி.வெங்கடரமணய்யா முதலானோர் சிறுகதைகளை எழுதினர். இச்சஞ்சிகையில் எல்.சாம்பன் எழுதிய "லெட்சுமி" என்ற கதை அரசனுக்கு இரண்டகம் செய்து விட்டஒரு மனிதனின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையாகும். தொடக்கம் முதல் இறுதி வரை ஒரு புதிர் இழையோடினாலும் இக்கதை கூறப்பட்ட முறைமையால் இச்சிறுகதை போதிய கவனத்தைப் பெறவில்லை. இவரின் "விசாலாட்சி" என்ற பிறிதொரு கதையும் விவேக சிந்தாமணியில் வெளிவந்தது. வெங்கட ரமணய்யா "சிவசங்கரன்" என்ற சிறுகதையையும் எழுதி யுள்ளார். இச்சிறுகதை சாதாரண குடும்பம் ஒன்று யாத்திரை செய்ய மேற்கொண்ட சமயத்தில் அக்குடும்பம் எதிர் நோக்கிய பிரச்சினைகளைச் சித்திரிக்கிறது. விவேக சிந்தாமணியைத் தொடர்ந்து 1900க்கும் 1915க்கும் இடை யில் விவேகபானு, வித்தியாபானு, சக்கரவர்த்தினி, புதுவைக் கலைமகள், வித்தியாவிகாரிணி போன்ற சஞ்சிகைகள் தோற்றம் பெற்றன. கதைகளைப் பிரசுரித்த இச்சஞ்சிகைகள் கதைகள் குறித்தான கட்டுரைகளையும் பிரசுரித்தன.

1913ஆம் ஆண்டு வெளிவந்த விவேகபோதினியில் அம்மணி அம்மாள் என்ற பெண் எழுத்தாளரின் சிறுகதை யும் பிரசுரமாகியுள்ளது. இதில் மாதவையர், பி.ஆர்.ராஜ மையர், வ.வே.சு.ஐயர் முதலானோரும் சிறுகதைகளை எழுதினர். 1908இல் வ.வே.சு.ஐயர் தன் முதல் சிறுகதை யான "குளத்தங்கரை அரசமரம்" என்ற சிறுகதையை விவேகபோதினியில் எழுதியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. அம்மணி அம்மாளால் எழுதப்பட்ட "சங்கல்பமும் சம்பவ மும்" சிறுகதை காட்டிலுள்ள சவுக்க மரம் காகிதமாகி, பத்திரிகையாகி ஈற்றில் அடுப்பில் சாம்பலாகப் போவதை அறிவியல் கருத்துடன் இணைத்து நகைச்சுவையாகக் கூறுகிறார்.

மாதவையா இலக்கிய ஈடுபாட்டின் காரணமாக 1917இல் "தமிழ்நேசன்" என்ற சிறுசஞ்சிகையையும் 1927இல் "பஞ்சாமிர்தம்" என்ற சிறுசஞ்சிகையையும் நடாத்தினார். மாதவையாவின் சிறுகதைகள் "குசிகர் குட்டிக் கதைகள்" என்னும் தலைப்பில் தமிழில் வெளி வந்தது. இவர் ஆங்கிலத்தில் எழுதிய Kusika's Short Stories என்ற ஆங்கில சிறுகதைகளின் மொழிபெயர்பே இந் நூலாகும். இவர் பிராமணச் சமூகத்தில் காணப்பட்ட குழந்தைத் திருமணம், விதவைகள் பட்ட துயர், வர தட்சணைக் கொடுமை முதலிய சீர்கேடுகளைப் பற்றித் தமது கதைகளின் மூலம் மிக வன்மையாகக் கண்டித்தார். "பஞ்சாமிர்தம்", "கண்ணன் பெருந்தூது" போன்ற கதைகள் உருவ வார்ப்புக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ் கின்றன.

சுப்பிரமணிய பாரதியார், கவிதைகளைப் போலவே சிறுகதைகளிலும் தனிமுத்திரை பதித்தவர். பாரதியார் தாகூரின் எட்டுச் சிறுகதைகளை ஆங்கிலத்தில் இருந்து மொழிபெயர்த்து "தாகூர் சிறுகதைகள்" என்ற தலைப்பில் வெளியிட்டார். பாரதியாரின் முதல் சிறுகதை யாகக் கருதப்படும் துளஸிபாயி என்ற ராஜபுத்திர கன்னிகையின் சரித்திரம் என்ற சிறுகதை 1905ஆம் ஆண்டு சக்கரவர்த்தினி பத்திரிகையில் வெளிவந்தது. இக்கதையை பாரதி "ஷெல்லிதாஸ்" என்ற பெயரில் எழுதினார். பாரதியாரின் "காக்கை இலக்கணம் கற்ற கதை" உருவகக்கதையாகும். பாரதியின் "ஆறில் ஒரு பங்கு" சிறுகதை பிரம்மசமாஜத்தை சேர்ந்த இளைஞன் வைதீகப்பெண்ணைக் காதலிப்பதால் அவன் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துரைக்கிறது. பாரதியார் "பூலோகரம்பை" என்ற சிறுகதையில் பொட்டுக் கட்டும் சமூக வழக்கத்தைச் சாடுகிறார். இந்துமதம் கிறிஸ்தவ சமய பிரச்சாரத்தால் பாதிக்கப்படக் கூடாது என்பதை விளக்க பாரதியால் எழுதப்பட்ட சிறுகதைகளே "வேணு முதலி", "வேணுமுதலிவிசித்திரம்". இது தவிர பாரதியின் சந்திரிகையின் கதை, திண்டிமசாஸ்திரி, ஆவணி அவிட்டம், ஸ்வர்ணகுமாரி, முதலான சிறுகதைகளும் பாரதியாரால் எழுதப்பட்டன. இதில் காக்காய் பார்லி மெண்ட், காக்கை இலக்கணம் கற்ற கதை இரண்டிலும் காகங்கள் பேசிக் கொண்டாலும் அவை உண்மை கலந்த வேடிக்கை கதைகளாகவே அமைகின்றன.

வ.வே.சு.ஐயர் தமிழ்ச் சிறுகதையின் தந்தை என அறியப்படுகிறார். புதுச்சேரியில் இவரால் நிறுவப்பட்ட "கம்ப நிலையம்" என்ற படிப்பகத்தின் மூலம் "மங்கையர்க்கரசியின் காதல்"," "காங்கேயன்", "அழேன் முக்கே", "கமலவிஜயம்", "குளத்தங்கரை அரசமரம்" என தனது ஐந்து கதைகளைத் திரட்டி "மங்கயக்கரசியின் காதல்" என்ற தலைப்பில் வெளியிட்டார். 1927களில் வெளிவந்த மங்கையக்கரசியின் காதல் தொகுப்பில் எதிரொலியாள், அனார்க்கலி, லைலிமஜ்னூன் ஆகிய கதைகளும் இணைக்கப்பட்டு இருந்தன. வ.வே.சு.ஐயர் "குளத்தங்கரை அரசமரம்" என்ற சிறுகதையை ஸ்ரீபாக்யலஷ்மி அம்மாள் என்ற பெயரிலேயே எழுதினார். இக்கதை தாகூர் எழுதிய "கடேர்கதா"(Gater Katha) என்ற சிறுகதையின் பாதிப்பில் எழுதப்பட்டிருக்கலாம் என்ற கருத்தை பெ.கோ.சுந்தரராஜன், சோ.சிவபாதசுந்தரம் ஆகியோர் முன்வைப்பர். ருக்மணியின் கதையை சவுக்க மரமும் சிட்டுக்குருவியும் பேசுவது போன்ற உத்திமுறையில் இக்கதை எழுதப்பட்டுள்ளது. முன்நிகழ்ச்சிகளைப் பின்கூறும் Flash back உத்தியில் இச்சிறு கதை படைக்கப்பட்டுள்ளது. வரதட்சணை கொடுமையை விளக்கும் இச்சிறு கதையைப் போல் சமகாலப்பிரக்ஞை யுடன் எழுதப்பட்ட மற்றொரு கதை "கமல விஜயம்" ஆகும். "மங்கயக்கரசியின் காதல்", "காங்கேயன்" ஆகிய கதைகள் ஓஸ்ஸியனுடைய பாதிப்பில் எழுதப்பட்ட தாக வ.வே.சு.ஐயர் மங்கையக்கரசியின் காதல் முன்னுரையில் குறிப்பிடுவார்.



வ.வே.சு.ஐயர்

"மங்கையக்கரசியின் காதல்" என்ற சிறுகதை கலிங்கப் படையை வெற்றி கொண்ட கருணாகரத் தொண்ட மானின் மகள் மங்கையக்கரசி தன் காதலனைக் கொன்ற மார்த் தாண்டனை கொன்று பலிவாங்குவ தாக அமைகிறது. "காங்கேயன்" என்ற சிறுகதை கங்கபாடி மன்னனின் கடைசி மைந்தனான காங்கேயனுக் கும் மாதவிக்கும் இடையிலான காதலைக் கூறுகிறது. மங்கையர்க் கரசியின் காதல், காங்கேயன் முதலான கதைகளுக்கு இவர் எழுதியுள்ள சூசிகை குறித்து குறிப்பிடல். மற்றும் எதிரொலியாள், அனார்க்கலி, லைலிமஜ்னூன், முதலான சிறுகதைகளும் இவரால் எழுதப்பட்டன.



வ.வே.சு.ஐயரைப் போன்று சரித்திரக்கதைகளை சிறுகதையாசிரியர்கள் பலரும் படைத்துள்ளனர். வரலாற்று புனைகதைகள் கடந்த காலத்தினை நுணுக்கமாகச் சித்திரிப்பதுடன் ஆவணமாகவும் விளங்குகின்றது. தி.நா.சுப்பிரமணியன், எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர் முதலானோர் வரலாற்று ஆய்வாளராக இருந்து சிறுகதை களைப் படைத்தவர்கள். பிச்சமூர்த்தி, தூரன், கு.ப.ரா முதலானோர் புனைகதையாசிரியராக இருந்து வரலாற்று சிறுகதைகளைப் படைத்தனர். ந.பிச்சமூர்த்தியுடைய "நேஹால்" என்ற சிறுகதை பதினைந்தாம் நூற்றாண்டு காலகட்டத்தை பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட சிறு கதையாகும். முத்கல் நகரத்துப் பெண்ணான நேஹாலின் கைரேகையின் உண்மை நிலையை அடிப்படையாகக் கொண்டு இச்சிறுகதையை ந.பிச்சமூர்த்தி படைத்துள்ளார். கு.ப.ரா.வின் "இருளிலிருந்து", "மகாபோதம்", "ஆமிரபாலி" போன்ற சிறுகதைகளும் ரா.ஸ்ரீ.தேசிகனின் "சிலைக்கு எதிரில்", கி.ரா.வின் "புத்தன் வந்தான்" முதலான சிறுகதை களும் புத்தரின் வாழ்வைப் பின்னணியாகக் கொண்டு படைக்கப்பட்ட சிறுகதைகள் ஆகும். இதுபோல அசோகனின் வரலாற்றைத் திரு. நா.சுப்பிரமணியனின் "அசோகன்" சிறுகதையும் வீரசிவாஜியின் வரலாற்றை கு.ப.ரா.வின் "லட்சிய வீரன்" சிறுகதையும் கூறிநிற்கின்றன. கு.ப.ரா.வின் "காணாமல் போன காதல்", தி.நா.சுப்பிர மணியனின் தோட்டியை மணந்த அரசகுமாரி முதலான சிறு கதைத் தொகுப்புக்களும் அக்கால வரலாற்றுச் சிறுகதை வளர்ச்சிக்கு சான்றாக அமைகின்றன.

1920ஆம் ஆண்டுகளில் விடுதலை எழுச்சி தீவிரம் பெற்ற நிலையில் இந்தியக் காங்கிரசின் இயக்க சக்தியாக காந்தி மாறியதும், உப்புச்சத்தியாக்கிரகம் (1930) சட்டமறுப்பு இயக்கம் (1932), ஒத்துழை யாமை இயக்கம் - போன்ற அரசியலியக்க உணர்ச்சித்தாக்கங்கள் மக்கள் மனதைப் பெரிதும் பாதித்தன. எனவே, நாட்டு மக்களைப் பல நிலைகளிலும் ஒற்றுமை யாக்க இந்திய ஒற்றுமை, தொழிற்சங்க ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, கள்குடி தவிர்ப்பு, பால்ய விவாக எதிர்ப்பு, ராட்டினப் பெருமை என்பன முன்னணிக்கு வரவே,

பத்திரிகைகள் மற்றும் எழுத்தாளர்களின் கவனமும் இவற்றின்பால் திரும்பின. "ஆனந்தபோதினி", "லோகோபகாரி", "சுதந்திரன்", "சமரசபோதினி", "ஆனந்த விகடன்", "ஊழியன்", "சுதந்திரப்பாதை", "தமிழ் உலகு", "தமிழ் நாடு", "பிரசண்டவிகடன்" முதலான பத்திரிகைகள் காந்தியக் கருத்துக்களை முதன்மைபடுத்தும் வகையில் செயற்பட்டன. கல்கி, ராஜாஜி, தி.ஜ.ரங்கநாதன், ந.பிச்சமூர்த்தி, போன்றோர் காந்தியத்தை அடிப்படையாகக் கொண்டு சிறுகதைகள் எழுதலாயினர். தி.ஜ.ர.வின் "மாரியின் குற்றம்" சிறைக்கைதியின் வாழ்வைச் சித்திரிக்கும் கதை. இதில் காந்தியின் அறிவுரைகள் தலைதூக்கி நின்றன. 1925ஆம் ஆண்டு வெளிவந்த கல்கியின் முதல் சிறுகதையான "அதிஷ்ட சக்கரம்" என்ற சிறுகதை கதர் நூல் நூற்கும் கைராட்டையைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்டது. இவருடைய "கணையாழியின் கனவு" சிறுகதையில் வரும் கூயிாம்பாபு பவானி கதையில் வரும் உமாகாந்தன் கைதியின் பிரார்த்தனை சிறுகதையில் வரும் கைலாசம் முதலான பாத்திரங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்துடன் இணைந்து செயற்பட்ட உண்மையான பாத்திரங்களே ஆகும். 1935இல் ராஜாஜி நடாத்திய விமோசனம்; பத்திரிகையில் ராஜாஜியும் கல்கியும் இத்தகைய கதைகளையே நிறையவே எழுதினர். கல்கியின் "பாங்கர் விநாயராவ்" சிறுகதை மதுவிலக்கு கொள்கையையும் "சிரஞ்சீவி"ச் சிறுகதை உப்புச் சத்தியாக்கிரகப் பின்னணியையும் கூறிநிற்கின்றன. பெ.தூரனின் "ரங்கபோயன்", "புதுக்கடை", "ஜகுப்பன்", "முத்தம்மாள்" முதலிய சிறுகதைகள் மதுவினால் விளையும் கேடுகளைக் கூறிநிற்கின்றன.

ந. பிச்சமூர்த்தியின் "மோகினி", "பதினெட்டாம் பெருக்கு", "முள்ளும் ரோஜாவும்", "காவல்" கல்கியின் "கேதாரியின் தாயார்", ராஜாஜியின் "தேவானை" முதலான சிறுகதைகளும் காந்தியத்தாக்கத்தில் எழுந்தவையே ஆகும். இக்காலப்பகுதியில் ராஜாஜி நீதிக்கதைகளையும், போதனை விளக்கச் சிறுகதைகளையும் எழுதியிருந்தார். சத்தியத்துக்காக தன் வாழ்வைத் தியாகம் செய்ய முற்படும் பெண்ணைமையப்படுத்தி எழுதப்பட்ட என்.எஸ்.ஸ்ரீனிவாசனின் "ஜகன்மாதா", அரசுப் பணி கிடைக்கும் என்பதால் நாட்டுக்கு துரோகம் இளைக்க முனைவோரைப் பேச்சுவன்மையால் மாற்றி தேச விடுதலையை அவர்களுக்கு ஊட்டி தேசப்பற்றை வளர்க்க முனையும் இலட்சிய மாந்தரை நோக்காகக் கொண்டு எழுதப்பட்டது. வி.எஸ்.எஸ்.ராஜனின் "தேசபக்தை ஹேமலதை" முதலான சிறுகதைகளும் காந்தீயத்தின் தாக்கத்தால் எழுந்த சிறுகதைகளாகும். பி.எஸ்.ராமையாவும் காந்திய அடிப்படையில், சமுதாயச் சீர்கேடுகளைச் சித்தரிக்கும் சிறுகதைகளை இக்காலத்தில் எழுதினார்.

பொருந்தா திருமணத்தை முன்னிறுத்தி இக்காலப்பகுதியில் ஏராளமான சிறுகதைகள் வெளிவந்தன. கல்கியின் "சாரதையின் தந்திரம்" என்ற சிறுகதை வயது வந்தவருக்கு திருமணம் முடித்து வைத்ததை கேள்வியுற்ற பெண்ணின் சகோதரன் தங்கையின் நல்வாழ்விற்காக அவளது கிழட்டு கணவனை விஷம் வைத்து கொல்வதை எடுத்து விளக்குகிறது. யதார்த்தத்துக்கு பொருத்தமில்லாத இலட்சிய மாந்தர்களை பாத்திரமாக்கி பழைய நாடகப்பாணியில் இச்சிறுகதை எழுதப்பட்டது. "சாரதையின் தந்திரம்" தொகுப்புக்கு முன்னுரை எழுதிய ராஜாஜி இச்சிறுகதை பற்றி குறிப்படும் போது "கதையின் முடிவு அழகு குறைவு" என்றார்.

குழந்தை மணத்தைச் சித்திரிக்கும் வகையில் இக்காலப்பகுதியில் சிறுகதைகள் எழுதப்பட்டன. குழந்தை மணத்தை மா.இராமலிங்கம் இரண்டாகப் பிரிப்பர். ஒன்று மூன்று அல்லது நான்கே வயதுள்ள சிறுமியரை அவர்களை விட சற்றே மூத்தகுழந்தைகளுக்கு மணமுடித்து வைத்தல். மற்றொன்று இளவயதுப் பெண்களை வயதான முதியவருக்கு திருமணம் செய்து கொடுத்தல். புதுமைப்பித்தனின் "ஆண்மை", பெ.கோ.சுந்தரராஜனின் "கௌரவநாசம்", ந.சிதம்பரசுப்பிரமணியனின் "பாட்டி", தி.ஜ.ர.வின் "கல்யாணப்பெண்" கல்கியின் "கமலாவின் கல்யாணம்" முதலான சிறுகதைகள் குழந்தை மணத்துக்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் எழுதப்பட்ட சிறுகதைகளாகும். குழந்தை திருமணத்தால் பெண்ணிற்கு நேர்ந்த அவலத்தை வ.ராமஸ்வாமியின் "கட்டைவண்டி கலியாணம்" என்ற சிறுகதையும் திருமண வாழ்க்கையில் கணவன், மனைவி உறவை எதிர்கொள்ளும் உடல், உள வளர்ச்சியற்ற பெண்ணின் மனோநிலையை பெ.கோ.சுந்தராஜனின் "தாழைபூத்தது" சிறுகதையும் எடுத்துரைக்கின்றன.

ஆரம்ப கால சிறுகதைகள் காதலைப் பேசு பொருளாகக் கொண்டு படைக்கப்பட்டவை. ஆணும் பெண்ணும் உள்ளத்தாலோ, உடலாலோ கருத்து ஒருமித்து இணைவதைக் காதல் என்பர். இவ்வாறான ஆண், பெண் ஈர்ப்பை அடிப்படையாகக் கொண்டு இக் காலக்கதைகள் எழுந்தன.பெண் உடலால் ஊனமுற்றவள் என்று அறிந்தும் அவள் மீது காதல் கொள்வதை க.நா.சுப்பிரமணியத்தின் "பேசாமடந்தை" சிறுகதையும் கு.பா.ரா.வின் "காமுவின் கதை" என்ற சிறுகதையும் எடுத்துரைக்கின்றன. பெண்ணுக்கு உடல் அழகுடன் உளஅழகும் திறமையும் இருக்கவேண்டும் என்பதை மே.ரா.மீ.சுந்தரத்தின் "கருப்புபெண்" சிறுகதை கூறிநிற்கிறது. ஆனால் தி.ஜா.ர-வின் "நொண்டிக்கிளி" சிறுகதை கால் ஊனமுற்ற ஒரே காரணத்துக்காக பெண் நிராகரிக்கபட்டதை எடுத்துரைக்கிறது. காதலனால் நிராகிக்கபட்டதன் பின் அப்பெண் எடுக்கும் உறுதியான முடிவும் இச்சிறுகதையில் வெளிப்படுத்தப்படுகிறது. வ.வே.சு.ஐயரின் அனார்கலி, கமலவிஜயம் முதலான சிறுகதைகள் மனிதக் காதலை காவியச் சுவையுடன் கூறி நிற்கின்றன. எஸ்.வையாபுரிப் பிள்ளையின் "ராமுவின் சுயசரிதம்", "மணிமுடிமாளிகை" முதலான கதைகள் இளவயதுக் காதலை கூறிநிற்கின்றன. மௌனியின் "பிரபஞ்சகானம்", "நினைவுச்சுவடு", "கொஞ்சதூரம்" முதலான சிறுகதைகளும் காதலை மையப் பொருளாகக்கொண்டு படைக்கப்பட்ட சிறுகதைகளாகும்.

தீண்டாமை ஒழிப்பு இக்கால சிறுகதைகளில் முதன்மை பெற்றன. தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டிய அவசியத்தை கல்கியின் "விஷமந்திரம்" உட்பட பல சிறுகதைகள் வெளிப்படுத்தி நின்றன. விஷகடி வைத்தியரான நாரயண ஐயர் விஷ முறிப்பு வைத்தியத்தில் ஈடும்போது தீண்டத்தகாதவர் தன்னை காணக்கூடாது என்றும் விஷ முறிப்பில் ஈடுபடும்போது தீண்டத்தகாதவர் காற்றுபட்டால் தன் மந்திரம் வேலை செய்யாது என்றும் நம்புபவர்

ஒருமுறை வைத்தியம் செய்யும் போது அவருடன் போஸ்மாஸ்டர் ஒருவரும் கூட இருக்கிறார். பாம்பு கடித்தவன் உயிர்பெற்று எழும் போது தான் அவருக்கு போஸ்மாஸ்டர் தீண்டதகாதவன் என்பது தெரிகிறது. பகுத்தறிவுவாத சிந்தனையில் எழுதப்பட்ட இச்சிறுகதை கல்கியின் சிறந்த சிறுகதையாக இற்றைவரை போற்றப்படுகிறது. வேற்றுசாதியைச் சேர்ந்த குமாரலிங்கத்தின் காதலையும் மற்றும் அவன் கொடுக்கும் பவழமாலையையும் ஏற்கமறுக்கும் பொன்னாச்சியின் உள்ளத்தை பி.எம்.கண்ணனின் "பவழமாலை" சிறு கதையும் சாதிப்பாகுபாட்டால் நிறைவேறாத காதலை சேது அம்மாளின் "ஸாவித்திரியின் கடிதம்" என்ற சிறுகதையும் எடுத்துரைக்கின்றன.

சாதி, கல்வி, உத்தியோக நிமித்தம் இந்துக்கள் பலர் கிறிஸ்தவசமயத்துக்கு மதம் மாறினர். எனவே இக்கால சிறுகதைகளில் மதமாற்றம் முக்கிய நிகழ்வாகச் சுட்டிக்காட்டப்பட்டன. கி.ரா.வின் "ஸ்பெஷல் ஆட்டம்" சிறுகதை கிறிஸ்தவமதத்துக்கு மாறும் கணவனை மனைவியானவள் இந்துமதத்தின் சிறப்புக்களை கூறி மீண்டும் அம்மதத்துக்குள் உள்வாங்குவதை சித்திரிக்கிறது.

ஒரே நிகழ்சியினை அடிப்படையாகக் கொண்டு சிறுகதைகளைப் படைத்தமை. பி.எஸ்.ராமையாவும் புதுமைப்பித்தனும் மணிக்கொடி அலுவலகத்துக்கு தெரு வழியாகக் கண்ட நிகழ்வினை அடிப்படையாகக் கொண்டு புதுமைப்பித்தன் "கவந்தனும் ககாமனும்" என்ற கதையையும் பி.எஸ்.ராமையா "கார்னிவல்" என்ற சிறுகதையையும் படைத்தனர்.

இக்கால சிறுகதைகளில் விதவைநிலையும் மிக நுட்பமாகச் சித்திரிக்கப்பட்டன. விதவைமகளின் காதல் திருமணத்தை தாய் தடுப்பதை ந.பிச்சமூர்த்தியின் "மீனலோசினி" சிறுகதையும் எடுத்துரைக்கின்றன. விதவையின் மீது காதல் கொண்டும் சமூகத்துக்கு அஞ்சி அவளை திருமணம் செய்து கொள்ளத் தயங்குவதை கலாரஸிகனின் "ஒரு சோறு" சிறுகதையும் கூறிநிற் கின்றது. தாய் இறந்தவுடன் தனிமையைப் போக்கிக் கொள்ள இரண்டாம் திருமணம் செய்து கொள்ளும் தந்தை பதினான்கு வயதில் விதவையான மகள் சூர்யாவுக்கு மறுமணம் செய்து வைக்காத தன்மையை அழகனின் "விடுதலை" சிறுகதையிலும் தரிசிக்கலாம். தலைமுடியைக் களைந்து அழங்கோலப் படுத்த சமூகம் முனைகையில் சூர்யா தற் கொலை செய்து கொள்வதை இச்சிறு கதையில் ஆசிரியர் இயல்பாகவே எடுத் துரைக்கிறார். கணவனை இழந்த உயிருள்ள மனுஷிக்கு உயிரும் உள்ளமும் உண்டு என்பதை ஸ்ரீமதி சேது அம்மாளின் "கதையா" சிறுகதையும் எடுத்துரைக் கின்றது. கல்கியின் "கேதாரியின் தாயார்", தி.ஜ.ர.வின் "ராஜத்தின் கூந்தல்", ராமையாவின் "பூச்சூட்டல்", கு.ப.ரா.வின் "உயிரின் அழைப்பு" முதலான சிறுகதை கள் கைம்பெண்கள் பொட்டிழந்து, பூவிழந்து, கூந்தல் இழந்து அலங்கோல மாவதைச் சித்திரிக்கிறது.

இக்கால சிறுகதைகளில் கலப்பு திருமணங்களும் பேசப்பட்டன. கோபாலய்யங்கார் இடைச்சாதியைச் சேர்ந்த மீனாட்சியை மணப்பதால் ஐய்யங்கார் இனத்தவரால் தூரவிலக்கப்படுவதை புதுமைப்பித்தனின் "கோபாலய்யங்காரின் மனைவி" சிறுகதை எடுத்துரைக்கின்றது. உண்மை யில் இச்சிறுகதை கலப்புமணம் குறித்து கூறினாலும் கலப்பு மணத்தைக் கேலி செய்வதாகவே அமைகிறது. இதுபோல அந்தணன் தான் கொண்ட காதலில் உறுதியாக நின்று வேற்று சாதியைச் சேர்ந்த பெண்ணை மணம் முடிப்பதை வே.சி. எழுதிய "சக்தி கூத்து" சிறுகதையும் எடுத்துரைக்கிறது.

இக்கால சிறுகதைகள் வரதட்சணைக் கொடுமை யையும் எடுத்துக்காட்டின. ஆணின் கல்விக்கேற்ப வரதட் சணை பெறும் நிலையை நட்சத்திரத்தின் "கலியாணத்தின் கலியாணம்" சிறுகதையில் காணலாம். வரதட்சனை வாங்குவதும் கொடுப்பதும் உயர்வு என எண்ணும் தாய் மகன் வரதட்சணை பெறாமல் திருமணம் செய்ய முயல்வதை தடுப்பதை சி.சு.செல்லப்பாவின் "பந்தயம்" சிறுகதை விளக்கி நிற்கிறது. திருமணம் என்ற நிறுவனம் வியாபாரச் சந்தைக்கு வந்த பின்னர் உறவுகளுக்கிடையில் ஏற்படும் இடைவெளியை பி.எஸ்.சங்கரனின் "மழையும் தூறலும்" சிறுகதையிலும் காணலாம். புதுமைப்பித்தனின் "ஆண்மை" சிறுகதையில் ருக்மிணியும் ஸ்ரீனிவாசனும் சேர்ந்து வாழ முடியாமைக்கு காரணமாகச் சீதனமே அமை கிறது. புரசு பாலகிருஷ்ணனின் "பெற்றோர்" சிறுகதை மகளின் திருமணம் காரணமாகப் பெற்றோர் துன்பப்படு வதை எடுத்துரைக்கிறது. எம்.எஸ்.கமலாவின் "சீர்", பி.எஸ்.ராமையாவின் "இலக்கிய ரசிகர்" முதலான சிறுகதை கள் சீர்வரிசையால் விளையும் கேட்டினைப் பேசுகிறது.

குழந்தை மீது தாய் கொண்டுள்ள அன்பினை மணிகொடிச் சிறுகதைகள் பல சித்திரித்துள்ளன. குழந்தையின் மீது தாய் காட்டும் பாசத்தையும் பரிவையும் ந.பிச்சமூர்த்தியின் "காபூலிக்குழந்தைகள்" சிறுகதையும் விபத்தில் குழந்தையை பறிகொடுத்த தாயின் உள்ளத்தை கே.ராமசாமியின் "விஜயன்" சிறுகதையும் நோய் வாய்ப் பட்டு உடற் குறைபாட்டால் வருந்தும் குழந்தையை சுகப் படுத்த முடியாநிலையில் தன் உயிரினை மாய்த்துக் கொண்ட தாயின் உள்ளத்தை ஆர்.சண்முகசுந்தரத்தின் "நதிக்கரைசமாதி" சிறுகதையும் விளக்கி நிற்கின்றன. குழந்தையின் மனநிலையைக் கலை உணர்வோடு சித்திரிப் பதில் பி.எஸ். ராமையாவும் வெற்றி பெற்றார். இவருடைய நஷ்த்திரக் குழந்தைகள்" வளரும் குழந்தைகளின் வினாக்களைச் சமாளிக்க முடியாது குழந்தைகளிடம் பொய் கூறும் பெற்றார் களினால் குழந்தைகளின் உளநிலைகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை இச்சிறுகதை எடுத்துரைக்கிறது.



கு.ப.ரா.

இக்கால சிறுகதைகள் மது விலக்கையும் பேசின. இந்திய மக்கள் மறுமலர்ச்சி அடைய வேண்டுமானால் அம்மக்கள் மது அருந்தும் பழக்கத்தில் இருந்து விடுபடவேண்டிய அவசியத்தை காந்தி அடிகள் வலியுறுத்தினார். இதனால் மது ஒழிப்பு பிரச்சாரத்தை முன்நின்று நடாத்தினார். 1937ஆம் ஆண்டுசென்னை

மாநில முதல்வராக இருந்த ராஜாஜி சேலம் மாவட்டத்தில் முதல்முதலாக மதுவிலக்கை நடைமுறைக்கு கொண்டு வந்தார். ராஜாஜியின் "திக்கற்ற பார்வதி" மதுவின் கொடுமையை எடுத்துரைத்த சிறுகதையாகும். தன் ஊதியம் முழுவதையும் மதுவுக்கு செலவிடுவதால் அவன் மனைவி அடையும் துன்பநிலையை டி.பி.ராமசாமியின் காத்தான் சிறுகதையும் கணவனின் குடிப்பழகத்தால் சொந்த வீட்டை இழந்து சுடுகாட்டில் வாழ்வதைச் சித்திரிக்கும் புதுமைபித்தனின் "காலனும் கிழவியும்" முதலான சிறுகதைகள் குடியினால் விளையும் தீமை களைக் கூறுகின்றன.

ஆரம்ப காலச் சிறுகதைகளில் கட்டுரைப் போக் கான கருத்து வீச்சுக்கள் அதிகமாகவும் கலையம்சம் குறைவாகவும் காணப்படுகின்றன குறிப்பாக ராஜாஜியின் கதைகள் நீதி, உபதேசங்களை மக்களுக்கு எடுத்துரைக் கும் பாங்கில் எழுதப்பட்ட சிறுகதைகள் ஆகும். "ரத்தினம் பிள்ளையின் துறவு" என்ற சிறுகதை முப்பது ஆண்டுகள் நேர்மையாகவும் சாமார்த்தியமாகவும் அரசாங்கத்துக்கு உழைத்த புருஷோத்தம நாயுடுவை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையாகும். இவருடைய பிறிதொரு சிறுகதையான "முகுந்தன்" சிறுகதை தீண்டாமையை முதன்மைப்படுத்தி எழுதப்பட்டதாகும். மாரி என்ற ஒடுக்கப்பட்டவனுக்கு தங்க இடம் கொடுத்தமைக்காக ஊராரால் ஒதுக்கப்படும் முகுந்தனின் வாழ்வை இச்சிறு கதை கூறிநிற்கிறது. குடியின் தீமையை விளக்க ராஜாஜி யால் எழுதப்பட்ட சிறுகதையே "திக்கற்ற பார்வதி" .ராஜாஜி அறத்தையும் நீதிப்போதனையும் மக்கள் மனதில் ஊட்டி வளர்ப்பதற்காகவே சிறுகதைகளை எழுதினார். இதுபோல அறத்தை வலியுறுத்தும் பி.எஸ்.ரங்கநாதனின் "வாழ்க்கை திறவுகோல்" சிறுகதை கணவனை நெறிப் படுத்தி அறிவுரை கூறும் பாங்கில் எழுதப்பட்ட சிறுகதை யாகும்.

பாலுறவுச் சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டு இக்காலச்சிறுகதைகள் படைக்கப்பட்டன. ஆண் பெண்களுக்கிடையிலான உறவுமுறைகளையும் அது சமுதாயத்தோடு கொண்டிருக்கும் இயைபினையும் இக்காலச் சிறுகதைகள் வெளிப்படுத்தி நின்றன. காமத்தையும் காதலையும் அழகியல் தன்மையோடு சித்திரித்தவர் கு.ப.ரா. கு.ப.ராவின் "சிறிது வெளிச்சம்", "மோகினி மாயை" முதலான சிறுகதைகளும் பாலுறவுச் சிக்கல்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. அழகில்லை என்பதால் கணவனால் ஒதுக்கி விடப்பட்ட பெண் எதிர் வீட்டில் உள்ள ஆடவனோடு சோரம் போய் கணவனைப் பழி வாங்கு வதை எம்.வி.வெங்கட்ராமின் "தொடரும் நிழல்" சிறுகதை எடுத்துரைக்கிறது. பி.ஆர்.ராஜமைய்யரின் "தண்டனை உண்டா", காமாஷியின் "ஜ்வாலை" முத லான சிறுகதைகளும் பாலியல் சிக்கல் களை சித்திரிக்கும் சிறுகதைகளே ஆகும். காமத்தின் கனபரிமாணத்தையும் அதன் ஆற்றலையும் புதுமைப்பித்தனின் "விபரீத ஆசை", கோ.த.சண்முகசுந்தரத்தின் "நண்பனின் மனைவி", ப.ஸ்ரீனிவாசனின் "காமுகன்" முதலான சிறுகதைகள் எடுத்துரைக்கின்றன.



புதுமைப்பித்தன்

1930-1940களில் "மணிக்கொடி" சஞ்சிகை வெளி வந்தது. இக்காலத்தையே மணிக்கொடி காலம் என்பர். மணிக்கொடி இதழ் சீனிவாசனையும் டி.எஸ்.சொக்க லிங்கத்தையும் வ.ராவையும் பி.எஸ். ராமையாவையும், ஆசிரியராகக் கொண்டு சிறுகதைகளுக்கான இதழாக 1939வரை வெளிவந்தது.நவீன இலக்கியச் சிறுகதையின் பரிசோதனைக்களமாக மணிக்கொடி விளங்கியது. புதுமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி, கு.ப. ராஜ கோபாலன், பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி), பி.எஸ். ராமையா, மௌனி (எஸ். மணி). கி.ரா.ந.சிதம்பர சுப்பிரமணியம், ஆர். சண்முக சுந்தரம், எம்.வி.வெங்கட்ராம், சி.அ. செல்லப்பா, பி.எம். கண்ணன், லா.ச.ராமாமிர்தம், க.நா. சுப்பிரமணியம் என்போர் மணிக்கொடி எழுத்தாளராகப் பரிணமித்தனர். மணிக்கொடியின் மூலவர்களில் ஒருவரான புதமைப் பித்தன் வலுவும் வேகமும் கொண்ட புதுப் புதுச் சொல்லாட்சிகளைக் கொண்டு சமுதாயத்தின் உண்மை களை, ஆழமும், பரப்பும் கொண்ட சிறுகதைகளாகப் படைத்தார். மணிக்கொடி எழுத்தாளர்களுள் புதமைப் பித்தன் முதன்மையானவர். அவர் எழுதிய சுமார் 100 சிறு கதைகள் மற்றும் அவர் மொழிபெயர்த்த உலகச் சிறு கதைகள் தமிழில் சிறுகதை என்னும் இலக்கிய வடிவத்தை முழுமைப்படுத்தின. அடிமட்ட மக்களின் வேதனைகளை நகைச்சுவையோடு விளக்கும் சிறுகதைகளை புதமைப் பித்தன் எழுதினார். புதுமைபித்தனின் சிறுகதைகளை கரு.முத்தையா "தனிமனித உணர்வுகளை அடிப்படை யாகக் கொண்ட கதைகள், தத்துவங்களை அடிப்படை யாகக் கொண்ட கதைகள், சமுதாயச் சிக்கலை மையமிட்ட கதைகள், காதலைக் கருவாகக் கொண்ட கதைகள், நகர வாழ்க்கையின் போலித் தன்மைகளை வெளிக்காட்டும் கதைகள், கேலி, கிண்டல் இவற்றைக் கருவாகக் கொண்ட கதைகள், பேய், பிசாசு, வேதாளம் இவற்றை மையமிட்ட கதைகள், வறுமையைக் கருவாகக் கொண்ட கதைகள்" என்று வகைப்படுத்துவார்.

வறுமையுடனும் வலியுடனும் போராடிக்கொண்டு வாழ்க்கை நடாத்தும் ஒரு ஏழை எழுத்தாளனான முரக தாசரின் ஒரு நாள் பொழுதினை நகைச்சுவையுடனும் உணர்வுபூர்வமாகவும் விவரிக்கும் சிறுகதையே ஒரு நாள் கழிந்தது சிறுகதை.ரயில் தண்டவாளம் ஓரமாய் அமைந்து இருக்கும் சேரியை அடிப்படையாகக் கொண்டு புதுமைப் பித்தனால் படைக்கப்பட்ட சிறுகதையே பொன்னகரம் பொன்னகரத்து குடிசைவாசியான கூவித் தொழிலாளியான அம்மாளு குடித்து விட்டு வண்டியோட்டி பலந்த காயம் கண்ட கணவனின் இறுதி ஆசையை நிறைவேற்ற பணம் இல்லாததால் தன்னை விற்று அவ்வாசையை நிறைவேற்று கிறாள். கற்பு என்பது பதிவிரதா தர்மம் என்பதை புதுமைப் பித்தன் இச்சிறுகதை வாயிலாக 1930களில் வெளிப்படுத்தியது ஆச்சர்யம் கூடிய உண்மையாகும். புதமைப் பித்தனின் கதைகளிலே மிகுந்த துயரம் நிறைந்த செல்லம்மாள் சிறுகதை கணவன் மனைவியிடையே நிகழும் பாசாங்கற்ற

அன்பின் வெளிபாட்டை கூறிநிற்கிறது. தீராத நோயினால் அவதியுறும் செல்லம்மாள் தன் சாவை எதிர்நோக்கும் ஒரு நாளில் தன் கணவர் பிரம்மநாயகம் பிள்ளையுடன் செலவிடும் ஒருநாட்பொழுதை இக்கதை உணர்வு பூர்வமாகச் சித்திரிக்கிறது. பெரு நகரம் ஒன்றின் சாலை ஓரத்தில் இறந்து கொண்டிருக்கும் பிச்சைக்காரக் கிழவனின் கடைசி நிமிடங்களையும், அதை வேடிக்கை பார்க்கும் சிறு பெண் குழந்தையின் மன அவசங்களை யும் சித்தரிக்கும் கதையே மகாமசானம். இயல்பான வாழ்க்கைமுறையை நுட்பமாகச் சித்திரிக்கிறது.

எல்லா காலகட்டத்திற்கும் பொருந்தி வரும் அறிவியல் சிறுகதையும் புதுமைபித்தன் படைத்துள்ளார். இவருடைய கடவுளும் கந்தசாமி பிள்ளையும் சிறுகதை அறிவியல் நோக்கில் கடவுளின் நடத்தைவாத முறைகளை அணுகுகிறது.

புராணகதைகளுக்கு புதியவடிவத்தை கொடுத்த வர்களில் முக்கியமானவர் புதுமைபித்தன். புதுமைப் பித்தன் அகலிகைக்கு புது வடிவம் கொடுக்க எண்ணி "அகலிகை", "சாபவிமோசனம்" முதலான சிறுகதைகளை எழுதினார். "சாபவிமோசனம்" கதையில், அகலிகையின் புராண வரலாற்றை எடுத்துக் கொண்டு புதுமைப்பித்தன் சமுதாயத்தை விமரிசனம் செய்கிறார். இராமன் கொடுத்த சாபவிமோசனத்தை தேவையில்லை என்று தூக்கி யெறிந்து விட்டு மீண்டும் தன்னைக் கல்லாக்கிக் கொண்ட அகலிகையைப் பற்றிப் பேசும் "சாபவிமோசனம்" சிறுகதை இற்றைவரை பலரால் அதிகம் விமரிசிக்கப்பட்டு வருகிறது. புதுமைப்பித்தனின் புராண, இதிகாச வாசிப்பினைக் காட்டும் பிறிதொரு கதை "மனக்குகை ஓவியங்கள்". இச் சிறுகதையில் நசிகேதனுக்கும் யமனுக்கு நடக்கும் மரணம் குறித்தான உரையாடல்கள் ஆழமானவை. மரணத்தின் அதிகாரியான யமனை நோக்கி, மரணத்தால் வரையறுக் கப்பட்ட மானிடன் கொள்ளும் மனக் கொந்தளிப்பை இச்சிறுகதை உணர்வு பூர்வமாக விளக்குகிறது. புதுமைப் பித்தனைப் போலவே இராமாயணத்தை புதிய கோணத் தில் அணுகியவருள் ஒருவர். பி.எஸ்.ராமையா. இவருடைய "திரிலோகாதிபத்திய ரகசியம்", "ஜானகிக்காக மாத்திர மல்ல" இருகதைகளும் சீதையின் முற்பிறவிக்கதைகளை எடுத்துரைக்கின்றன. வேதவதியான சீதை இறைவனை அடையத் தவம் செய்து கொண்டுள்ள போது இராவணன் அவளிடம் வம்பு செய்கிறான். அவனை அழிக்கவே சீதை மறுபிறவி எடுக்கிறாள் என்பதை ராமையாவின் "திரிலோகாதிபத்திய ரகசியம்" சிறுகதை சித்திரிக்கிறது. இத போல "ஜானகிக்காக மாத்திரமல்ல" சிறுகதை இறைவன் அரு ளால் எல்லாப் பயங்களையும் வெல்ல லாம் என்பதை இராம, இலக்குமணனுக் கூடாக எடுத்துரைக்கிறார்.

புதுமைப்பித்தன் கதைகளில் வரும் பாத்திரங்கள் எல்லாம் நாம் அன்றாடம் தரிசிக்கும் நிஜமனிதர்கள். வறுமையின் பிடிக்குள் சிக்குண்டவர்கள். வாழ்க்கையின் துயரில் மூழ்கி உலக வாழ் வின் மீது நம்பிக்கை இழந்து ஏமாற்றம், வெறுப்பு என்பவற்றால் பாதிக்கப் பட்டவர்கள். நண்பர்களை நம்பி மோசம் போனவர்கள். காதலால் தோல்வியடைந்தவர்கள் சமூகத்தை எதிர்க்கத் துணிவில்லாத வாயில்லாப் பூச்சிகள். சமூகத்தை விமர்சிப்பவர் கள். சமயப் போர்வையில் உலா வரும் போலிமனிதர்கள். சமூகத்தால் வஞ்சிக்கப்பட்டு மனத்தால் பாதிக்கப் பட்ட விதவைப் பெண்கள்.



மணிக்கொடியில் வெளி வந்த சிறுகதைகள் கதை நிகழ்ச்சி களை விட மனோபாவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டன. சிட்டி, கு.ப.ராஜகோபாலன் முதலானவர் களின் பெரும்பாலான சிறு கதைகள் இத்தளத்திலேயே எழுதப்பட்டன. பெண்ணின் சித்தத்தை இருளாக்கும் உணர்ச்சிகளையும், கருவாக நின்றுவிட்ட வேட்கைகளை யும், வெகுநுட்பமாகவும் எடுத்துரைப்பதில் நிகரற்றவர் கு.ப.ரா. இவரின் கனகாம்பரம், நூர்உன்னிசா, சிறிது வெளிச்சம் முதலான கதைகளில் இதனைக் காணலாம். சிட்டியின் அந்திமந்தாரை சிறுகதையும் பெண்ணின் உள்ளத்தைச் சித்திரிக்கிறது. பெண்மை என்னும் பெரும் சக்தியால் கவரப்பட்டவர் கு.ப.ரா. இதனால் பெண்ணின் உள்ளத் துணர்வுகளை சிறப்பாக சிறுகதைகளில் வெளிப்படுத்திய வர். ஆண் – பெண் உறவுமுறைகளில் மறைமுகமாகவும் நேரடியாக வும் எழும் சிக்கல்களை நடைமுறை வாழ்வில் பெண்மைக்கு இயற்கை தந்துள்ள நிறைகுறைகளை தம் படைப்பில் கலாநேர்த்தியோடு வெளிப்படுத்தியவர் கு.ப.ரா. இவருடைய "மோகினி மாயை" முப்பது வயது கமலத் துக்கும் இருபது வயது பாலுக்கும் ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சியை எடுத்துரைக்கிறது. "சிறிது வெளிச்சம்" சிறுகதை கணவனால் துன்புறுத்தப்பட்ட மனைவி தன் ஏக்கங்கள், சுக துக்கங்களை தன் வீட்டில் குடியிருக்கும் வேற்று ஆடவனிடம் கூறுவதாக அமைகிறது. ஆண் பெண் பரஸ்பர உறவுநிலை கண்ணியமாக கு.ப.ராவின் சிறுகதைகளில் வெளிப்படுகிறது. பெண்ணின் உள்ளத்தில் மறைந்திருக்கும் உணவுர்களை துல்லியமாக வெளிப் படுத்திய "திரைக்குப் பின்" சிறுகதையும் மனித உறவுகளால் வரும் ஆழமான காதலை வெளிப்படுத்து கிறது. மதங்களை கடந்து வெளிப்படும் உண்மைக்காதல் தூய்மையானது. அதில் பாலியல் கவர்ச்சி இல்லை. என்றும் அது இலட்சியங்களால் கட்டுண்டது என்பதை விளக்கும் "நூர் உன்னிசா" சிறுகதையும் அவருக்கு பெரும் புகழை ஈட்டித் தந்த சிறுகதை ஆகும். கு.ப.ரா. பகுத்தறிவுவாதியாகவும் செயற் பட்டவர். சமூகத்தில் புரையேறிப்போன மூடநம்பிக்கைகளை தம்சிறுகதைகளுக் கூடாக கண்டித்தவர். அவ்வகையில் வெளி வந்த சிறுகதைகளே "அர்ச்சனை ரூபாய்", "தாயாரின் திருப்தி". "தாயாரின் திருப்தி" சிறுகதையில் சுந்தரேசய்யரின் தாயாருக் குச் சிரார்த்தம் வருகிறது வாயா சத்துக்குப் பிண்டம்கூட வைக்கவில்லை. வாசலில் கிழவி ஒருத்தி பசியால் துடித்துக் கொண்டு இருக்கிறாள். சுந்தரேசய்யர் பிண்டத்தில்



மௌனி

ஒரு உருண்டையை எடுத்து கலசத்தில் கரைத்து கிழவியின் குவளையிலல் ஊற்றுகின்றார். பிராமணர் கோபித்துக் கொண்டு வெளியேறுகின்றனர். இப்படி செய்து விட்டீர்களே என மனைவி பதறுகிறாள். "என்னடி அசடு! வாசலில் பார் அம்மா உரு வெடுத்து வந்திருப்பதை" என்கிறார். உண்மையான தானம் எது வென்பதை இச்சிறுகதை வெளிப்படுத்தி நிற்கிறது.

நிமோனியாவால் பீடிக்கப்பட்ட தன் மகன் குணமடைய வேண்டுதல் செய்து இறைவனுக்கு முடிந்து வைத்திருந்த ஒரு ரூபாயை தோட்டிக்கு போட்டுவிடும் குடும்பத் தலைவரின் உள்ளத்தை எடுத்துரைக்கும் "அர்ச்சனை ரூபாய்" சிறுகதையும் உண்மையான பக்தியின் வெளிப்பாட்டை கூறிநிற்கிறது. கு.ப.ரா. தம் சிறுகதைகளில் ஆராவாரமின்றி நிதானமாக நிர்தாட்சண்யமற்று வைக்கும் முடிவுகள் சிறுகதையை உச்சத்துக்கே கொண்டு செல்கின்றன.

மௌனி சிறுகதைகளில் அகவுலகை உணர்வு பூர்வமாகச் சித்திரித்தவர். அதிலேயே வாழ்ந்தவர். அதிலேயே தோய்ந்து அதற்குள்ளேயே உனைறவர். இவ்வுலகு ஆழமானது. உண்மைத்தன்மை கொண்டது. மௌனி மனதின் ஆழ்போக்குகளை நடப்பியல்புகளை தம் சிறுகதைகளில் பரிபூரணமாக சித்திரித்தவர். நிகழ்ச்சிகளைச் சிக்கற்படுத்தி மனித நிலைமைகளை சிக்கனச் சொற்களிலே அகண்டாரமாகக் காட்டிவிடும் ஆற்றல் மிக்கவர். அவருடைய கதை மாந்தர்கள் உணர்வுநிலைப் பட்டவர்கள். காதல்தோல்வி, பிரிவு, விரக்தி, வெறுப்பு, சலிப்பு ஆகியவற்றையே தம்சிறுகதைகளில் அதிகம் கையாண்டவர். அவனுக்கும் அவளுக்கும் இடையில் நடந்த இரண்டு சந்திப்புக்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட "அழியாச்சுடர்", மனைவியை இழந்த ஒருவனுடைய சோகத்தைப் பேசும் "காதல்சாலை" முதலிய சிறுகதைகளிலும் இப்பண்புகள் ஓங்கி நிற்பதனைக் காணலாம். மௌனியின் சிறுகதைகளில் பிரிவின் துயரம் துல்லியமாக வெளிப்படுத்தப்படுகிறது. மனைவியின் இழப்பினால் ஏற்படும் பிரிவை மௌனி தன் பிறிதொரு கதையான "மாற்றுதல்" சிறுகதையிலும் சித்திரித்துள்ளார். பெண்பார்க்கச் சென்ற இடத்தில் தன் வருங்கால மனைவியை இழந்த துயரத்தை "பிரபஞ்சகானம்" எடுத்துரைக்கிறது. இச்சிறுகதை உடலியல் தேவைக்கு அப்பாற்பட்ட காதலின் மகத்துவத்தை நுண்ணுணர்வுத் தளத்தில் எடுத்துரைக்கிறது.

சிறுகதைகளில் உருவத்துக்கு அதி முக்கியத்துவம் கொடுத்தவர்களில் ஒருவரான ந.பிச்சமூர்த்தி ஆழ்ந்த அனுபவங்களை, தரிசனம் நிறைந்த தத்துவச் சரடுகளில், உவகை மிகுந்த சொற்றொடர்கள் நிறைந்த நடைகளில் சிறுகதைகளை வெளியிட்டவர். இவருடைய முதற் சிறுகதையான "முள்ளும் ரோஸாவும்" உருவத்தாலும் உள்ளடக்கத்தாலும் சிறந்து விளங்கிய சிறுகதையாகும். வானம்பாடி, ஈசுவரலீலை முதலிய சிறுகதைகள் தத்துவப் பாங்கில் எழுதப்பட்ட சிறுகதைகளாகும்.



ந.பிச்சமூர்த்தி

இவருடைய "தாய்" சிறு கதை உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து படைக்கப்பட்ட சிறுகதையாகும். இவருடைய "மண்ணாசை" என்ற சிறுகதை வீடொன்றின் ஆக்கிரமிப்பை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது இச்சிறுகதையில் ஆக்கிரமிப்பின் குறியீடாக நாய், குளவி முதலானவை எடுத்துக் கட்டப்படுகின்றன. உளவெழுச்சியில் விளையும் இக்கலைகளை நுட்பமாக தம் சிறுகதைகளில் வடித்தவர்களுள் ஒருவர் ந.பிச்சமூர்த்தி. மனித நடத்தையாலும் கற்பனைத் திறனாலும் நுட்பமாகச் செதுக்கப்படும் கலையை பிச்சமூர்த்தியின் ஆரம்பகாலச் சிறுகதைகளில் தரிசிக்கலாம். கலை யுணர்வின் வெளிப்பாட்டை உள்ளுணர்வின் தடத்தில் சித்திரித்த சிறுகதை "வானம்பாடி". இதுபோல கலையின் சிறப்பினை குறிப்பாக இசையின் சிறப்பினை மௌனியின் "பிரபஞ்சகானம்" மற்றும் கல்கியின் "வீணை பவானி" முதலான சிறுகதைகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன. தேவதாசிக்குலத்தில் பிறந்த இசைமேதையான பவானி தன் கணவர் இரயில் விபத்தில் இறந்து விடத் தன் உயிரை மாய்த்துக் கொள்கிறாள் என்பதனைக் கருபொருளாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையே "வீணைபவானி" ஆகும்.

மணிக்கொடி இதழில் அதிகளவில் பெண்கள் எழுதினார்கள். மணிக்கொடிப் சிற்றிதழின் ஆறாவது இதழ் (ஜீன் 9 இதழ்) ஸ்திரீகள் இதழாக வெளிவந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஸ்ரீமதி சேதுஅம்மாள், கோதைநாயகி அம்மாள், வேங்கடலஷ்மி, ஸரோஜா ராமமூர்த்தி, கமலா விருத்தாசலம், குமுதினி, ஜயலட்சுமி ஸ்ரீனிவாசன், விசாலாஷி எனப் பலர் இக்கால கட்டத்தில் சிறுகதைகளை எழுதினர்.

இக்கால கட்டத் தமிழ் எழுத்தாளர்கள் பெரும்பாலானோர். கல்லூரிகளில் படித்தவர்கள் தேசிய உணர்ச்சி மிஞ்சியவர்கள் பழமையின் எதிரிகள் வாழ்வின் உண்மைகளை நேருக்கு நேர் நின்று தரிசித்து, அவற்றை விமர்சன அடிப்படையில் சர்வதேச இலக்கியத்தின் தரத்திற்குக் கலையழகுடன் தமிழில் சிறுகதை எழுதவேண்டுமெனத் துடித்தவர்கள். இவர்களுடைய சிறுகதைகளில் இயல்பாகவே தத்துவப் போக்கு, சமுதாயச் சிந்தனைகள், விதியின் ஆற்றல், சாவின் அச்சம், கலையின் நிலைபேறு, தீண்டாமை ஒழிப்பு, கிராமச் சீர்திருத்தம், விதவை விவாகம், ஒத்துழையாமை இயக்கம், மேலை இலக்கிய மரபையும் கீழை இலக்கிய மரபையும் கலந்து எழுதுதல், மனித மன உணர்வுகளை வெளிப்படுத்தல் முதலான பண்புகள் வெளிப்பட்டன.

இச்சிறுகதைகளில் வடிவம் பற்றிய உணர்வு இருந்தது. படித்த இளைஞர்கள் பலர் மேல்நாட்டு உத்திகளை உள்வாங்கி எழுதினர். அக்கதைகளில் பெரும்பாலானவை மனித உறவுகளையும் தமிழ் பண்பாட்டு கலாசாரப் பின்னணிகளையும் சித்திரித்தன தமிழில் சிறு கதைகளின் தோற்றமானது புதிய சிந்தனைகளை உள் வாங்குவதற்கும் கலை நேர்த்திமிக்க புதிய படைப்புக்களை உருவாக்கவும் துணை செய்தன எனலாம்..



உப்புக்காற்றில் உலரும் கண்ணீர்

சர்மிலா வினோதினி
மன்னார்

விடியலுக்காகப் பறவைகளும் பட்சிகளும் ஒலியெழுப்பி பூமியை துயிலெழுப்புகின்ற நேரத்தில்தான் நான் பிறந்ததாக அம்மா அடிக்கடி கூறுவார். இறகுகளில் ஒட்டியிருக்கும் கருமையை அள்ளி எறிந்துவிட்டு புதிய நாளுக்காகவும் புது வாழ்விற்காகவும் தம் இறகுகளை விரித்துப் பறக்கும் பட்சிகளைப்போல நானும் ஓடிக் கொண்டிருப்பதாக ஒப்பிட்டுக் கூறுவதில் ஏதோவோர் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. விடிந்தும் விடியாத இந்த அதிகாலைப் பொழுதில் பரந்தன் சந்தியை அண்மித்திருந்தது எங்களின் வாகனம். காலை ஒன்பது மணிக்கு ஆரம்பிக்க இருக்கின்ற நடமாடும் சேவைப் பிரிவினரின் சேவை முகாமில் இணைந்து கடமைகளை மேற்கொள்ள வேண்டும். இது காலம் தந்த கட்டளை. கடமையை செய் பலனை எதிர்பார்க்காதே என்பதாய் கடமை களை மட்டும் செய்துவிட்டு வருவதற்கு மனம் இடம்கொடுக்கவில்லை. கடமை சேவை என்ற படி இப்படி எத்தனை அதிகாலைகளை கடந்து வந்திருக்கிறேன்.

காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுகின்றபோது அம்மா தந்த பாற்தேனீரும் பொரிஅரிசிமா உருண்டையும் சமிபாடடைந்து விட்டது என்பதற்கு அறிகுறியாக வயிறு கார்காரென்று பசிக்கத்ததொடங்கியது. தலையை திருப்பி வாகனத்தின் பின்னிருக்கை யில் இருந்த நிலாவை பார்த்தேன். அவளுக்கும் பசிக்கிறது என்பது அவளது பார்வைமொழியில் புரிந்தது. உணவுக்கடையொன்றின் அருகில் வாகனத்தை நிறுத்தச்சொல்லி இறங்கிக் கொண்டோம். பல யுகங்களின் கம்பீரத்தினை யும் மகிழ்ச்சியையும் எழுச்சியையும் வீழ்ச்சியை யும் கண்ணீரையும் தாங்கிய மண் தன்மீது படிந்திருந்த காட்டுப்பனியின் ஈரத்தை இழந்து உலரத்தொடங்கிக்கொண்டிருந்தது. கண்ணில் தெரிந்த சில உணவுக்கடைகளின் பெயர்ப் பலகைகளில் கண்கள் விழுந்து மீண்டன. சுவையமுது உணவகம், இனியவன் தேனீரகம், பசுமை பாற்பொருட்கள் விற்பனையகம் இப்படி செந்தமிழ் உலாவிய பெயர்ப்பலகைகள் கண்ணில் தெரிந்தன. அவற்றில் சில முன்னொரு காலத்திலிருந்த தனித்துவத்தை இழந்து சில மாற்றங்களுடன் ஆங்கிலப்பெயர்ப்பலகை களுக்கு மாறியிருந்தன. "இந்த உலகில் மாற்றம் ஒன்றுதானே மாற்றமில்லாதது". மெல்லியதாய் இழையோடிய சிந்தனையோடு உணவகம் ஒன்றினுட்புகுந்து பயற்றம்துவையலும் தேனீரும் அருந்திவிட்டு மீண்டும் பயணப் பட்டோம். நேரம் எட்டுமணியை நெருங்கிக் கொண்டிருந்தது. பின் இருக்கையில் நிலா மடியில் வைத்திருந்த மடிக்கணனியை தூக்கி அருகிருக்கையில் வைத்துவிட்டு சிவப்பு நூலால் கட்டப்பட்டு அடுக்கியிருந்த கோப்புக் களையெடுத்து மடியில் வைத்து அவை

ஒவ்வொன்றினதும் நுனித்தலைப்புக்களை திறந்து திறந்து மூடிக்கொண்டிருந்தாள். சுமாரான வேகத்தில் சென்றுகொண்டிருந்த வாகனம் கிளிநொச்சி நகரை அண்மித்திருந்தது. பீனிக்ஸ் என எழுந்து நிற்கும் இந்த நகரைப் பார்க்கும்போதெல்லாம் இனம்புரியாத உணர்வொன்று மனத்தில் எழுந்து அடங்குவதை தவிர்க்கமுடியவில்லை.

நேரம் தவறாது குறித்த நேரத்தில் அனைத்துக் கடமைகளையும் முடிக்கவேண்டும் என்கின்ற பழக்கம் இயல்பாகவே கைவரப்பெற்ற நாங்கள் குறித்த நேரத்தில் பணிக்குரிய அலுவலகத்தை வந்தடைந்து விட்டோம். வழமைக்கு மாறான பரபரப்பினை அலுவலகத்தின் வாயிலிலேயே உணரமுடிந்தது. அரச இலட்சினை பொறிக்கப்பட்ட பல கருப்பு வெள்ளை வாகனங்கள் வாகனத்தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கப் பட்டிருந்தன. காலைப்பொழுதின் அவசரத்தினை தோள்களில் சுமந்திருந்த அலுவலர்கள் தங்களது வலக்கையின் சுட்டுவிரலை பெருவிரலினால் தேய்த்தபடி விரைந்து சென்றுகொண்டிருந்தார்கள். எட்டு முப்பது மணிக்கு முன்பாக வரவுப்பதிவு இயந்திரத்தில் கைவிரல் அடையாளத்தை பதித்தாக வேண்டும் என்கின்ற அவசரம் அவர்களுக்கு.

தேவையான கோப்புக்கள்சகிதம் நாங்களும் அலுவலகத்தினுட் சென்று வரவை உறுதிப்படுத்திக் கொண்டு மண்டபத்தினுட் பிரவேசித்தோம். திருவிழாக்காலத்தில் விசேட வழிபாடுகளுக்காகக் கூடியிருக்கின்ற பக்தர்களைப்போல அந்த மண்டபம் தாங்கிக்கொள்ளும் அளவிற்கு சனங்கள் நிறைந்திருந் தனர். இன்னும் ஒரு தொகுதி சனத்திரள் வந்துசேர்ந் தால் மண்டபம் நிறைந்துவிடும்போலிருந்தது. திரும்பி நிலாவைப்பார்த்தேன். அவள் கையில் வைத்திருந்த கோப்புகளை இறுக்கிப்பிடித்தபடி அமைதியாக வந்துகொண்டிருந்தாள்.

இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு எல்லாம் முடிக்கப்பட்டதாகப் பேசிக்கொள்ளப்பட்ட நாட்களில் எலும்பும்தோலுமாக வெளியேறி புளியங்குளம் சோதனைச்சாவடியை கடந்தவர்களில் இவளும் ஒருத்தி. சாவடியை கடக்கும் போது ஆண்கள் வேறு நிரையிலும் பெண்கள் வேறு நிரையிலுமாக பயணப்பட வேண்டியிருந்ததால் அவளது அப்பாவும் தம்பியும் ஒரு நிரையில் செல்ல இவளும் அம்மாவும் மற்றுமொரு நிரையிலுமாகச் சென்றிருக்கிறார்கள்.

"நானும் அம்மாவும் நிண்ட நிரையில சனம் குறைவக்கா, விரைவா வந்திட்டம் ஆனா அப்பாவும் தம்பியும் நிண்ட நிரையில நிறைய சனக்கூட்டம் நிண்டது. கனநேரமா பாத்துக்கொண்டு நிண்டனாங் கள் எனக்கு பசிவேற தலையசுத்தி மயக்கம்போட்டு விழுந்திற்றன், எழும்பிப்பாக்கேக்க அப்பா மட்டும் தான் நிண்டவர், அம்மா அழுதுகொண்டிருந்தவா, தம்பிய விசாரிச்சுபோட்டு அனுப்புறம் எண்டு சொன்னவங்களாம் எண்டு அப்பா சொன்னார். அண்டைக்கு பொழுது படும்வரைக்கும் காத்திருந்த னாங்கள் ஆனா இருட்டினபிறகு நிக்க விடமாட்டம் எண்டு பஸ்ஸில ஏத்தி முகாமுக்கு கொண்டு வந்திற்றாங்கள். அதுக்குப்பிறகு தம்பிய தேடாத இடம் இல்ல"...

ஒருநாள் அம்மா வீட்டில் தயார்செய்த இனிப்புப்பலகாரத்தினை அலுவலகத்திற்கு எடுத்துச் சென்று நிலாவிற்கும் கொடுத்தபோது

"அக்கா வேண்டம் அக்கா" என்று பதில் வரவே ஏன்? என்பது போல பார்த்தேன்

"இல்ல இதுகள் எல்லாம் தம்பிக்குதான் நல்லாப்பிடிக்கும் அம்மா அடுப்பில சுடச்சுட சூட்டோடயே அரைவாசிய சாப்பிட்டு முடிச்சிருவான். எனக்கும் வையடா எண்டா தனக்குத்தானெண்டு நிப்பான். அவன் காணாம போன பிறகு நாங்கள் பலகாரமே செய்றதில்ல". என்று தொடங்கி புளியங் குளத்து சம்பவத்தையும் சொல்லி முடித்தாள்.

"அக்கா இங்க இதப்பற்றி யாருக்கும் தெரிய வேண்டாம். பிறகு சும்மா கதைகேக்குறன் அனுதாபப் படுறன் எண்டு நோண்டிக்கொண்டு இருப்பினம். எனக்குந்த ஆறுதல் கதையள் ஒண்டும் வேண்டாம்".

அவளைப்புரிந்து கொண்டேன். அதற்குப் பிறகு மறந்தும் அந்தக்கதையை ஆரம்பித்ததில்லை. இப்பொழுதும் இந்தக்கோப்புக்களை இறுக்கிப் பிடித்த படி நடந்துவரும் அவளுடைய உணர்வுகளை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

சிந்தித்தபடி நடந்துசென்று எங்களுக்கான இருக்கைகளைத்தேடினேன். வெவ்வேறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்த அலுவலர்களுக்கு கொழும்பி லிருந்து வருகைதந்திருந்த மூத்த அதிகாரிகள் தலைமை தாங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சரியாக ஒன்பது மணியளவில் ஏற்கனவே அறிவிக்கப் பட்டிருந்த வரிசையில் ஒவ்வொருவராக அழைக்கப்பட்டு வாய் முறைப்பாடுகள் பதியப்பட்டன.

யுத்தம் தன் கண்களை மூடி ஓய்வின் சாலையில் பயணிப்பதாகவும் சுபீட்சத்தின் நிழலைப்பருகி மக்க ளெல்லாம் நிம்மதி கொள்வதாகவும் பல கதைகள் புழக்கத்தில் இருந்தாலும் பத்துமாதம் பத்திரமாய்ப் பாதுகாத்து வலிதாங்கிப் பெற்றெடுத்து முலையூட்டி வளர்த்தெடுத்து நிமிர்ந்து நிற்கும் காலத்தில் பெற்ற வளின் கண்களைப்பறித்து தூக்கி வளர்த்த தந்தையின் தோள்களைச் சிதைத்து கொடிய வல்லூறுகளின் கால்களாற் காவிச்செல்லப்பட்டு காணாமல் ஆக்கப் பட்ட தங்களின் பிள்ளைகளைத் தேடி அலையும் முடிந்தும் முடியாத யுத்தத்தின் எச்சங்களாக அலைந்து அழுகின்ற பெற்றவர்களும் பேரப்பிள்ளைகளை தொலைத்த தாத்தா பாட்டியும் கணவனைத் தேடித் தோற்ற மனைவியும் மனைவியைத் தேடித்தோற்ற கணவனும் உடன்பிறப்புக்களைத்தேடி அழும் கூடப் பிறந்தவர்களும் சொன்ன கதைகளால் மண்டபமெங்கும் துயரத்தின் தாழி நிரம்பி வழிந்துகொண்டிருந்தது.

அவர்களின் வாய் முறைப்பாடுகளை பதிவு செய்துகொண்டிருந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுகொள்ளும் அதிகாரிகள் முறையாகக்கிரகித்து பதிவுசெய்தார்களோ இல்லையோ இங்குள்ள ஒவ்வொரு தூண்களும் மண்டபச்சுவர்களும் அவற்றையெல்லாம் சுண்ணாம்புக்கரைசலினூடே நிச்சயம் சேமித்து வைத்திருந்து வலி தாழாத ஒருநாளில் நீர்வற்றிய சிறு குளத்தின் களிமண் வெடிப்பென வாய்பிளந்து பொருமத்தான் போகின்றன. என்னால் என் காதுகளை மூடவும் முடியாமல் முழுக்கதைகளின் பாரத்தை

சுமக்கவும் முடியாமல் விழித்தேன். இது என்ன மரண நிலை? தலையை நிமிர்த்தி என் மேசையின் முன்பிருந்த தாயை உற்றுப்பார்த்தேன். அவரோ தன்முறைப் பாட்டை சொல்லுவதும் கண்களை துடைத்துக்கொள்வதும் சற்று நேரம் அமைதியாக இருப்பதும் மீண்டும் கதைப்பதுமாக ஓரங்க நாடகம் போன்று விம்மிக்கொண்டிருந்தார். இறுதியில் சேலைத்தலைப்பால் தன் வாயைப்பொத்திக்கொண்டு என்ர மகளும் உங்களப்போலதான் பிள்ள நல்ல மாநிறம். எப்பிடியும் ஏதாவது ஒரு சேதி சொல்லுவியள்தானே பிள்ள? விம்மும் குரலில் கேட்டு முடித்தார். கவனமற்று நடந்துசெல்கையில் கால்களிற் பட்டு வெட்டிய கருக்குமட்டையின் எரிவென அவருடைய கேள்விகள் சுள்ளென மனதை எரிக்க எதையும் சொல்வதற்கு திராணியற்று விழித்தேன். வார்தைகளை வறுமை சூழ்ந்துநிற்க தொண்டை அடைத்து விக்கித்து நின்றேன். கவலைப்படாம போங்கம்மா... இவற்றை மட்டுமே உச்சரிக்கமுடிந்தது என்னால். அந்தத்தாயை அனுப்பிவிட்டு தலையை திருப்பினேன்.

திரும்பிய இடமெல்லாம் இதே காட்சிதான் கண்களை எரித்தது. எவ்வளவு வலியிருக்கும் இப்படி வாய்விட்டழ? விடையற்ற வினாக்கள் துப்பாக்கி ரவைகளென நெஞ்சை துளைத்தன. சூரியன் எழுந்து அகால பாதாளத்தில் விழுவதைப்போலவும் எழுந்த போது விழுந்த சூரியக்கதிர்களெல்லாம் கொடும் தீப்பிளம்புகளாக மாறி பூமியியின் ஒவ்வொரு பகுதியையும் தீமூட்டி எரிப்பதைப்போலவும் துயின்றிருந்த பறவையினங்களும் விலங்கினங்களும் கூச்சலிட்டுக்கதறி இறகடித்துப்பறந்து அலைவதைப் போலவும் போக்கிடமற்ற மனிதர்கள் இங்கும் அங்குமாக கூக்குரலிட்டு அழுது மாய்வதைப்போல வும் ஊழியின் பிரம்மையொன்று எழுந்து அடங்கியது. மூச்சு முட்டுவதைப்போல இருந்தது. எழுந்து மதிய நேர இடைவெளிக்காக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த மண்டபத்திற்குச் சென்றேன். நீரருந்த வேண்டும்போல இருந்தது. ஒரு தண்ணீர்ப்போத்தலை எடுத்து நீர் தீர்ந்துபோகும்வரை குடித்து முடித்தேன். மதிய உணவுக்காக பார்சல் தந்திருந்தார்கள். சோறு தொண்டைக்குழிவழியே இறங்க மறுத்தது. சாப்பாடு தண்ணீரற்று காத்திருக்கும் சனங்களின் ஏக்கம் தோய்ந்த முகம்தான் மனம்முழுவதும் வியாபித் திருந்தது. நிலாவைப்பார்த்தேன் அவள் சோற்றை எண்ணிக்கொண்டிருந்தாள். அவளுக்கு அடுத்த சாப்பாட்டு மேசையிலே தலைநகரில் இருந்து வந்திருந்த அலுவலர்களில் ஒருவர் மதிய உணவின் பின்னர் வழங்கப்பட்ட குளிர்களி தனக்கு வழங்கப்பட வில்லையென குறைப்பட்டுக்கொண்டிருந்தார்.

மதிய உணவின் பின்னரான அடுத்தகட்ட பதிவுகள் தொடங்கியிருந்தன. விரக்தியும் வேதனையும் ஏமாற்றமும் சோர்வுமாக பல விம்பங்களை பிரதி பலித்தபடி வாக்குமூலங்களை தந்துகொண்டிருந்த வயோதிபர் ஒருவரின் பதிவை முடித்தனுப்பிவிட்டு அடுத்தவருக்கான பதிவிற்குரிய கோப்பை எடுப்பதற் காக திரும்பினேன்.

எப்பிடியம்மா இருக்கிறாய்? மிகவும் பழக்கப் பட்ட குரலொன்று காதில் விழவும் நிமிந்து பார்த்தேன். எதிர்பார்த்திராத கேள்வியும் கேள்விக்குரியவரும் இருக்கிறன்.

என்று நிதானித்து பதில் சொல்லிவிட்டு

இருங்க என்று முன்னிருந்த நாற்காலியைக் காட்டினேன். அமர்ந்து கொண்டார். கொஞ்சம் நிலவு கொஞ்சம் வானம் கொஞ்சம் நட்சத்திரங்கள் இவற்றின் கூட்டுக்களையெல்லாம் சேர்த்து வைத்திருந்த அந்த முகம் இப்போது களையிழந்து காய்ந்து சோர்ந் திருந்தது. நம்பிக்கையீனத்தின் கோடுகள் அவரின் முகத்தில் நிறைந்திருந்தன.

இந்த முகம்தானே மலரவனின் சாயலை அச்சுப்பிசகாமல் கொண்ட முகம்.

இந்தக்கண்கள் இந்த நீள் மூக்கு ...

நீர் உம்மட அம்மா மாதிரித்தான். அதே மாதிரி மூக்கும் அதேமாதிரிக் கண்ணும். உம்மட அம்மாட போட்டோ கொப்பிதான் நீர்.

ஓ இருந்தா இப்ப என்ன? என்ர மூக்கு கூரா இப்பிடி நேர்த்தியா இருக்கெண்டு உமக்குப் பொறாம. உம்மட மூக்கு போல அதுகும் சைனா மூக்கு போல இல்லாம அழகா இருக்கெண்டு பொறாம

ஆ சைனா மூக்கோ?

ஓம்! சைனா மூக்கு சின்னனா சப்பயா ...

சரி நிப்பாட்டும். இருக்கட்டும். அப்பிடியே இருக்கட்டும். சைனா மூக்குக்காரிய பிடிச்சிருக்கெண்டு பிறகேன் நீர் எனக்குப் பின்னால வந்தநீர்? நான் கோவிச் சிற்றன் இந்த வருசத்தின்ர செமிஸ்ரர் எக்சாம் முடியுற வரைக்கும் நான் கோபம். மலரவன் நீர் போகலாம்.

றேய் சாம்பவி! பிளீஸ் பிளீஸ். நான் சும்மா வம்புக்குதான் சைனா மூக்கெண்டு பகிடிவிட்டனான். நீர் கோபிச்சிற்றீர்

அவனது சமாதான புறா அவளது காதுகளை வந்தடையும் முன்பே மிதிவண்டியை எடுத்துக்கொண்டு கடகடவென அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன். "இருக்கட்டும் அவருக்கு நக்கல் கூடிப்போச்சு" என்று நினைத்தாலும் வாடிநிற்கும் அவனை நினைத்தால் பாவமாகத்தான் இருந்தது. எனினும்

"சும்மா வம்புக்குதானே நானும் கோவிச்சன் உண்மையாவா கோவிச்சன் இல்லையே. நாளைக்கு கதைப்பம்" என மனதுக்குள் நினைத்தபடி நகர்ந்த அந்த இனிப்பான நாட்களின் நினைவுகளில் என்னையறியாமல் முகத்தில் புன்னகை அரும்பியது.

எதிர்பாராமல் திடீரென நிகழ்ந்த பொன்மணி யம்மாவின் வரவும் அவரின் முகமும் மலரவனையும், அவனோடான என்னுடைய பல்கலைக்கழகக் காலத் தினையும், ஒவ்வொரு சம்பவங்களையும் மீண்டும் கிளறி புது இரத்தம் பாய்ச்சியதில் நினைவுகள் பீறிட்டுப்பாயத் தொடங்கின.

மலரவன். பெயருக்கேற்றாற்போல் பொன் மணியம்மாவை பிரதி செய்த நேர்த்தியான அழகான தோற்றத்திற்குச் சொந்தக்காரன். நிதானம் தவறாத பகுத்தறிவாளன். அவனும் நானும் ஒரே ஊர்க்காரர்கள் என்ற அறிமுகத்தை தவிர கல்லூரிக்காலத்தில் அதிகம் பேசிக்கொள்ளாதவர்கள். நல்ல மதிப்பெண்கள் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியவன் என்றாலும் எந்தவித பகட்டுமற்று இயல்லாய் பழகும் இனிய குணம்

கைவரப்பெற்றவன். இவ்வாறான நல் இயல்புகள் நிறைந்துள்ள ஒருவன்மீது யாருக்குத்தான் நல் அபிப்பிராயம் எழாது? நானும் விதிவிலக்கல்லவே? எனக்கும் அவன்மீது நல் எண்ணம் இயல்பாகவே வளர்ந்துவந்தது. அப்போதிருந்த சூழலில் யாழ்ப் பாணத்திற்கும் ஏனைய பிரதேசங்களிற்குமான தரை வழிப்பயணங்கள் முற்றுமுழுதாகத் தடைப்பட்டு திருகோணமலை காங்கேசன்துறை ஊடான கப்பற் பயணங்களும் பலாலி கொழும்பு ஊடான வான்வழிப் பயணங்களுமே சாத்தியமாக இருந்தன. அவையும் இலகுவான பணங்களன்று. பல அபாயங்களையும் நிச்சயமற்ற தன்மையினையும் கொண்ட அசாத்தியப் பயணங்களாகவே இருந்தன. வருடத்தில் ஒருமுறை அல்லது இருமுறைதான் நாங்கள் எங்களது வீடுகளுக்குச் செல்வதுண்டு. கப்பலிற்கான அனுமதிக்காகக் காத்திருந்து இலகுகாத்த கிளிகளாக ஏமாந்த கதைகளு முண்டு. அதையும் மீறி அனுமதி கிடைத்த சில சந்தர்ப்பங்களில் மாணவ மாணவிகள் எல்லோரும் ஒன்றாகச்சேர்ந்து ஒருவருக்கு ஒருவர் உதவியாக பயணம் செய்வோம். ஒரே ஊர்க்காரர்கள் என்பதாலோ என்னவோ மரலவனும் கரிசனையோடு உதவிகள் செய்வதற்கு தயங்கியதில்லை.

எங்களது பல்கலைக்கழகக் காலத்தில் நாங்கள் சிட்டாகப்பறந்து சிறகடித்துப்பறக்காவிட்டாலும் பல்கலைக்கழக மாணவர்களுக்குரிய இயல்புகளோடு இருக்கத்தவறியதில்லை. எங்களது பீடத்திற்குரிய கலைவாரம் ஆரம்பித்தால் கால்களில் சக்கரங்களைக் கட்டிக்கொண்டு போட்டிகளில் வெற்றிபெற்றே ஆகவேண்டும் என்கின்ற நினைப்பிலேயே சுற்றிச் சுழலுவோம். எங்களுக்கு நாடகத்தின் மீது அதீத பிரியம். அன்றும் போட்டிகளுக்காக ஒரு நாடகப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தோம். நாடகத்தின் ஒரு காட்சியில் நான் வீதியில் நடந்து போய் கொண்டி ருக்கும் போது திடீரென தோன்றும் கிபிர் விமானத்தின் குண்டுவீச்சின் சன்னங்களால் காயப்பட்டு நிலத்தில் வீழ்ந்து சற்றுநேரத்தில் இறந்துபோகின்ற ஒரு பெண்ணாகவும் அதை கண்டு கதறியபடி ஓடிவருகின்ற சாமானியனாக மலரவனும் நடிக்கவேண்டும். ஒத்திகை பார்க்கும்போதெல்லாம் அந்தக்காட்சி மிகத்தத்ரூப மாக இருப்பதாக எல்லோரும் பாராட்டுவார்கள். இறுதிநாள் போட்டியின்போதும் அப்படியே நடித்து முடித்து மேடையின் பின்புறத்திற்கு வந்தநான் எதேற்சையாக மலரவனின் கண்களை கவனித்தேன். அவை உண்மையிலேயே கலங்கியிருந்தன. என்ன? என்பதபோல பார்த்தேன். அருகில் வந்தவன் எதையும் யோசிக்காமல்

"சாம்பவி இப்பிடி ஒரு சம்பவம் நடந்தா உண்மையிலுமே நான் அழுது பைத்தியகாரன் ஆகீருவன்"

என்று சொல்லிவிட்டு சடாரென அவ்விடத்தைவிட்டு நகர்ந்துவிட்டான். எனக்கு நிலமையைப் புரிந்துகொள்ள சில கணங்கள் பிடித்தன. எதிர்பார்க்காத அவனின் பதிலால் சற்று நிலை குலைந்தாலும் சமாளித்துக்கொண்டு நகர்ந்து விட்டேன். அடுத்துவந்த பல நாட்களில் மலரவனுட னான உரையாடலை மெல்லத் தவிர்த்து வந்தேன்.

பல்கலைக்கழகத்தின் மூன்றாம் ஆண்டு இரண்டாம் தவணைப் பரீட்சைகள் நிறைவு பெற்று நான்காம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் கிடைத்த ஒருமாத விடுமுறையில் எப்படியாவது வீடுசென்று வரவேண்டும் என்று தீர்மானித்து கப்பலிற்குப்பதிவு செய்து காத்திருந்து சில நாட்களின் பின்னர் அனுமதி கிடைக்கவே பயணப்பட ஆயத்தமாகினோம். காலை ஏழு மணிக்கெல்லாம் குறித்த செயலகத்திற்குச்சென்று பதிவுகள்இ சோதனைகள் ஒவ்வொன்றினையும் முடித்து பேருந்துகளில் ஏற்றப்பட்டு தொடர் பேருந்து அணி களாகக் காங்கேசன்துறை துறைமுகத்தினை வந்தடைந் தோம். பாவிகள் போன இடமெல்லாம் பள்ளமும் பிட்டியும் என்பதைப்போல எங்களை பீடித்திருந்த சோதனை என்கின்ற அனாயச செயற்பாடுகள் எல்லா வற்றையும் கடந்து கப்பலில் ஏற்றப்பட்டபோது நேரம் கிட்டத்தட்ட இரண்டு மூன்று மணியாகி அத்தனை பேரையும் ஏற்றியபின்பு கப்பல் புறப்பட பொழுது சாய்ந்திருந்தது.

பெயர்ப்பட்டியலின்படி எனக்கான இருக்கை கப்பலின் கீழ் தளத்தில் கிடைத்தது. கொண்டுவந்திருந்த தோள் பையையும் இருக்கையில் வைத்துவிட்டு அப்பாடா என்று அமர்ந்து கப்பலின் சிறிய கண்ணாடிச் சாளரத்தின் வழியே பார்வையை செலுத்தினேன். நீலமும் பாசிப்பச்சையும் கலந்த நீர்த்திவலைகளின் அசைவினை கண்கள் சற்றுநேரம் அளந்து கொண்டிருந்தன. கடலலைகளின் விசையினால் ஏற்படுகின்ற வேகம் பல தொன் எடையுள்ள கப்பலை ஆட்டிய ஆட்டம் உள்ளே இருப்பவர்களை ஒருமுறையேனும் வாந்தி எடுக்காமல் விட்டுவைக்கத்தவறவில்லை. வயிற்றினுள் இருக்கின்ற குடலை வெளியில் கொண்டுவருவதைப்போன்ற வாந்தி அது. அதிகாலையில் ஆரம்பித்த பயணம் உடலையும் மனதையும் கசக்கிப்பிழிய இருக்கையில் சுருண்டு அப்படியே தூங்கியும் விட்டேன். இடையிடையே விழிப்பு எழுந்தாலும் அசதி அசையவிடாமற்தடுக்க எவ்வளவு நேரம் அப்படியே இருந்தேனோ தெரியாது.

தன்னுடைய உள்ளத்தின் ஓட்டத்தினை மலரவன் வெளிப்படுத்திய நாளில் இருந்து அவனுடன் முன்னர் இருந்த சகஜமான உரையாடல் ஓடிப்போய் கொஞ்சம் ஒதுங்கித்தான் போய்க்கொண்டிருந்தேன். ஆனால் இன்று அவனை பார்க்கவேண்டும் போல இருந்தது. இந்த மனம் இருக்கிறதே அது ஒரு மாயக் குரங்கு. மலரவனுடன் பாராமுகமாக சற்று ஒதுங்கி ஒதுங்கி இருந்தாலும் இந்த மாயக்குரங்கு அவனை அவ்வப்போது இழுத்துவந்துவிடுகிறது.

சரி விடியட்டும் பாப்பம்

என்றபடி காத்திருந்தேன் நேரம் அதிகாலை ஐந்து மணியை எட்டும் வரைதான் பொறுமை காக்க முடிந்தது. கீழ் தளம் என்பதனால் குளிரும் அதிகமாக இருந்தது. அதைவிட நேற்று மாலையிலிருந்து ஒரே யிடத்தில் இருப்பதும் மிகுந்த சிரமமாக இருந்தது. எழுந்து நீர் வினியோகிக்கப்படும் இடத்திற்கு சென்று முகம் கழுவிக்கொண்டேன். சோர்ந்திருந்த உடலிற்கு முகத்தில் விழுந்த தெள்ளிய நீர் ஏதோ ஒருவகையான ஆறுதலையும் பரவசத்தையும் கொடுக்க அந்தப் புத்துணர்வோடு நேற்று கப்பற் பயணத்திற்கென்றே வாங்கிவந்திருந்த உப்புச்சுவைகலந்த பிஸ்கட்

பைஒன்றினை எடுத்துக்கொண்டு கப்பலின் மேற்தளத்தை நோக்கி நடக்கத்தொடங்கினேன். விடுமுறை நாட்கள் என்பதனால் பல்கலைக்கழக மாணவர்களே நிறைந்திருந்தனர். அறிந்த தெரிந்த முகங்கள். எதிர்ப்பட்டவர்களுக்கு புன்னகையை உதிர்த்தபடி மேற்தளத்தின் பார்வைத்தளத்தில் வந்து நின்றேன்.

இந்தப்பூமியில் நிலமே இல்லையோ என எண்ணுகின்ற வகையில் இவ்வுலகின் பல அதிசயக் கதைகளையெல்லாம் தன்னுட் புதைத்தபடி கண்ணுக்கெட்டிய தூரம்வரை பரந்து விரிந்திருந்த கருநீலக்கடலில் மெல்ல மெல்ல எழுந்து அதே வேகத்தில் விழுந்து பின் மீண்டும் எழுந்து விடாமல் விழுந்துகொண்டிருக்கின்ற அலைகளின் மீது நுரை யாகத்திரண்டு எழுகின்ற நீரும் அந்த அலைகளின் மேல் பொன்மஞ்சட் கதிர்களைப் பரப்பியபடி எழுந்து வருகின்ற சூரியனும் கண்களில் நிறைந்து மனமெங்கும் வியாபிக்கின்ற ரம்மியமான காட்சியாகி எல்லைகடந்த ஆனந்தத்தைப் பசரிசளித்துக்கொண்டிருக்க கையோடு எடுத்து வந்திருந்த பிஸ்கட் பையை உடைத்து அதிலிருந்த உப்புச்சுவை கலந்த பிஸ்கட்டுக்களை வாயில் போட்டுக்கொண்டு இன்னும் சிலவற்றை கப்பல் கிழித்துக்கொண்டு போகின்ற நீரிற்கு அருகில் எழுந்தெழுந்து அடங்குகின்ற அலைகளில் தாங்களும் எழுந்தெழுந்து துள்ளிக்குதிக்கின்ற மீன்களுக்கும் வீசியெறிந்தேன். உணவினால் ஈர்க்கப்பட்ட அவை சற்றுநேரத்தில் கொஞ்சம் அதிகமாகி எழுந்தெழுந்து விழுந்தகாட்சி அற்புதமனநிலையினை உருவாக்க பயண அலுப்பெல்லாம் மறந்து புன்னகைத்தபடி மீண்டும் தூரத்தில் கடலைத்தழுவும் வானைப்பார்த்த படி நின்றேன். அருகில் மலரவனின் குரல் சாம்பவி என இதமாகக்காதுகளில் விழவும் திரும்பிப்பார்தேன்.


புன்னகைத்தபடி வந்தவனிடம் வானமும் பூமியும் சேர்ந்த இந்த சமுத்திரக்காட்சியை பற்றிச்சொல்லி பூரிப்படையவேண்டும்போல குழந்தை மனம் துள்ளியது.

என்ன ஒரு அழகு இல்லையா மலரவன்?

என்ன சொல்ற எண்டே தெரியேல்ல அப்பிடியிருக்கு. இயற்கை இயற்கைதான் இல்லையா வாவ். மிட்டாயைக்கண்டு குதுகலிக்கும் குழந்தையைப் போல அவனிடம் ஒவ்வொன்றாய்ச் சொல்லிக் கொண்டிருந்தேன். எமக்கு மிக இணக்கமானவர் களிடம்தானே இப்படியொரு குழந்தை மனம் கொண்டு எல்லாற்றையும் பகிர்ந்து மகிழ்ந்திருக்க முடியும். இதையும் பின்னாட்களில் உணர்ந்திருந்தேன்.

அள்ளியிறைத்த வார்த்தைகளை முடித்து திரும்பிப்பார்த்தேன். கையில் வைத்திருந்த பழப் பானத்தினை நீட்டியபடி சாந்தமாகப்புன்னகைத்தவன் அருகில் வந்து கப்பலின் விளிம்புச்சுவரில் பிடித்திருந்த என்னுடைய இடது கையின் மேல் தன்னுடைய வலது கையினை வைத்து

சாம்பவி எனக்கும் இந்தச்சூரியன் பிடிக்கும், இந்த வானம்பிடிக்குமஇ அதுக்குள்ள ஒளிஞ்சிருக்கிற



நிலவு பிடிக்கும், அது வச்சிருக்கிற நட்சத்திரங்கள பிடிக்கும், இன்னும் என்னென்ன இருக்கெண்டு முழுசா அறியவேமுடியாத இந்தக்கடல் பிடிக்கும் என்றபடி என்னைப்பார்த்தான். எதிர்பார்க்காத அந்த சந்தர்ப்பத்தினால் சில நிமிடங்கள் சிலையென நின்றாலும் நிதர்சனத்திற்கு வந்து அவனது முகத்தினை ஏறிட்டுப்பார்த்தேன். கதை சொல்லும் அவனுடைய இரண்டு கண்கள். அந்தக்கண்களின் ஒளி என்னுட் சென்று என்னையே தேடிஎடுப்பது போல ஒரு பிரமை உண்டாகியது.

வீசி வந்த காலைக்கடற்காற்றும் மேனியை சிலிர்க்கச்செய்ய "பிரபஞ்சக்காதலன்தான் போலும்" என பகர்ந்தபடி புன்னகைத்து மறைந்தேன்.

கப்பற்பயணம் வீடு விடுமுறை எல்லாம் கழிந்து மீண்டும் பல்கலையில் பயின்ற இறுதியாண்டு அன்று தான் பிய்த்து எடுத்த தேன்வதையில் இருந்து சொட்டுச் சொட்டாக சிந்துகின்ற தேனென இனித்து நகர்ந்து கொண்டிருந்தது. இவற்றோடு பல்கலைக்கழகத்தின் வெளியே பல அடாவடித்தனங்களும் அட்டூழியங்களும் நிகழ்ந்துகொண்டிருந்தாலும் கல்விக்காலமும் ஓடிக் கொண்டிருந்தது. அன்றும் அப்படித்தான் விரிவுரைகள் முடிந்து வெளியேறிக்கொண்டிருந்தேன். வளாகம் வழமைக்கு மாறாக பரபரப்பாக இருப்பதை உணர முடிந்தது. ஏதோ ஒரு அசம்பாவிதம் நடை பெற்றிருக்கிறது என்பதை உள்ளுணர்வு சுட்டிக்காட்ட என்னுடைய துவிச்சக்கர வண்டியை எடுப்பதற்கு செல்லவும் எனது விடுதி அறைத்தோழி மூச்சிரைக்க என்னை நோக்கி ஓடிவந்து

சாம்பவி மலரவன் மலரவனை... வார்த்தை களை முடிக்கமுடியாமற் தடுமாற

விபரீத சம்பவங்களால் நிறைந்திருந்த காலம் என்பதால் ஏதோ விபரீதம் என்பதை சிறுபொறியென மனம் சடாரென உள்வாங்க

என்ன? மலரவனுக்கு என்ன? எங்க.. என்று முடிக்கும்முன்பே அசுர பலம் கொண்டவளென மாறிய தோழி

உந்த மூண்டாவது சந்தியில ஏதோ கிளைமோர் இருக்குதெண்டு சந்தேகத்தில சுத்தி வளைச்சவங்களாம். அதுக்குள்ள கொஸ்ரல் பெடியங்கள் எல்லாரையும் கூப்பிட்டு விசாரிச்சதாம், தலையாட்டியும் வந்ததாம். அதான் மலரவனையும் பவள்ள தூக்கி ஏத்திக்கொண்டு போட்டாங்களாம். இன்னும் ரெண்டு மூண்டு பேர் ஆரெண்டு சரியா தெரியேல்ல.

அவளது குரல் அகால பாதாளத்திலிருந்து வெளிப்படுவதைப்போல காதுகளில் விழுந்து எரிய உடல் வியர்த்து வெம்மை எழுந்து சிலிர்த்துக்குளிர்ந்து அடங்க துவிச்சக்கர வண்டியை பிடித்தபடி அசையாமல் நின்றேன். பூமியின் மீதுகொண்ட தீராப் பிரியத்தினால் வேர்முளைத்து வண்டலைத் துளைத்து வன்பாறைகளில் பின்னப்பட்டதுபோல கால்கள் அசைய மறுத்தன. மூச்சு முட்டுவதைப்போல சொல்ல முடியாத பிரம்மைகளெல்லாம் எழுந்து அடங்கின. கைகள் நடுங்க ஓ என்று கதறி அழவேண்டும் போல இருந்தது. அறைத்தோழிதான் அழைத்துச்சென்று துணையிருந்தாள். இரண்டு கிழமைகள் கழித்து மலரவனின் தாய் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அப்போதுதான் அவருக்கு போக்குவரத்து அனுமதி கிடைத்திருந்தது. திறக்காத கதவுகளையெல்லாம் தட்டிக்களைத்த அவனின் தாய் அழுத கண்ணீரோடு மீண்டும் ஊருக்குத்திரும்பினார்.

சைனா மூக்கும் ஆளும். என்ர மூக்கு நேரா நேர்த்தியா இருக்கு எண்டு உமக்குப்பொறாம... ஏகாந்தப் பொழுதுகளையெல்லாம் விழுங்கியபடி எழுந்து வரும் மலரவனின் சாந்தக்குரல் தூரத்தில் கேட்கத் தொடங்கியது. நம்பிக்கையின் சுவர்கள் நாளுக்குநாள் மெருகிழந்து நலிந்து மெல்லச் சரிந்துகொண்டே சென்றன.

என்னம்மா?

பொன்மணியம்மாவின் குரல் கப்பல் பயணத்திலும் பல்கலைக்கழத்திலும் ஓடிக்கொண்டிருந்த மனதை மீட்டு மீண்டும் மண்டபத்திற்குக் கொண்டுவர அவரை உற்றுப்பார்த்தேன்.

பிள்ள நீயும் என்ர பிள்ள மாதிரித்தான். இத்தின வருசமா தேடித்தேடி கிடைக்காதவன் இனியும் வருவான் எண்டு எனக்கு சொல்லத்தெரியேல்ல. ஏதோ என்ர கண் மூடுறதுக்கு முன்னால அவன்ர முகத்த ஒருக்கா பாத்திற்றன் எண்டா என்ர உசிர் நிம்மதியா என்ர உடம்ப விட்டுப்போகும்.

தழுதழுத்து வெளிவந்தன அவருடைய வார்த்தைகள்.

ஆனா நான் இப்ப இங்க வந்தது இதெல்லாம் சொல்லி முறப்பாடு குடுக்கிறதுக்காக இல்ல. இதெல்லாத்தயும் ஒரு கண்துடைப்புக்குத்தானே உவங்கள் செய்யிறது. கொல்லைல கோழிய பிடிச்ச கள்ளரிட்டயே போய் தேடித்தா எண்டு கேக்கிற கத மாதிரித்தான் இதெல்லாம்.

நீண்ட பெருமூச்சை உள்ளிளுத்து வெளிவிட்டவர் பிள்ள நீ அவனுக்காக காத்திருக்காத.

அழுத்தமாக கூறியவரின் இறுதி வார்த்தைகள் மெதுவாக நிதானமாக என் காதுகளில் விழவும் திடுக்கிட்டுப்பார்த்தேன்.

ஓம் பிள்ள எனக்கு எல்லாம் தெரியும். ஒருக்கா லீவில வரேக்க மலரவன் சொன்னவன். எனக்குத்தெரியும் பிள்ள. நான் வாறன்.

என்னுடைய பதிலுக்கு காத்திராமல் விறுவிறுவென எழுந்து நடக்கத்தொடங்கினார். சொல்வதற்கு ஏதுமற்று அவர் போவதையே பார்த்துக்கொண்டிருந்தேன். சேலைத்தலைப்பினால் கண்களை துடைத்தபடி செல்வது புரிந்தது.

மலையை விழுங்கிய மனப்பாரம் உடலை அழுத்த அன்றைய வேலைகளை முடிந்துவிட்டு வீடு திரும்புவதற்காக வாகனத்தில் ஏறியமர்ந்தேன். ஓடிக்கொண்டிருக்கின்ற வாகனத்தின் எந்திர வேகத்தை விடவும் மிகை வேகத்தில் எண்ணங்கள் மனத்தின் சுவர்களை மீண்டும் அழுத்தி ஆழம்கொள்ளத் தொடங்கின.


மங்கை என்னும் வசந்த பருவத்தின் மீது குளிர்த்தென்றலை வீசி கொன்றைப்பூக்களை அள்ளிச்சொரிந்து என் நாட்களை பனிக்காலத்துப் புற்களின் சிறு பூக்களாக மலரச்செய்தவனல்லவா நீ! நிர்மலமான என் வானில் ஒளி வீசும் நட்சத்திரங் களைத்துாவி வெண்பஞ்சு மேகங்களை பதித்தொரு பௌர்ணமிக்காலத்தையும் பரிசளித்தவனல்லவா நீ !!

நீயற்ற இந்நாட்களில் வானையே பார்த்திருக்கும் என் விழிகளில் எரிந்து விழுகின்ற நட்சத்திரங்களைச் சேகரித்துப் பத்திரப்படுத்திவைப்பதன்றி வேறென்ன செய்வேன் யான்? விழுதலும் எழுதலும் இருத்தலும் பிரிதலும்தான் வாழ்க்கை என்றால் இந்தப்பிரிவுகள் இயல்பாய் கிடைத்தவையல்ல. இயல்பாய் எழுகின்ற பிரிவுகளையே ஏற்க மறுக்கின்ற மனது அகாலத்தில் வலிந்து எழுப்பப்பட்ட இப்பிரிவுகளைக்கடந்து எப்படி இயல்புநிலை கொள்ளும்? சரி இதுதான் காலம். இதுவரைதான் அவனோடான அவளோடான எங்களின் பயணம் என்று எண்ணி கசியும் கண்ணீரோடு காலத்தை கரைப்பதற்கும் சேதியறியா இந்நிலையை எப்படிக் கடந்து வரமுடியும்? மனம் அடுக்கடுக்காகப் பல கேள்விகளைக்கேட்டு சிறுபிள்ளையென பிழிந்து அழத் தொடங்கியது.

விடையற்ற இவ்வினாக்களின் சாட்சியாக கடைவிழி ஓரத்தில் கசிந்து விழுந்த கண்ணீர் துளியை மோதி வந்த உப்புக்காற்று கரைத்துக்கொண்டு போக மெல்லத் திரும்பி நிலாவைப் பார்த்தேன். அவள் காலையில் வைத்திருந்த அதே கோப்புக்களை மடியில் வைத்தபடி சலனமற்று வெளியைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

சொற்களற்று வெளித்திருந்த பயணத்தில் நன்கு திறந்திருந்த வாகனக் கண்ணாடியின் ஊடாக விரைந்து வந்த உப்புக்காற்று முகத்தில் மோதிச்செல்ல வாகனம் ஆனையிறவின் வற்றுக்கடலையும் உப்பு வயல்களையும் தாண்டி முடிவிலியென விரைந்து கொண்டிருந்தது.

குறும்பா



நாளுக்கொரு கொள்கை கொண்டு
ஆற்றிடுவார் உரைமார்க் கண்டு
தாளுக்கு வேலைவந்து
தஞ்சம் என்றால் அவர்
தோளுக்கு மாறும் இன்னோர் துண்டு.!

தம்பியின் தைரியத்தை மெச்சி
தடவியும் விட்டாராம்தலை யுச்சி
கொம்புத்தேன் குடிப்பதற்கு
குலம்மறந்த மந்தியென
எம்பிவிட்டார்தம்பி வேறோர் கட்சி..!

வளம் சேர்க்கக் கூட்டிய பாராளும்
மன்றுக்குள்வன மந்திகள் ஏராளம்
குழப்பங்கள் கூச்சல்
கொலைக் கத்தியோடு
மிளகாய்ப் பொடியுண்டு தாராளம்..!

வடிவையவன் நில்லம்மா என்றான்
வழியொன்றைக் கேட்டு நின்றான்
ரெடியடா மச்சானென்று
வடிவின்பவுண் தாலிக்
கொடியை; அவனறுத்துச் சென்றான்.!

திசையெட்டும் வெடிக்கும் வேட்டு
திகைக்கின்றார் பெரியோர் கேட்டு
அசைந்தாடும் தேரில்
அம்மனவள் ஏறிவர
இசைக்கின்றார் சினிமாப் பாட்டு.!

மேடையிலே குதித்தாராஎம்பி யெம்பி
மேதினத்தாராக்கி விட்டாராம் எம்பி
வாடையோடு வந்தமழை
கூரையை கொண்டுபோக
தேடியும் கிடைக்கலையாம் தம்பி..!

மதுக்குடித்தால் உனக்குவரும் இறப்பு
மடியில்வந்து விழும்சொர்க்கத் திறப்பு
மதுவோடு புகைவகை
இரண்டும் விற்றால்
கதியில்வரும் உன்வாழ்வில் சிறப்பு.!

பிழைப்பாய் போச்சுதிங்கே கூலி
பின்னாலும் பண்ணுகிறார் கேலி
உழைக்கும் ஏழைகள்
உழைப்பை யுண்டிங்கே
கொழுக்குதுபார் பலபெருச்சாளி..!

பொன்னம் மாவின்மகளாம் செல்வி
பொத்துவிலில் கற்கிறாளாம் கல்வி
இன்னுமொரு சேதிகேளும்
இணையத்தில் உலவுதாம்
தன்னையவள் பார்த்தெடுத்த செல்பி.!

வந்ததாம் "ப்ளீஸ்கம் ஷாற் ரூ"
வரச்சொன்னாராம் "ப்ளீஸ்மீற் ரூ"
சந்துபொந்திலெல்லாம்
சன்னதம் ஆடிவிட்டு
வந்துநிற் கின்றாராம் இப்போ "மீ ரூ"

எஸ். சிவசேகரன்

கொண்டாடு!
களியாடு!
ஒரு பொல்லாப்பும் இல்லை!!!

நிகழ்ந்தேறி வருகின்ற
அடாத்தும் அடாவடியும்
அரசியல் வரன்முறைகள்
எனப் பதியப்படுகின்றன

மசாலாப் படங்களின் பாணியில்
பார்வைக்கு விருந்தான படையலாக
பொங்கிப் படைத்து புளகாங்கித்து
ஊடக வாணிபத்தின் கொண்டாட்டம்

உள்ளூரும் உலகமும் ஒரேகோட்டில்
அதே கேட்டில்
எங்கே தொட்டு எதிலிருந்து விருவிக்க?!

கேட்டு வளர்ந்த கதைகள் எல்லாம்
பொன்னானவை பொருளானவைதாம்
அல்ல
பொல்லாப்பும் கொண்டவைதாம்

பொல்லாப்பே பொருளான
பெருந்தொடர்க் கதையாடல்
எதுவாகத்தான் போகிறது ?!


கிசுகிசுப்பின்றிக் கேட்டபார் எவருமில்லை.
இவைதனை மேய்ப்பார்!
எவர்தான்?! ஏன் தான்?!
கேள்விகள் எவையுமில்லை

மௌனத்தில் விளையாடி அச்சத்தில் மறையும்
கோதாரி வாழ்க்கை விரைகிறது.
ஒரு பொல்லாப்பும் இல்லை
கொண்டாடு! களியாடு!

கேட்டில் குதூகலித்தலன்றி
ஏதுதான் வாழ்க்கை?!

நாயும் நரியும்! ஒரு சிறு கவிதை அல்லது சனநாயகவாதியும் பயங்கரவாதியும்

நாயையும் நரியையும்
நன்றியுள்ள மிருகமாக
நம்ப முடியாத் தந்திரியாகப்
படைத்தனர் மனிதர்



எதிரெதிர் நிலைகள் தாமெனினும்
மனிதர்க்கு வாலாயமாயின
நாயும் நரியும்

நாயும் நரியுமின்றி
மனிதருக்கு கதையுமில்லை
தானாக உண்டு தனியாக வாழும்
இயல்பு கொண்டும்
எச்சிலுண்டு வாலாட்டி வாழும்
வாழ்க்கை
எப்படித்தான் வாய்த்தது நாய்க்கு?

வீட்டு விலங்காய் இல்லையெனில்
கழைக் கூத்தாட கொலை வேலை வாங்க
மிருகமென்ன பறவைகளும்
கட்டியாண்ட மனிதருக்கு
நரியார் தந்திரியாய்
எப்படித்தான் ஆகிப்போனார்?

ஈழகேசரி : சமூகம் - பண்பாடு - மொழி சார்ந்த சில குறிப்புக்கள்


தி. செல்வமனோகரன்

காலனித்துவ ஆட்சியின் வழி ஏற்பட்ட கல்வி, அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு அசைவியக்கம் ஈழத்தில் பல்வேறு மாற்றங்களையும் தேவையையும் ஏற்படுத்தியது. கிறிஸ்தவ மதப் பிரசாரத்துக்காக அவ்வப் பிரதேச மொழியூடான கருத்துப் பரிமாற்றத்தை மையங்கொண்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்வழி அச்சு ஊடகப் பண்பாடு காலனித்துவ நாடுகளுக்கு அறிமுகம் செய்யப் பட்டது. சுதேச மொழிவழியான துண்டுப்பிரசுரங்கள், நூலாக்கங்கள் மற்றும் பத்திரிகைகள் உருவாக்கம் பெற்றன.

தமிழின் முதற் பத்திரிகையாகத் தமிழகத்தில் வெளிவந்த Tamil Magazine ஐச் சொல்வதுண்டு. இதன் காலம் கி.பி 1831; ஈழத்தில் வெளிவந்த முதற் தமிழ்ப் பத்திரிகையாக உதயதாரகையைச் சொல்வர்; இதன் காலம் கி.பி 1841; ஆனால் இவை இரண்டுக்கும் முன் கி.பி 1802இல் வெளிவந்த "சிலோன் கசட்" பத்திரிகையே உலகில் முதன்முதல் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகை ஆகும். இப்பத்திரிகை மூன்று மொழிகளிலும் வெளிவந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. கி.பி 1832இல் "மாசிகதாக" எனும் பத்திரிகையே முதன்முதலில் தனிச் சிங்களத்தில் வந்த பத்திரிகையாகும். உதயதாரகை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த முதல் தமிழ்ப் பத்திரிகையாக விளங்குகிறது. ஈழத்தில் தமிழ் மொழியில் வெளிவந்த முதல் தமிழ் முஸ்லீம் பத்திரிகையாக கி.பி 1882இல் வெளிவந்த "முஸ்லீம் நேசன்" விளங்குகிறது.

மானிப்பாயில் இருந்த மிஷனரியின் அச்சுக் கூடமே பல்வேறு அச்சுப் பதிப்புக்களை வெளியிட்டிருந்தது. யாழ் நல்லூர் சர்ச் மிஷன் சபையும் (1821) அச்சுக் கூடம் ஒன்றைச் சிறப்பாக நடாத்தி வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உருவான சுதேசிகளுக்கான சில சலுகைகளில் அச்சுக்கூடம் நடாத்துதலும் ஒன்றாகும். இதன்வழி நாவலர் சைவப்பிரகாச அச்சியந்திரசாலைகளை ஈழத்திலும் தமிழகத்திலும்







அரசியல், சமூகம், சமயம், பண்பாடு, கலைகள் என நவீன முகத் தோடு சமயம் சாராத தமிழ்ப் பத்திரிகையாக வெளிவந்த முதற்பத்திரிகை இதுவே. தேசிய உருவாக்கம், தமிழ்த் தேசிய உருவாக்கம், இன வைக்கியம்,சுதந்திர முழக்கம் என்பவற்றை முன்வைத்துத் தன் அரசியல் நிலைப் பாட்டை முன்னிறுத்துகின்றது.

நிறுவிய முதல்வராகத் திகழ்கிறார். இரண்டையும் ஒன்றிணைந்த தமிழகமாகப் பார்க்கும் பண்பாடு 19ஆம் 20ஆம் நூற்றாண்டு ஈழத் தமிழர்களிடமிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நாவலர் (1877) காலத்திலேயே இலங்கைநேசன் வெளிவரத்தொடங்கியது. அக் காலத்தின்பின் வெளிவந்த இந்து சாதனமும் பாது காவலனும் நூற்றாண்டு கடந்தும் வெளிவந்தன. இருபதாம் நூற்றாண்டுக்கு முன் ஈழத்தில் 12 தமிழ்ப் பத்திரிகைகளும் 18 சிங்களப் பத்திரிகைகளும் வெளிவந்திருந்தன. ஆனால் இருபதாம் நூற்றாண்டில் இந்நிலை மாற்றமடைகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்து பாலபோதினி, சைவபாய்ய சம போதினி, ஞானப்பிரகாசம், ஞானசித்தி, லங்கா, கலியுக வரதன், சுதேச நாட்டியம், விவேகானந்தன், திராவிட கோகிலம், விஜயபானு, குருசந்திரோதயம், சைவ சூக்குமார்த்த போதினி, ஆத்மபோதினி, சண்முக நாதன், பாலபாஸ்கரன் போன்ற பத்திரிகைகள் வெளி வந்தன. அதேவேளை 1915-30 இடைப்பட்ட காலத்தில் பத்திரிகைகள் பல நின்றுவிட்டன. புதிய பத்திரிகை களின் உருவாக்கமும்குறைவாக இருந்தது என திருமதி சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் கூறுகிறார். ஆனால் 1920 - 30க்குமிடையில் 22 பத்திரிகைகள் வெளியிடப் பட்டுள்ளன. ஆயினும் அவற்றின் ஆயுட்காலம் குறை வாகவே இருந்தன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்தடுமாற்றங்களின் பின்னணியில் முதலாம் உலக மகாயுத்தம், ஈழத்தில் நடைபெற்ற சிங்கள முஸ்லீம் கலவரம் என்பன அமைந்திருக்கக் கூடும்.

இலங்கையில் 1921இல் பிரிட்டின் அரசால் முன்வைக்கப்பட்ட மனிங் சீர்திருத்தம் இன ஒடுக்கு முறைக்கான ஆரம்பப் புள்ளியை இட்டது. ஆரம்பத் தில் ஒருவருக்கு ஒருவர் என இருந்த சட்டசபைக்கான சிங்கள தமிழ் இனவிகிதாசாரம் இம்மனிங் சீர்திருத்தத் தால் 3 தமிழருக்கு 13 சிங்களவர் எனச் சட்டசபை அமையக் காரணமாயிற்று. இதற்கு எதிரான குரலை சேர்.பொன். அருணாசலம் முன்வைத்தார். இலங்கை தேசிய காங் கிரசிலிருந்தும் விலகினார். அதேவேளை 1924இல் புதிய மனிங் சீர்திருத்தத்தின் வழி மேல்மாகாணத்தில் தமிழருக் கான இடஒதுக்கீடு வழங்கப்பட்டமை தமிழ்த் தலைவர் களுக்கு ஓரளவு திருப்தியைத் தந்தது. ஆனால் 1927இல் இலங்கைக்கு வருகை தந்த டொனமூர் குழுவும் அது முன்வைத்த அரசியல் யாப்பும் தமிழ்த் தரப்பிற்குப் பெரும் ஆபத்தை ஈழத்தில் தந்தது.

1924இல் மாணவர் காங்கிரஸ் உதயமாயிற்று. இதுவே பின்பு யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசாயிற்று. பூரண சுயராச்சியத்தை இவ்வமைப்புக் கோரிவந்த காலத்தில் தான் டொனமூர் யாப்பு நடைமுறைக்கு வந்தது. சர்வஜன வாக்குரிமையும் முன்வைக்கப் பட்டது. இராமநாதன் இவற்றிற்கெதிரான குரலை முன்வைத்தார்; செயற்பட்டார்; ஆயினும் அவரது முயற்சிகள் தோல்வியில் முடிவுற்றன. 1925இல் மாணவர் காங்கிரஸ் டி.பி.எஸ்.குலரத்தின எனும் சிங்கள வரைத் தலைவராகக் கொண்டிருந்தது. காந்தி உள்ளிட்ட இந்தியத் தலைவர் களை உள்நாட்டுக்கு அழைத்து கூட்டங்களை நடாத்தி யது. காந்தியுள்ளிட்டவர்களைத் தமிழர்கள் மட்டு மல்லாது சிங்கள வரும் இணைந்தே வரவேற்றனர். ஒற்றுமைப்பட்டு நின்றனர். இதனை அக்கால அதிகார வர்க்கம் - தேசாதி பதி கியூ கிளிபேட் விருப்பத்துடன் வரவேற்றிருப்பாரா எனில் இல்லை என்பதே பதிலாக அமையும். மேற்படி செயற்பாடுகளின் வழி உருவாகும் தேசிய எழுச்சியை சிதைக்க முன்வைக்கப்பட்டதே டொனமூர் யாப்பு, இந்தியாவுடன் தமிழர்கள் கைகோர்த்து நிற்பதுபோல சிங்களவர்கள் நிற்க வேண்டியதில்லை. அவர்கள் இலங்கையின் தனியினம் என எண்ணவைக்கும் பிரித்தாளும் தந்திரம் முன் னெடுக்கப்பட்டது. அவ்யாப்பு அவர்களுக்கு சிறப்புரிமை களையும் சலுகைகளையும் முன்மொழிந்தது. ஆரம்பத் தில் பல சிங்களவர்கள் இந்த யாப்பை நிராகரித்தனர். ஆயினும் காலப்போக்கில் ஏற்றுக் கொண்டு ஆதரவும் நல்கினர். இதன்வழி இனமுறுகல் - இனமுரண்பாடு உற்பவிக்கப்பட்டது. இச்சூழலில் தமிழ்ச் சமூகத்துக்கான அரசியலை முன்னிறுத்தும் பத்திரிகை ஒன்றின் தேவை உணரப்பட்டது.

டொனமூர் யாப்பை நேரடியாக எதிர்த்தும் அதிகார வர்க்கத்துடன் அதற்கெதிராக வாதாடியும் நின்ற இராமநாதனை முன்னிறுத்தியே ஈழகேசரியை நா.பொன்னையா தொடங்கினார். டொனமூர்க்கெதி ராகக் கப்பலேறி உரிய தரப்புடன் உரையாடச் சென்ற இராமநாதனை சிறப்பித்து "சிங்கேறுமாகிய இலங்கைச் சிங்கம் (ஈழகேசரி) சேர்.பொன்னம்பலம் இராம நாதனுக்கு இவ்வெளியீட்டைச் சமர்ப்பிப்பதாக" 1930 ஜூன் 22இல் வெளிவந்த ஈழகேசரியில் பொன்னையா குறிப்பிடுகிறார். ஈழம் என்ற சொல்லை இருபதாம் நூற்றாண்டில் இப்பத்திரிகையே பிரபல்யப்படுத்தியது எனலாம். தனது பத்திரிகைக் கொள்கையை பொன்னையா பின்வருமாறு உரைக்கிறார்.

> ஒருவர் உள்ளக் கருத்தை மட்டும் உணர்த்தாது. ஒரு குழுவினர் ஒரு வகுப்பினரின் துணிந்த முடிபுகளையே எடுத்துரைப்பதற்கும். அறியாமை வயப்பட்டு உறங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்பி அறிவுச் சுடர் கொளுத்துவதற்கும் ஏற்ற நல்விளக்குப் பத்திரிகையே. பத்திரிகைகளை நடத்துவோர் தேச நன்மைக்காக வேண்டியவை களைக் காய்தலுவத்தலகற்றி நடுவு நிலைமை யோடும் காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்றவாறு எடுத்துரைத்தல் வேண்டும்.

இவற்றின் வழி சுயநலமின்றி, குரோதமின்றிச்

சாதிமத பேதமின்றி விதண்டைகளை விடுத்து பிறர் மனதைப் புண்படுத்தாது பத்திரிகை நடாத்த வேண்டும் என்கிறார். தமது ஈழகேசரி பத்திரிகையின் நோக்கையும் தொடர்ந்து உரைக்கிறார்.

> மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தன்னல மற்ற தியாக சிந்தையுடனும் யாதானுமொரு பணியிற் கடனாற்றுதல் வேண்டுமென்னும் பேரறிஞர் கொள்கை சிரமேற்கொண்டும் எமது சிற்றறிவிற் போந்தவாறு "பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனி சிறந்தனவே" என்னும் ஆன்றோர் வாக்கின்படியும் தேசத்தின் தொண்டு செய்தலே சிறப்புடைய தெனக் கருதி இப்பணியை மேற்கொண்டோம்.

அத்தோடு ஒருவர் இருவராய்ப் பேசுவதனால் ஒரு பொது நன்மையும் ஏற்படாது என்றும் ஒருதேசம் முன்னேற்றம் அடைய வேண்டுமானால் பத்திரிகைகள் அவசியம் என்கின்றார் இதன்வழியே நாம் ஈழகேசரியை வாசிப்பு செய்தல் நலம்.

திரு.வி.கவின் நவசக்தியை முன்மாதிரியாகக் கொண்டே ஈழகேசரி எழுந்தது என்பதை அறிய முடிகின்றது. முதலில் 17cm11cm அளவில் வெளிவந்த பத்திரிகையானது 16cm11cm ஆக்கப்பட்டது; அதே போல 4 பக்கங்களில் ஆரம்பத்தில் வெளிவந்திருப்பினும் பின் 12-16 பக்கம் வரை வெளிவந்தது. பல சிறப்பு மலர்கள் வெளிவந்தன; கல்வி அனுபந்தம்,மாணவர் அனுபந்தம் எனவும் காலத்திற்கேற்ற வகையில் பிரசுரிக்கப்பட்டன. முன்தாள்கள் வர்ணத்தாள்களாக விளங்கின. 1935 ஜூன் 7 இதழில் "சிறந்த தேசிய பத்திரிகை" எனக்குறிப்பிட்டமை ஈழகேசரியின் அரசியல் நிலைப்பாட்டை தெளிவுறுத்துகின்றது. ஆங்கிலஅரசை உரிய உரிய இடங்களில் ஈழகேசரி கண்டித்திருந்தது. அரசியல், சமூகம், சமயம், பண்பாடு, கலைகள் என நவீன முகத்தோடு சமயம் சாராத தமிழ்ப் பத்திரிகையாக வெளிவந்த முதற்பத்திரிகை இதுவே. தேசிய உருவாக்கம், தமிழ்த் தேசிய உருவாக்கம், இனவைக்கியம்,சுதந்திர முழக்கம் என்பவற்றை முன்வைத்துத் தன் அரசியல் நிலைப்பாட்டை முன்னிறுத்துகின்றது.

இந்த அடித்தளத்தில் நின்று கொண்டு 1930-1956 வரையான காலப்பகுதியில் வெளிவந்த வார வெளியீடான இப்பத்திரிகை அரசியல் விழிப்புணர்வு, சிங்கள தமிழ் ஒற்றுமை, பெண்களின் முன்னேற்றம், சமூக முன்னேற்றம், சமூக சீர்திருத்தம், ஒழுக்கம், தாழ்த்தப்பட்ட மக்களின் நலம் போன்றவற்றை முன் வைத்தது. ஈழத்தேசிய எழுச்சிக்கு முதன்மை கொடுத்த அதேவேளை அதற்கு ஒருபடி மேலாக இந்திய விடுதலைக்கும் இந்தியத் தலைவர்களுக்கும் முன்னுரிமையும் அழுத்தமும் வழங்கியது. குறிப்பாக இந்திய செய்திகளுக்கென ஒரு பக்கத்தையே ஒதுக்கியது.

ஈழத்தமிழரின் மதஞ்சாராத ஜனரஞ்சகப்பட்ட உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அநேக வாசகரைக் கொண்ட முதற்பத்திரிகை எனும் பெருமை ஈழகேசரிக் குண்டு அரசியல் தளத்தில் மாணவர் காங்கிரசை ஆதரித்தும் சுயராச்சியத்திற்கு ஆதரவு தெரிவித்தும் ஈழகேசரி தொடர்ந்து கருத்து தெரிவித்து வந்தது

> தமிழ் மொழியைப் பல பத்திரிகைகள் பிழையாக கையாளுகின்றன எனக் கவலைப்பட்ட ஈழகேசரி தாராளமாக பிறமொழிச் சொற்களை ஆக்க இலக்கியங்களிலும் கட்டுரைகளிலும் கையாண்டது. மண் வாசணை நிறைந்த பிரதேசச் சொற்கள் கையாளப்பட்டன.



அதனை நிராகரித்த ஜீ.ஜீ பொன்னம்பலம், சு.ந.டேச பிள்ளை,அ.மகாதேவா போன்றோரும் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டாலும் அவர்களுக்கெதிரான கருத்துக்களை முன் வைத்தது. இந்திய சுதந்திரம் வேறு ஈழத்து சுதந்திர போராட்டம் வேறு எனக் கருதாது இந்திய சுதந்திரமே ஈழத்தார் சுதந்திரம் எனும் கருதுகோளின் வழி இயங்கியது. உலகயுத்தம் - அதன் பேரவலம், விழைவு என்பனவும் பதிவிடப்படுகின்றன. யாழ்ப்பாணப் பத்திரிகையான ஈழகேசரி, கொழும்பில் நடைபெறும் தமிழர் பற்றிய அரசியல் விடயங்களை முதன்மைப் படுத்தியது; கொழும்பு நிருபரின் செய்தி விமர்சனம் இதனை தெளிவுறுத்துகின்றது.

உள்ளூர் விஷயங்களுக்கு முதன்மை கொடுக்கின்ற வகையில் சமூகப்பிரச்சினையும் எடுத்தாண்டது. சாதிய வேறுபாடு தொடர்பாகக் காந்தியக் கொள்கையை முன்வைக்கிறது பாடசாலைகளில் சமவாசனம், சம போசனம் வழங்கவேண்டும் எனக்கருத்துத் தெரிவித்தது. மு.செல்லையா எழுதிய "ஈழத்து ஹரிஜன தேவை" எனும் கட்டுரை முக்கியமானது. சாதியத்தின் இழிவு, மனிதர்களின் நாகரிக வரலாற்றில் ஏற்பட்ட இப்பேதத்துக்கான குரலுக்கு மாற்றான குரலை ஈழகேகரி அழுத்தியுரைக்கிறது.

யாவர்க்குமான கல்வியை முன்மொழிகிறது ஈழகேசரி. "வயிற்றுப் பிழைப்பை நோக்கியே யாவரும் கஸ்ரப்பட்டு ஆவலுடன் கல்வி பயில்கின்றனர். கல்வியைக் கற்றோர் அரசின் கீழே வருவதும் மற்று எவ்விடத்தும் தமது அறிவிற்குகந்த உத்தியோகம் பெறின் போதுமென்றிருப்பர்" என்பதன்வழி படித்த சமூகத்தின் மனோநிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. பெண் கல்விக்கு முதன்மை கொடுக்கும் அதேவேளை அவர்களுக்கான கல்வி ஒரு அளவிலிருந்தால்போதும் என்று கூறியிருப்பினும் அக்கால மக்களின் மன நிலையைச வெளிப்படுத்துகிறது.

இப்பத்திரிகையில் பொருளாதாரத்துக்குரிய இடம் வழங்கப்படுகின்றது. விவசாயம், குடிசைக் கைத்தொழில், புகையிலை உற்பத்தி மற்றும் மலையாள தேசத்துக்கான விற்பனை, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் போன்றன யாழ்ப்பாணத்தின் பொருளா தாரத்தின் செயற்பாடுகளாக அமைந்திருந்தமையை அறிய முடிகிறது பெண்கள் வேலைக்குச் செல்லும் நிலையை முப்பத்தைந்துகளில் காணமுடிகிறது. பெண்களுக்கும் அரசாங்க உத்தியோகம், பெண் நியாயவாதியின் முதல் வழக்கு (3-2-1935, 17.02.1935) போன்ற தலைப்புக்கள்

இதனை வெளிப்படுத்தி நிற்கின்றன.

உள்நாட்டுச் செய்திகளைப் பரபரப்புத் தன்மையோடு வெளியிட்ட முதற் பத்திரிகையாக ஆய்வாளர் ஈழகேசரியை இனங்காண்பர். ஆரம்பத்தில் வர்த்தமானங்கள் எனும் தலைப்பிலும் பின்னர் கலம்பகம், செய்தித்திரட்டுப் போன்ற தலைப்புக்களிலும் இவை இடம்பெற்றன. இது பிற்கால பத்திரிகை எழுத்துக்கு முன்னோடியாக அமைந்தது உதாரணமாக, சாரதியோடு சென்ற தங்கம்மா (02.10.1932), காரைப் புரட்டிய கான்ஸ்டபிள் (27.12.1937), நடுத்தெருவில் தாலி கட்டப்பட்ட நல்லூர் சரஸ்வதி வழக்கு (15.9.1935) போன்றவற்றைக் குறிப்பிடலாம். அத்தோடு உள்ளதை உள்ளபடியும் விமர்சனத்தோடும் சொல்லும் மரபு கொழும்பு நிருபர் என்பவரின் எழுத்தில் தெரிகிறது. அவருக்கு முக்கியத்துவமும் வழங்கப்பட்டது. ஜாதிய எதிர்ப்பு ஈழகேசரியால் முன்மொழியப்பட்ட அதேவேளை அக்கால சாதியப் பெயர்களை உள்ளவாறு கூறும் தன்மையும் சாதியால் சுட்டும் தன்மையும் காணப்பட்டது. உதாரணங்களாக வெள்ளாளனைக் கத்தியால் வெட்டிய வண்ணான் (11.09.32) பத்தைமேனி பள்ளர் கொலை (11.08.1935) போன்றவற்றைச் சுட்டலாம். அதேவேளை பல்வேறு ஜாதிகளைக் சேர்ந்த பல்வேறு எழுத்தாளர்களுக்குப் பத்திரிகையில் எழுத வாய்ப்பு அளிக்கப்பட்டது.


பத்திரிகை யாழ்ப்பாணத்துக்கப்பால் இலங்கையில் கிழக்கு, தெற்கு மலையகப் பிரதேசங்களிலும் விநியோகம் விஸ்தரிக்கப்பட்டதாயினும் யாழ்ப்பாணச் செய்திகளே முதன்மையுற்றன. அதபோல வேலை வாய்ப்புக்காக யாழ்ப்பாணத் தமிழர் சென்ற மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளிலும் இப்பத்திரிகை செல்வாக்குச் செலுத்தியது. இதன்வழி வியாபார நோக்கை அடிப்படையாகக் கொண்ட விளம்பரச் செயற்பாடுகளும் முன்வைக்கப்பட்டன. பரிமளா வெற்றிலை பாக்கு விளம்பரம், கொமர்ஷல் கொம்பனியின் பசளை விளம்பரம், இன்சூரன்ஸ் கம்பனியில் விளம்பரம், தைலம் தொட்டு பற்பொடி வரையிலான விளம்பரங்களை ஈழகேசரியில் காணமுடிகிறது. இவை யாழ்ப்பாண சமூக வரலாற்றில் தரவுகளாக அமைந் துள்ளன.

மொழி எனும் தளத்தில் யாழ்ப்பாண வழக்கு முதன்மையுற்றது. நியமமொழிலேயே கட்டுரைகள் கட்டமைக்கப்பட்டன. ஆக்க இலக்கியங்களில் தேவைக்கேற்ப யாழ்ப்பாணப் பேச்சு வழக்கு பிரயோகிக்கப்பட்டது. சிறுவர் பகுதி சுவாரசியமானதாகவும், கேள்வி பதில் அமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களும் உள்ளடங்கியிருந்தது. அ.செ.மு, இலங்கையர்கோன், வைத்திலிங்கம், மங்களநாயகம் போன்ற பல சிறுகதை நாவல் எழுத்தாளர்களும் வித்துவான் கணேசையர், பண்டிதமணி உள்ளிட்ட மரபுவழிப் புலமையாளர்களும் இப்பத்திரிகையில் எழுதியமை சுட்டியுரைக்கத்தக்கது. புதிய எழுத்தாளர்களையும் இப்பத்திரிகை அறிமுகம் செய்தது. பாரதி மகாகவியாக முதன்மைப்படுத்தப்படுகிறார். திரு.வி.கவும் செல்வாக்குறுகிறார். ஈழத்து மொழி வளர்ச்சிக்கும் உரைநடை வளர்ச்சிக்கும் இப்பத்திரிகை இயக்கவிசையாக இருந்தது என்கின்றார் ஆ.சிவநேசச்செல்வன்.

தமிழ் மொழியைப் பல பத்திரிகைகள் பிழையாக கையாளுகின்றன எனக் கவலைப்பட்ட ஈழகேசரி தாராளமாக பிறமொழிச் சொற்களை ஆக்க இலக்கியங்களிலும் கட்டுரைகளிலும் கையாண்டது. மணவாசனை நிறைந்த பிரதேசச் சொற்கள் கையாளப்பட்டன. உதாரணமாக "கௌரவபட்டங்கள் விளாசப்பட்டன" பணக்காரர்களைப் "பெரும் புள்ளிகள்" எனக் குறிப்பிடுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதேவேளை ஆங்கில மொழிநடையை அதன் உக்தி முறைகளை விளம்பரங்களில் அதிகம் கையாளப்படுவதையும் காணமுடிகின்றது. அதேவேளை அரசாங்க அறிவித்தலாக அமையும் விளம்பரங்களின் மொழி நடை அந்நியமான மொழிக்கட்டமைப்பாக உள்ளது.

எள்ளல் நிறைந்த சமூக விமர்சனங்களாக அமையும் பகுதியாக "பாதையோரத்தில்" எனும் பகுதி அமைந்துள்ளது. "ஆட்டுக் குட்டிக்கு ஜே, கோழிக் குஞ்சுக்கு ஜே, ஊமத்தங்காய்க்கு வோட் பண்ணுங்கள், இலுப்பைக் கொட்டைக்கு உங்கள் சீட்டைப் போடுங்கள் என்ற கோஷங்கள் நகரசபைத் தேர்தற் காலங்களில் வானைப் பிளக்கப் போகின்றன" எனும் பகுதியை இதற்கு உதாரணமாகச் சுட்டலாம். சிலேடைகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. சந்தங்கொழிக்கும் யாப்புக் கவிதைகள் நிறைந்துள்ளன. வாசகர் மனதை வெல்வதற்கு நகைச்சுவை நிறைந்த தமிழ்நடையை ஈழகேசரி பயன்படுத்தி வந்துள்ளது. வ.நடராசாவின் காதலா? கசினின் பாட்டியின் ஆராய்ச்சிக்கு, சட்டம்பியார் எழுதிய தமிழ் வாத்தியார் சரித்திரம், கோணாசலத்தின் பத்திரிகைப் பழக்கம் போன்றவற்றை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம்.

ஆக, ஈழகேசரி காந்திய வழிப்பட்டதும் இராம நாதனை முன்னிறுத்தியதுமான அதேவேளை மாணவர் காங்கிரசிற்கு ஆதரவளித்தும் தமிழ்த் தேசியத்தை முன்வைத்தும் எழுச்சி பெற்ற பத்திரிகை எனலாம். தமிழ்ச் சமூகத்தின் மொழி, சமூகம், பண்பாடு இவற்றின் ஊடுபாவாக அரசியல் என்பவற்றை முன்வைத்ததும் விமர்சனத்தோடு தர்க்கித்ததுமான வகையில் தனித்த இடத்தை ஈழத்தமிழ்ச் சமூகத்தில் பெற்று இயங்குகிறது. இந்த வகையில் ஜனநாயகத்தை முன்னிறுத்தி தேசியத்தைக் கட்டியெழுப்புதல், கட்சி அரசியலுக்கு முதன்மை, தொழிலாளர் நலன்பேண் தன்மை, பிரதேச மேலாண்மை, சமூக ஒடுக்குமுறையான சாதியத்தை உடைத்தெறியும் போக்கு, அரசியல் விழிப்புணர்வைக் கிராமமட்டத்திற்கு இட்டுச் செல்லுதல், தமிழினத்தின் உண்மை நிலையும் அது சார்ந்த விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தல் போன்ற தளங்களுக்கும் ஈழத் தமிழர்களை ஈழகேசரி வழிநடாத்தியது. நவீன கல்வி மற்றும் கலை இலக்கியச் செயற்பாடுகளுக்கும் மரபுவழி கலை இலக்கியச் செயற்பாடுகளுக்கும் சம அந்தஸ்தை இப்பத்திரிகை வழங்கியது. அதன் வழி நின்றே மறுமலர்ச்சி உள்ளிட்ட சிற்றிதழ்களும் பிற்கால பத்திரிகைகளும் தம்மை தகவமைக்க முற்பட்டன என்பது பொதுநிலைக் கருத்து என்ற வகையில் ஈழகேசரியின் தனித்துவம் அடையாளப் படுத்தப்படுகின்றது.



தாலி

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

"கணேச சரணம். கணேச சரணம்"

வாய் ஜபித்துக்கொண்டிருந்தாலும் கால்கள் கோவில் வீதியை வலம் வந்து கொண்டிருந்தாலும் மனம் இறைவனை விட்டு விட்டு எங்கெங்கோ சுழன்றுகொண்டிருந்தது. அன்றைய தினத்தின் பின் இல்லை. இல்லை. அன்றைய இரவின் பின் மனம் இப்படித்தான் ஆகி விட்டது. மனம் இறைவனை மறந்துவிட்டதோ?

இருக்காது. இருக்கவேயிருக்காது. அது எப்படி இயலும்?

இத்தனை காலமும் நாளும் பொழுதும் வாசித்தும் கேட்டும் உணர்ந்தும் பதித்து வைத்திருந்தவற்றை சில மணி நேரத்துள் மூளைச் சலவை செய்து கழுவியோடச் செய்திருக்க முடியுமா?

ஏதோ ஒரு தடுமாற்றம் மனதினுள் கிடந்து ஆயிரமாயிரம் வினாக்களை அள்ளி விதைத்து எதற்கு என்ன பதில் கூறுவதென்று தத்தளித்து...

"அக்கா, அக்கா"

அந்தக் குரல் காதுட் புகுந்து தன்னை உணரச் செய்ய சிரமப்பட்டது.

என்னைக் கூப்பிடுகிறார்களா? என்ற மெலிதான அருட்டுணர்வில் சங்காரிணி திரும்பினாள்.

"கும்பிடேக்கை குழப்பிறன் எண்டு குறை நினைக்காதேங்கோ அக்கா. வீட்டை போனனான். ஒருதரும் இல்லை. கலியாண வீட்டு வேலையளுக் குள்ளை பிறகு வரேலுமோ தெரியேல்லை. மகளின்ரை கலியாண வீடு வாற வியாழக் கிழமை.காட்டை இங்கை தாறனெண்டு குறை நினைக்காமல் கட்டாயம் எல்லாரும் வாங்கோ"

கோபுர வாசலில் நின்றிருந்த சாமி அண்ணை அவளின் அருகே வந்து அழைப்பிதழைத் தந்தார். மூளை வெறிச்சிட்டிருந்ததால் எதுவும் பேச வராத நிலையில் கைகள் மட்டும் அழைப்பிதழைப் பெற்றுக்கொண்டன.

அதன் பின் வந்துள்ள முதலாவது திருமண அழைப்பு. ஆடி மாதம் முடிந்து ஆவணி பிறந்துவிட்டது. இனிமேல் இது போல் பல அழைப்புகள் வரப்போகின்றன.

அவள் திருமண நிகழ்விற்குப் போவதா? வேண்டாமா?

"பிள்ளையாரே, என்ன செய்ய?"

மற்றுமொரு கேள்வியும் மேலும் குழப்பமும் மனதினுட் புகுந்துகொள்ள சம்காரிணி கோவில் வழிபாட்டை ஒருவாறு முடித்துக்கொண்டு சகதியாகிக் கிடந்த மனதுடன் வீட்டிற்குப் புறப்பட்டாள். வழிபாட்டின் பின்னரான அலாதியான அநுபவத்துடன் சென்ற நாட்களை இழந்துவிட்ட துயரமும் சேர்ந்து கொண்டு வேதனையை அதிகரித்தது.

வீட்டிற்கு வந்ததும் நாற்காலியில் அமர்ந்து கொண்டு அழைப்பிதழை எடுத்து

திருமணம் எங்கு எப்போது என்ன நேரம் நடைபெறவிருக்கிறதென்பதைப் பார்க்கலாம் என்று எண்ணியவளிடம் முதலில் எனக்குப் பதில் தேடு என்று அந்த வினா முன்னே வந்தது.

திருமண நிகழ்விற்கு சம்காரிணி போவதா?

கேள்வி மேல் கேள்வியாகக் கேட்பதே இப் போது அவளுடைய மூளையின் வழக்கமாகி விட்டதே. வினா வரிசையில் நின்று அடுத்த வினா தலையை நீட்டியது.

திருமணத்திற்கு எல்லோரும் ஏன் போகிறார்கள்?

மணமக்களை மனமார வாழ்த்துவதற்குத்தான் போகிறார்கள்.

சம்காரிணியால் அப்படி வாழ்த்த இயலுமா?

வினாவிற்கு விடையாக அவளது கண் முன்னே...

காரிருளில் ஒளிர்ந்த டார்ச் விளக்கின் ஒளி வட்டத்துள் மஞ்சள் நூலில் அசைந்துஅசைந்து ஒளிர்ந்த தாலி!

ரமணனின் உந்துருளி வந்துநிற்கும் சத்தம் அவளை சூழலுக்கு இழுத்துவருகிறது. உள்ளே வந்த ரமணனின் கண்களில் அழைப்பிதழ் படுகிறது.

"யாருக்குக் கலியாணம்?"

"சாமி அண்ணையின்ரை மகளுக்கு"

"கட்டாயம் போக வேண்டிய கலியாணம். எப்பவாம்?"

அழைப்பிதழை சம்காரிணி எடுத்துப் பார்த்தாள்.

"வாற வியாழன்" என வாய் பதில் சொன்னா லும். கண்கள் அழைப்பிதழிலிருந்த சொற்களிலேயே நிலைத்து நின்றன. "சுபமுகூர்த்த வேளையில் திரு மாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித் திருப்பதால் அத்தருணம் குடும்ப சமேதராக வருகை தந்து" என்ற வரிகள் மீண்டும் அவளை சிந்தனைக்குள் ஆழ்த்தி விடுகின்றன.

திருமணம் என்று எடுத்துக்கொண்டால் பல நாட்களாகப் பல சடங்குகளைச் செய்கிறோம். எல்லாச் சடங்குகளுமே தேவையானவையாகவே கருதப்படு கின்றன. ஆனால் அவற்றுள் முதன்மைப்படுத்தப்படுவது திருமாங்கல்ய தாரணம். அதாவது தாலியை அணிவது. தாலி என்பதற்கு மாங்கல்யம் என்று மட்டும் கூறாமல் அதற்கு திரு என்று சிறப்பும் கொடுக்கிறார்கள்.தாலிக்கு எம்மவர் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

காரிருளில் ஒளிர்ந்த டார்ச் விளக்கின் ஒளி வட்டத்துள் மஞ்சள் நூலில் அசைந்துஅசைந்து ஒளிர்ந்த தாலி! அன்று முதல் கண்களுக்குள்ளேயே கூடு கட்டி அகலாது குடியிருக்கும் அந்தக் காட்சி "இல்லை" எனப் பதிலளிப்பதாகத் தலையசைக்கிறது.

"நானும் கலியாணத்துக்குப் போகவேணுமே?" அவளது நடுங்கும் குரலில் கெஞ்சல்.

"எங்கடை மூண்டு பிள்ளையளின்ரை கலியாணங்களுக்கும் சாமியண்ணையின்ரை குடும்பமே வந்து நிண்டு உதவி செய்ததை மறக்கலாமே?" கூறிய படி ரமணன் உடை மாற்றச் சென்றுவிட்டான். அவளுடைய தடுமாற்றம் அதிகரிக்கிறது.

அங்கே போனால் தாலியைக் காணும்போது அவளின் கண் முன்னே... காரிருளில் ஒளிர்ந்த டார்ச் விளக்கின் ஒளி வட்டத்துள் மஞ்சள் நூலில் அசைந்து அசைந்து ஒளிர்ந்த தாலி வாழ்த்துவதற்குப் பதிலாக இந்தக் காட்சிதானே கண் முன் வரும்?

அபசகுனமாய் அந்த எண்ணங்களுடன் சம்காரிணி அங்கு போயிருப்பதால் என்ன பயன்? மகிழ்ச்சியுமின்றி மனநிறைவுமின்றி தாலியை அணிவதற் காகவே நடைபெறும் நிகழ்விற்குப் போவது மிகப் பெரும் தவறாகப் பட்டது.

தாலியைச் சுற்றியே இப்போது அவளது நினைவுகளும் ஆய்வுகளும் இருப்பதை அவளால் தடுக்க இயல்வதில்லை. தாலியைப் பொன்னால் செய்வதால் தானே இத்தனை சிக்கல்களும்? என்ற எண்ணம் ஏன் அவ்வாறு செய்தார்கள்? என்ற அடுத்த கேள்வியைத் தொடர வைத்தது.

தாலம் என்பது தான் தாலி என்றாகியதாம். தாலம் என்பது பனை ஓலையைச் சுட்டியது. ஆதியில் இவ்வாறு திருமணம் நடைபெறுவதில்லை. தன் மனைவியைத் தன்னுடையவளல்ல என்றும் தன் குழந்தையைத் தன்னுடையதல்ல என்றும் கூற ஆரம்பித்தபொழுது எவனுக்கு எவள் மனைவி என்று சமூகத்திற்குத் தெரிவிக்க வேண்டியது அத்தியாவசிய மாகியது. எழுதுவதற்குப் பயன்படுத்தி பனையோலை யில் இருவரது பெயர்களையும் எழுதி கழுத்தில் தொங்க விட்டனர்.இவ்வாறு தோற்றம் பெற்ற தாலி அழியக் கூடியதாக இல்லாது நிலைத்திருக்கக் கூடியதாக இருக்க வேண்டும் எனக்கருதியே பொன்னால் செய்யப்பட்டது. அதற்கு சமூகமும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தது

சம்காரிணியின் சிந்தனை நீண்டுகொண்டே சென்றது. இந்த தாலி பற்றிய ஆராய்வும் சிந்தனையும் முன்னரும் இரு முறைகள் இவ்வாறு நீண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்த தமிழ்ப் பெண்ணான அவளுக்கு தாலி மதிப்பும் முக்கியத்துவ மும் கொண்டதாகவே மனதுள் இடம் பிடித்திருந்தது. அது தன்கழுத்தில்.அணியப்படப்போகும் நாளைப் பற்றிய கற்பனைகளும் எல்லாப் பெண்களையும் போல அவளுக்குமிருந்தது.

திருமணம் நடந்தேறி கழுத்தில் தாலி அணியப் பட்ட பின்னர்தான் பிரச்சினை ஒன்று தலை தூக்கியது. அவள் பணி செய்த காரியாலயம் தூரத்திலிருந்ததால் இருள் கௌவும் நேரத்திலேதான் வீடு வந்து சேர்வாள். சில நாட்களின் பின் அவள் காலையில் வேலைக்குப் புறப் படும் போது கணவன் ரமணனின் கண்கள் சம்காரிணி யின் கழுத்தைக் கவனிப்பதாக ஓர் உணர்வு. நான்கைந்து நாட்களின் பின் இருவரும் இருந்து உரையாடிய வேளை யில் ரமணன் தன் மனதில் பட்டதைக் கூறியும்விட்டான்.

"பஸ்லிலை போய் வாறீங்கள். இருண்டபிறகு வந்து சேருறீங்கள். கொடியைப் போடாமல் போனால் என்ன?"

அதற்கு என்ன பதில் கூறுவதென்று தெரியாது தவிக்கும் பார்வையை சம்காரிணி பதிலாக்கியபோது அவன் மெல்ல வேறொரு பேச்சுக்கு நகர்ந்துவிட்டான்.

ஆனால் அவளுடைய மனத்தில் அந்தக் கேள்வி ஓட்டிக் கொண்டிருந்து விழிகளை உருட்டி உருட்டி உறங்கவிடாது செய்யவே பதில் தேடி மூளை நெடுநேரம் அலைந்தது.

அது ஆயிரத்துத் தொழாயிரத்து அறுபது களின் இறுதிப்பகுதி. தாலியின் மகத்துவம் உந்நதமாக இருந்த காலம். அன்றைய சூழலில் திருமணம் நடை பெற்று ஓரிரு வாரங்களுக்குள்ளாகவே கொடி இல்லாமல் இருப்பதை நினைத்துப் பார்க்கவே சங்கடமாக இருந்தது.

என்ன செய்யலாம்?

ரமணன் சொல்வதும் சரிதான். அவள் பயணம் செய்யும் வேளையில் களவு நடைபெற சாத்தியம் உள்ளது என்பதை மறுக்க முடியாது. களவு போனால் மீண்டும் ஒரு கொடி செய்ய எங்கே போவது? அதன் பின்னரும் கொடி இல்லாமல்தான் இருக்க வேண்டும். ஒருஇழப் பின் பின்னர் அப்படி இருப்பதை விட இழப்பைத் தவிர்ப்பது நல்லதல்லவா? ஆனால் அவள் திருமண மானவள் என எல்லோருக்கும் அறிவித்துக் கொண்டி ருக்கும் அது பாதுகாப்பொன்றையும் தருகிறதே. அந்தப் பாதுகாப்பை இழக்கவும் அவள் தயாராக இல்லை.

முடிவொன்றைத் தேடிக் களைத்த வேளை யிலேதான் எப்போதோ வாசித்தவை நினைவிலே தோன்றி உதவிக் கரங்களை நீட்டின.

"தங்கத்தினால் செய்த கொடியில் தாலியைக் கோர்த்து அணியவேண்டுமென்ற விதி எதுவுமில்லை. அக்காலத்தில்மஞ்சள் நூலிலேயே தாலியை அணிந்து வந்தார்கள்.காலப் போக்கில் தம் செல்வச் செழிப்பைத் தெரிவிக்கும் ஓர் அடையாளமாக தங்கத்தினால் கொடியைச் செய்து அணியத் தொடங்கியுள்ளார்கள் என்ற ஆய்வு சரியானதாகவே அதை வாசித்த வேளை யில் சம்காரிணிக்கும் தோன்றியது. திருமண பந்தத்திற்கு அத்தாட்சியான, அவளது வாழ்க்கை முழுவதும் நிலைத்திருக்க வேண்டும் என்ற வாழ்த்துகளுடனும் ஆசிகளுடனும் அணிவிக்கப்பட்ட தாலியை மஞ்சள் நூலில் அணிவது நல்லதொரு தீர்வாக சம்காரிணிக்குத் தென்பட்டது. ரமணனிடம் இது குறித்துக் கூறிய போது அவனும் அதை ஏற்றுக்கொண்டான். அன்று எடுத்த தீர்மானத்தின் பயனாக கொடி வீட்டில் உறங்க நூலில் கோர்த்த தாலி அவளுடைய கழுத்தில் ஆட்சி செலுத்த ஆரம்பித்தது.

உடைமாற்றிவிட்டு வந்த ரமணன் கையில் அழைப்பிதழுடன் சிந்தனையில் ஆழ்ந்துபோய் அமர்ந்திருந்த மனைவியைப் பார்த்துவிட்டு "என்னம்மா கடுமையான யோசனை?" என்ற கேள்வியால் அவளை நனவுலகிற்கு இழுத்துவந்தான்.

"ஒண்டுமில்லை....முன்னுக்குப் போய் எல்லா உதவியளும் செய்யிறன். கலியாணவீட்டன்டு காலமையும் வீட்டிலை போய் எல்லாம் செய்து போட்டு தாலிகட்டு முடிய மண்டபத்துக்கு வாறன்."

"அவை என்ன நினைப்பினம்?"

சம்காரிணி தன் சிந்தனைக்குக் காரணம் சொல்வது போல் கூறிய திட்டத்தை ரமணன் நிராகரித்தான். அவள் மௌனமாகிப் போகவே ரமணன் அதற்குமேல் எதுவும் பேசாது வெளியே சென்று விட்டான். அவளுடைய மனக்கலக்கம் அவனுக்குப் புரிந்தது. இருவரும் மனநலசிகிச்சைக்குச் செல்வோமா என்று கேட்டதற்கும் அவள் மறுத்துவிட்டாள். அவளுடன் அதிகம் தர்க்கிக்கவும் அவன் விரும்பாததால் மெல்ல விலகினான். அதற்காகக் காத்திருந்தது போல் பழைய நினைவுகள் ஓடி வந்து அவளை மூழ்கடித்தன.

நாட்கள் நகர நாட்டில் போர்ச்சூழல் தோன்றி எல்லாவற்றிலும் தன் ஆதிக்க வலையை விரித்தது. வாரணன், மாதரசி, மாதுமை ஆகிய பிள்ளைச் செல்வங் களுடன் ரமணனும் சம்காரிணியும் அந்த வலையுள் அகப்பட்டு தட்டுத்தடுமாறி வாழ்க்கையை நடத்தினர். அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு அவற்றின் உச்சவிலை முதலிய எல்லாவற்றிற்கும் ஈடு கொடுக்க அவர்களது சம்பளத்தால் இயலாத வேளை களில் சம்காரிணியின் தங்க நகைகள் அடகு வைக்கப் படும் செலவின் இறுக்கம் தாக்குப் பிடிக்க முடியாது என்றாகும்போது சில நகைகளை விற்றும் சமாளித்தார் கள். யாழ்ப்பாணத்து மக்கள் தங்கத்தில் தம்சேமிப்பை முதலிடுவது இதற்காகத்தான். சம்காரிணி. கொடியை அணியாதுவிட்டாலும் அதை அடகு வைப்பதைக்கூட தவிர்த்து வந்தாள். வளர்ந்த, வாழ்ந்த சூழல் அவளுள் வேருன்ற வைத்திருந்த பண்பு கொடி கூறை மெட்டி என திருமணநாளின் ஒவ்வொரு பொருளிலும் அதீதமான விவரிக்க இயலாத மதிப்பார்ந்த பற்றை ஏற்படுத்தி விட்டிருந்தது. அதனால் கொடியை மிகுந்த அக்கறை யுடன் சம்காரிணி பாதுகாத்து வந்தாள். அதற்கும் இடையூறொன்று வந்து சேர்ந்தது.

"எவ்வளவு நாளைக்கு எங்கடை பிரச்சினையை யோசிச்சுக்கொண்டு இப்பிடியே இருக்கிறது? எழும்பிப் போய் வீட்டு வேலையளை முடிச்சிட்டு ஒருக்கால் சாமிஅண்ணை வீட்டுப்பக்கம் போட்டு வாருங்களன்"

திரும்பி வந்தபோதும் பிரமை பிடித்தவள் போல் அமர்திருந்த சம்காரிணியைத் திசை திருப்பும் நோக்கில் ரமணன் கூறியது அவளது காதில் விழுந்த தாகத் தெரியவில்லை. ரமணன் சற்று உரத்து அதையே மீண்டும் கூறினான்.

"ஏதோ சொன்னனீங்களோ?"

சம்காரிணி கேட்கவும் மூன்றாம் முறையாக அதை மீண்டும் ரமணன் கூறினான்.

விருப்பமின்மையை முகத்தில் அப்பிக்கொண்டு அவள் எழுந்து உள்ளே சென்றாள். மதிய உணவு உண்ட பின்னர் அவள் சாமிஅண்ணை வீட்டிற்குப் புறப்பட்டாள். வெயில் வாட்டி எடுத்தது. போருக்கு முன்பு வீதியின் இருபக்கமும் மரங்கள் இருந்தன. போர் எல்லாவற்றையும் மாற்றிவிட்டது. போரின் நினைவு அவளை மீண்டும் தாலிக்கொடியின் நினைவுகளுடன் இணைத்துவிட்டது. அந்த நினைவுகளுடன் ஒன்றித்து அப்படியே நாற்காலியில் அமர்ந்து விட்டாள்.

போரின் கொடுங்கரம் அவர்களை வீட்டை விட்டுத் துரத்தியது. இடம்பெயர்ந்து எங்கெங்கோ

வாழ்ந்த நாட்களில் தேவையான பல பொருட்களைப் பாதுகாக்க அவர்கள் பட்டபாடு! அந்த வேளைகளில் சம்காரிணியின் சிந்தனை தாலிக்கொடியைச் சுற்றிச் சுற்றி வரும்.

இவ்வளவு பாடுபட்டும் அதை இழக்க நேருமோ? இழந்தால்?

எத்தனை பேர் அவளின் கண்முன்னால் அப்படி களவுகொடுத்துவிட்டு நிற்கிறார்கள். அவளின் மனம் அப்படி இழந்தவர்களைக் கணக்கிட்டுக் கொள் கிறது. அதன் இழப்பு இரண்டுவகைப் பாதிப்பைத் தருகிறது. ஒன்று முக்கியமான பொருளொன்றின் இழப்பு. மற்றது பெரியதொரு சொத்திழப்பு. சுமார் ஒன்பது பவுணுக்கு மேற்பட்ட ஒரு நகையைத் தொலைத்துவிட்டு மீண்டும் ஈடு செய்வது எவ்வளவு சிரமம். அதனாலேதான் சுலபமாக அதைச் சுருட்டிக் கொள்ள கள்வர்களும் அலைகிறார்கள். தாலிக்கொடி என்ற ஒன்று ஒருவரிடமும் இல்லாவிட்டால் பிரச்சினை இருக்காது. அது வேறு வகைகளிலும் உதவுகிறதே.

அவசர தேவைகளுக்குக் கொடியை அடகு வைப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். வறுமையின் தேவை அதை விற்கவும் வைத்து விடுகிறது.

கொடியை அடகு வைக்கவும் விற்கவும் மனம் இடம் கொடாதுதான். தேவையின் முக்கியத்துவம் இதற்கு மேலேறிவிட்டால் என்ன செய்வது? தொலைவதை விட இது பரவாயில்லை.

சம்காரிணியின் மனதினுள் ஆழ வேரோடி யிருந்த தாலிக்கொடியின் முக்கியத்துவ உணர்வை போர்க் காலம் ஏற்படுத்திய இச்சிந்தனைகள் மெல்ல மெல்ல கெல்லிஅறுக்க ஆரம்பித்தன. கொடியைப் பாதுகாப்பதில் எதிர்கொண்ட சிரமங்கள் சில சமயங்களில் அதை ஒரு சுமையாகவும் கருத வைத்தன..

1995ஆம் ஆண்டு இடப்பெயர்வு அவர்களை மூச்சடங்கச் செய்தவேளையில் மகன் வாரணனை எப்படியாவது வெளியே அனுப்பவேண்டும் என்ற முடிவிற்கு வந்தார்கள். அதற்குப் பணம் தேவைப் பட்டது. பாடுபட்டுத் தேடியவை எவையும் இல்லா நிலையில் தாலிக்கொடியை அடகு வைக்கலாம் என்று ரமணன் தயக்கத்துடன் கூறினான்.

விற்பதைவிட குறைவான பணமே அடகு வைத்தால் கிடைக்கும். அதன் பின் கடனுக்கு வட்டி கட்ட வேண்டும். ஆனபடியால் அதை விற்றுவிடலாம் என்று சம்காரிணி கூறியபோது ரமணன் அதிர்ச்சியும் ஆச்சரியமும் கலவையிட திகைத்துப்போனான். வாரணனால் அதை ஒப்புக்கொள்ளவே இயலவில்லை.

"வேண்டாம் அம்மா. அடகு வைப்பம். நான் உழைச்சு அதை மீண்டு தருவன்"

அவன் கெஞ்சினான்.

"உனக்கு நிறையப் பொறுப்பிருக்கடா. நாங்கள் உழைச்சுத் தேடினதெல்லாம் இழந்திட்டம். பள்ளிக்கூடமெல்லாம் காயக்காறரைப் போட்டு வைத்தியம் நடக்குது. நீங்கள் படிக்கவேணு மெண்டு கண்ட கனவெல்லாம் கனவாயே போச்சு. இரண்டு பொம்பிளைப் பிள்ளையளும் உன்ரை பொறுப்புத்தான்."

அன்று கலங்கிய கண்களுடன் சம்காரிணி கூறி யதை வாரணன் நிறைவேற்றினான். இரண்டு சகோதரி களுக்கும் சீதனம் கொடுத்து திருமணஞ் செய்து வைத்தான்.

உட்புறம் வந்த ரமணன் சம்காரிணியைப் பார்த்துவிட்டு "சாமிஅண்ணை வீட்டுக்குப் போகேல்லையோ?" எனக் கேட்டபோதுதான் தான் பழைய நினைவுகளுட் சிக்குண்டு நீண்ட நேரம் இருந்து விட்டதை அவள் உணர்ந்தாள். இனிப் போய் பயனில்லை.

அவர்களுக்கு உதவவேண்டும் என்று அவள் விரும்பினாள். ஆனால் திருமண வீட்டுப் பக்கம் போகவே விருப்பமில்லாதிருந்தது. போகாமலே நாட்களைக் கடத்தினாள்.

திருமணத்தினன்று போகத்தானே வேண்டும். போகாமல் எப்படி தவிர்க்கலாம்? எந்த வழியும் புலப் படவில்லை. கலியாண நாளும் வந்துவிட்டது. எதுவும் செய்ய இயலாது புறப்படவேண்டிய கட்டாயம்.

கலியாணவீடு என்றதுமே தங்கள் வீட்டில் நடைபெற்ற திருமணங்களும் அவற்றின்போது தன் கொடிக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவமும் நினைவுச் சரங்களாகி சம்காரிணிக்குள் புகுந்து கொண்டன.

முதலாவது திருமணத்திற்கு ஆயத்தங்கள் நடந்தபோதுதான் சம்காரிணிக்கும் கொடியொன்று வாங்கித்தர ஆயத்தமானான் வாரணன்.

"இன்னுமொரு கலியாணம் நடத்த வேண்டிய பொறுப்பிருக்கடா உனக்கு. அதை மறந்துபோனியோ?"

"மறக்கேல்லை அம்மா. ஆனால் கலியாண வீட் டிலை நீங்கள் வெறுங்கழுத்தோடை நிக்கவிட முடியுமோ?"

"நான் வெறுங்கழுத்தோடை நிக்க மாட்டன். சங்கிலி, மஞ்சள் கயிறு.."

"அதில்லை அம்மா"

இடைமறித்து வாரணன் பேசத்தொடங்கவும் ஒரு பெட்டியைத் திறந்து காட்டினாள் சம்காரிணி. அதனுள் தாலிக் கொடியொன்று மின்னியது. அதை வாங்கிப் பார்த்த வாரணன் அது தங்கமுலாம் பூசப்பட்டதென்பதைப் புரிந்து கொண்டான்.

"அம்மா, இது வேண்டாம்"

"இது இப்போதைக்கு உன்னுடையதும் அப்பா வுடையதும் கௌரவத்தைக் காப்பாற்றப் போதும்."

சம்காரிணியின் பிடிவாதத்தை அன்று மட்டுமல்ல அடுத்த மகளின் திருமணத்தின்போதும் மாற்ற முடிய வில்லை. தங்கையின் கணவனாக வரவிருந்தவன் திருமணச் செலவு முழுவதையும் பெண் வீடுதான் தரவேண்டும் என்று கூறிவிட்டான். ஆகவே அந்தத் திருமணத்திற்கு தாலியும் கொடியும் வாரணனின் பணத்தில் செய்யப் பட்ட போது அம்மாவிடம் மீண்டும் வந்தான் வாரணன். சம்காரிணி ஒரேயடியாக மறுத்துவிட்டாள்.

அடுத்து வாரணனின் திருமணமும் வந்தது. இம்முறை எப்படியாவது தங்கத்தால் கொடி செய்து அம்மாவிற்குக் கொடுத்துவிடுவது என்று அவன் தீர்மானித்தான். அம்மாவைச் சம்மதிக்க வைக்க வேண்டுமே. வாரணன் சென்றபோது " அப்பன்,

ஒவ்வொன்றையும் நல்லாய் யோசிச்சுத்தான் நான் செய்தனான்.அப்பா எங்கடை கலியாணத்தில் கட்டினது எண்டதாலை எனக்கு அதிலை ஒரு மதிப்பு இருந்த தெண்டது உண்மைதான். ஆனால் அதைக் கட்டுறது கௌரவம் எண்டு நினைச்சு அதாலை ஆபத்துகளிலை மாட்டுப்படுகிறது விசர்தனம். எங்களுடைய தேட்டம் எங்களோடை இருக்கிறது பாதுகாப்பு எண்ட நிலை இருந்தவரை அந்தக் காரணத்துக்காக கொடி போட்டுத் திரிஞ்சிருக்கலாம். இப்ப அப்பிடி இல்லை.நாங்கள் எங்களோடை வைச்சிருந்தும் பாதுகாக்க முடியாத காலம்.அதைப் பறிக்கிறத்துக்காக உயிரைக்கூட எடுக்கிற ஈவிரக்க மில்லாத ஒரு கூட்டமே அலையுது. உயிரின்ரை மதிப்பே தெரியாத அது தாலிக்கொடிக்கு உரிய மதிப்புக் கொடுக்குமே.? அதுக்கு அதின்ரை நிறைதான் தெரியும். நீ வாங்கப்போற கொடிக்கு அப்பா கட்டினது எண்ட மகத்துவமிருக்குமே?. பிறகு ஏன் பிரச்சினையை விலைக்கு வாங்கவேணும்? எனக்குப் போலிக் கௌரவம் தேவையில்லை. இப்ப நீங்களெல்லாரும் நல்லாயிருக்கிறீங்கள். நான் இந்த போலிக்கொடியைக் கட்டினாலும் அதைப் பவுண் எண்டுதான் எல்லாரும் நினைப்பினம்."என ஒரு பிரசங்கத்தையே சம்காரிணி செய்து முடித்தாள்.

வாரணனால் எதுவும் செய்ய முடியவில்லை. மூன்று திருமணங்களின்போதும் சம்காரிணியின் கழுத்திலிருந்த அதற்கு இனி எந்த வேலையுமில்லை என்று எண்ணி அக்கறையற்று அதை வைத்தபோது தான் அது தேவைப்படும் சடங்கு ஒன்று இன்னும் இருப்பது நினைவிற்கு வந்தது. மரணத்தின் பிடிக்குள் சம்காரிணி சிக்குப்பட்டாலும் சரி ரமணன் அகப் பட்டாலும் சரி மரணச்சடங்கின்போது "தாலிக் கொடி எங்கே?" என்று கேட்பார்கள். உயிர் போன உடலுக்குச் செய்யும் கிரியைகளின்போதும் அதற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். அதைப் பக்குவமாக வைத்திருந்தாள் சம்காரிணி. மரணத்தின் முன்பே அவை அவளிட மிருந்து விடைபெறப் போகின்றன என்பதை அவள் அறிந்திருக்கவில்லை. இப்போது தாலிகூட இல்லாது..

திருமண மண்டபத்திற்குச் செல்வதற்காக ஏனையோருடன் பேருந்தில் ஏறி அமர்ந்தாலும் அவர்களைப்போல் சிரிப்பும் மகிழ்வுமாக இருக்க அவளால் இயலவில்லை.மனம் மட்டுமல்ல உடலும் பதறியது. அந்த நினைவுகள்...அந்த நினைவுகள்...

முகந்தெரியாத ஒருவன் அவளுடைய இரு கரங்களையும் பின்புறமாகப் பிணைத்துவிட்டு கழுத்தி லிருந்த மஞ்சள் நூலுடன் தாலியைக் கழற்றி அவளது கண்முன் தூக்கிப் பிடித்து அந்தக் காரிருளில் அவளுக்குத் தெரிவதற்காக டார்ச் ஒளியைப்பாய்ச்ச அந்த ஒளி வட்டத்துள் மஞ்சள் நூலில் அசைந்து அசைந்து ஒளிர்ந்த தாலி!

"உன்னிடமிருந்து விடைபெறப்போகிறேன்" என்று அது கூறியதை அவள் புரிந்துகொள்ள வில்லையோ?

அவன் ஒரு தமிழன் என சம்காரிணி உறுதியாக நம்பினாள். அதனால் தாலி மட்டும் எங்காவது இருக்கலாம் என இன்றுவரை ஒரு நப்பாசை மனதின் மூலையொன்றுள் மறைந்திருந்து அவளைத் தேட வைத்துக்கொண்டிருந்தது. மரணச் சடங்கின்போது தேவை என அவள் கருதவில்லை. வந்திருப்போரின் வாய்களுக்கு அவலாக ஒரு காட்சி அங்கு அரங்கேறு வதை விரும்பாததாலேயே அவள் கொடியை வைத்திருந் தாள். அதையும் அவன் எடுத்துச் சென்றிருந்தான்.

தாலி அப்படிஅல்ல.ரமணன் முதன்முதலாக அவளின் கழுத்தில் அணிவித்தது. அதன்மேல் அவளுக் கிருக்கும் பற்று.. இல்லை... ஆசை... இல்லையில்லை... பக்தி...அதை அவளால் விவரிக்க முடியாது. அதை அவளைப் போன்ற பெண்ணால் மட்டுமே உணர முடியும். அந்தத் தாலியை...

சம்காரிணியின் மண்டைக்குள் ஏதோ கொதித்துப் பொங்குவது போல்....

எழுந்து ஓடிவிட அவளது கால்கள் பரபரத்தன. அவள் எழுந்து நின்றாள். அருகிலிருந்த ரமணன் கைகளைப்பிடித்து அவளை அமரச் செய்தான். அவளது கையை இதமாக அழுத்தி ஆசுவாசப்படுத்த முயன்றான். தழும்பி வரும் கண்ணீருடன் ஏறிட்ட அவளது விழிகள் விம்மி அழுதுவிடுவாளோ எனப் பயமுறுத்தின.

மண்டபத்தில இறங்கியதும் மனைவியின் கையைப் பிடித்தபடியே ரமணன் நடந்தான். இருக்கை யில் அமர்ந்ததும் சம்காரிணி எதையும் பார்க்க விரும்ப வில்லை. மண்டபத்தில் இருப்போரிடம் ஆசி பெறுவ தற்காகக் கொண்டுவரபடவிருக்கும் கூறைத்தாம்பாளம். கும்பத்தின் மேல் சாத்தப்பட்டு மணமகனிடம் கொடுப் பதற்கு தயாராகப்போகும் தாலிக்கொடி, இருகைகளை யும் கூப்பி இறைவனை பிரார்த்தித்தவண்ணம் மணமகள் இருக்க மணமகன் மகிழ்வு பொங்க அவளது கழுத்திலே அணியவிருக்கும் மாங்கல்யம் எதையுமே அவள் பார்க்க விரும்பவில்லை. கண்களை இறுக மூடிக்கொண்டாள். அப்போது கண்களின் முன் ஒளி வட்டத்துள் மஞ்சள் நூலில் அசைந்துஅசைந்து ஒளிர்ந்த தாலி! மூடிய இமை களின் தடையைத் தாண்டி வெளிவரத் துடித்த கண்ணீர்.

"அங்கை பாருங்களன். இவை வித்தியாசமாய் கலியாணம் நடத்துகினம். ஒருக்கால் பாருங்களன்."

கிசுகிசுத்த குரலில் வந்த ரமணனின் கெஞ்சல் சம்காரிணியின் கண்களைத் திறக்கச் செய்தது.

மணமேடை வித்தியாசமாகத் தோற்றம் அளித்தது.

சிறிது நேரத்தில் மணமகனை தோழன் அழைத்து வந்து மணவறையில் இருக்க வைத்ததும் தோழி மண மகளை கூட்டி வந்து அருகில்இருக்க வைத்தாள். உறவினருள் வயதில்மூத்த பெரியவர் மேடைக்கு வந்தார். இல்லறத்தின் சிறப்பு, கணவனும் மனைவியும் எவ்வாறு வாழவேண்டும் என்ற அறிவுரை என சில நிமிடங்கள் பேசிய அவர் மணமக்களின் விவரம் கூறி இருவரும் இணைந்து இல்லறம் நடத்த இருப்பதாகவும் அதற்குச் சான்றாக மங்கல நாணை மணமகன் மணமகளுக்கு அணிவிப்பார் என்றும் தெரிவித்தார். அவர் வாழ்த்தி எடுத்துக்கொடுத்த மங்கல நாணை மணமகன் கையில் எடுக்கிறான். அது மஞ்சள்நூல். அதில் மஞ்சள் இணைக்கப்பட்டிருந்தது.

சுயமற்ற சித்திரம்

இரவை எறிந்தேகும்
பயண வழியொன்றில்...
முகங்காட்டும்,
ஒளிப்பூக்களின் சிரிப்பொலியாய்....
நேற்றைய பாடலை,
மீட்டி நகர்கிறது....
சித்திரங்களின்...வண்ணங்கள்.


இரவை ஸ்பரிசிக்கும்; வானம்,
சுயந்தேடியலைந்து மங்கிற்று.
தூரத்து நிலவின் காதுகளில்...
ஒலித்துக்கொண்டிருக்கும்
எமக்கான இராகங்கள்...
காற்றின் இடுக்குகளில்
உறைந்திருக்கலாம்.

எம்மைச் செதுக்கும் வரிகளை,
யாரும் எழுதாது போயினும்,
வலித்துளிகள்...
சொட்டிக்கொண்டிருக்கும்,
சப்தத்திற்கு,
எமக்கான இராகங்கள்....
புரியாமலிருக்க வாய்ப்பில்லை.

புன்னகைகளைத் தேடியெடுத்து
இரவின் முகமெங்கும்,
பூசியொளி கொடுக்கும்
உயிர்ப்பாடலொன்றை
யார் எழுதப்போகிறார்கள்?

சிரிப்புலர்த்தும் ஒளிப்பூக்களுக்கும்
சுயந்தேடும் வானிற்கும்,
சித்திரங்களின் வண்ணங்கள்..
இன்பமூட்டலாம்.
எமக்கான இராகங்களோடு,
தூரத்திலிருந்தழும்,
நிலவின் கனவுக்கும்
எமையழுத்தும்,
வலியின் பாடலுக்கும்,
இன்பமூட்டும் வழியை,
வரையுமட்டும்,
எந்தச்சித்திரமும்,
சுயம் பெறப்போவதில்லை.

– சு.க.சிந்துதாசன்



ஒளிப்படம்: நீங்கள்

துளிப்பா

1
அறிவற்ற கூட்டம்
அருகில் அறிஞன்
கோமாளி

2
உடும்பு வேட்டை
உயிர் கொடுத்து அலையும் இளைஞர் கூட்டம்
வீட்டில் விருந்தாளிகள்

3
வென்றது இந்திய சாதனை
தோற்றது காந்தீய சோதனை
நாள் 26.09.1987

4
தியானத்தில் புத்தன்
அநியாயத்தில் பக்தன்
அந்தரத்தில் மக்கள்

5
மூலதனச் சிறைப் பிடியில்
புள்ளடி இட்ட கைகள்
தேர்தல் வாக்குறுதி


6
வெள்ளத்தில் மக்கள்
ஊர்வலத்தில் பக்தர்கள்
அந்தரத்தில் மனிதம்

– செல்லக்குட்டி கணேசன்

கூடைக்குள் தேசம் சுமப்பவர்களாய்

கூடைக்குள்
இந்த தேசத்தை சுமக்கும்
அவர்களின்
வாழ்வு இன்னும்
ஆயிரம் ரூபாக்
கோசங்களாய்
எவர் காதிலும்
விழாத ஏக்கங்களாய்
எம்
மலையக சோதரர்
படுதுயர் கண்டு துடிக்கிறோம்
சக தமிழராய்...
தமிழருக்கு
எதையும்
தரமறுக்கும்
இந்தத் தேசத்தில்
ஏன் வந்து
பிறந்தோம்
பதவிக் கதிரைகளுக்காய்
மக்களின்வாழ்வை
அடகு வைக்கும்
எம்மினக்
கோடாரிக் காம்புகள்
உள்ளவரை
எப்படி
விடியும்
எம் வாழ்வு

– புலோலியூர்
வேல்நந்தகுமார்



சந்திப்பு: வெற்றி துஷ்யந்தன்

ஈழத்து இலக்கிய உலகில் நன்கறியப்பட்ட மூத்த நாடறிந்த எழுத்தாளரான குப்பிழான் ஐ சண்முகன் அழகியல் ரீதியான பல சிறந்த சிறுகதைகளை எழுதியுள்ளார். உயர்தர வகுப்புகளில் பொருளியல், தமிழ் ஆகிய பாடங்களிலும், இடைநிலை வகுப்புகளில் சமூகக்கல்வி, சமயநெறி ஆகிய பாடங்களிலும் ஆசிரியராக சேவையாற்றி பல மாணவர்களின் முன்னேற்ற பாதையில் அச்சாணியாக இருந்துள்ளார். இவர் கலாபூஷணம் விருது, ஆளுநர் விருது, பேராதனைப் பல்கலைகழக தமிழ் சங்கத்தின் 'சங்கச் சான்றோன்' விருது உட்பட பல விருதுகளை பெற்றுக் கொண்டவர். கோடுகளும் கோலங்களும், சாதாரணங்களும் அசாதாரணங்களும், உதிரிகளும், ஒரு பாதையின் கதை, ஒரு தோட்டத்தின் கதை என 5 சிறுகதைத் தொகுதிகளையும், பிரபஞ்ச சுருதி என்னும் கவிதைத்தொகுதியையும், அறிமுகங்கள் விமர்சனங்கள் குறிப்புகள் என்னும் பத்தி எழுத்து தொகுப்பையும் வெளியிட்டுள்ளார்.

வெற்றி துஷ்யந்தன்:
எழுத்துத் துறையில் உங்கள் ஈடுபாடு எப்போது ஆரம்பித்தது? அதற்குக் காரணமானவர்களைக் கூறுங்கள்?

குப்பிழான் ஐ.சண்முகன்
எனது ஏழெட்டு வயதிலிருந்தே வாசிக்கின்ற பழக்கம் இருந்தது. எங்கள் வீட்டில் வீரசேகரி வார வெளியீடு எடுக்கின்ற பழக்கமிருந்ததால் அதை பார்த்து இயல்பாகவே வாசிக்கும் பழக்கம் வளர்ந்தது. அந்தக் காலங்களில் வார வெளியீடுகளில் கதைகள், தொடர்கதைகள், சித்திரக் கதைகள் என்பன வெளிவரும். அவற்றை வாசிக்கின்ற தொடர்ச்சியால் எழுதும் ஆர்வம் ஏற்பட்டது. பின்னர் பாடசாலைகளில் நிகழும் கட்டுரை, கதை போட்டிகளில் எழுதத் தொடங்கினேன். பாடசாலை காலம் முழுவதுமே எனக்கு கற்பித்த ஆசிரியர்கள் பலர் என்னை ஊக்குவித்தார்கள். குறிப்பாக ஆசிரியர் சிவஞானம், நவரத்தினம், அம்பிகைபாகன், சோமசுந்தரம், பண்டிதர் செ.நடராசா ஆகியோரை குறிப்பிடலாம். இவர்களுள் கவிஞர் அம்பி என இலக்கிய உலகில் நன்கறியப்பட்ட அம்பிகைபாகன் சேர் பாடசாலை பருவத்தின் பின்னும் எனது இலக்கிய முயற்சிகளின் ஊக்குவிப்பாளனாகவும் களம் அமைத்து தந்தவராகவும் இருந்தார். பின்னர் இலங்கை வானொலி இளைஞர் மன்றத்தில் எனது எழுத்து முயற்சிகளை ஊக்குவித்தவராக தகவம் அமைப்பின் நிறுவுனர் இராசையா சேர் விளங்கினார். பின்னர் சஞ்சிகைகள், பத்திரிகைகள் என எனது படைப்புகள் வெளிவரத் தொடங்கிய பின்னர் நண்பர்களினதும், அபிமானிகளதும் கருத்துகள் என்னை ஊக்கப்படுத்தின.

வெற்றி துஷ்யந்தன்
வடமராட்சியை புகுந்த இடமாகக் கொண்டு வடமராட்சியின் மூத்த எழுத்தாளராக மதிக்கப்படுபவர் நீங்கள். ஆனாலும் "குப்பிழான் சண்முகன்" என்ற பெயரிலேயே எழுதி வருகிறீர்கள். குப்பிழானின் சிறப்புகள் பற்றிக் கூறுங்கள்?

குப்பிழான் ஐ. சண்முகன்
குப்பிழான் எனது பிறந்த மண். நான் எனது 18, 19 வயதுவரையில் ஒரு நாளும் தவறாது ஊடாடிய மண். அந்த மண்ணின், மக்களே எனது வாழ்வின் அடிப்





படையை தீர்மானித்தனர். அந்த மண்ணே எனது வாழ்வெனும் கோபுரத்தின் அடி அத்திவாரமாக திகழ்கிறது. இப்போதும் நான் பிறந்த மண்ணையும், மக்களையும் கூடுதலாக நேசிக்கின்றேன். அங்குள்ள கோவில்களும், பாடசாலையும், செழிப்பான செம்மண் நிலங்களும் ஏனைய நிறுவனங்களும் இப்போதும் என்னை ஆகர்சித்துக் கொண்டேயிருக்கிறன. எனவே தான் வடமராட்சியை புகுந்த இடமாகக் கொண்ட போதும், இப்போதும் குப்பிழான் என்னும் நிலைநிறுத்தப்பட்ட எனது அடையாளத்தோடு எழுதுகிறேன்.

வெற்றிதுஷ்யந்தன்
வடமராட்சியில் உள்ள வாழ்வு பற்றிக் கூறுங்கள்..

குப்பிழான் ஐ.சண்முகன்
நான் திருமணமான பின்பே வடமராட்சியில் ஊடாடத் தொடங்கினேன். அதன் தொடர்ச்சியாகவே வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றினேன். இப்போதும் இனி எப்போதும் வடமராட்சி மண்ணிலேயே வாழ்வு தொடரும். மனித சமுதாயத்தில் எங்குமுள்ள மனிதர்களை போலவே இங்குள்ள மனிதர்களும் வாழ்கிறார்கள். வாழ்வு எங்கும் ஒரே மாதிரியே உள்ளது. ஆனால் காலநிலை, அமைவிடம் என்பன வற்றிற்கு ஏற்ப சில வேறுபாடுகள் இருக்கலாம். அந்தவகையில் வடமராட்சி மக்கள் பொதுவாகவே கல்வியில் ஊக்கமுள்ளவர்கள். கடின உழைப்பிற்கு அஞ்சாதவர்கள். எப்பொழுதும் எவ்விதத்திலும் முன்னேற வேண்டுமென துடிப்பவர்கள்.

வெற்றி துஷ்யந்தன்
வடமராட்சியில் இளந்தலைமுறையினரிடம் இலக்கிய ஆர்வம் எவ்வாறு உள்ளது?


குப்பிழான் ஐ.சண்முகன்
நானறிந்த வகையில் எங்கும் போலவே எல்லோரிடமும் இலக்கிய ஆர்வம் உள்ளதென்று நான் சொல்ல முடியாது. ஆங்காங்கே இலக்கிய ஆர்வமுள்ள இளைஞர்கள் முகிழ்ந்து கொண்டே இருக்கிறார்கள். அவ்வாறே வடமராட்சியிலும் இளைய தலைமுறையினரிடையே கலை இலக்கிய ஆர்வம் தொடர்ந்து கொண்டே வருகிறது.

வெற்றி துஷ்யந்தன்
பாடசாலை மாணவர்களிடையே வாசிப்பு ஆர்வம் குறைந்து கொண்டு செல்வதாகக் கூறுகின்றார்கள். அநுபவம் நிறைந்த ஆசிரியர் என்ற வகையில் அவர்களின் ஆர்வத்தை எவ்வாறு அதிகரிக்கச் செய்யலாம்?

குப்பிழான் ஐ.சண்முகன்
முன்னைய காலங்களில் கதைகளை சுவாரஸ்யமாக சொல்வதன் ஊடாக மாணவர்களின் ஆர்வத்தை தூண்டக் கூடியதாக இருந்தது. இப்போது நவீன தொடர்பு சாதனங்களின் ஆக்கிரமிப்பினால் அவர்களது கவனமும் ஆர்வமும் திசைதிரும்பி விட்டன. ஊடகங்களின் ஆக்கிரமிப்பிலிருந்து அவர்களை மீட்டெடுப்பது கடினமான ஒன்றே என்றாலும் சிலவிதங்களில் முயற்சி செய்து பார்க்கலாம். மாணவர்களிடையே இலக்கியம் சார்ந்த- நவீனத்துவம் சார்ந்த - அனுபவம் சார்ந்த கதைகளை எடுத்துக்கூறுவதன் மூலமும், நூல்களை வாசித்துக் காட்டுவதன் மூலமும் அவர்களிடையே ஆர்வத்தை தூண்டலாம் என நினைக்கிறேன். அத்துடன் ஒரு புத்தகத்தை வாசிக்கக் கொடுத்து அவர்களிடையே கருத்துப் பரிமாற வைத்து போட்டிகள் வைத்து பரிசுகளை வழங்குவதன் மூலம் வளர்பருவ மாணவர்களிடையே வாசிக்கும் ஆர்வத்தை தூண்ட முயற்சிக்கலாம். ஒட்டு மொத்தத்தில் மாணவருக்கு வழிகாட்டியாக திகழும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள், நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் இதனை சாத்தியமாக்க முயற்சிக்கலாம்.

வெற்றி துஷ்யந்தன்
ஈழத்தில் அழகியல் ரீதியான சிறுகதைகளை எழுதியவர்கள் எனக் கூறப்படும் ஒரு சிலரில் நீங்களும் ஒருவர். அழகியல் ரீதியான படைப்புகள் என எவற்றை நீங்கள் கருதுகின்றீர்கள்.

குப்பிழான் ஐ.சண்முகன்
எதையெல்லாம் அழகென நாம் கருதுகின்றோமோ அவையெல்லாம் அழகுதான். உண்மையில் அழகென்பது மனம் பற்றிய ஒரு கோட்பாடு தான். ஒருவர் அழகென கருதுவதை இன்னொருவர் அவ்வாறு கருதாமல் விடலாம். ஒருவர் அசிங்கமெனக் கொள்வதை இன்னொருவர் அழகாக கொள்ளலாம் என்றாலும் ஆத்மார்த்தமான இயற்கை




மீதான லயிப்பை நாம் அழகென்று சொல்லக் கூடும். இதில் இயற்கைக் காட்சிகள், உயிரினங்கள், ஆண் பெண் வகையறாக்கள் என எல்லாமே அடங்கும்.


வெற்றி துஷ்யந்தன்
உங்கள் இலக்கியப் படைப்புகளின் விபரங்களைக் குறிப்பிடுங்கள்?

குப்பிழான் ஐ.சண்முகன்
பொதுவாக இலக்கிய படைப்புகள் என கருதப்படும், கதை, கவிதை, கட்டுரை, நாடகம் என எல்லாவற்றிலுமே நான் முயன்றிருக் கிறேன். என்றாலும் சிறுகதையிலேயே எனது ஈடுபாடு அதிகமாக இருந்தது. இதுவரை ஏறத் தாழ 50 இற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளேன். சில கதைகள் பிரசுரகளம் காணாமலே போய்விட்டன. நானெழுதிய சிறு கதைகள் கோடுகளும் கோலங்களும், சாதாரணங்களும் அசாதாரணங்களும், உதிரி களும்..., ஒரு பாதையின் கதை, ஒரு தோட்டத்தின் கதை என நூல்களாக வெளி வந்துள்ளன. அத்துடன் பிரபஞ்ச சுருதி எனும் கவிதை தொகுப்பும், அறிமுகங்கள் - விமர் சனங்கள் - குறிப்புகள் என்ற பத்தி எழுத்துக் களின் தொகுப்பும் நூல்களாக வெளி வந்துள்ளன. இன்னும் எனது கட்டுரைகள், வாழ்வ னுபவங்கள் என்பன நூல்களாக வெளி வர வில்லை சிலவேளைகளில் வெளிவரக் கூடும்.

வெற்றி துஷ்யந்தன்
அண்மைக்காலங்களில் உங்கள் படைப்புகளில் ஏதா வது மாற்றங்களைச் செய்ய முயன்றிருக்கிறீர்களா?

குப்பிழான் ஐ.சண்முகன்
ஏற்கெனவே வெளிவந்த எனது படைப்புகளை பற்றி "இவர் ஒரே பாணியில் எழுதுகிறார்"









என்ற வகையிலான ஒரு விமர்சனம் வந்தது. எனவே நானெனது படைப்புகளை பற்றிய மீள் பார்வையில் சொல்லும் முறையில் சில மாற்றங்களை செய்ய முயன்றிருக்கிறேன். என்றாலும் எனது இயல்பான கதியில் எழுதவே எனக்கு உந்துதல்கள் ஏற்படுகின்றன.

வெற்றி துஷ்யந்தன்
"பின்நவீனத்துவம்" பற்றிய ஆர்வம் கொண்ட படைப்பாளிக்கு உங்கள் அனுபவத்தில் என்ன கூற விரும்புகிறீர்கள்?

குப்பிழான் ஐ.சண்முகன்
நீங்கள் நவீனத்துவம், பின் நவீனத்துவம் முதலிய கோட்பாடு களை பற்றி படியுங்கள்; அறிந்து கொள்ளுங்கள். ஆனால் உங்கள் படைப்புகளில் அவற்றை வலிந்து புகுத்த முனையாதீர். உங்கள் இயல்புக்கு ஏற்பவே நீங்கள் எழுதுங்கள். கோட்பாட்டடிப்படையில் எழுத முயன்ற பலரும் அதில் தான் தோல்வி கண்டதாகவே எனக்கு சொல்லியிருக்கிறார்கள். எனவே இலக்கியத்தில் மட்டு மல்ல, வாழ்க்கையிலும் நீங்கள் எந்தக் கோட்பாடுகளைப் பற்றியும் படியுங்கள். நல்லவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லாதவற்றை தள்ளி விடுங்கள். இயல்பாகவே இருங்கள்.

வெற்றி துஷ்யந்தன்
உங்கள் படைப்புகளில் செல்வாக்கு செலுத்தியவர்கள்" என எவரையும் குறிப்பிட விரும்புகிறீர்களா?

குப்பிழான் ஐ.சண்முகன்
நம்முன்னோர் அளித்த அருஞ்செல்வங்கள் என்ற வகையில் அவர்களுள் நான் படித்தவர்கள் எல்லோருமே ஒரு வகையில் என்னில் செல்வாக்கு செலுத்தியுள்ளார்கள் எனக் கூற முடியும். என்றாலும் எனக்கு படைப்பு உந்துதல் கூடுதலாக முகிழ்ந்த காலங் களில் என் மீது செல்வாக்கு செலுத்திய எழுத்தாளர்களாக பாரதி, புதுமைப்பித்தன், மௌனி, கு.ப.ரா., லா.சா.ரா, தி.ஜானகிராமன் என்போரை சொல்வேன். யோசித்தால் பலரை சொல்ல முடியும்.

வெற்றி துஷ்யந்தன்
இன்றைய நூல் வெளியீட்டு விழாக்களின் போக்குகள் பற்றி...

குப்பிழான் ஐ.சண்முகன்
இன்று நூல் வெளியீட்டு விழாக்கள் வழக்கமான சம்பிரதாயமான பூர்வமான ஒன்றாகவே அக்காலம் தொட்டு இருந்து வருகின்றன. சில விழாக்கள் பணத்தை மையப்படுத்திய விழாக்களாக அமைந்து விடுகின்றன. சில விழாக்கள் தங்கள் சமூக அந்தஸ்தை காட்டுபவ னாக அமைந்து விடுகின்றன. சில விழாக்கள் சமூக அங்கீ காரத்தை கோரி நிற்கின்றன. சில விழாக்களில் நூலாசிரியர் தனது நோக்கங்களை வெளிப்படுத்தப் பார்க்கிறார். உதாரணமாக 'இதில் வரும் வருமானம் குறித்த நல்ல நோக்கத்திற்கு பயன்படுத்தப்படும்' என்ற அறிவிப்புகளோடு வரும் விழாக்களும் நடக்கின்றன.

பொதுவாகவே எழுத்தாளன் தன்னை, படைப்பை சமூகத்திற்கு அறிமுகப்படுத்துபவையாக விழாக்கள் அமைகின்றன.

வெற்றி துஷ்யந்தன்
இன்று இலக்கிய விமர்சனத்தின் நிலை பற்றிக் கூறுவீர்களா?

குப்பிழான் ஐ.சண்முகன்
இன்று மட்டுமல்ல என்றுமே இலக்கிய விமர்சனம் என்பது பல கூறுகளை கொண்டதாகவே இருக்கிறது. தமிழில், முதுகு சொறியும் விமர்சனம், பாராட்டும் விமர்சனம், தூக்கி எறியும் விமர்சனம், தட்டிக் கொடுக்கும் விமர்சனம், தனக்குபட்டதை கூறும் விமர்சன மென விமர்சனங்கள் பல கூறுகளாக கிளை விடுகின்றன. இப்போதும் இங்கே இதுவே நிலை.

வெற்றி துஷ்யந்தன்
உங்களுடைய சினிமா இரசனை பற்றி...

குப்பிழான் ஐ.சண்முகன்
எனது இளமைக்காலங்களில் படங்களை பார்க்க கிடைக்க வில்லை. ஓரளவு எனது காலில் நான் நிலையூன்றிய பின்னரே படங்களை பார்க்கத் தொடங்கினேன். ஆரம்பத்தில் சாதாரண தமிழ் படங்களின் ரசிகனாகவே இருந்தேன். பின்னர் வாசித்த சினிமா தொடர்பான கட்டுரை - புத்தகங்களாலும், ஈடுபாடு கொண்ட நண்பர்களாலும் நல்ல படங்களை பார்த்து ரசிக்கின்ற ஒருவனாக மாறினேன். அவ்வாறான தமிழ் படங்கள் அபூர்வமானவை அல்லது இல்லையென்றே சொல்லலாம். கொழும்பில் வாழ்ந்த காலங்களில் திரைப்பட விழாக்களினூடாக உலகத்தர மான திரைப்படங்களோடு அறிமுகமானேன் சத்தியஜித்ரே, மிர்ணாள் சென், லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ், அக்குறோ குருசேவா, ஜசன்டைன் போன்ற சினிமா மேதைகள் இன்னும் பலர் அவர் களின் படங்களை பார்த்து பிரமித்துள்ளேன். சட்டென்று நினைவு வரும் படங்களென பதர்பாஞ்சாலி, இன்ரவியூ, கம்பெரலிய, கொளு கதவத்த, நிதானய, சிதம்பரம், போஸ்ரல் மணியோடர், தாசநிசா, றோமியோ ஜூலியட் இன் டாக்னெஸ், பெஸ்ட் லவ், ரூமென் இன்ற சிற்றி, செவின் சமுறோய்ஸ் இன்னும் பல. இப்போது பல விதங்களில் நம்பிக்கை தரும் தமிழ் திரைப்படங்களும் வெறி வருகின்றன. பண்ணையாரும் பத்மினியும், மதுபானக்கடை, றேடியோப் பெட்டி, சவரக்கத்தி என்பன நினைவிலுள்ளன. சமூகப் பிரச்சினைகளைப் பேசும் நான் இறுதியாக பார்த்த தமிழ் படங்களாக மேற்குத் தொடர்ச்சி மலை, பரியேறும் பெருமாள் ஆகியவற்றை சொல்வேன்.

வெற்றி துஷ்யந்தன்
இளமைக்கால இலக்கிய நண்பர்களுடனான அன்றைய தொடர்புகள் பற்றி சுருக்கமாக கூறுங்கள்?


குப்பிழான் ஐ.சண்முகன்
க.பொ.த உயர்தரம் படித்த காலங்களில் ஏற்பட்ட நட்புக்களையே இலக்கியம் தொடர்பான இளமைக்கால நட்புகள் என்பேன். தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் எட்டாம் ஆண்டு தொடக்கம் உயர்தரம் வரை கற்றேன். அங்கு ஒரே வகுப்புக்களில் இல்லா விட்டாலும் எங்களுடன் படித்தமாவை. நித்தியானந்தன், மகா தேவன்(புகழ் பெற்ற இரசாயனவியல் ஆசிரியர்), பூ.செல்லத் துரை, க.மயில்வாகனம், வே.தேவதாசன் ஆகியோர் இணைந்து யாழ். இலக்கிய நண்பர்கழகம் என்றோர் அமைப்பை தொடங் கினோம். எங்களது வழிகாட்டிகளாக கனக செந்திநாதன், கவிஞர் அம்பி ஆகியோர் இருந்தனர். எமது நிகழ்வுகளில் அப்போது புகழ் பெற்ற இலங்கை எழுத்தாளர்களான எஸ்.பொன்னுத்துரை, செம்பியன் செல்வன், இ.நாகராஜன், வ.பொன்னம்பலம், தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் பங்கு கொண்டுள் ளனர். கழகம் நடாத்திய சிறுகதை போட்டியில் 'பெண் பாவை' எனும் சிறுகதையை எழுதி முதற்பரிசு பெற்ற தெணியான் இப்போது நாடறிந்த எழுத்தாளராக இருக்கிறார். கழகத்தில் பின்னர் சிலோன் விஜேந்திரன், சாந்தன், தேவிபரமலிங்கம், நிமலன் ஆகியோரும் வேறு பலரும் இணைந்தனர். யாழ் கழகத்தின் தொடர்ச்சியாகவே கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகமும் தோற்றம் பெற்றது. கொழும்புக் கழகத்தில் நெல்லை க.பேரன், அ.யேசுராசா, தில்லை கூத்தன், ராஜாஜி ராஜ கோபாலன் அண்ணா இராசேந் திரம், முத்து இராசரத்தினம், இமையவன், கா.சிவபாலன் ஆகியோரும் இணைந்து கொண்டார்கள். இவர்களே எனது இளமைக் கால இலக்கிய நண்பர்கள் ஆவார்கள்.

வெற்றி துஷ்யந்தன்
உங்களுடைய "ஹீரோ" என்ற சிறுகதை கிறிக்கெற் உடன் சம்பந்தப்பட்ட அழகியல் ரீதியான சிறந்த ஒரு விபரணக்கதை. அந்தக்கதை பற்றி...

குப்பிழான் ஐ.சண்முகன்
பொதுவாகவே கிறிக்கெற், உதைபந்தாட்டம் என்பவற்றில் எனக்கு ஈடுபாடு அதிகம். யூனியன் கல்லூரியில் படித்ததால் இது ஏற்பட்டிருக்கலாம். அங்கு படித்ததால் கிறிக் கெற் பற்றிய நுட்பங்களில் ஈடு பாடிருந்தது. எனது மாமனார் தங்கராஜா அக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் மிகவும் புகழ் பெற்ற உதை பந்தாட்ட வீரராக விளங்கினார். எனது நண்ப ரான ராஜதுரை யாழ்மத்திய கல்லூரியில் சகல துறை கிறிக்கெட் வீரராக திகழ்ந்தார். இவர்களது தொடர்பால் இவ் விளையாட்டு களில் ஆர்வம் எனக்கு கூடுதலாக இருந்தது. இளமையில் வாழ்வுச் சூழல் காரணமாக எனக்கு விளையாடக்கூடிய வாய்ப்பு கிடைக்க வில்லை. ஓரளவு வயது வந்த பின்னரே சில வாய்ப்புகள் கிடைத்தன. அதில் ஒன்றை மையப்படுத்திய எனது அனுபவத் தையே இந்த ஹீரோ என்ற கிறிக்கெட் சார்ந்த கதையாக எழுதினேன்.

வெற்றி துஷ்யந்தன்
முடிவாக படைப்புச் சூழலில் புகும் இளையோருக்கான செய்தி என்ன?

குப்பிழான் ஐ.சண்முகன்
நீங்கள் நீங்களாகவே இயல்பாக இருங்கள். மற்றவர்களுக்காக உங்கள் இயல்பினை மாற்றாதீர்கள். தேடித் தேடி வாசியுங்கள். உங்களிற்கு தோன்றுபவற்றை எழுத்தில் எழுதுங்கள். சுய உந்துதல்களால் எழுதுங்கள். வேறென்ன நான் சொல்ல.



உலையும் மனசோடு உலவும் இரவு

சாந்தி நேசக்கரம்

குண்டம்மா ? இன்னும் எவ்வளவு நேரத்தில வாறீங்கள்? அவள் வட்ஸ் அப்பில் எழுதியிருந்தாள். இன்னும் ஒரு மணி நேரத்தில்... பதில் எழுதினேன்.

றெயின் கொலோன் பிரதான நிலையத்தைத் தாண்டி பிராங்போட் நோக்கி ஓடிக்கொண்டிருந்தது.

எத்தனையோ ஞாபகங்களும் மனசுக்குள் அலைபோலோடி வந்து உடையும் நுரைகளாய் மணலோடு கலந்து போவது போல பிள்ளைகளுடன் வாழ்ந்த காலங்களும் அவர்களுடனான ஞாபகங்களும் வந்து வந்து போய்க்கொண்டிருந்தது.

றைன் நதியோரமாக றெயின் ஓடிக் கொண்டிருந்தது. ஆவணிமாதம் ஆற்றோர மெங்கும் பச்சையாகியிருந்தது. ஆங்கங்கே சரக்குக்கப்பல்கள் பயணித்துக் கொண்டிருந்தது. வெயில் ஏறாத காலைநேரம் மரங்களின் முகடு களில் படிந்திருந்த மெல்லிய புகைமூட்டம். அன்றைய காலைப்பொழுதின் றைன்நதியோர அழகை ரசிக்கும் பொறுமையில்லை. ஆனால் கண்கள் தானே அந்த அழகோடு பயணித்துக் கொண்டிருந்தது.

கணணியோடு சிலர், கைபேசிகளோடு பலர், கதைத்தபடி சிலர், கண்களை மூடி நல்ல நித்திரையில் சிலர் என பலவகையான மனிதர்களோடு றெயின் வளைவுகளில் சரிந்தும் நேர்பாதையில் நிமிர்ந்தும் 360கிலோ மீட்டர் வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது.

***

காலை 8.52. அவளது நகரில் இறங்கினேன். அடுத்த தொடரூந்துக்காக மனிதர்களை இடித்துத் தள்ளிக் கொண்டு பலர் ஓடிக் கொண்டிருந்தார்கள். எனது பயணப் பொதியோடு நானும் பயணிகளோடு நடந்து தானியங்கிப் படிகளில் ஏறி கீழிறங்கினேன்.

பிரதான வாசலுக்கு வலதுபுறமாக அடையாளமிடப்பட்ட மலசலகூடத்திற்கு செல்லும் வழியூடாக ஆண்கள் பலரும் பெண்கள் பலரும் ஒரே நிறத்தில் உடையுடுத்தி கைகளில் இனிப்புகள் குடிவகைகளோடு மேலேறி வந்தார்கள்.

அவர்களில் ஒருவன் றோசா நிறத்தில் ரீசேட்டும் கறுப்பு காற்சட்டையும் அணிந் திருந்தான். அவர்களில் சிலர் மலசலகூடப் படிகளில் இறங்கிப் போனார்கள்.

அந்தப்படிகளில் நானும் இறங்கிக் கொண்டிருந்தேன். யாரோ ஒருவனின் கை எனது பின்பகுதில் தட்டிவிட்டுப் போனதை உணர்ந்து திரும்பினேன்.

றோசா நிறத்தில் ரீசேட்டும் கறுப்பு நிறத்தில் காற்சட்டையும் அணிந்தவன் சில படிகள் கீழிறங்கிப் போய்க்கொண்டிருந்தான். தவறுதலாக அவன் கை என்னில் பட்டிருக்கிற தென நினைத்துக் கொண்டேன்.

வெளியில் வந்து அவளின் மாணவர் கள் தங்கிடத்திற்கான தொடரூந்து நேர விபரத்தை தொலைபேசியில் பார்த்தேன். அடுத்த தொடரூந்து வருவதற்கு இன்னும் 26நிமிடங்கள் இருந்தது.

இரு குழுக்களாக ஆண்களும்

பெண்களும் பிரத்தியேக உடைகள் அணிந்து சத்தமாக கதைத்துச் சிரித்து கைகளில் குடிவகைகள் சிகரெட்களோடு நின்றவர்களுக்கு 10மீற்றர் அளவிலான தொலைவில் நானும் நின்று கொண்டிருந்தேன்.

பர்தா அணிந்த பெண்ணொருத்தி பிளாஸ்ரிக் கப்பொன்றை கையில் கொண்டு வந்து ஒவ்வொரு வரிடமும் "பசிக்கிறது காசு" என கை நீட்டினாள். யாரும் அவளுக்கு காசு போடவில்லை. அவள் ஏதோ பேசிக்கொண்டு கடந்து போனாள்.

நான் போக வேண்டிய இடத்தின் பெயரோடு தொடரூந்து வந்தது. பிரதான தொடரூந்து நிலையத்திலிருந்து 6வது தரிப்பிடத்தில் இறங்கினேன். அந்த வீதிக்கு எதிர்ப்புறம் கடந்து நூறுமீற்றர் தொலைவில் அவளது குடியிருப்பு இருந்தது.

4வது மாடியில் இருந்து கீழிறங்கி வந்து எனக்காக அவள் காத்திருந்தாள். தொடரூந்துக் குள்ளிருந்து அவளைக்கண்டு கொண்டேன்.

பாலத்தைக் கடந்து போகும் நடைபாதையில் நடந்து அடுத்தபக்கத்தில் அமைந்திருந்த மேட்டு வீதியில் ஏறி அவளது வீட்டை நோக்கி நடந்தேன். அவள் கைகாட்டிச் சிரித்தபடி நிற்பது தெரிந்தது.

அம்மா...அவள் ஓடிவந்து கட்டியணைத் தாள். குண்டம்மா எப்பிடியிருக்கிறீங்கள்? ஒரு நாய்க் குட்டி போல கட்டி முத்தமிட்டாள். அம்மாவைக் காணும் பசுக்கன்று போல என்னை அழைந்தாள்.

எனது பயணப்பொதியை வாங்கிக் கொண்டாள். 4வது மாடியில் இருக்கும் அவளது அறைக்கும் செல்லும் தானியங்கியில் ஏறினோம்.

15சதுரமீற்றர் அறையில் அவளது உலகத்தை காலம் அமைத்திருந்தது.

சமையல் குளியல் படிப்பு உறக்கம் அனைத்துமே அந்த அறைக்குள்ளே தான். அவ்வப்போது அவளைப் பார்க்க வரும் போது நிலத்தில் சிறிய மெத்தை எனது படுக்கையாகும்.

துளசியிலைத் தேனீர் ஒன்றைப் போட்டு கையில் தந்தாள். அம்மா எனக்கு தேனீர்... எனக் கேட்பவள் இன்று எனக்குத் தேனீர் போட்டுத் தந்தாள்.

அம்மா இண்டைக்கு கடைக்குப் போவமோ? கேட்டாள்.

ஓமம்மா போவம்.

நீண்டகாலம் அவளோடு கடைகளுக்குப் போக வில்லை. அது அவளுக்குப் பெரும் குறையாகவே இருந்து வந்தது. இன்றைய நாளை அவளோடு அவள் விரும்புவது போல கழிப்பது என்பதே எனது எண்ணமும்.

கொஞ்சநேரம் ஓய்வெடுத்துக் கொண்டு அவளோடு புறப்பட்டேன் கடைத்தெருக்களிற்கு. விடியவிடிய மனிதர்களை ஏற்றிச் செல்லும் வாகனங் களும் நிறைந்த மனிதர்களாலும் தனது நிறத்தை மாற்றி யிருந்த யேர்மனியின் பெருநகரங்களில் ஒன்று அது.

வீதிச்சமிஞ்ஞைகளால் அவள் என்னையும் அழைத்துக் கொண்டு பழக்கப்பட்ட வழிகாட்டிபோல நடந்து கொண்டிருந்தாள்.

உடுப்புக்கடைகளுக்குச் சென்றோம். அவள் தனக்கான சில ஆடைகளை வாங்கினாள். எடுக்க விரும்பிய ஆடைகளை நீண்ட வரிசையில் நின்று போட்டுப் பார்த்தாள். ஒவ்வொரு உடுப்பையும் எடுக்கும் போது என்னிடமும் அபிப்பிராயம் கேட்டாள். மதியம் 2மணிவரையும் கடைகளைச் சுற்றினோம்.

உணவகமொன்றில் போய் பீற்சா சாப்பிட்டு 3மணிவரை பீற்சா உணவகத்தில் இருந்தோம். கதைகள் நிறையச் சொன்னாள். தனது படிப்பு பற்றி தன் தோழிகள் பற்றி அவளது கதைகளால் நிறைந்தது பொழுது.

அவள் செய்து முடித்த "ஆசியப்பெண்கள்" பற்றிய ஆய்வுக்கட்டுரைக்காக வாசித்த நூல்கள் ஆய்வுகள் அவற்றில் எழுதப்பட்ட விடயங்கள் பற்றி நிறையவே சொல்லிக் கொண்டிருந்தாள்.

எனது குழந்தை உலகத்தை எப்படியெல்லாம் கற்றுக் கொள்கிறாள் என்பது பெருமையாகவும் வியப் பாகவும் இருந்தது. ஐரோப்பிய இலக்கியத்தின் நான் அறியாத பல இலக்கியர்களின் பெயர்களைச் சொல்லி அவர்கள் எழுதிய நூல்கள் பற்றியெல்லாம் சொன்னாள்.

பிள்ளைகளோடு சேர்ந்துதான் யேர்மன் மொழியைக் கற்றேன். மேற்குலக இசை, இசைக் கலைஞர்கள் பாடகர்களை அறிந்து கொண்டதும் பிள்ளைகள் ஊடாகவே எனது உலகத்தை பரந்து விரியச் செய்த சிந்தனையின் ஊற்றாக பிள்ளைகளே நிக்கிறார்கள்.

தான் படிக்கும் ஐரோப்பிய இலக்கிய விஞ்ஞானம் பற்றியும் பெண்பிள்ளைகள் அந்தத் துறை யில் அதிகம் இல்லாதது பற்றியெல்லாம் சொன்னாள். பல்கலைக் கழகம் போனால் மருத்துவம் தொழில் நுட்பம் போன்றவையே சிறந்த கல்வியென்ற மனநிலை யில் இருந்து மாறுபட்ட என் மனநிலையே அவளதும். கல்வி வாழ்வதற்கே வாழ்க்கை கல்விக்கல்ல என்பதில் அவள் தெளிவாக இருந்தாள்.

கடைத்தெருக்களைத் தாண்டி தொடரூந்து நிலையம் சென்றோம். நாங்கள் பயணிக்கவிருந்த தொடரூந்து தாமதமாகியது.

தனது கையில் இருந்த பைகளை என்னிடம் தந்து விட்டு மலசலகூடம் செல்லும் படிகளில் இறங்கினாள். அவள் இறங்கிய படிகளின் மேற்பகுதியில் நின்றேன். அந்தப்படிகளில் பலர் மேலேறுவதும் இறங்குவதுமாக இருந்தார்கள்.

சிலநிமிடங்களில் மலசலகூடத்திலிருந்து மேலேறிக் கொண்டிருந்தவள்... திரும்பி படிகளில் தடதடவென ஓடினாள்.

ஏய்...! கோபமாய் சத்தமிட்டபடி படிகளில் கீழிறங்கி ஓடினாள்.

அவளது கொபம் ஓட்டம் என்னை ஒருகணம் திகைக்க வைத்தது.

அம்மா நில்லுங்கோ...மேலே ஓடியவளைத் தொடர்ந்து நானும் ஓடினேன்.

அவள் ஆண்களின் மலசலகூடக் கதவடியில் ஒருவனை மறித்துக் கத்திக் கொண்டிருந்தாள்.

அங்கே நின்ற காவலாளர் அங்கே நின்றவனை கெட்ட வார்த்தைகளால் திட்டினான்.

என்னம்மா ? என்ன நடந்தது ? என் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அம்மா இவன் என்னை பின்பக்கதில தட்டீட்டு போனான்.

அவள் சொன்ன அந்த வார்த்தைகள் மட்டுமே என்காதுகளில் கேட்டுக் கொண்டிருந்தது. கைகளில் இருந்த பைகள் கையைவிட்டு வீழந்ததையும் எனது ஞாபகத்திலிருந்து அழித்துப் போனது அந்தக்கணம்.

அந்த உயரமான மனிதன். றோஸ்கலர் ரீசேட் அணிந்தவன். அவன் தான் அவளைத் தொட்டான் என்பதை அவள் கைநீட்டிச் சொன்னாள்.

அவன் நெஞ்சில் என்கைகள் பதிந்தது. அவனைத் தள்ளி விட்டு எனது காலில் இருந்த காற் செருப்பைக் கழற்றி அவன் முகத்துக்கு நேரே ஓங்கினேன். காவலுக்கு நின்றவன் என் குறுக்கே நின்று தடுத்தான்.

அம்மா அடிக்காதையுங்கோ...

அவனுக்கு அடிக்க வேண்டாமென அவள்

சத்தமிட்டாள். காவலுக்கு நின்றவன் காவல்துறையை அழைக்கிறேன் அவனை அடிக்காதே என வேண்டிக் கொண்டிருந்தான்.

திருமணத்திற்கு முதல் கடைசியாக நண்பர்களுடன் கழிக்கும் பொழுதை ஆணும் பெண்ணும் அவர்களது சகாக்களோடு ஒன்றாக நகரங் களைச் சுற்றிக் குடித்து அனுபவிப்பார்கள். அதுவொரு கலாசாரமாக யேர்மனியர்களிடம் வழமையாக இருந்துவருவதை சில இடங்களில் கேட்டுள்ளேன்.

தனது திருமணத்திற்கு முதல் தனது நண்பர்களுடன் என் குழந்தையைச் சீண்டியவனும் என்பதை காவலுக்கு நின்றவன் சொன்னான்.

நீங்கள் விரும்பினா நான் காவல்துறையைக் கூப்பிடுறேன். பொறுமையா இரு...அந்த வயதான மனிதனின் கண்கள் கெஞ்சின. பலர் அந்த நிகழ்வை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

மன்னிச்சுக்கொள்ளு பேபி...மன்னிச்சுக் கொள்ளு... அவன் என் குழந்தையிடம் மன்னிப்புக் கோரிக்கொண்டு மேலேறி ஓடினான். அவன் பின்னே செருப்போடு திரும்பிய என்னை அவள் மறித்தாள்.

விடுங்கோம்மா... அவனுக்கு கலியாணம் நடக்கப்போகுது... இவ்வளவு ஆக்களும் பாக்க அவனை நானும் நீங்களும் பேசினதே அவன்ரை வாழ்க்கையில மறக்கமாட்டான்...இதை அவன்ரை வாழ்க்கையில மறக்கமாட்டானம்மா...

என்னால் ஆறுதலடைய முடியவில்லை. அவனை அடியென்கிறது மனசு.

எனது கையிலிருந்து தவறி அங்கங்கே கிடந்த பைகளை அவள் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு என்னையும் அழைத்துக் கொண்டு படிகளில் மேலேறினாள்.

இந்தத் தொல்லையள் இருக்கெண்டு தெரிஞ்சு தான் நான் நீளமான உடுப்புகள் போடுறதம்மா... இவங்களுக்கு இதைவிட இனியெப்பிடி உடுப்பு போடுறது...சொல்லிக் கொண்டு நடந்தாள்.

அவள் தன்னைப் பாதுகாக்கும் அளவுக்கு வளர்ந்து விட்டாள் என்பது ஆறுதலாக இருந்தது. ஆனால் இந்தநாளை இவள் தனியே சந்தித்திருந்தால் அவளது மனவுளைச்சல் எப்படி இருந்திருக்குமென நான் யோசித்துக் கொண்டு நடந்தேன்.

நாங்கள் வெளியில் தொடரூந்துக்காக காத்து நின்றோம். தன் குழுவோடு நின்றவன் எங்களுக்கு கிட்ட வந்தான்.

மன்னிச்சுக்கொள்...மன்னிச்சுக்கொள்...என அவன் எங்களை வேண்டினான். தெரியாமல் செய்திட்டேன்.

அவனை தமிழில் உள்ள கெட்டவார்த்தை களால் திட்டினேன். போ இதில நிக்காதை...அவனை அவள் டொச்சில் திட்டினாள். அவன் திரும்பிப் போய் தனது குழுவோடு சேர்ந்தான். எங்களை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தான்.

காலையில் என் பின்புறத்தையும் தட்டிவிட்டுப் போனவன் இவனோ என நினைத்தேன்.

இப்பிடியும் இருக்கிறாங்களம்மா உலகத்தில... அம்மாவுக்கு இப்பிடியான அனுபவங்கள் நிறைய இருக்கம்மா...பெண்கள் ஒவ்வொருத்தரும் இப்பிடியான சனியனுகளைத் தாண்டித்தானம்மா போறம்... இதை இதிலையே மறந்திடம்மா...இதுவும் உங்கடை வாழ்க்கையில ஒரு கடந்து போன அனுபவமாக போகட்டும். நான் சொல்லிக் கொண்டிருந்தேன்.

எனது குழந்தையைத் தொட்டவனை தண்டிக்க வேண்டுமென்றதே எனது மனம் முழுவதுமான ஒலியாகவிருந்தது. கோபம் அவன் மீது எனது எதிர்ப்பைக் காட்டிவிடும் வேகமே என்னிடமிருந்தது.

***

மண்ணிற கரடி பொம்மையை நெஞ்சோடு அணைத்துபடி அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தாள். தலைக்குப் பகத்தில் கடைசியாக அவள் வாசித்த கனடா வில் வாழும் இந்தியப்பெற்றோருக்குப் பிறந்த மகள் ரூபி யின் கவிதைப்புத்தகம் நேர்த்தியாய் வைக்கப்பட்டிருந்தது.

இளம் கவிஞையான ரூபியின் ஆங்கிலக் கவிதைப்புத்தகத்தில் தனக்குப் பிடித்த கவிதைகளை எனக்கு மொழிபெயர்த்துத் தந்திருந்தாள். என் குழந்தையைவிட சில வயதுகளால் மூத்த ரூபி தனது பிறப்பின் வேரிலிருந்து எழுதிய பெண் அடக்குமுறைகள் தொடக்கம் அவளது வாழ்வனுபங்கள் பற்றி அவள் சொன்ன கதைகள் அனைத்தையும் அவள் எனக்கு உணர்த்தியபடி உறங்கிக் கொண்டிருந்தாள்.

நித்திரை வரவில்லை. ஒவ்வொரு பக்கமாய் திரும்பித் திரும்பி உருண்டு கொண்டிருந்தேன். நேரம் இரவு 2.42.

என்ன குண்டம்மா நித்திரை கொள்ளேல்லயோ?

நெஞ்சில் அணைத்து வைத்திருந்த கரடி பொம்மையை கன்னத்தில் வைத்துக் கேட்டாள்.

இல்லைச் செல்லம்...இப்பதான் முளிச்சனான். அவளுக்குப் பொய் சொன்னேன்.

பிரதான மின்விளக்கைப் போட்டுவிட்டு குளிய லறைக்குப் போய் வந்து மீண்டும் மின்விளக்கை அணைத்தாள்.

அவளுக்கு 20வயது. என்னை விடவும் உயரத்தால் மட்டுமன்றி எண்ணங்களாலும் உயர்ந்து என்னை நிமிர்ந்து பார்க்க வைக்கிறாள். எனக்குள் ஒரு கோழிக்குஞ்சாகவே அவள் இப்போதும் காக்கப்படும் குழந்தையாகவே தெரிகிறாள்.

போனவருடம் என்கையிலிருந்து பிரிந்து பல்கலைக்கழக வாழ்வை ஆரம்பித்தவள். சமையல் சாப்பாடு படிப்பு படுக்கை பொழுது போக்கு யாவையும் தனித்து ஒரு அறையில் வாழப்பழகியிருக்கிறாள்.

அம்மா நான் சின்னனில்லை... எனக்கு இப்ப இருபது வயது.

அடிக்கடி ஞாபகப்படுத்துவது போல சொல்வாள்.

அம்மா..., இது அவள்...,

என்னம்மா...பகல் நடந்ததையே நினைச்சுக் கொண்டிருக்கிறீங்களோ ?


இல்லைக்குட்டி அதுதானே அம்மா அவனுக்கு செருப்பாலை அடிக்கப் போனனான். அவள் சிரித்தாள். அதுதானே என்ர குண்டம்மா துணிச்சல் சண்டைக் காரியெல்லோ.... அவள் மீண்டும் தூங்கிவிட்டாள்.

மேசையில் மெல்லிய ஒளியைப் பரப்பியபடி யிருந்த மின்விளக்கின் வெளிச்சமும் எனது கைபேசியின் வெளிச்சமும் தவிர அவளது அறை அமைதியாக இருந்தது. அமைதியைத் தொலைத்த கடலின் அலைகள் கரைகளில் மோதிச் செல்லும் ஓசைபோல எனக்குள் நேற்றைய மதியப்பொழுது தான் ஓடிக்கொண்டேயிருந்தது.

மனவுளைச்சலைத் தந்த அந்த நிகழ்விலிருந்து என்னால் விடுபட முடியாதிருந்தது.

பெண்ணின் அனுமதியின்றி அவளை ஒருவர் தீண்டுவது என்பது எந்தளவு மனவுளைச்சலைத் தருமென்பதை பலதரம் உணர்ந்தவள் நான். நித்திரை வர மறுத்தது. கைபேசியில் காலச்சுவடு இணைய சஞ்சிகையை வாசிக்கத் தொடங்கினேன்.

யாழவன்



மாறாதிருப்பதென்னவோ!

காலத்தின் அசைவில்
கரைந்து போகின்றன ஒவ்வொன்றாக..
மின்னஞ்சல், தொலைநகல், குறுந்தகவலென
ஒன்றன்பின் ஒன்றாக வந்ததும்
காணாமல் போயிற்று கடிதங்கள்.
நெல்லறுக்கும் இயந்திரங்கள் வந்தபின்
கதிரறுக்கும் கத்திகளை காணவில்லை!
உரலும், உலக்கையும்
எப்படி காணாமல் போனது?
"மிக்ஸியையும்,கிரைன்டரையும்"
விசாரிக்காமல் தூக்கி உள்ளே போடவேண்டும்.
மாட்டுவண்டி எப்படி மறைந்துபோனதென
உழவு இயந்திரத்திடம்
உள்ளக விசாரணை தொடங்கட்டும்!
விறகடுப்புக்கு நேர்ந்த
வில்லங்கம் யாதென
"காஸ்" அடுப்புக்கள் மட்டுமே அறியும்.
போர்க்கைதிகள் பற்றி
கோத்தபாய வாய் திறக்காமல்
இருப்பதைப் போலத்தான்
மின்விசிறிகளும் மௌனம் காக்கின்றன.
எங்கேயடா பனையோலை விசிறிகள்?
அரசியல் கைதிகள் எவரும் இல்லையெனச்சொன்ன
ரணிலோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்
தார்ச்சாலைகளை
செம்மண் வீதிகளை பற்றி
தனக்கெதுவும் தெரியாதாம்.


"நெக்ரோவும், ஒரேஞ்பார்லியும்"
ஆதிக்கம் செலுத்த
"சம்பூ"வாய் மாறியிருக்கிறது
செவ்விளநீர்!
இடியப்பச் சிக்கல் வந்திருக்கிறது
இடியப்பத்திற்கு.
"நூடில்ஸ் இரண்டு நிமிடங்களில்"
விளம்பரத்தைப் பார்த்து
வியர்த்துப்போய்க் கிடக்கிறது.
சலவை இயந்திரங்கள்
சலவைக் கற்களை
சமாதிக்கற்களாக்கிவிட்டன.
சுதந்திர தினத்தன்று விடுதலையாகும்
சிறுகுற்றக் கைதிகளைப் போல
மின்சாரம் தடைப்பட்ட நேரங்களில்
வெளிச்சத்திற்கு வருகின்றன
லாந்தரும், குப்பிவிளக்கும்!
காலத்தின் அசைவில்
கரைந்து போகின்றன ஒவ்வொன்றாக!
தாயைப் பழித்தாலும்
தண்ணீரைப் பழிக்காதேயென்றாய்
தமிழா,
நிலத்தடி நீர் கூட மாறியிருக்கிறது
மாசு நீராக.
மாறாதிருப்பதென்னவோ தாயன்பு மட்டும்தான்!
அம்மா!
இன்றுனக்கு பிறந்தநாள்.



தமிழ் சினிமா : 2018 ஒரு பார்வை



இ.சு. முரளிதரன்



தோமஸ் அல்வா எடிசன் கண்டறிந்த கினிரோஸ்கோப் (kinestoscope) என்ற கருவியை லூமியர் சகோதரர்கள் உயர் தொழில்நுட்பங்களோடு மாற்றியமைக்க உலகெங்கும் சினிமா அறிமுகமானது. இன்று வெகுமக்களை ஈர்க்கும் பெரு வணிக ஊடகமாக உலா வருகின்றது. தென்னிந்தியாவில் நூற்றுக்கணக்கான திரைப்படங்கள் தமிழில் வெளிவருகின்றபோதிலும் அவற்றின் தரம் அதிக விழுக்காடு தாழ்நிலையிலேயே காணப்படுகிறது. கடந்த ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படங்களில் அற்புதமான அதிர்வுகளை நிகழ்த்தியவை மிகச் சொற்பமானவை தான். ஏனையவை வீரியமற்ற படைப்புக்களாகி விழலுக்கிறைத்த நீராயின.


2018 இல் வெளிவந்த அதிகமான திரைப் படங்கள் அதியுச்ச கோமளித்தனங்களின் குவிவுமைய மாகவே தென்படுகின்றன. பக்கா, சண்டைக் கோழி 2, நோட்டா, சாமி 2, சீமராஜா, களரி, கஜினிகாந்த், ஜிங்கா, செம, காளி, திமிருபுடிச்சவன், பில்லா பாண்டி, சந்திரமௌலி, தமிழ்ப்படம் 2, மோகினி, பியர் பிரேமா காதல்,அண்ணனுக்கு ஜே, யூரேன், லக்ஷ்மி, தானாச் சேர்ந்த கூட்டம், செமபோத ஆகாத, பாஸ்கர் ஒரு ராஸ்கல், ஏண்டா தலையில எண்ண வைக்கல, துப்பாக்கி முனை, ஜானி, மாரி 2, சிலுக்குவார் பட்டி சிங்கம் போன்றன மிக மோசமான திரைப்படங்களாகவே அமைந்துள்ளன. இத் திரைப் படங்களில் ஒன்றிரண்டேனும் இந்திய சுதந்திரப்போராட்ட காலத்தில் வெளிவந்திருப்பின் பிரித்தானியரை மிக இலகுவாக நாட்டை விட்டுத் துரத்தியிருக்கலாம். "பரம் பரைப்பகைவனுக்கு பாயாசத்தில் விஷம் வைத்துக் கொல்ல வேண்டுமென்ற அவசியமில்லை. 'பக்கா' படத்தின் DVD கொடுத்தும் கொல்லலாம்" என்னும் முக நூலாளிகளின் எள்ளல் வசனங்கள் இத்திரைப்படங்களின் தரத்தினைப் புடம் போட்டுக் காட்டுகின்றன.


மலமும், சிறுநீரும், சீழும் சளியும் கலந்து பிரவாகிக்கும் வைதரணி ஆற்றங்கரையில் அமர்ந்திருந்து நீண்டநேரம் சிந்தித்ததன் ஊடாக உதித்த "காவியங்களாக"(!) இருட்டறையில் முரட்டுக் குத்து, இவனுக்கு எங்கேயோ மச்சம் இருக்கு ஆகியன அமைகின்றன. ஆயுட் காப்புறுதி செய்தவர்கள் துணிந்து பார்க்கச் செல்லக் கூடிய திரைப்படிமங்கள். வேற்றுக்கிரக வாசிகள் இத்தகைய திரைப்படங்களைப் பார்க்கநேர்ந்து விடுமோ? என்ற பயத்திலேதான் பூமிக்கு வருவதில்லை. அவ்வகையில் இப்படங்களின் இயக்குநர்கள் காவல் தெய்வங்களே!


சமூகப்பிரக்ஞையும் கதையும் மட்டுமே தரமான திரைப்பட உருவாக்கத்திற்கு இயக்குநருக்குப் போதுமானதன்று. சினிமாமொழி (படத்தொகுப்பு+ ஒளிப்பதிவு +

இசை + குறியீடு முதலான உத்தி கள்) நம்பகத்தன்மை, அற்புதமான திரைக்கதைப்பின்னல், இயல்பான பாத்திர வடிவமைப்பு அளவான வசனங்கள் போன்ற பன்முகச் சேர்க்கையோடு சினிமா உருவாக் கப்பட வேண்டும். ஆண்தேவதை, ஆருத்ரா, இரும்புத்திரை, இரவுக்கு ஆயிரம் கண்கள், கடைக்குட்டி சிங்கம், நடிகையர் திலகம், 60வயது மாநிறம், ராப்ஃபிக்ராமசாமி ஆகிய திரைப்படங்கள் கனதியான கதைக் கருவினைக் கொண்டிருந்தபோதும் மட்டரகமான திரைமொழி வெளிப் பாட்டினால் ஒவ்வாமையினை உண்டாக்கி விட்டன. சினிமாவின் மைய நீரோட்டம் குறித்த புரித லில்லாததால் மலினமான படைப்பு களாகி விட்டன. எண்பதுகளில் வெளிவந்த திரைப்படங்களின் உள்ளீட்டை இக்கால இரசனைக்கு ஏற்ப வெளிப்படுத்திய "அடங்க மாறு" என்ற நகரும் படிமமும் மேற் கூறிய பலவீனங்களைக் கொண்டி ருந்தமை நோக்கத்தக்கது.

திரைச் சுவைஞர்களிடம் நம்பிக்கையினை ஏற்படுத்திவிட்டு நமத்துப்போன தீக்குச்சியானவை என்ற பட்டியலில் செக்கச் சிவந்த வானம், வடசென்னை, கோலமாவு கோகிலா, காலா, விஸ்வரூபம் 2, நாச்சியார், சவரக்கத்தி, காற்றின் மொழி, சீதக்காதி என்பன அடங்கு கின்றன. சற்று நிதானத்தோடு அணுகியிருப்பின் தரமான திரைப் பிரதிகளாக இவை வெளி வந்திருக் கும். எதுவிதமான எதிர்பார்ப்புகளும் இல்லாமல் வெளிவந்த "ஒரு







குப்பைக்கதை", "கனா" என்பன ஓரளவு மதிப்பிற் குரிய பெறுமானத்தோடு அமைந்தன. சரியான வகையிலே செதுக்கியிருப்பின் அகிலத் தரத்தில் அமைந்திருக்கும். நயாதீதமான அனுபவச்சுவறலை நிகழ்த்திய இவ்விரு படங்களும் படைப்பு மொழிக்கான வெளிப்பாட்டில் பின்னடைவினைக் கொண்டமைந்தமை துரதிஷ்டவசமானதே!

பெருங்குழும ஈர்ப்புக்கான நாயக விம்பத்தினை முன்னிறுத்தி "சர்க்கார்", "2.0" என்னும் இருபடங்களும் வெளிவந்தன. "சர்க்கார்" குறித்து எதுவுமே சொல்லத்தேவையில்லை. விஜய் என்ற வணிகக்குதிரையினையும் ஒருசில அரசியல் விமர்சனப்பதிவுகளையும் தவிர்த்து நோக்கினால் படத்தின் பெறுமானம் பூஜ்யந்தான்! "2.0" படமானது 3D தொழில்நுட்பத்தினைச் சிறப் புற வெளிப்படுத்தியபோதும், குழந்தைகள் கூடக்கொண்டாட முடியாத அபத்த பிரமாண்டமாகும். பட்சிநேசகரை எதிர்மறை நாயகனாக இனங் காட்டி 2.0 கட்டவிழ்க்கும் அறம் ஆபத்தானது. வேதமும் விஞ்ஞானமும் கலந்த (Colgate vedshakti பற்பசைபோல) உள்ளடக்கத்தால் குழப்பமான நகரும் படிம மாகக் காணப்படுகிறது. செயற்கை நுண்ணறிவு (Robot) ஒளிவட்டம் (Aura) கைபேசிப்பாவனை போன்ற பன்முக விடயங்களைப்பேசுகின்றது. ஈர்ப்பு விசை மின்காந்த விசை, வலுவான அணுவிசை, வலுவற்ற அணுவிசை என்பன பேரண்டத்தில் அமைந்துள்ள நான்கு அடிப்படை விசைகளாகும், ஐந்தாம் விசை குறித்த தவறான கருத்தியலை 2.0 முன்வைக்கிறது. அறிவியல் Dark Photton ஐ அடிப்படையாகக் கொண்டு அணுகும் விடயமே அது! பேயோ அல்லது இறந்தவரின் சக்தியோ அன்று "நாம் ஒரு வாகனத்தைத் தள்ளும் போது அது நகர்கிறது. காரணம் விசை ஆனால் அந்த விசையைக்





கொடுக்கக் காரணமாயிருந்தது சக்தி. நம் சக்தியால் வானம் நகர்ந்தது என்ற புரிதல் தவறானது." இத்தகைய அடிப்படை புரிதலின்றி தெளிவற்ற அறிவியலை 2.0 கட்டமைத்துள்ளது.

2018 இல் வெளிவந்த "இமைக்கா நொடிகள்", "ராட்சசன்" என்பன மூடு மர்ம முடிச்சவிழ்ப்பு உத்தியினை மையமாகக் கொண்ட படைப்பு களாகும். நுட்பமான திரைமொழியால் ராட்சசன் அதிகளவான கவனக்குவிப் பினைப் பெற்றது. "த்ரில்லர்" சினிமாவுக்கான உச்சமான நுண்ணிழைக் களைக் கொண்ட படமாக அமைந்தது. தமிழ்த்திரையின் ஆணாதிக்க சூழலில் நாயகி மைய சினிமாவாக வெளிவந்த "இமைக்காத நொடிகள்" ஓரளவு பாராட்டுக்குரிய படைப்பாகவே அமைந்தது.

"டிக் டிக் டிக்" திரைப்படம் தமிழின் முதலாவது விண்வெளி சினிமா என்ற விளம்பரத்தோடு வெளிவந்தது. எனினும் எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா நடித்த "கலையரசி" திரைப்படமே தமிழின் முதலாவது விண்வெளி சினிமா என்ற பெருமைக்குரியது. மிகப்பெரும் பொருட் செலவில் எடுக்கப்பட்ட Interstellar, gravity என்பவற்றோடு ஒப்பிடாமல் தமிழ்ச்சூழலில் வரையறுக்கப் பட்ட முதலீட்டோடு வெளிவந்த படங்களோடு நோக்கினால் "டிக் டிக் டிக்" பாராட்டத்தக்கது. இப்பாராட்டு குறைந்தளவான செலவில் விண்வெளிப்பட மொன்றை எடுத்த முயற்சிக்கும், நம்பும் வகையிலான வரைகலை நுட்பத் திற்கும் மட்டுமே! சினிமா மொழி சார்ந்த வெளிப்பாடு நடிகர்களின் ஆற்றுகையை போன்ற பன்முக விடயங்களில் 'டிக் டிக் டிக்' மிகவும் பலவீன மான படைப்பாகும்.

2018 சினிமாவில் அற்புத மான அனுபவத்தைத் தொற்றச் செய்கின்ற திரைப்படிமங்களாக 96, மேற்குத் தொடர்ச்சி மலை, பரியேறும் பெருமாள் என்பன அமைந்துள்ளன. பார்வையாளன் தன்னை உணர் தலில் "96" வெற்றியடைந்தது. ஆங்காங்கே சற்று மிகையுணர்ச்சி யானது தென்பட்டாலும் பதின்ம அகவையைப் பதிவு செய்திருந்த காட்சிகள் மீநய அனுபவத் தொடுகையாகும். பசுமையான ஞாபகங்கள் துளிர்விட்ட கால மொன்றுக்கு மீள அழைத்துச் செல்லும் காதல் வாகனமாக இயக்கு நர் ராம்குமார் "96" ஐ வடிவமைத் துள்ளார். விஜய்சேதுபதி அற்புத மான நடிகர். ஆனாலும் விஜய் சேதுபதி, திரிஷா ஆகியோரால் (பதின்ம வயதுக் கதாபாத்திரத்திற்கு உரியோர் சிறப்பு!) நூறு விழுக்காடு பாத்திர உருமாறல் நிகழ்த்தப்பட வில்லை.

எளிய மனிதர்களின் வாழ்வியலைப்பேசும் படைப்பாக "மேற்குத் தொடர்ச்சிமலை" அமைந் துள்ளது. சொந்த நில வேட்கை கொண்ட ரங்கசாமியின் நகர்வினூ டாக பூர்வகுடிகளின் அவலத்தினைப் பதிவு செய்துள்ளது. பேரன்பால் நிரம்பித் ததும்பும் கண்ணாடிப் பாத்திரமாக இப்படைப்பினை மாற்றிய இயக்குநர் லெனின் பாரதி பாராட்டுக்குரியவர். கிறுக்குப்பாட்டி உட்பட பல கதாபாத்திரங்கள் உணர்வைத் தொடுகின்றன. தொடர் ஒடுக்குமுறையை, தொழிலாளியைச் சுரண்டு மேலாண்மையாளிகளின் ஆதாய முகத்தை இயக்குநர் சரியாக இனங்காட்டுகின்றார். ஏலக்காய் மூட்டை அவிழ நறுமணத்தையன்றி




துன்பியல் வாசனையை ஒவ்வொரு பார்வையாளனும் உணர்வது இயக்குநரின் மேதா விலாசத்தினை இனங் காட்டுகிறது. இத்திரைப்படத்தில் நடித்த பலர் தொழில் முறைக் கலைஞர்கள் இல்லை என்பதால் சில நெருடல்களைக்காண முடிகிறது. மேற்குத் தொடர்ச்சி மலை மேன்மையான முயற்சி யெனத் துணிந்து கூறலாம்.

2018 இல் வெளிவந்த திரைப்படங்களில் முதன்மைப் பெறுமானத்தை "பரியேறும் பெருமாள்" பெற்றுள்ளது. இயக்குநர் மாரி செல்வராஜ் கொண்டாட் டத்திற்குரிய படைப்பொன்றினை வழங்கியுள்ளார். தமிழ் சமூகத்தின் நரம்புக்குள் உறைந்த சீழ்நதியான சாதியத்தின் கொடூர முகத்தினை சரியாக இனங்காட்டு கின்றார். அடக்கு முறைக்கும் எள்ளலுக்கும் பழகிப் போன மனிதரின் இயலாமை வெளிப்பாட்டினை "ஏம்பா உங்கப்பனுக்கு இதெல்லாம் புதுசா" என்ற காத்திரமான வசனத்தினூடாக சமூக அழுக்கொன்றின் சலவைக் கல் போலப்பதிவு செய்துள்ளார். மனித சமத்துவத்தை பொதுத்தளத்திலே வைத்துப் பேசுவதோடு, கல்வி மேம்பாடும், பொருளாதார விடுதலையும் சாதிய அடுக்கு களை குலைத்துப் போடும் வல்லமை மிகுந்தன என்பதையும் தெளிவுபடுத்துகின்றார். படிமங்களின் வீரியத்தினை நன்கு உணர்ந்து உரிய முறையிலே வெளிப்படுத்தியுள்ளார். "சிறுநீர்" குறித்த இருகாட்சிகள் வலிமையான குறியீடுகளாக அமைகின்றன. "அம்பேத்கரிஸ"த்தின் விம்பமாக நீலம் படத்தோடு தொடர்ந்து பயணிக்கிறது. "கொலையை குலசாமிக்கான படையலாக" சமர்ப்பிக்கும் எதிர்மறை பாத்திரமான முதியவர் நூற்றாண்டுகால தமிழ்சினிமா வில்லன்களில் மாற்றுமுகம் மட்டுமல்ல; நடப்பியலோடு பொருந்தியும் போகிறார். ஞாபக இடுக்களில் நீங்காத பசுமையான பாத்திரமாக அந்த "நாய்" அமைந்துள்ளது. இறுதிக் காட்சியில் அதீத அண்மைக்காட்சிக்கு நகரும் ஒளிப் பதிவு கருவி இரு கண்ணாடிக்குவளைகளின் சமநிலை யில் சர்வதேச தரத்திலான பதிவொன்றை நிகழ்த்தி நெகிழவைத்துள்ளது..

பரியேறும் பெருமாளைக் கடந்தேகிச் செல்லும் வகையிலான படைப்பாக்க முயற்சியினை *2019* தமிழ்சினிமா முன்னெடுக்குமாயின் பெரு மாற்றங்கள் நிகழலாம். TOLET, பேரன்பு ஆகிய இரு படங்களும் *2019* இன் அடையாளமாக இடம்பெற அதிகம் வாய்ப்புள்ளது. ஏனைய முயற்சிகளை பொறுத்திருந்து பார்ப்போம்.

சுயம்


மரபணு மாற்றி வடிவமைக்கப் பட்ட...உயிர்
மரபணு மாற்றி வடிவமைக்கப் பட்ட...உடல்
மரபணு மாற்றி வடிவமைக்கப் பட்ட...மரம்
மரபணு மாற்றி வடிவமைக்கப் பட்ட...இனம்
மரபணு மாற்றி வடிவமைக்கப் பட்ட...கறி
மரபணு மாற்றி வடிவமைக்கப் பட்ட...சோறு
மரபணு மாற்றி வடிவமைக்கப் பட்ட...சதை
மரபணு மாற்றி வடிவமைக்கப் பட்ட...விதை
மரபுரிமை மாற்றி வடிவமைக்கப் பட்ட...வளி
மரபுரிமை மாற்றி வடிவமைக்கப் பட்ட...நதி
மரபுரிமை மாற்றி வடிவமைக்கப் பட்ட...கடல்
மரபுரிமை மாற்றி வடிவமைக்கப் பட்ட...மனம்
மரபுரிமை மாற்றி வடிவமைக்கப் பட்ட...மொழி
மரபுரிமை மாற்றி வடிவமைக்கப் பட்ட... கவி
மரபுரிமை மாற்றி வடிவமைக்கப் பட்ட...இசை
மரபுரிமை மாற்றி வடிவமைக்கப் பட்ட...கலை
மரபுரிமை மாற்றி வடிவமைக்கப் பட்ட...கல்வி
மரபுரிமை மாற்றி வடிவமைக்கப் பட்ட...வாழ்வு....
மரபுரிமை சொந்த மரபுரிமையைத் தொலைத்து,
மரபுரிமையைக் காத்து வளர்க்க முயலாது,
மரபுரிமை எங்கள் மரபுரிமை
என வெடித்து,
பெருமைபேசிச் சுத்திடுது
பிழையை உணராப் பூமி!



த.ஜெயசீலன்

சாமானியரின் குரலாக ஒலிக்கும் சமூக ஊடகம்

க. நவம்



சமூக ஊடகங்களில் வேண்டியதெல்லாம் ஒரு "பிம்பம்" மட்டுமே; அதுவே பிறரைப் பெரிதும் கவர்கிறது. உள்ளடக்கத்தைவிட, உருவம்தான் அங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. சமூக ஊடகங்களில் பதியப்படும் இலக்கியங்கள் பொதுவாகப் பலரது கவனத்தைப் பெறுவதில்லை; பகிரப்படுவதில்லை; ஒருசில வரிகளுக்கப்பால் படிக்கப்படுவதுமில்லை. அரிதாகக் கிடைக்கும் விருப்புக் குறிகள்கூட (likes), பெரும்பாலும் படிக்கப்படாமலே கிடைக்கப்பெறுவன. எனவே, படிக்கப்படா இலக்கியங்களையும் இலக்கிய விமர்சனங்களையும் சமூக ஊடகங்களில் பதிவுசெய்து என்ன பயன்? அன்றாடம் அவற்றில் இடம்பெற்றுவரும் சுயபுராணங்களுடன், கடிபாடுகளும், கிசுகிசுக்களும், வசைகளும், வக்கிரங்களும் மட்டும்தானா இலக்கியம்? இந்நாளைய இலக்கியக்காரர் சிலரது மனக் கவலை, இது! ஒரு வகையில், நியாயமான கவலையுங்கூட!

ஒத்த விருப்புக்களையும் பின்னணிகளையும் கொண்ட பாவனையாளர்கள் தம்மை இணைத்து, தமக்கிடையே பகிர்வுகளை மேற்கொள்ள அனுமதிக்கும் சமூக வலைத்தளங்களை சமூக ஊடகங்கள் என்பர். இன்னொரு வகையில் கூறுவதாயின், சமூக ஊடகங்கள் என்பன பாவனையாளர்களால் உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்களைத் தாங்கிவரும் இணையத் தளங்கள் எனலாம். மிகப் பிரபலமானவை என Facebook, Facebook Messenger, Instagram, WhatsApp, Google+, Myspace, LinkedIn, Pinterest, Snapchat, Tumblr, Twitter, Viber, VK, WeChat, Weibo, Baidu Tieba, Wikia போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள், தமிழ்மொழிப் பாவனையாளர்கள் பெரு விருப்புடன் ஊறித்திளைப்பது முகநூல் எனப்படும் Facebook ஆகும்.

இணைய இணைப்பினைக் கொண்ட ஒரு கணினியில், ஒருவர் தாம் விரும்பிய உள்ளடக்கங்களைத் தாமே உருவாக்கி, அவற்றை உலகுடன் பகிர்ந்து கொள்ளச் சமூக ஊடகங்கள் உதவுகின்றன. இவ்வூடகங்கள் பிறருடன் நெருக்கமான ஊடாட்டங்களை மேற் கொள்ளும் வாய்ப்பினை வழங்கக்கூடிய சாதனங்களாக இருப்பதனால்தான், பலரும் இவற்றைப் பெரிதும் விரும்புகின்றனர். இலக்கியப் பரப்பிலும் இவை கால் பதிக்கத் தவறவில்லை. படைப்பாளிகள் பலரும் தமது மூலப் படைப்புக்களை இப்போது சமூக ஊடகங்கள் வழியாகப் பகிர்ந்து கொள்கின்றனர். இது இலக்கியத்தின் பாரம்பரிய வடிவத்தில் மட்டுமன்றி, அதன் கருத்துருவாக்கத்திலும் கணிசமான மாற்றங்களுக்கு வழிவகுத்துள்ளது.

சமூக ஊடகங்களிலிருந்து இலக்கியப் படைப்புக்களைப் படிக்கும் வாசகர்களது எண்ணிக்கை நாளுக்கு நாள் பல்கிப்பெருகி வருகின்றது. படைப்பாளிகள் வாசகர்களோடு உடனுக்குடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்த முடிவதால் கிடைக்கும் பலாபலன்கள் பெரிதும் சிலாகிக்கப்படுகின்றன. முன்னர் எப்போதுமில்லாத வகையில், தாம் வாசகர்களுக்கு மிகக் கிட்ட நெருங்கியிருப்பதாகப் படைப்பாளிகள் உணர்கின்றனர். வாசகர்களிடமிருந்து உடனுக்குடன் கிடைக்கும் காத்திரமான பின்னூட்டங்கள் தமக்கு உற்சாகமளிப்பதாகக் கூறுகின்றனர். அவை வாசகர்களின் நாடித் துடிப்பை உணர்ந்தறிய உதவுவதுடன், அவற்றிற்கேற்ப தமது படைப்புக்களை அவ்வப்போது இற்றைப்படுத்தி மாற்றியமைக்கவும், புத்தாக்கம் செய்யவும், செவ்விதாக்கம் செய்யவும், இதனால் தமது எழுத்தாற்றலை மென்மேலும் மேம்படுத்தவும் முடிவதாகக் குறிப்பிடுகின்றனர். இந்த நேரடித் தொடர்பாடலாலும் உறவாடலாலும் படைப்பாளிக்கும் வாசகர்களுக்கும் இடையே இருந்துவந்த பாரம்பரியத் தடைச்சுவர் தற்போது தகர்ந்துவிட்டதாகக் கருதும் இவர்கள், பாரிய செலவுகளேதுமின்றித் தமது

படைப்புக்களை வாசகர்களுக்கு எடுத்துச் செல்லச் சமூக ஊடகங்கள் உதவுவதாகத் தெரிவிக்கின்றனர். காத்திரமான விமர்சனங்கள், கருத்தாடல்கள் என்பன ஊடாக, வாசகனும் படைப்பாளியும் கூட்டாக இணைந்து படைப்பின் தரத்தை மேம்படுத்த முடிகின்றது என்றும், "நான் என்றிருப்பதைவிட நாம் என்றிருப்பது எப்போதும் ஒருபடி உயர்ந்ததுதானே" என்றும் இவர்கள் கருது கின்றனர்!

சமூக ஊடகங்கள் ஆக்கங்களை உடனடியாக வும் இலகுவாகவும் மிகுந்த தாக்கத்துடனும் பகிர்ந்து கொள்கின்றன; செலவின்றிப் பிரசுரிக்கின்றன; மிகப் பரந்துபட்ட, விரைவான, நெருக்கமான வாசகர் பரி வாரத்தைத் தேடித் தருகின்றன; புதிய தலைமுறை யினரின் சிந்தனைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் சிறந்த வடிகால் அமைத்துக் கொடுக்கின்றன. இவ்வா றான காரணங்களையிட்டே சமூக ஊடகங்களில் தமது படைப்பிலக்கியங்களைப் பிரசுரித்துவரும் படைப்பாளி கள் பலரும் இதனை மிகுந்த விருப்புக்குரிய ஒரு வழி முறையாகக் கைக்கொள்கின்றனர். மேலும், ஒரு கவிதையின், ஒரு சிறுகதையின் அல்லது ஒரு நாவலின் இறுதி எல்லைநிலை வரை மட்டுமே படித்து அனுபவிக் கும் வாய்ப்பினை வாசகனுக்கு இதுவரை காலமும் புத்தகங்கள் வழங்கி வந்துள்ளன. இப்படைப்புக்களின் இறுதி நிலையைப் படைப்பாளி எப்படி எட்டினான் என்பதை அறியும் வாய்ப்பு வாசகனுக்கு அநேகமாகக் கிடைத்ததில்லை. ஆனால் சமூக ஊடகங்கள் வழி யாகக் கிட்டும் நேரடி ஊடாட்டமானது, படைப்பாளி யானவன் படைப்பின் இறுதிநிலை முதற்கொண்டு, தனது படைப்பாக்க முயற்சியின் ஒவ்வொரு படி நிலையிலும் அனுபவித்த வலிகளையும், வேதனைகளையும், புத்து ணர்வுகளையும், பூரிப்புக்களையும் வாசகனோடு பகிர்ந்து கொள்ள உதவுகின்றமை இன்னொரு சிறப்பம்சம்.

ஆயினும், சமூக ஊடகங்களில் பதிவிடப்படும் இலக்கியங்கள் பலவும் புத்தகங்களில் பிரசுரிக்கப்படு வனவற்றை ஒத்தவையாகவோ அல்லது அவை போன்று விரிவானவையாகவோ பெரும்பாலும் இருப்ப தில்லை; மேலும் வாசகர்கள் எல்லோருமே நவீன தொழில் நுட்பங்களிலும், மின்னணுவியலிலும் பரிச்சயம் உடையவர்கள் அல்லர் இந்நிலையில் சமூக ஊடகங்களில் வெளிவரும் இலக்கியங்கள் அவற்றுடன் ஊடாடுவோரை மட்டுமே சென்றடைகின்றன; சமூக ஊடகங்களில் பாவனையாளர்கள் தமக்கு விரும்பிய எதனையும் தாமே எழுதிப் பிரசுரிக்கும் வசதி இருப்பதனால், தரக்குறைவான, பண்பற்ற, பகிரப்படக் கூடாத, வக்கிரமான, குரோதமான, சட்டவிரோதமான படைப்புக்களும் பகிரங்கமாக வெளிக் கொணரப்படு கின்றன; அத்துடன், உலகெங்கும் ஏராளமான சமூக ஊடகங்களும் e books, fan fictions என்பனவும் இணையங் களில் உள்ள நிலையில், இவற்றில் பிரசுரமாகும் இலக்கி யங்களைக் கண்காணிப்பதும் கட்டுப்படுத்துவதும் இலகுவான காரியமல்ல; பதிப்புரிமைச் சட்ட திட்டங்களும் நிலைமைகளுக்கேற்ப, நாட்டுக்கு நாடு பொருந்தலாம் அல்லது பொருந்தாமற் போகலாம், இதன் விளைவாக, கருத்துக்களவு (plagiarism) சர்வ் சாதாரணமாகவே இடம் பெற முடியும். இவை அனைத்தும் ஒன்று திரண்டு, இலக்கியத்தின் நேர்மைக்கும் நாணயத்திற்கும் பெருத்த சவாலாக அமைந்துவிடுகின்றன.

இலக்கியம் பிறருடன் இணைப்பை ஏற்படுத்த வல்ல சாதனம். ஓர் இலக்கியம் மீதான பிரியத்தைப் பகிர்வது பெறுமதிமிக்க செயல். இலக்கியத்துக்கு ஆர் வலர்களும் ஆதரவாளர்களும் பயன்மிக்க அடையாளச் சின்னங்கள். எனினும் சமூக ஊடகத்தில் இலக்கிய மொன்றைப் பகிர்வதென்பது, தம்மை ஓர் இலக்கியக் காரன் எனக் காட்டிக்கொள்ளும் ஓர் உத்தி மட்டுமே என்பது சிலரது கருத்து. சமூக ஊடகங்களின் வரவின் பின்னரான இன்று, எழுத்தாளர் ஒருவர் தமது படைப்பைப்பற்றி பிறர் என்ன சொல்கிறார்கள் என அவரே தேடுகிறார்; அல்லது அவரைச் சீண்டுமுகமாக விமர்சகர் ஒருவர் கடுமையாகத் தாக்குகின்றார்; எழுத் தாளரும் தாம் என்ன சொல்ல வந்தேன் என விளக்கம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றார்; தாக்குதல் தடுப்பு முயற்சியில் ஈடுபடுகிறார். இதுவரை காலமும் வாசகர் கள் எவ்வாறு ஒரு படைப்புக்கு எதிர்வினையாற்று கிறார்கள் என்பதைப் படைப்பாளியால் கட்டுப்படுத்த முடியாதிருந்தது. மாறாக, இன்று எழுத்தாளரும் வாசக ரும் முன்னும் பின்னும் உரையாடக் கிடைத்திருக் கின்றது. முன்பு அது ஓர் ஒருவழிப்பாதைச் செயற்பாடா கவே இருந்தது. இதனால், ஒரு படைப்பினை வெளியிட்ட பின்னர், "எழுத்தாளர் இறந்துபோனார்" என முன்னொரு காலம் விமர்சனத்தில் பொதுவாகப் புழங்கி வந்த கூற்று, இன்று பொருளற்றுப் போயிற்று.

வாசிப்பின் போதான கவனக்குவிப்பின் எல்லை, இந்நாட்களில் வரவரக் குறுகி வருகிறது. அச்சு ஊடகங் களில் காட்டப்படும் அவதானம் குறைந்து வருகின்றது. கணினி/ஸ்மார்ட் ஃபோன் திரைகளுடனான ஊடாட்ட மும் அசையும் ஆக்கங்கள் மீதான ஆர்வமும் அதிகரித்து விட்டன. இதனால் ஒரு கோப்பியைக் குடித்து முடிப்பதற் கிடையில் வாசித்து முடிக்கக்கூடிய Micro-fiction வகைப் பட்ட குறுங்கதைகளே வாசகர்களுக்குத் தேவைப்படு கின்றன. அதிலும் உருவம்தான் குவிமையம். எழுத்து இரண்டாம் பட்சம். இதனால் சமூக ஊடகப் பாவனைக் குப் பின்னர், புத்தக மதிப்பாய்வுகள் ஆழமற்றவை ஆகிவிடுகின்றன. மேலும், மொழிப் பாவனையின்போது வசனங்கள் பொதுவாகக் குறுகிச் சுருங்கிவிட்டன.

சமூக ஊடகங்களில் உறவுகளைப் பேணுவ துடன், இலகுவான, மிகக் காத்திரமான சுய-ஊக்குவிப்பு, சுயவிளம்பரம் அல்லது சுயபரம்பல் செய்ய முடியும். அது பொதுவாக கட்டணமற்றது; எல்லையற்றது; மிகக் குறைந்த முயற்சியுடன் இவைபோன்ற பல அனுகூலங் களைச் சாத்தியமாக்கிக் கொள்ள முடியும். ஆகையால் இவற்றைச் சுடச்சுடச் செய்து வெற்றியடைவதில் பலரும் அவசரம் காண்பிக்கின்றனர்; பொறுமையை இழக் கின்றனர். நேரத்தில் மட்டும் குறியாக இருந்து அடிக்கடி மணிக்கூட்டைப் பார்க்கும் பரபரப்பில் இருக்கின்றனரே தவிர, ஆறஅமர இருந்து சீர்தூக்கிப் பார்த்து எழுதும், மதிப்பிடும், விமர்சிக்கும் பக்குவத்தை இழந்து வரு கின்றனர். இவற்றின் அடிப்படையிலேயே இன்றைய இலக்கிய விமர்சகர்களுள் ஒருசாரார் சமூக ஊடகங் களில் இலக்கியங்கள் பிரசுரமாவதை எதிர்க்கின்றனர்; சமூக ஊடகங்களில் இலக்கியத்தின் பேரில் இடம் பெற்றுவரும் அடாவடித் தனங்களால் இலக்கியத்தை விட்டுத் தூர விலகி நிற்கின்றனர்.

சமூக ஊடகங்களில் தமது இலக்கியங்களைப் பிரசுரித்தவர்கள் யாவரும் கோடீஸ்வரர்கள் ஆகிவிட வில்லை என்பது என்னவோ உண்மைதான். ஆனால்

எந்தவித பணச் செலவுமின்றி இவர்கள் தமது இலக்கிய உலகின் எல்லைகளை விரிவுபடுத்தியுள்ளனர்; உலகப் புகழ் பெற்ற படைப்பாளிகள் பலரை இலகுவில் எட்டி யிருக்கின்றனர்; மிகப் பெருந்தொகையிலான வாசகர் களையும், அவர்களிடமிருந்து உடனடியான பின்னூட் டங்களையும் பெற்றிருக்கின்றனர்; இவற்றின் வழியாகத் தமது எழுத்து நடையை மாற்றியிருக்கின்றனர் – விருத்தி செய்திருக்கின்றனர் என்ற உண்மைகளையும் மறுப்ப தற்கில்லை.

சமூக ஊடகங்களூடாக இலக்கியங்களைப் பகிர்வதென்பது, சாதாரண மக்களின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வது; இலக்கியங்களைப் பகிர்ந்து, அச்சமூக ஊடகங்களை மக்கள் மயப்படுத்துவது; அதன் மூலம், பொதுவான உணர்வுகளைச் சுற்றி, மக்களை ஒன்றுபடுத்துவது; எழுச்சிகளைத் தூண்டு வது; மகத்தான மாற்றங்களுக்கு ஒளியூட்டுவது போன்ற பயன்களை இலக்கிய உலகு உணர ஆரம்பித்துவிட்டது. எமது சமூகம், பண்பாடு என்பவற்றில் தகவற் தொழில் நுட்பம் ஏற்படுத்தியுள்ள பிரதான பாதிப்பு, எல்லைகளை உடைத்தெறிதலாகும். முன்னர் கண்ணில் அகப்பட மறுத்தவற்றைக் கண்டடைதலை இலகுவாக்கியதும், அதேவேளை கடினமாக்கியதும் அதுவே. இலக்கியத்தி லும் இதே பணிகளைத் தகவல் தொழில் நுட்பம் செய்கின்றது. "இணையத்தளங்கள் எல்லைகளை உடைத்தெறிகின்றன" என்பதற்கிணங்க, நல்ல நூல்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு நண்பர்கள் வட்டத்தை சமூக ஊடகங்கள் அகலித்துத் தந்துள்ளன. எல்லா சிபார்சுகளும் பரிந்துரைகளும் நல்லனவல்ல என்ற போதிலும் – முன்னர் கேள்விப்படாத சிறந்த படைப்புகளுக்கும் நூல்களுக்குமான சிபார்சுகளும் பரிந்துரைகளும் உலகுபூராவுமிருந்து கிடைக்கின்றன.

விரும்பியோ விரும்பாமலோ, சமகால இலக்கிய கர்த்தாக்கள் அனைவருமே சமூக ஊடக சந்ததியைச் சார்ந்தவர்கள்தான். ஆகையால், அவ்வூடகங்களை நாம் பயன்படுத்தப் போகின்றோமா இல்லையா என்பதல்ல – எப்படிப் பயன்படுத்தப் போகின்றோம் என்பதுதான் முக்கியமான கேள்வி. சமூக ஊடகங்கள் குறித்த சாதக, பாதக அம்சங்களைக் கருத்தில் கொண்டு, உங்கள் ஆக்கத்தை சமூக ஊடகங்களில் பதிவிடுவதன் மூலம் ஆழமான பாதிப்பை, பயன் பாட்டைப் பெறவேண்டுமாயின் – தினமும் ஏதோ ஒரு ஆக்கத்தைப் பதிவிடுங்கள். உங்கள் சமூக ஊடகத்தில் துரிதமாக இயங்குங்கள். அடிக்கடி இற்றைப்படுத்தல் செய்துகொள்ளுங்கள். அல்லாதவற்றை யாரும் பெரிதாகக் கவனிக்கப் போவதில்லை. உங்கள் சமூக ஊடகங்களை நீங்கள் பிரதி நிதித்துவப்படுத்த வேண்டுமென ஒருபோதும் எண்ண வேண்டாம். பதிலாக, உங்கள் கட்டுப்பாட்டின்கீழ், அதற்கென ஒரு ஆளுமையை அல்லது அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்வதே முக்கியம். முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பொதுவாக உங்கள் தனிப்பட்ட கருத்துக்களையும் உள்மன உணர்வுகளையும் வெளிப் படுத்தும் ஊடகமாக மட்டும் சமூக ஊடகங்களைப் பயன் படுத்த வேண்டாம் சிலருக்கு அது கைகூடினாலும், "இணையத் தளங்களில் ஒருவரும் தமது வாதங்களை ஒருபோதும் வென்றதில்லை" என்ற உண்மையை மறந்துவிடாதீர்கள்.

புதிய படைப்பாளிகள் தமது நூல்களை வெளி யிட்டு வெற்றி காண்பது சுலபமல்ல. சமூக ஊடகம் இத்தடையை உடைக்க உதவுகிறது. அதற்கென உங்களுக்கு ஏற்கனவே ஒரு சமூகத்தளம் தேவை. ஒரு மதிப்பார்ந்த தோற்றவடிவம் தேவை. புதிய படைப்பாளி கள் தமது நூல்களை வெளியிட்டு வெற்றி காண வேண்டுமேயாயின், உங்களுக்கு விருப்பமான, சௌகரிய மான, நோக்குக்குகந்த, இணக்கமான, தொடர்ந்து இயங்கக்கூடிய ஒரு தளத்தைத் தேர்ந்தெடுங்கள். எல்லா சமூக ஊடகங்களிலும் உங்கள் ஆக்கங்களை வெளி யிடாதீர்கள். நீங்கள் ஓர் எழுத்தாளர் என்பதை உங்கள் பதிவுகள் பிரதிபலிக்க வேண்டும். பொதுத் தளங்களில் ஊடாடும் பிறரிடமிருந்து உங்களை வேறுபடுத்திக் காட்டும்வகையிலான உங்கள் எண்ணங்களையும், கருத்துக் களையும் பகிருங்கள். அவற்றை யாரோடு பகிர்கிறீர்கள் என்பதை மனதில் வைத்துக்கொண்டு பதிவிடுங்கள். இணையப் பெருந்தெருவில் பொய்போலி, பேய்பிசாசு உலாவுவதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்!

பலர் உங்களைப் பின்தொடரவும் உங்களோடு தொடர்பிலிருக்கவும் உதவும் வகையில், அடிக்கடி. தொடர்ந்து பதிவிடுங்கள். உங்கள் தனித்துவமான அடை யாளத்தில் கவனமாக இருங்கள். உங்கள் எழுத்தை விற்பனை செய்வதிலேயே எப்போதும் குறியாக இருந்து விடாதீர்கள். உங்கள் வாசகர்கள் அதை விரும்ப மாட்டார்கள். சமூக ஊடகங்களில் ஊடாடுவோரது கவனத்தைப் பெற, உங்களைப் பின்தொடர்ந்து, உங்கள் எழுத்துக்களைப் படிப்போருடன் தொடர்பில் இருங்கள். நல்ல உறவைப் பேணுங்கள். சமூக ஊடகங்களின் மிகப் பெரும் பலம் இது. ஏனைய படைப்பாளிகளுடன் சமூக ஊடகங்களில் ஊடாடுங்கள்; படைப்பாளிகள் சமூகம் மிகப் பெரும் ஆதார சக்தி. உங்கள் படைப்புகளுக்குப் பின்தொடர் அடையாளக் குறியீடு (Tag) இட்டுவிடுங்கள். இது உங்கள் வாசகர் வட்டத்தை விரிவாக்கும். உங்கள் படைப்புகள் உரியவர்கள் கண்ணில் அகப்படாமல் போவதைத் தடுக்கும்.

இப்போது நீங்கள் பலராலும் அறியப்படும் ஒரு "பிரபலம்" ஆகிறீர்கள். "எல்லாப் பிரபலங்களும் நல்ல பிரபலங்களல்ல" என்பதை வாசகர்கள் நன்கறிவர். சமூக ஊடகங்களில் இடப்படும் உங்கள் சின்னச் சின்னப் பதிவு களையும் மிக நுணுக்கமாக அவர்கள் கவனிப்பார்கள். நீங்கள் இடும் பதிவுகளே உங்கள் உண்மை ஆளமை யின் அடையாளங்கள். நீங்கள் யார் என்பதை அவை இலகுவில் இனங்காட்டி விடுகின்றன. ஆகையால் உங்கள் பதிவுகளின் குறிக்கோளிலும், சாராம்சத்திலும், தொனியிலும், தோற்றத்திலும் அவதானமாக இருங்கள். அவை உங்கள் படைப்பிலிருந்து வாசகர்களைத் துரத்தி விடாதிருக்கப் பார்த்துக்கொள்ளுங்கள். குரலற்றவர் களின் குரலான சமூக ஊடகத்தை உங்கள் வழித்துணை யாக வரும் அன்புத் தோழனாக ஆக்கி வைத்திருங்கள்; உங்கள் தோளிலேறி ஆட்டிப் படைக்கும் அதிகாரி ஆக்கி விடாதீர்கள்! அது உங்கள் ஆக்கபூர்வமான சமூக ஊடாட்டத்திற்கும், உடல்-உள ஆரோக்கியத்திற்கும் ஆபத்து விளைவிக்கும் என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்!


உசாத்துணைகள்:

Cassandra Clarke, 'How Technology Is Changing The Literary World'?; Forbes

Anne Leigh Parrish, "Is Social Media Changing How We Write?,; Writer's Digest

Tim Ellison, 'Social Media and Literature,' Ploughshares

க. நவம். "இலக்கியம் காவிகளும் இனிவரும் காலங்களும்." கீப்பெற்னா தமிழ் ஆண்டுவிழா மலர், 2013



மனோரதம்

காலம்
சக்கரமாய்
சுழல்கிறது.

வெளியுடன்
இணைந்து
விரைவு கொள்கிறது.

நினைவுகளில்
வெளியைச் சுருக்கி
மாயாஜாலம் காட்டுகிறது.

ஐன்ஸ்ரீன் சொன்ன
சார்புநிலை
உயிர்ப்புக் கொள்கிறது.

காலத்தின் வேகம்
வெளியின் நீட்சியை
குறுக்கம் செய்கிறது

நினைவுகளின் பாய்ச்சல்
காலத்தையும்
விஞ்சுமோ!

மனித நேயம்

மூளாத்தீயாய்
சில காலம்
அடங்கியிருந்தது
கொழுந்துவிட்டு
எரிகிறது.
எரியும் தீயில்
மீண்டும் பிறப்பெடுத்து
ஆண்ட பரம்பரை
அதிகாரம் செய்கிறது.
ஆலயங்களையும்
பொது மயானங்களையும்
ஆக்கிரமித்து
ஒருக்குமுறைக்கு
மீள்வடிவம் கொடுக்கிறது.
ஆனைகளையும் அந்நியரையும்
வாகனங்களையும்
இறை சந்நிதானத்திற்கு
வரவழைத்து
சாதித் திமிரில்
சந்நதம் ஆடுகிறது.
உயிர் பிரியும் அவஸ்தையில்
மனித நேயம்
அல்லாடுகிறது
"தேரும் திங்களும்"
தூரத்தில் தெரிகிறது.

இடைவெளி

கூட்டுக்குடும்பம்
சிதைந்து போனது
உறவுமுறை அறியாது
இளஞ்சந்ததி
தறிகெட்டுப்
போகிறது.
சொந்தச் சகோதரர்களையே
யார் இவர்கள்
என்று கேட்கும்
அவல நிலை
தொடர்கிறது.
ஆனாலும்
அமாவாசைக்கு வரும்
காகங்களை
உணவுக்காய் அழைத்து
தாத்தாவழி
முப்பாட்டன்களின்
பெயர் சொல்லி
மகிழ்வு
கொள்கிறான்
பாலனான
என் பேரன்.

மாக்சிய அழகியல்

கொ.றொ.கொன்ஸ்ரன்ரைன்

மெய்யியல் சார்ந்த அழகியல் அணுகுமுறைகளுடன் 20 ஆம் நூற்றாண்டில் முக்கியத்துவம் பெற்ற பிறிதொரு அழகியல் கண்ணோட்டமாக நாம் சமூகம் சார்ந்த அழகியல் அணுகுமுறைகளை கருதலாம். இந்த வகையிலே மாக்சிய அழகியலை சமூக சார்பினைக் கொண்ட ஒரு அணுகுமுறையாக நாம் இனம் காணலாம். மாக்சிய அழகியல் 20ம் நூற்றாண்டின் கலைகளின் உள்ளடக்கத்தை பற்றி மட்டுமன்றி உருவத்தைப் பற்றியும் கணிசமான கருத்துப் பரிமாற்றங்களை உருவாக்கிய ஒரு கருத்தாக்கமாக அமைகிறது. மாக்சிய அழகியலை நாம் அரசியல் முனைப்புக் கொண்ட ஒரு கருத்தாக்கமாகக் கருதலாம். காரணம் மாக்சியமானது கலை இலக்கியங்களை சமூக மாற்றத்திற்கான ஊடகமாகக் கருதுகிறது.

மாக்சியவாதிகளிடையேயும் மாக்சிய அழகியல் வாதிகளிடையேயும் பல்வேறுபட்ட கருத்து முரண்பாடுகள் நிலவி வந்தாலும் கலையும் இலக்கியமும் ஏதோஒரு வகையில் அரசியலுக்கான ஒரு கருவியாக அமையும் என்பதில் உடன்பாடு காணப்படுகிறது. சோவியத்தின் சோசலிச யதார்த்தவாதமும், பிரெக்டினது அந்நியமாதல் பற்றிய கருத்தும், அமைப்பியல்வாத மாக்சிய கருத்துகளும் கலை இலக்கியங்கள் ஒரு சமூகத்தின் நியமங்களை வலுவடையச் செய்வதில் அல்லது அதனை மாற்றியமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை வலியுறுத்தும்.

20ம் நூற்றாண்டில் நாம் மாக்சியத்தின் வேறுபட்ட வளர்ச்சிப் போக்குகளை உலகின் பல பாகங்களிலும் பார்க்கக் கூடியதாக வுள்ளது. குறிப்பாக சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின் மேற்குலகில் மாக்சியம் மீதான ஆய்வுகளும் கருத்துப் பரிமாற்றங்களும் புது உத்வேகத்தினை காட்டுகின்றன. இருப்பினும் இந்த பல்வேறுபட்ட போக்குகளிலும் அடிப்படையாக பொருளாதார அடித்தளமும், அதனடியாக எழும் அரசியல் நோக்கினூடாகவே சமூகத்தின் ஏனைய ஊடாட்டங்களும் அணுகப்படுகின்றன. கலை இலக்கியங்களைப் பொறுத்தளவிலே இவை வர்க்கப் போராட்டத்தை ஊக்குவிக்க அல்லது மழுங்கடையச் செய்ய வல்லது என்பது மாக்சியவாதிகளது பொதுவான கருத்தாகும்.

ஸ்டாலினினது கட்டுப்பாட்டில் வளர்ந்த பிரச்சாரத்தனமான



Bertolt-Brecht

சோவியத் சமூக யதார்த்தவாதக் கலைகளிலிருந்து மிகவும் வளர்ச்சியடைந்த சமூக முரண்பாடுகளை கலை இலக்கியத்தில் ஆராயும் புதிய மாக்சிய முனைப்புகள் வரை மாக்சியமானது கலைச் செயற்பாட்டினை அரசியல் மயப்பாட்டிற்குட்பட்ட ஒரு செயற்பாடாகவே கருதுகிறது.

கலையின் அரசியல் ரீதியான முக்கியத்துவத்தையே மாக்சியம் முதன்மைப்படுத்துகிறது. ஆகவே அரசியல் ரீதியாகவே கலையினதும் கலைஞனினதும் முக்கியத்துவம் மாக்சியத்திலே கணிக்கப்படுகிறது. இது தனிப்பட்ட கலைப் படைப்புகளும் கலைச் செல்நெறிகளும் சமூகத்தில் வகிக்கும் முக்கியத்துவம் பற்றி பல்வேறு வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பியுள்ளது.

மாக்சியத்தின் கருத்துப்படி மனித சமுதாய வளர்ச்சி நிலைகளுடனும், அந்தந்தக் காலகட்ட கருத்தியல் வளர்ச்சிகளுடனும் சார்ந்ததாகவே கலை வெளிப்பாடு விளங்கிக் கொள்ளப்படலாம். ஆகவே கலையானது நித்தியத்திற்குமான உண்மைகளை வெளிப்படுத்துவது சாத்தியமற்றது. ஆகவே மாக்சிய கண்ணோட்டத்தில் கலையினது பங்கு அக்காலத்திற்குரிய கருத்து நிலைப் போராட்டத்திற்கு எந்த வகையில் கலையானது பங்களிப்பு செய்துள்ளது என்பதன் அடிப்படையிலேயே தர நிர்ணயிக்கப்பட வேண்டும்.

கலைக்கும் பொருளாதார உற்பத்தி முறைகளுக்கும் அரசியலுக்குமிடையிலான தொடர்பு எப்படிப்பட்டது? கலை இவற்றி


Althusser


freddict angels

னின்று சுயாதீனமாகச் செயற்பட முடியுமா? என்பது பற்றி மாக்சிய வட்டாரங்களில் அண்மைக்காலங் களாக மிகுந்த சர்ச்சை நிலவி வருகிறது. கலை சுயா தீனமாக இயங்க முடியுமா என்ற கேள்வி அடிப்படை யில் ஒரு சமூகத்தின் கலை கலாசார செயற்பாடுகளை நிர்ணயிக்கும் அடித்தளம்/மேற்கட்டுமானம் என்ற மாக்சிய கட்டமைப்பிற்கே எம்மை இட்டுச் செல்கிறது.

மாக்சியத்தின் கருத்துப்படி ஒரு சமுதாயத்தின் மேற்கட்டுமான செயற்பாடுகளான சமூக நடவடிக்கை கள், கலைகள், மதம், சட்டங்கள் எல்லாம் அச்சமூகத் தின் அடித்தளமாக அமையும் பொருளாதார செயற் பாடுகளிலேயே தங்கி நிற்கிறது. ஒரு சமூகத்தின் பொரு ளாதார நடவடிக்கைகள் தான் அதன் மேற்கட்டுமான நடவடிக்கைகளின் தன்மையினைத் தீர்மானிக்கிறது. இதனால் முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் கல்வி முறையானது போட்டி மனப்பாங்கினையும், கலையில் தனித்துவ கலைஞனின் முதன்மையையுமே முன்னிலைப்படுத்துகிறது. இதுவே திறந்த பொருளா தார அமைப்பின் விளைவுகள்.

ஆரம்ப கால மாக்சிய அழகியல் சமூகப் பொருளாதார அடித்தளத்திற்கும் அதனது கலை இலக்கியச் செயற்பாடுகளுக்குமிடையிலான தொடர் பினைப் பற்றியதாகவே அமைந்தது. கலை இலக்கிய வெளிப்பாடுகள் சமூகத்தின் கருத்து நிலைகளின் வெளிப்பாடாகவே கருதப்பட்டது. இது பிரதிபலிப்புக் கோட்பாடு(Reflective Theory) என அழைக்கப்பட்டது. ஆகவே சமூகத்தில் நிலவும் கருத்துநிலை சிதைவுறும் பொழுது அது கலை இலக்கியங்களிலும் பிரதிபலிப்ப தாகக் கருதப்பட்டது.

அண்மைக்காலங்களில் அல்தூசர்(Louis Althusser) போன்ற புதிய மாக்சிய அமைப்பியல் அழகியல்வாதிகள் பொருளாதார அடித்தளத்திற்கும் கலைக்குமான தொடர்பை ஒரு சிக்கலான தொடர் பாகக் கருதி கலையானது ஓரளவு சுதந்திரமான சமூக செயற்பாடு என்பதனை முன் மொழிந்துள்ளனர். இருப்பினும் பொருளாதார அடித்தளம் மேற்கட்டுமான செயற்பாடுகளை நிர்ணயிக்கும் ஒரு முக்கிய காரணி என புதிய, பழைய மாக்சிய வாதிகள் அனைவருமே பொதுவாக ஏற்றுக் கொள்வர்.

"அரசியல், சட்டம், மெய்யியல், சமயம், கலை கலாசாரம் போன்ற இதர செயற்பாடுகள் எல்லாம் பொருளாதார அபிவிருத்தியிலேயே தங்கி நிற்கின்றன. இருந்தாலும் இவையெல்லாம் தமக்கிடையேயும், பொருளாதார அடித்தளத்துடனும் தாக்கம் செலுத்தக் கூடியன. பொருளாதார அடித்தளமே இவற்றையெல் லாம் உருவாக்குகிறது. இவையெல்லாம் பொருளா தாரத்தின் சுயமான விளைவுகள் எனக் கருதிவிட முடியாது. பொருளாதாரத் தேவைகளின் நிமித்தம் இவற்றிற் கிடையில் இடைத்தாக்கம் நடைபெற்றாலும் ஈற்றில் பொருளாதார அடித்தளமே எப்பொழுதும் முக்கியமாக அமைகிறது" என ஏங்கிள்ஸ்(Fredrich Engels) கருதினார். ஏங்கிள்ஸின் கருத்துப்படி மேற்கட்டுமான நட வடிக்கைகள் எப்படியான தாக்கங்களைச் செலுத்தினா லும் அடித்தளமே ஈற்றில் மேற்கட்டுமான செயற்பாடு களின் முன்னேற்றத்தை நிர்ணயிக்கிறது.

மாக்சிய கருத்தியலும் கலையும்

மாக்சிய கருத்தியலின் அடிப்படை நோக்கம் முதலாளித்துவ பொருளாதார அமைப்பினை மாற்றி யமைப்பது தான். இதனை எய்துவதற்கு மாக்சியம் பொருளாதார அடிப்படைகளை நிர்ணயிக்கும் காரணி களான உற்பத்திச்சாதனங்கள், தொழிற்சாலைகள், இதர நிறுவனங்கள் போன்றவற்றை உழைக்கும் வர்க்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதை முக்கிய அணுகுமுறையாக முன் வைக்கிறது. இதனை எய்துவதற்கு வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்து சுரண்டலுடன் கூடிய சமூக பொருளாதார அமைப்பை மாற்றியமைப்பதனை மாக்சியம் ஆதரிக்கிறது.

இந்த சமூகப் பொருளாதார மாற்றத்தில் கலை இலக்கியங்கள் முக்கிய பங்கு வகிக்கக் கூடியன. இந்த மாற்றங்களை ஆதரித்து ஊக்கப்படுத்தவும், எதிர்க்கவும் கலை இலக்கியவாதிகளால் முடியும். ஆக மாக்சியம் கலைஞனை ஒரு சமூக மாற்றத்தினை ஏற்படுத்தக் கூடிய ஒரு செயற்பாட்டாளனாக இனம் காண்கிறது. அதே வேளை கலைஞன் அரசியல் போக்கிற்கு ஒத்துழைக்க நிர்ப்பந்திக்கப்படக்கூடிய அபாயத்தையும் மாக்சியம் கூட்டுகிறது.

மாக்சிய அரசியல் போக்கிற்கு இசைவில்லாத கலை இலக்கியவாதிகளை தணிக்கை செய்ய எடுக்கும் நடவடிக்கைகளுக்கெதிரான குரல் ஆரம்பம் தொடங் கியே மாக்சியவாதிகளிடையே இருந்து வருகிறது. அத்துடன் கலைப்படைப்புகள் அரசியல் விதிகளின் அடிப்படையில் அல்லாது கலையின் விதிகளின் அடிப் படையிலேயே மதிப்பிடப்பட வேண்டும் என்ற கருத்தும் மாக்சிய வாதிகளிடம் இருந்து வந்துள்ளது.

இருப்பினும் ஒரு கலைப் பொருளின் முக்கியத்துவத்தை மாக்சிய விதிகளின் அடிப்படையில் நிர்ணயிக்க முடியும் என வாதிடுபவர்களும் உள்ளனர். இவர்களது கருத்துப்படி மேற்கட்டுமான செயற்பாடுகள் எப்படியும் ஈற்றில் பொருளாதார அடித்தளத்திலேயே தங்கி நிற்க வேண்டியுள்ளது. இதனால் கலையின் விதி களும் அரசியல் விதிகட்குட்பட்டே செயற்பட வேண்டிய தாயிருக்கும்.

மாக்சிய அழகியல் சமூக மாற்றத்தில் கலை களுக்கான பங்கினை அங்கீகரிக்கிறது. இதனால் கலை களில் யதார்த்தவாத/தத்ரூப செல்நெறிகளே பல நிலை களில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. காரணம் யதார்த்த/தத்ரூப கலை வடிவங்களே எளிதாக

மக்களிடையே சென்றடையக் கூடியதாக உளது.

யதார்த்தவாதம் மாக்சிய அரசியல் நோக்கங் களுக்கு இசைந்து கொடுக்கக் கூடிய ஒரு செல்நெறி யாகக் கருதப்பட்டது. சடாநொல்(Zhadanov) ஜோர்ஜ் லூகாஸ்(George Lukacs) போன்றோர்கள் யதார்த்தப் போக்கினை அழகியல் நோக்கத்திற்கு உகந்ததாக முன்வைத்தனர். நவீன போக்குகளும் யதார்த்தத்திற்கு எதிரான போக்குகளும் மாக்சிய அரசியலுக்கு எதிரானவை எனக் கருதினர். லூகாஸ் நவீன இலக்கியம் மாக்சியத்திற்கு எதிரான போக்கு எனக் கூறியுள்ளார்.

இருந்தாலும் யதார்த்தவாதத்தை அங்கீகரிக் காத பல முன்னிலைக் கலைஞர்களும் கலை விமர்சகர் களும் மாக்சியவாதிகளின் மத்தியில் இருக்கவே செய்தனர். இந்த வரிசையில் பேட்டோல் பிரெக்ட்(Bertolt Brecht), வால்டர் பென்சமின்(Walter Bengemin) போன் றோரைக் குறிப்பிடலாம். ஓவியக் கலைஞர்களில் டாடாஸ்டுகளையும்(Dadaism), மிகையதார்த்த வாதி களையும்(Surrealism) குறிப்பிடலாம். இவர்களைத் தொடர்ந்து பிற்காலத்தில் வந்தஅமைப்பியல் மாக்சிய வாதிகளும் (Structural Maxism) குறிப்பிடத்தக்க மாற்றுக் கருத்துகளை முன் வைத்தனர்.

யதார்த்தப் போக்கு நேரடியானதாகவும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் அமைந் திருந்தது. நவீன பரிசோதனை முயற்சிகள் மக்களது வரன் முறையான நம்பிக்கைகளையும் நோக்கு களையும் கேள்விக்குள்ளாக்குவதன் மூலம் ஒரு புதிய பாதையை உருவாக்க முனைந்து நின்றன. இந்த போக்குகள் அடிப்படையில் வேறானவை. உடன்பட்டுச் செல்ல முடியாதவை. இவை அணுகுமுறையில் வேறு பட்டு நின்றாலும் இவை ஒரே நோக்கை முன்வைத்தே செயற்பட்டன.

சோசலிச யதார்த்தவாதம்

சோசலிச யதார்த்தவாதத்தின் ஒரு பிரதான உந்து சக்தியாகத் திகழ்ந்தவர் பினெகனோவ் ஆவார் (George Plekhanov). அவரது அடிப்படைக்கருத்து பிரதி பலிப்புக் கோட்பாட்டைச்(Reflection theory) சார்ந்திருந் தது. ஒரு சமூகத்தில் முற்போக்கான கருந்துகள் முதன்மை பெறும் போது அந்த சமூகத்தின் கலைகளி லும் முற்போக்குத்தன்மை வெளிப்படும். அதேவேளை ஒரு சமூகத்தின் கருத்துநிலை சிதைவுப் பாதையில் செல்லும் போது கலைகளிலும் இந்த சிதைவுத்தன்மை வெளிப்படுகிறது என பிளெகனோவ் கருதினார்.

பிளெகனோவினது குயூபிசம் மீதான விமர்சனம் சோவியத் சோசலிச யதார்தவாதத்திற்கான முக்கிய பலமாக அமைந்தது. இத்கைய கலைப் போக்கு கள் கலையை சாதாரண மக்களிடமிருந்து பிரித்து ஒரு உயர் வர்க்கத்தினருக்குரிய ஒரு ஊடகமாக மாற்றுவ தாக இவர் கருதினார். இவ்வகையான கலை வளர்ச்சி சமூகத்தின் உண்மை நிலையினை மறைக்கிறது. இவ்வகையான அரூப ஓவியங்களைப் பாவித்து சமூகத்தில் நிலவும் உண்மையான அரசியலையும், சமூகக் குறைபாடுகளையும் மறைக்க ஓவியர்கள் துணைபோகிறார்கள் என பிளகனோவ் கருதினார்.

பிளகனோலினது கருத்து ஸ்டாலின்



plekhano



andrei zhdanov

முன்னெடுத்த சோசலிச யதார்த்த வாதத்திற்கு பெரும் உறுதுணையாக அமைந்தது. இதனடியாக ரஷ்யாவில் அக்காலத்தில் முனைப்புக் கொண்டிருந்த கட்டுமானவி யலும்(Constructionism) படிப்படியாக வலுவிழந்து சோவியத் கலை இலக்கிய வரலாற்றிலிருந்து ஒதுக்கித் தள்ளப் பட்டது.

சோவியத் சோசலிச யதார்த்தவாதம் உழைக் கும் வர்க்கத்தினரின் செயற்பாடுகளையும் அதனால் ஏற்படக்கூடிய முன்னேற்றங்கள் பற்றியதாகவே அமைந்தது. இதிலே வலிமையான உடற் கட்டமைப் புடன் கூடிய தொழிலாளர் வீரதீர நடவடிக்கை களில் ஈடுபடும் பிரசாரத் தனமான படைப்புகளே முன்னுரிமை பெற்றன. இது சோவியத்தின் அன்றைய யதார்த்த நிலை யினை பிரதிபலிக்கவில்லை. மாறாக இவை மாக்சிய கருத்தியல் காண விரும்பிய சமூக யதார்த்தத்தினையே பிரதிபலித்தன.

பிளெகனோவின் கருத்துகள் மார்க்ஸ், எங்கிள்ஷ் கலை பற்றி காட்டிய ஓரளவு நெகிழ்வுத் தன்மையையும் இல்லாதொழித்தது. சோவியத் சோசலிச யதார்த்த வாதத்தை ஸ்தாபிக்க உறுதுணை யாக அமைந்தது. இவரது "Art and Social Life' என்ற கட்டுரை இந்த கருத்துகளை முன் வைத்த முக்கியமான ஒரு கட்டுரையாகக் கருதப்படுகிறது.

சோசலிச யதார்த்தவாத கருத்தியலுக்கு உர மூட்டிய மற்றுமொருவர் அன்ரே சடானோவ் ஆவார். (Andrei Zhdanov). இவர் ஸ்டாலினுக்கு அடுத்த படியான தலைவராகக் கருதப்பட்டார். அத்துடன் ஸ்டாலினின் ஆட்சியில் சோவியத்தின் கலாச்சார கொமிசனராகச் செயற்பட்டவர். இவர் தனது கருத்துக்களை 1934 ம் ஆண்டு நடைபெற்ற சோவியத் எழுத்தாளர் காங்கிரசில் ஆற்றிய உரையில் விபரித்திருந்தார். இவர் ஸ்டாலின் எழுத்தாளர்களை மனித மனங்களை தயார் செய்யும் பொறியியலாளராகக் கருதுவதாகக் கூறினார்.

இவரது உரை அப்படியாக கலை இலக்கியவாதி களின் மனித மனங்களை மாற்றியமைத்து வர்க்க போராட்ட மனப்பாங்கை வளர்த்தெடுக்க உதவ வேண்டும் என்பது பற்றியதாக அமைந்தது. அத்துடன் அத்தகைய இலக்கியமே உன்னத, உலகிலே தலை சிறந்த இலக்கிய போக்காக இவர் கருதினார். இவரது கருத்துப்படி எழுத்தாளர்களதும் படைப்பாளிகளதும் பணி மனித மனங்களை எப்படிமாற்றியமைப்பது என்பது பற்றியதே. இவர் கலை இலக்கியங்கள் சமூக மாற்றத்திற்கான கருவிகளாகவே கருதினார்.

படைப்பாளியின் சமூக கடப்பாடு

மக்களிடையே கருத்து மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய சக்தி இலக்கியங்களுக்கிருப்பது தொன்று தொட்டு அறியப்பட்டு வந்துள்ளது. இந்த சக்தி எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் மெய்யியலாளர் களும், அரசியல்வாதிகளும் பல்வேறு நிலைப்பாடு களில் இருந்து வருகின்றனர்.

பிளேடோ கலை இலக்கியத்தின சக்தி பற்றி தனது குடியரசில்(Republic) எச்சரித்துள்ளார். ஒரு திறமை யான கலைஞன் மக்களை மகிழ்விக்கவும் அவர்களை ஆற்றுப்படுத்தவும் தனது திறமையை பயன்படுத்தக் கூடும். அப்படிப்பட்டவர்கள் தமது பொதுநலயவாயத் திலே (Commonwealth) தமது சட்டதிட்டங்களுக்கு உட் பட்ட வகையிலேயே தமது கலை நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர் என பிளேடோ கூறியிருந்தார்.

இந்த வகையில் பார்க்கும் பொழுது பிளேடோ வின் கருத்தும் சோவியத் சோசலிச யதார்த்த வாதத் தினை அங்கீகரிக்கும் கருத்தாகவே தென்படுகிறது. பிளேடோ தனது பொதுநலவாயத்திலே கலை இலக்கியவாதிகளைக் கட்டுப்படுத்த மாக்ஸ், ஏங்கிள்ஸ் முன்மொழிந்த முறைகளைவிட கடினப் போக் கினையே முன்மொழிந்தார். இதனை அமெரிக்க அறிவியல் விமர்சகரான I.F. ஸ்டோன் "மாக்ஸ் ஏங்கிள் ஸிடம் காணப்படாத வெளிப்படையான சர்வாதிகார அணுகுமுறையினை பிளேடோ முன்மொழிந்தார்." எனக் கூறியுள்ளார்.

இருப்பனும் கலை இலக்கி வரலாற்றிலே காலாதிகாலமாக மக்களது வாழ்நிலையை பிரதி பலிக்கவும் அதனை ஆற்றுப்படுத்தவும் புதிய செல் நெறிகளும், படைப்பாளிகளும் செயற்பட்டதை நாம் காணலாம். உதாரணமாக பக்தி இலக்கிய காலத்தில் இலக்கியம் மக்களை ஆற்றுப்படுத்தும் முக்கிய ஊட க மாக திகழ்ந்து. ஆக கலை இலக்கியத்தின் இந்த சக்தி அரசியல் வாதிகளின் கைக்குள் சிக்காது பாதுகாப்ப தெனில் தனிப்பட்ட படைப்பாளி சமூகக் கடப்பாட்டுட னும், சுய கட்டுப்பாடுடனும் செயற்படுவது அவசிய மாகிறது.

இத்தகைய ஒரு கருத்தினை போல் சாத்தரும் (Jean-Paul Sartre) தனது "What is Literature" என்ற நூலில் முன்மொழிந்துள்ளார். சாத்தர் படைப்பாளிகள் அரசி யல் ஊடாட்டத்தில் ஈடுபட்டு தமது படைப்பாற்றலை பொறுப்புணர்வுடன் பாவிக்க வேண்டும் எனக் கருதினார்.

ஜோர்ஜ் லூகாசினது விமர்சன யதார்தவாதம்
(George Lukacs and critical Realism)

லூகாஸ் பொதுவாக மேலைத்தேய மாக்சிய வாதத்தின் ஆரம்ப கர்த்தாவாகக் கருதப்படுபவர். லூகாஸின் விமர்சன யதார்த்தவாதம் மாக்சிய எழுத் தாளர்களது படைப்புகளைவிட பிற மாக்சிய சார்பில் லாத படைப்பாளிகளது படைப்புகளை எவ்வாறு மதிப்பிடுவது என்பது பற்றியதாக அமைகிறது. இவர் சோசலிச யதார்த்தவாதத்தை நேரடியாக எதிர்க்கா விடினும் அதுபற்றி ஒரு சந்தேகப் பார்வையைக் கொண்டிருந்தார்.

உப்புச்சப்பில்லாத மாக்சிய யதார்த்த படைப்பு கள் பெரும் இலக்கிய படைப்புகளாக போற்றப்படுவதை இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதாவது கலைத்துவ ரீதியாக இல்லாது முற்றிலுமாக அரசியல் ரீதியாக இலக்கியத்தை பார்க்க முடியாது என்பதை இவர் ஏற்றுக் கொண்டார்.

லூக்காசின் அணுகுமுறை பொதுவாக இலக்கிய படைப்புகளை எவ்வாறு மாக்சியம்" சார்ந்த ஒரு புதுக் கண்ணோட்டத்தில் பார்க்கலாம் என்பது பற்றிய ஒரு முயற்சியாகும். இவர் 20ம் நூற்றாண்டின் புரூசுவா இலக்கியத்தை இரண்டு பிரிவுகளில் தனது "the meaning of contemporary realism" என்ற ஆய்விலே ஆராய்கிறார். இதில் ஒன்று முற்றிலும் பரிசோதனை முயற்சியை அடிப்படையாகக் கொண்ட நவீன இலக்கியங்கள். இந்த வகைப் படைப்புகளிலே வடிவ பரிசோதனையே முதன்மை பெறுகிறது. இவை "கலை கலைக்காகவே" என்ற கோசத்தைப் பிரதிபலிக்கும் படைப்புகளாக இவர் கருதுகிறார். இங்கே உள்ளடக்கம் முக்கியத்துவம் பெறுவதில்லை.

இவ்வகையான இலக்கியங்களிலே வரும் பாத்திரங்கள் அந்நியப்பட்டவர்களாக எந்தவித சமூக ஊடாட்டங்களுமின்றி வாழத்தக்க தனியன்களாக சித்திரிக்கப்படுவார்கள். அதாவது முதலாளித்துவ உலகில் அந்நியப்பட்டவர்களாக வாழ்வது ஒரு இயல் பான விடயம் போல இந்த வகை இலக்கியங்களிலே தோன்றும். இதுவே வாழ்வின் யதார்த்தம் போல சித்திரிக்கப்படும்.

விமர்சன யதார்த்தவாத இலக்கியங்களோ நவீன வகையினைப் போலல்லாது நேர்கோட்டு கதை சொல்லல் பாணியில், நம்பத்தகுந்த யதார்த்த புலத்தில், உண்மை வாழ்நிலையினைக் களமாகக் கொண்டிருக் கும். விமர்சன யதார்த்தவாதத்தில் காரண காரிய தொடர்புகள். சமூக அமைப்பு காரணிகள், சமூகத்தை உருவாக்கும் அகபுறக் காரணிகளின் தாக்கம் எப்படியாக வாழ்வினைப் பாதித்து தற்போதைய நிலைக்கு காரண மாக அமைந்துள்ளது எனபது பற்றிய ஒரு பார்வையைக் கொடுக்கும். அத்துடன் இவ்வகைப் படைப்புகள் புறத்தேயிருந்து சமூக நிலைமைகளை விமர்சனப் பார்வையில் முன்வைப்பன.

லூகாசின் கருத்துப்படி நாம் நவீன படைப்பு களை அவற்றின் அழகியல் கவர்ச்சிமிக்க வடிவப் பரி சோதனைக்காக அல்லது பயனுள்ள விமர்சன யதார்த்த வாத படைப்புகளை அவற்றின்யதார்த்த தன்மைக்காகத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலையிலுள்ளோம். ஆக இலக்கியத்தின் தரம் அது எந்த அளவிற்கு சமூகத்தின் நடைமுறைச் சிக்கல்களைக் காரணகாரிய பின்னணி களுடன் விமர்சன அணுகுமுறையில் முன்வைக்கிறது என்பதிலேயே தங்கியுள்ளது. லூகாசைப் பொறுத்த வரையில் படைப்பாளி சமூகத்தின் சிக்கலுக்கான காரண காரியங்களைப் பற்றி பராமுகமாக இருத்தல் கூடாது. இதனையே சாத்தரும் (Jean Paul Sartre) எழுத்தாளனின் பொறுப்பு மிக்க செயற்பாடு எனக் கூறினார். கற்பனைக் கதாபாத்திரங்கள் கலாசாரபின்புலத்தில் பிரதிபலிக்கப் படும்போது அது எவ்வாறு சமூகத்தில் நிலவி வரும் கருத் தியல்களால் வடிவமைக்கப்படுகிறது என்பது வெளிக் கொணரப்பட வேண்டும் என லூகாஸ் கருதினார்.

இந்த அளவுகோலைப் பாவித்து இலக்கியங் களை மதிப்பிடுகையில் நவீன இலக்கியத்தில் வரும் அந்நியப்பட்ட தனியன்கள், சமூக அரசியலோட்டத் திற்கு அப்பாற்பட்டு செயற்படும் பாத்திரங்களை முதன்மைப்படுத்தும் நவீன இலக்கிய முயற்சிகள் எல்லாமே தரக்குறைவானதாக ஒதுக்கித் தள்ளப்படும்.

லூகாசின் அணுகுமுறை பிளேகனோவின் அணுகுமுறை போல கடின போக்காக அமையா விடினும், அது மாக்சிய அரசியலுடன் ஒத்துப் போகாத இலக்கியங்களை சிறந்த இலக்கியமாக கருதாமை நோக்கத்தக்கது.

மாக்சிய அழகியல் பழைய பாணிகளை ஏற்றுக் கொள்வதனையும் நவீன பரிசோதனை முயற்சிகளை புறக்கணிப்பதையும் பொதுப் பண்பாகக் கொண்டு உள்ளன. இதுஅழகியல் விதந்துரைப்புக்கு அரசியல் பார்வையின் சார்பினை வலியுறுத்துவதை நாம் அவ தானிக்கலாம். சோசலிச யதார்த்தவாத அழகியல் அரசியல் வாதிகளாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. அதிலே பரிசோதனை முயற்சிகளுக்கு எந்த இடமும் தரப்படவில்லை.

நவீன ஓவியமும் மாக்சிய அழகியலும்

நவீன ஓவிய வரலாற்றில் நாம் இரண்டு முக்கிய முன்னெடுப்புகளை அவதானிக்கலாம். ஒன்று நவீன பரிசோதனைகள். இதற்கு ஒரு சிறந்த உதாரண மாக கியூபிசத்தைக் குறிப்படலாம். இதிலே ஒரு பொருள் பல பரிமாணங்களில் புதிய முறையில் அணுகப்படுகிறது.

ஆரம்ப கால கியூபச முயற்சிகள் செசானினது ஓவியங்களில் ஆரம்பிப்பதாக நாம் கொள்ளலாம். இதனைத் தெடார்ந்து பிக்காசோவும்(Picasso) பரோக்கும் (Georges Braque) கியூபிச ஓவிய முயற்சிகளைத் தொடர்ந் தனர். இவர்களது பின்னைய கால ஓவியங்களில் ஓவிய கருப்பொருளை இனம் காணவே முடியாது. இது நவின ஓவியத்தின்ஒரு பரிசோதனை முயற்சியாகும். இதேவித பரிசோதனை முயற்சிகளை நாம் அனுபவ வெளிப் பாட்டுவாதம், ஜெர்மனிய வெளிப்பாட்டு வாதம் போன்ற வற்றிலும் காணலாம்.

நவீன ஓவிய வரலாற்றிலே இத்தகைய பரி சோதனை முயற்சிகளை ஒரு வகை முன்னெடுப்பாக நாம் கருதலாம். அதேவேளை நவீன ஓவிய வரலாற்றில் நாம் காணும் இன்னொரு முன்னெடுப்பு அக்கால சமூகப்பொருளாதார நிலைகளுக்கெதிராக உருவாகிய ஒரு விமர்சனப் போக்கைக் கூறலாம். இதற்கு உதாரண மாக அமெரிக்க சமூக யதார்த்தவாதம்(Social realsim), டாடாஇசம், ஜனரஞ்சக ஓவியம்(pop art), நிகழ்த்துகைக் கலை(Performance art) போன்றவற்றைக் கூறலாம்.

இந்த இரண்டாவது வகையான முன்னெடுப்பு முதலாளித்துவ பொருளாதார அடிப்படைகளையும் அதன் பாதிப்புகளையும் பிரதிபலிப்பதாக நாம் கருத லாம். இவை நவீன ஓவியத்தில ஓவியன் முதன்மை யானவனாகவும் தனித்துவம் மிக்கவனாகவும் காட்ட விளைந்த முதலாளித்துவ பொருளாதார அமைப்பை யும் எதிர்த்து எழுந்த போக்குகளாகும். இவை நவீன ஓவியங்கள் வர்த்தக சந்தைப் பொருளாக முதலாளித் துவ பொருளாதாரப் போக்குடன் ஒத்தோடியதை எதிர்த்தன. இவை நவீன ஓவியம் உயர்வகைக் கலை, உயர் குடிமக்களுக்கானது என்ற போக்கினை எதிர்த்து எழுந்தவை.

இந்நதக் கருத்துகளை ஆராயுமிடத்து இத்தகைய நவீன ஓவிய செல்நெறிகள் விமர்சன யதார்த்தவாத பண்புகளைக் கொண்டிருப்பதனை நாம் ஏற்றுக் கொள்ளலாம்.

தியடோர் ஆடோனோ(Theodor Adorno) ஓவியத்தை சமூகத்தின்ஒரு மாதிரி அலகாகக்(Social monade) கண்டார். சமூக முரண்நிலைகள் அச்சமூகத்தி லிருந்து உருவாகும் நவீன ஓவியங்கள் தாங்கி நிற்பதாக அவர் கருதினார். இந்த முரணிலைகள் ஓவியனது சமூக வரலாற்று காரணிகளுக்கூடாக ஓவியத்திலே பிரதிபலிக் கிறது. இது சில சந்தரப்பங்களிலே குழப்பமான புரிதல் களுக்கும் பிழையான வியாக்கியானங்களுக்கும் உள்ளா கிறது. இந்த முரண்பாடுகளுக்கூடாக செயற்பட்டு அதனை விளங்கிக் கொள்வதானல்தான் ஓவியத்திற் கான உண்மையான அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும் என அடோனோ கருதுகிறார். இந்தப் புரிதலுக்கு ஒரு முற்றான சமூக மாற்றம் அவசியம் என அவர் கருதுகிறார்.


அடோனோவின் கருத்தில் ஒரு ஓவியத்தினது சமூகப் பெறுமானம் முக்கியமானது. ஒரு ஓவியத்தின் முக்கியத்துவத்தை நாம் இரண்டு தளங்களில் ஆராய லாம். ஒன்று ஒரு ஓவியத்தின் முக்கியத்துவம் அல்லது அதன் "கருத்து" இரண்டாவது ஒரு ஓவியத்தின் அரசியல் அல்லது வர்த்தகப் பெறுமதி. அடோனோலைப் பொறுத்த வரையில் இந்த இரண்டு துருவ நிலைகளுமே முக்கியமானவை. ஒரு தளம் அதன் சமூகப் பெறுமானம் பற்றியது மற்றையது அதன் பயன்பாடு பற்றியது. இந்த இரண்டு பெறுமானங்களும் ஒரு ஓவியத்தில் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பதாக அடோனோ கருதுகிறார். இந்த இரண்டு தளங்களிலும் ஒன்றுக்கொன்று முரண்பட்டோ அல்லது ஒன்றிணைந்த நிலையிலோ ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகவே அமைகிறது. இருந்தாலும் ஓவியத்தில் அரசியல் முக்கியத்துவத்தையும் வர்த்தகப் பெறுமதியையும் விட அதன் கருத்தே முக்கியமானது என அடோனோ வலியுறுத்துகிறார்.

மாக்சிய அழகியலின் மற்றைய பரிமாணங்கள்

மாக்சிய வாதிகள் மாக்சிய அழகியலை யதார்த்தவாதத்துடனும், பிரதிபலிப்புக் கொள்கையுட னும் அல்லது சோவியத் சோசலிச யதார்த்த வாதத் துடனும் சுருக்கிக் கொள்ளவில்லை. பேடோல் பிரெக்ட் (Bertolt Brect) வால்டர் பென்ஜமின்(walter Benjamin), லூயில் அல்தூசர்(Louis Althusser) போன்றவர்கள் மாக்சிய அழகியலின் பிற பரிமாணங்களை முன்னிலைப்படுத்தி யுள்ளனர்.

கலை இலக்கியங்கள் சமூகத்தைப் பிரதிபலிக்க வேண்டும் என்ற பிரதிபலிப்புக் கொள்கை மீது பலருக்கும் அதிருப்தி நிலவி வந்தது. இந்த விடயத்தைப் பற்றித்தான் பிரெக்டினது நாடகங்கள் பற்றி டெரி ஈகிள்டன்(Terry Egleton) குறிப்படும்போது "பிரெக்டினது நாடகங்கள் விசேட கண்ணாடியூடாக சமூகத்தைப் பார்க்கிறது. அது சமூகத்தைப் பிரதிபலிக்காது சமூகத்தைப் பற்றி பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன" எனக் கூறினார்.

பிரெக்டினது கருத்துக்கள் நாடக அழகியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இவை அடிப் படையில் யதார்த்த எதிர்ப்புத் தன்மையினையே வெளிப்படுத்தின. பிரெக்டினது அணுகுமுறை மேடையில் யதார்த்தத்தை சித்திரிப்பதை தவிர்த்து பார்வையாளனை உணர்வு பூர்வமாக பாத்திரத்துடன் இனங் காண்பதைத் தடுப்பது தான். யதார்த்த அரங்கு மனிதனது உண்மையான சமூக அரசியல் நிலைமைகளை மறைந்து ஒரு மாயையைத் தோற்றுவிக்கிறது. இந்த மாயையை தவிர்த்து மனிதனது உண்மையான முரண்பாடுகளை/ அரசியலை அணுகுதலே மாக்சிய அணுகுமுறை என பிரெக்ட் கருதினார்.



goege braque

பிரெக்ட் அவரது நாடகங்களில் யதார்த்தத்தை பிரதிபலிக்கவில்லை. அவர் அதனை பிரித்து காட்டு கிறார். இவரது நாடகங்கள் பார்வையாளனுக்காக ஒரு மாயையான யதார்த்தத்தை உருவாக்காது, அது ஒரு நாடக அமைப்பு என்பதைத் திரும்பத் திரும்ப வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டது.

பிரெக்ட் 'அந்நியமாதல்'(Alianation) என்ற கருத்தியலைப் பாவித்து பார்வையாளனை நாடகத் துடன் உணர்வு பூர்வமாக ஒன்றிணையாது, நாடக பாத்திரங்களுடன் இனங்காணாது இருப்பதற்கு பல நாடக உத்திகளைக் கையாண்டார். இதற்காக இவர் மிகைப்பட்ட நடிப்பு, நாடகத்தில் யதார்த்த காட்சி யமைப்பைத் தவிர்த்தல், இசை மற்றும் நடன இடையீடு போன்ற உத்திகளைப் பயன்படுத்தினார்.

நாடகத்தில் தொடர்ச்சியான இடையீடுகளும் பார்வையாளனின் எதிர்பார்ப்புகளுக்கு எதிராகச் செல்லும் போக்கும் நாடகமானது ஒரு மகிழ்வூட்டும் ஊடகமாக அல்லாது சிந்தனையை தூண்டும் ஒரு ஊடகமாக நாடகத்தை மாற்றும் என பிரெக்ட் கருதினார். அதாவது நாடகம் மகிழ்வூட்டும் ஊடகம் என்பதற்கும் அப்பால் அறிவுறுத்தும் ஊடகமாக மாற வேண்டும். பிரெக்டினது கருத்துப்படி உள்ளடக்கதில் மட்டுமன்றி நாடக உருவத்திலும் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும். இந்தக் கருத்தை மையப்படுத்தி பிரெக்டிற்கும் - லூகாஸிற்குமிடையில் ஒரு பெரும் சர்ச்சை 1930 களில் உருவாகியது. இது இன்றும் தொடர்கிறது.

காலத்தின் மாற்றத்துடன் புதிய ஊடகங்களும் இலக்கிய வடிவங்களும் தோன்றுகின்றன. கணனிக் கலை(Computer art) அக்காலத்தில் இருக்கவில்லை இப்பொழுது இருக்கிறது. நாவல் இலக்கியம் பண்டைக் காலத்தில் இருக்கவில்லை. இப்போது இருக்கிறது. காலத்தின் சிக்கற் தன்மைக்கேற்ப ஊடகங்களும் கலை வடிவங்களும் மாறலாம் என வோல்டர் பென்ஜமின் (Walter Benjamin) கருதுகிறார். ஆகவே மாக்சிய அழகியலும் லெனினின் சிந்தனையின் தொடரச்சியாக மட்டுமல்லாது அதற்கப்பாலும் செல்வது காலத்தின் நியதியாகும்.

கட்டமைப்பியல் மாக்சியம்

(Structural Marxism)

பிராங்பேட் சிந்தனைப் பள்ளியின்(Frankfurt School) வழித் தோன்றல்கள் மாக்சியத்திற்கு இன் னொரு பரிமாணத்தைக் கொடுத் தனர். இந்த சிந்தனை பள்ளி வழிவந்த லூகாஸ், அடோனோ, வால்டர் பென்ஜமின் ஆகியோரது சிந்தனை மாக்சிய அழகியலுக்கு ஒரு புது உத்வேகத்தையளித்தது.

இதனைத் தொடர்ந்த பிரான் சைச் சேர்ந்த லூயிஸ் அல்தூசர்(Louis Althusser) இன் கட்டமைப்பியல் சிந்தனை மாக்சிய அழகியலின் இன்னொரு பக்கத்தைக் காட்டியது. இவரது கருத்துகள் மாக்சியத்தின் மனிதம் இழக்கப்பட்டு வெறும் கட்டமைப்பற்கே முக்கியத்துவம் கொடுத்தது.

மாக்சிய அழகியலைப் பொறுத்தவரையில் அல் தூசரின் முக்கியமான பங்களிப்பு அவரது 'கருத்தியல்' (Theory of Ideology) பற்றிய கொள்கையாகும். அல்தூசர் கருத்தியலுக்கும் விஞ்ஞானத்திற்கும் இடையிலான வேறுபாட்டை முக்கியமானதாகக் கருதுகிறார். இவர் மாக்சியத்தை ஒரு கருத்தியலாகவல்லாது சமூகம் பற்றிய ஒரு விஞ்ஞான பூர்வ அணுகுமுறையாகவே காண்கிறார்.

அல்தூசரின் கருத்துப்படி கருத்தியல் என்பது மனிதவாழ்தலுக்கும் மனிதனுக்குமிடையிலான தொடர்பேயன்றி அது வாழ்க்கைக்கும் அதன் யதார்த்த வாழ்நிலைகளுக்குமிடையிலான தொடர்பைப் பற்றிய தல்ல. ஆகவே கருத்தியலானது நம்பிக்கைகள் சார்ந்தது. இந்த நம்பிக்கைகள் உலகம் பற்றியும் சமூக நடப்புகளைப் பற்றியும் முழுமையாக விளக்க உதவுவது. அதேவேளை இது முன்னுக்கு பின் முரண்பட்டதாக கூட இருக்கலாம்.

சமூகத்தைப்பற்றிய ஒரு விஞ்ஞான அணுகு முறையான மாக்சியம் அறிவின் அடிப்படையில் உருவாவது. அது ஒரு கருத்தியலைவிட மேலானது. கருத்தியலானது சமூகத்திலுள்ள முரண்களை மதம், சடங்குகள், நியதிகள் போன்ற நியாயப்பாடுகளை முன் வைத்து மூடி மறைக்க முயற்சிக்கும் ஆனால் விஞ்ஞான அணுகுமுறையானது இந்த முரண்பாடுகளைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

விஞ்ஞானமானது ஒரு அறிவுத்துறையாக மட்டுமன்றி அதனது ஆய்வுமுறைகள் மூலம் புதிய அறவினை உருவாக்கவும் உதவுகிறது. கருத்தியலுக்கும் விஞ்ஞானத்திற்குமிடையில் அறிவுத் தளத்தில் ஒரு பிரிநிலை காணப்படுகிறது. இதில் ஒரு புறம் கருத்தியலும் மறுபுறம் விஞ்ஞானமும் காணப்படுவதாக அல்தூசர் கருகிறார்.

அல்தூசர் சமூக அத்திவாரமான பொருளா தாரமே மேற்கட்டுமானத்தை நிர்ணயிக்கிறது என்ற வரன் முறையான மாக்சிய அணுகுமுறையை ஏற்றுக் கொண்டாலும், சில சமூகம் சம்பந்தப்பட்ட விடயங்கள் ஓரளவு சுதந்திரமாக இயங்குவதாகவும் கருதுகிறார். அவர் கருத்தியலுக்கும், விஞ்ஞானத்திற்கும் கலைக்கு

மிடையில் ஒரு இயங்கு நிலை இருப்பதாகக் கருதுகிறார். அல்துசர் கலை பற்றிக் கூறுகையில்,

"நான் கலையை ஒரு கருத்தியலாக கருதவில்லை, கலை யானது கருத்தியலுடன் ஒரு குறிப் பிடத்தக்க நிச்சயமான தொடர்பைக் கொண்டிருக்கவில்லை. கலை எமக்கு உண்மையான அறிவைக் கொடுப்பதாக இருந்தாலும் அது எமக்குக் கொடுப்பது அறிவுடன் சம்பந்தப்பட்ட ஒரு விடயம் தான். அது எமக்கு வழங்குவது அறிவுக்கு ஒத்தது அல்ல. வித்தியாசமானது. கலையானது நாம் யதார்த்தத்தில் பார்க்காத ஒரு புதிய தளத்தினை எமக்கு பார்க்க அல்லது உணர உதவுகிறது" என்றார்.



Pablo picasso

இந்தக் கருத்தியலைச் சார்ந்து அல்துசரின் கருத்தினை மேலும் விரிவுபடுத்தியவர் அவரது நெடுங்கால சாகாவான மசெரி(Machery) ஆவார். இவர் இலக்கியமானது கருத்தியலுக்குள் காணப்படும் அகமுரண்பாடுகளை வெளிக்கொணர வேண்டும் எனக் கருதினார். ஆகவே இலக்கிய அழகியல் வர்க்கப் போராட்டத்தினை முன்னிலைப்படுத்த வேண்டும் என மசெரி கருதினார். மிக ஆழ்ந்து ஆராயும் பொழுது இலக்கிய பிரதி அது சார்ந்துள்ள சமூகத்தின் அக முரண்பாடுகளை வெளிப்படுத்துவதைக் காணலாம். இதனையே கருத்தியலானது வலிந்து மறைக்க முயல் கிறது. கருத்தியல் அதன் உண்மையான வீச்சினை சரிவர அறிந்து கொள்ளாதது தான் அதன்முக்கிய குறைபடாகும். மசேரியின் நோக்கம் இலக்கியப் பிரதி யின் மேலோட்டமான கருப்பொருள், அமைப்பு என்ப வற்றைக் கடந்து ஒரு தளமாற்ற விமர்சன அணுகு முறையை அறிமுகப்படுத்துவதுதான். இந்த அணுகு முறை ஒரு சமூகத்தில் பொதிந்துள்ள கருத்தியல் முரண்பாடுகளை வெளிக்காட்டக் கூடியது.

மசேரியின் கருத்துப்படி பிரதியானது கருத்தி யலின் ஒரு வடிவம் தான். எழுத்தாளன் என்பவன் எதனையும் புதிதாகப் பார்ப்பதில்லை. அவன் ஏற் கனவே உள்ள கருத்துக்களைத்தான பிரதிபலிக்கிறான். ஒரு இலக்கிய பிரதியானது அதனுடன் சார்ந்த சமூகத்தில் தங்கியள்ளது. அது ஒரு சுயம்பு அல்ல. இருப்பினும் புதிய விமர்சனப் போக்காளர்(New Critisism) போன்றோர் இந்தக் கருத்தினை ஏற்றுக் கொள்வ தில்லை.

அவர்களைப் பொறுத்தவரையில் பிரதியானது தன்னகத்தே முழுமையானது. அது தன்னகத்தேயுள்ள கூறுகளிடையேயுள்ள தொடர்புகளிலேயே உருவா கிறது என்பது அவர்களது கருத்து.

மசேரியின் கருத்து கருத்தியலிலுள்ள முரண் பாடுகள் பற்றியது. அவர் கருத்தியலானது உண்மை யான முரண்பாடுகளுக்கு பொய்யான ஒரு வியாக்கி யானத்தை முன் வைப்பதாகக் கருகிறார். இவரது இந்தக் கருத்துநிலையை மாக்சிய கருத்து ஒன்றை உதாணங்காட்டுவதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் போட்டி மனப்பான்மை ஒரு முக்கிய குணாம்சமாகக் கருதப்படுகிறது. முதலாளித்துவ சமூகத்தில் போட்டி மூலம் தான் ஒருவன் முன்னேற முடிகிறது. இங்கு போட்டி மனப் பாங்கு ஒரு சாதாரண மனித இயல் பாகக் கருதப்படுகிறது. இதனை ஏற்றுக்கொள்ள சமூகம் இயல்பாக்க மடைந்துள்ளது. மாக்சிய நோக்கிலே சுரண்டப்படுபவனுக்கும் சுரண்டு பவனுக்குமிடையிலான முரண் பாட்டின் தொடர்ச்சியாகவே மனித வரலாறு பார்க்கப்படுகிறது.

முதலாளித்துவ சமூகத்தில் இந்த முரண்பாடு 'மனித சுபாவம்' என்ற கருத்தியலில் பூசிமெழுகப்பட்டு விடுகிறது. 'மாக்சிய அணுகுமுறையில் இந்த முரண் பாட்டிலுள்ள அநீதி மற்றும் சமூக உறவுமுறைகள் என்பவை வெளிக் கொணரப்படும். ஒரு பிரதியின் பொருள் பற்றியும் அதன் அமைப்பு பற்றியும் மட்டும் பார்க்காது அதனை நுணுகி ஆராயும் விமர்சகர் களுக்கு இத்தகைய முரண்பாடுகள் எளிதிலேயே புலப்படும். இங்கு விமர்சகர் வெறுமனே பிரதிகளைத் தரம் பிரிக்கும் விமர்சகராக இல்லாமல் கருத்தியல் மீதான விமர்சகராக தமது பார்வையை முன் வைப்பர். இது அமைப்பில்லாத அணுகுமுறையை யொத்த படைப்பாளி மீதன்றி பிரதியின் மீது கவனம் செலுத்தும் அணுகுமுறையாகும்.


மசேரியின் இலக்கிய பெறுமானம் பற்றிய அணுகுமுறை சோசலிச யதார்த்தவாதம் போலவோ அல்லது விமர்சன யதார்த்தவாதம் போலவோ ஒரு தனித்த பிரதியையோ படைப்பாளியையோ குறித்து எழுந்ததல்ல இருப்பனும் அவரது அணுகுமுறையில் உள்ள அரசியல் தெளிவானது. மசேரியைப் பொறுத்த வரையில் ஒரு பிரதியானது ஒரு வாசகனை புரூகவா கருத்தியல்களை மிக துல்லியமாக ஆராய்ந்து கண்டடைய உதவுகிறது. இலக்கிய பிரதியின் முக்கியத் துவம் அதனுடு இணைந்து நிற்கும் மறைபொருள் கருத்துக்களில் தான் தங்கியுள்ளது. இவை நேரடியாகக் கூறப்படாவிடினும் இவற்றைத் தேடியடைந்து முன்வைப்பது ஒரு விமர்சகனின் பொறுப்பு. ஆகவே உண்மையான மாக்சிய விமர்சகன் தர்க்கரீதியாக இந்த வாசிப்பினை மேற் கொண்டு இந்தக் கருத்து நிலை முரண்களை முன்னணிக்குக் கொண்டு வர வேண்டும்.

தற்போது மாக்சிய அழகியல் அணுகுமுறை களில் அரசியல் நியாயப்பாட்டினடியாகவே கலை இலக்கியங்கள் அணுகப்படுவதை நாம் காணலாம். ஆக கலை இலக்கியத்தின அழகியல் நியாயப்பாடு இரண்டாம் பட்சமானதாகவே கருதப்படுகிறது.

டெரி ஈகிள்டனின் கருத்துப்படி உலகில் தற்போதும் நீடித்து வரும் வர்க்க முரண்பாடுகள் காரணமாக இன்னமும் உலகில் கலை இலக்கியங்களை அரசியலற்ற புனிதத்துவ அழகியல் அணுகுமுறைக்கு உட்படுத்துவது சாத்தியமல்ல. அதாவது இன்னமும் உலகில் கலை இலக்கியத்தை தூய அழகியல் அடிப்படையில் அணுகக் கூடிய சூழல் உருவாகவில்லை

இங்கிலிஸ் வாத்தியார்

தெணியான்



ஆங்கிலப் பத்திரிகை ஒன்றைக் கையில் தூக்கிப் பிடித்துப் பார்த்த வண்ணம் வீட்டு மாலுக்குள் சாய்மனைக் கட்டிலில் வசதியாகச் சாய்ந்து படுத்துக் கொண்டிருக்கிறார் சோமு வாத்தியார்.

சோமு வாத்தியாரை அந்தக் கிராமத்தி லும் அதன் சுற்றி வட்டாரத்திலுமுள்ள அயற் கிராமங்களிலும் அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. அயற்கிராமங்களுக்கு அப்பாலும் அறியப்பட்டர் அவர். அந்தக் கிராமத்தில் வாழும் சின்னக் குழந்தையிடம் விசாரித்தாலும் சோமு வாத்தியாரை இனங் காட்டத் தவற மாட்டாது. சோமசுந்தரம வாத்தியார் என்று பெரியவர்களிடம் விசாரித்தாலும் ஒரு செக்கன் யோசித்துத்தான் விடை சொல்லுவார்கள். சோமு வாத்தியார் என்றால் பட்டென்று ஆளைச் சொல்லி விடுவார்கள். சோமு வாத்தியாருக்குப் பெற்றோர் சூட்டிய திருநாமம் சோமசுந்தரம். அந்தப் பெயர் இன்று மறைந்து போயிற்று. ஆனால் வாத்தியாரை அறியாதவர்கள் இல்லை எனலாம். அவருக்கும் சோமசுந்தரத்தை சோமுவாகச் சுருக்கி வாத்தியாரை இணைத்து 'சோமு வாத்தியார்' என்று எல்லோரும் அழைப்பதில் மனம் நிறைந்த பெரிய ஆனந்தம்.

அவருக்குச் சின்ன ஒரு மனக்குறை. தான் என்ன தமிழ் வாத்தியாரே! ஆங்கிலம் அறிந்தவர். அப்படி இருக்க, எப்படி இவர்கள் வாத்தியார் என்று அழைக்கலாம்! எல்லோரும் என்னைச் "ஸேர்" என்றே அழைக்க வேண்டும் என்பதே அவர் உள்ளத்துள் கரந்துள்ள உணர்வு பூர்வமான எண்ணம்.

கிராமத்துச் சனங்களுக்கு வாத்தியாருக்கும் சேருக்கும் இடையேயுள்ள வித்தியாசம் எங்கே தெரியப் போகிறது? "பாவம்... அவர்கள் இங்கிலிஸ் தெரியாதவர்கள்" என வாத்தியார் பெரிய மனத்துடன் அவர்களைமன்னித்து விடுவார்.

வீட்டு வெளிக் "கேற்" மெல்லத் திறக்கிறது. அந்தச் சத்தங் கேட்டு, பார்த்துக் கொண்டிருக்கும் பத்திரிகையை விலக்கி கேற்றைப் பார்க்கிறார் வாத்தியார்.

தரகர் தங்கத்துரை "கேற்"ரை திறந்து உள்ளே வந்து கொண்டிருக்கிறார்.

வாத்தியார் படித்துக் கொண்டிருக்கும் பத்திரிகையை மடித்துக் கீழே போட்டு விட்டு, "வா... மச்சான்... வா...!" என வரவேற்கின்றார். தனக்கெதிரேயுள்ள கதிரையைக் கையால் சுட்டிக் காட்டி, "அதிலே இரு மச்சான்" என்கிறார்.

தரகர் தங்கத்துரை கதிரையில் அமர்ந்த பின்னர், இங்கிலிஸ் பேப்பரில் என்று ஆரம்பித்து ஒரு குட்டிப் பிரசங்கம் செய்து முடித்து தமிழ் பத்திரிகைகளை கையாலும் தொடுவதில்லை என்கிறார். பிறகு, "என்ன மச்சான்... புதிசா எதுகும் கொண்டு வந்திருக் கிறியோ?" என வினவுகிறார்.

"கொண்டு வராமல் வெறுங்கையோடை நான் வருவனே!"

"நல்ல இடமோ?"

"இதென்ன கேள்வி! நான் கொண்டு வந்தால்

ஒரிசினலாக இருக்கும்... சாதாரணமான இடமாக இருக்காது"

"அது எனக்குத் தெரியும்..." என்றவர் உள்ளே திரும்பி, "அம்மா துரை மச்சான் வந்திருக்கிறார்" என ஒருதரம் குரல் கொடுக்கிறார். நல்ல செய்தியுடன் வந்திருக்கும் மச்சானுக்கு, "தேநீர்" ஒன்று கொண்டு வா" என்பது தான் அந்தக் குரலுக்குரிய அர்த்தம்.

"வேண்டாம்... வேண்டாம்... நான் இப்பதான் குடிச்சிட்டு வந்தனான்" எனத் தரகர் தங்கத்துரை மறுப்புக் குரல் கொடுக்கிறார்.

தரகர் தங்கத்துரைக்குச் சோமு வாத்தியார் தூரத்து உறவுக்காரன். தங்கத்துரையை விட இரண்டு வயத மூத்தவர் வாத்தியார்.

தங்கத்துரை இருபது வயதில் காதலித்துக் கல்யாணம் செய்தவர். அவருடைய மூத்த மகளுக்கு இப்போது வயது இருபதாகி விட்டது.

ஆனால் சோமு வாத்தியாருக்குப் பெண் பார்க்கும் படலம் இன்னும் நிறைவேறவில்லை.

சோமு வத்தியார் ஏதோவொரு பாடசாலையில் படிப்பிக்கும் ஆசிரியரல்ல. ஆசிரியர்களைப் பொதுவாக "மோட்டு வாத்திமார்" என்று சொல்வது அவர் வழக்கம். அதனால் அந்தப் பெயரை அவருக்கே இட்டு எல்லோரும் அழைக்க ஆரம்பித்தார்கள். காலப் போக்கில் "மோடு" என்பது மறைந்து போக "வாத்தியார்" என்று மிஞ்சி நிற்கிறது.

மணமாகாத இளம் கன்னிப் பெண்களின் சாதகங்களுடன் தரகர் இடையிடையே வந்து போய்க கொண்டிருக்கிறார்.

வாத்தியாருக்கு எது எல்லாம் பொருந்தி வந்தாலும் வாத்தியார் இறுதியில் ஒரு கேள்வி கேட்பதற்குத் தவற மாட்டார்.

"பெம்பிளைக்கு இங்கிலிஸ் தெரியுமா?" என்பது தான் அவர் கேட்கும் பிரதான கேள்வி.

"ஓம் தெரியும்" எனத் தரகர் பதில் கூறினால், அடுத்த கேள்வி, "இங்கிலிஸ் பேசத் தெரியுமா?" என்று கேட்பார்.

"இங்கிலீஸ் பேசத் தெரியாத பெம்பிளை எனக்கு வேண்டாம். என்னட்டை வாற நண்பர்களும் இங்கிலீஸில் பேச வேணும். என்னுடைய மனைவிக்கு இங்கிலிஸ் பேசத் தெரியாது எண்டால் எனக்கு அவமானம்" என்பார்.

"மச்சான் நல்ல இடம், நல்ல வடிவான பிள்ளை. சீதன பாதனத்துக்கும் குறைவில்லை. நீ விரும்புகிறது போல இங்கிலிஸ் படிச்ச பிள்ளை. இங்கிலிஸ் ரீச்சர். நீங்கள் கேக்கிறதைத் தரக்கூடிய வசதியான இடம். இந்த இடத்தைத் தவற விடுகிறதிலே எனக்கு விருப்பமில்லை. இதைவிடப் பொருத்தமான இடம் வேறை வந்து வாய்க்காது.

"அது சரி மச்சான். இங்கிலிஸ் தெரிஞ்சால் மட்டும் போதாது. பேசத் தெரியுமோ எண்டதையும் விசாரி! இந்தக்காலத்து இங்கிலிஸ் ரீச்சரவைக்கு ஒரு வசனம் இங்கிலிஸ்" பேசத் தெரியாது.

"அந்தப் பிள்ளை நல்லா இங்கிலீசு பேசும்"

"அது உனக்கெப்படித் தெரியும்? உன்னோடை இங்கிலிஸில் பேசினவவே. ஆ... ஆ..."

"நீ இப்ப என்ன சொல்கிறாய்!"

"அது சரி... மச்சான்! உன்ரை மேளுக்கு மாப்பிள்ளை தேடுகிறாய் எண்டு கேள்வி"

"ஓமோம்... இனிப்பாக்கத் துடங்கினால்தான் இரண்டொரு வருஷத்துக்குள்ளே செய்து வைச்சு விடலாம்

தரகன் தான் அடிக்கடி கலியாணப் பேச்சுடன் அங்கு வந்து போவதை வைத்துக் கொண்டு தன்ரை மகளைத் திருமணம் செய்யும்படி வந்து ஆக்கினை கொடுத்து வற்புறுத்திக் கொண்டிருப்பதாக வாத்தியார் கதை கட்டி இருக்கிறார் என்பதும் தரகர் தங்கத்துரை காதில் வந்து விழுந்திருக்கிறது. மனதில் அதை வைத்துக் கொண்டு வெளியில் காட்டிக் கொள்ளாது வந்து போய்க் கொண்டிருக்கிறார். அவர் இப்பொழுது மகள் பற்றிப் பேச்சுக் கொடுத்ததும் தரகர் விழித்துக் கொண்டு விட்டார்.

வாத்தியார் தனக்கருகில் வைத்துக் கொண்டிருக்கும் திருமண அழைப்பிதழ் ஒன்றை எடுத்துத் தரகரிடம் காட்டுகிறார்.

அந்த ஊரில் இன்னும் இரண்டு தினங்களில் நடைபெற இருக்கும் திருமணஅழைப்பிதழ் அது. தரகருக்கும் அவர் வீட்டில் அந்த அழைப்பிதழ் கொடுத்திருக்கிறார்கள். அந்த உண்மையைத் தரகர் வெளியில் கூறாது அழைப்பிதழை வாங்கிப் பார்க்கிறார். தரகர் எதிர் பார்த்தது போல வாத்தியார் அப்போது சொல்கிறார்:

"உந்தப் பெம்பிளையையும் எனக்குக் கேட்டு வந்தவை"

"ஓமோம்... நானும் கேள்விப்பட்டனான்" வேண்டுமென்றே மனசாரப் பொய் கூறுகிறார் தரகர்.

"அது சரி... மகளின்ரை விஷயம் எந்தளவிலே கிடக்கு?" வாத்தியார் வெகு அக்கறையோடு வினவுகிறார்.

"இன்னும் சரிவரவில்லை"

"என்ன மச்சான் வெண்ணெயைக் கையிலே வைச்சுக் கொண்டு நெய்க்கலைகிறாய்"

"ஆரந்தமாப்பிளை... எங்கே இருக்கிறார்... இடத்தைச்... சொல்லு!"

"ஆ... ஆ... மச்சான் உனக்கு ஒண்டுமே விளங்குதில்லை. என்னெண்டு தரகுவேலை பாக்கிறாய்! அப்படமெண்டால் புட்டுக் காட்ட வேணுமே!"

"உண்மைதான் உன்னளவு புத்திசாலி இல்லை நான். என்ன சொன்னாலும் இங்கிலீசு தெரிஞ்சனி யெல்லே!"

"சரியாகச் சொன்னாய் மச்சான்"

"சரி... சரி... மகளுக்குப் பொருத்தமான மாப் பிளை எண்டு நீ ஆரைச் சொல்லுகிறாய். நாங்கள் இரண்டுபேருமாகப் போய்ப் பேசுவம்... சொல்லு... சொல்லு..."

"இதென்ன கதை உனக்கு இன்னும் விளங்க வில்லையே?"

"இல்லை மச்சான்"

" நீ சரியான மோடு தான்... ஏன் மச்சான் நான் ஒருவன் இருக்கிறது உன்ரை கண்ணுக்குத் தெரிய வில்லையே...?" என வாத்தியார் கேட்டு வாய்மூடுவதற்க முன்னர், தரகர் கொதித்துக் கொண்டெழுந்து அவர் கன்னத்தில் "பளாரென்று" ஓங்கி அறைகிறார்.

அந்த ஒரு இடிமுழக்கத்தில் வாத்தியார் பொறி கலங்கி கண்களில் மின்னல் மின்னி கண்ணீர் திரண்டு வர கன்னத்தை ஒரு கையால் பொத்திக் கொண்டிருக்க...

அங்கெழுந்த அந்த கோடை மழை முழக்கம் கேட்டு, வாத்தியாரின் தாயார் அடுக்களைக்குள்ளே இருந்து வெளியே வந்து பார்க்கிறார்.

தரகர் சாரத்தை தூக்கி மடித்துக் கட்டிக் கொண்டு வெளிக்'கேற்'றைநோக்கி உறுதியாக அடி எடுத்து வைத்து நிமிர்ந்து போய்க் கொண்டிருக்கிறார்.

ஒரு பாடல்...!



'கவித்துவ யதார்த்தப்' பாணியில் திரைப்படங்களை உருவாக்கிப் புகழ்பெற்ற ஒரு நெறியாளர் குருதத்! அவரது புகழ்பெற்ற ஹிந்தித் திரைப்படங்களில் ஒன்று, 'பியாசா' (தாகம்) ஆகும். அதன் கதாநாயகனான விஜய், ஒரு கவிஞன்; காதலியால் கைவிடப்பட்டவன். வேலை யற்றவன். தன் கவிதைகளை நூலாக்க இயலாதவன். சகோதரர் இருவராலும் புறக்கணிக்கப்பட்டவன். முதிய தாயின் அன்பு அவன்மீது இருக்கிறது; அவளும் இறந்துவிடுகிறாள்; காலம் தாழ்த்தி அதை அறிந்தபோது துயரில் மூழ்குகிறான். துயரில் மூழ்கியவனை ஒரு நண்பன், விலைமாதர் விடுதிக்குக் கூட்டிச் செல்கிறான்; அங்கு முதன்முதலாக மது அருந்துகிறான். விலைமாது நடனமாடுகிறாள்; நண்பன் அதில் இரசிப்புடன் ஈடுபடுகிறான். இடையில் நடன ஒலியை மேவிக் குழந்தையின் அழுகைக் குரல் கேட்கிறது; ஆடுதலில் தள்ளாட்டம். அவள் குழந்தை உள்ள தொட்டிலை நோக்கிச் செல்கிறாள்; எஜமானி அவளைத் தடுத்து, ஆட்டத்தைத் தொடர வற்புறுத்துகிறாள். அவளின் அவலநிலை கண்டு விஜய் துயரடைகிறான்; தாங்க முடியாமல், கையில் மதுக்குவளையுடன், தள்ளாடியபடியே விடுதிக்கு வெளியே படிகளில் இறங்கி வருகிறான். ஒடுங்கிய தெருவின் இருபுறமும், வீடுகளிலும் வெளியிலும் விலைமாதர். அவன் காணும் புறக்காட்சிச் சூழலைத் துயருடன் பாடு கிறான். இப்பாடற் காட்சி, திரைப்படத்தில் முக்கிய பகுதியாகும்! பாடலை "ஸாஹிர் லுதியான்வி" எழுத, S. D. பர்மனின் இசையில் மொகமட் ரஃபி பாடுகிறார். விஜய் ஆக குருதத் நடிக்க, ஒளிப்பதிவு V. K. மூர்த்தி. பாடலின் பொருளும் இனிய இசையும் நடிப்பும் காட்சிப்படுத்தலும் இணைந்து, அரிய அனுபவத்தைத் தருகின்றன. திரைப்படத்தில் வரும் ஆங்கிலத் துணைத் தலைப்புகளின் மொழியாக்கம், இங்கு தரப்படுகின்றது.

- அ. யேசுராசா

மகிழ்ச்சியை ஏலமிடும் இந்தச்
சந்துகள், வீடுகள்....
இந்த வணிகரின் அழிவுகள் வாழ்க்கையில்
எமதருகில் கடந்து போவன....

எங்கே அவர்கள்? –
மதிப்பின் காவலர்கள்?
எங்கே அவர்கள்? –
இந் நாட்டுக்காய்ப் பெருமைப் படுவோர்!

தீங்குதரும் இத் தெருக்களில்....
அவமதிப்பின் வியாபாரம்,
பெயர்களை மறைக்கும் மனிதர்கள்,
பணம் பேசுகிறது,
கற்பு பேரம் பேசப் படுகிறது –
புனிதம் விற்பனையாகிறது!

எங்கே அவர்கள்? –
இந் நாட்டுக்காய்ப் பெருமைப் படுவோர்!

இந்தப் பழைய தெருக்களில்....
கனவுகள் உலர்ந்து போகின்றன,
காலடியில் மலர்கள் நசிபடுகின்றன,
ஜொலிக்கும் இப் போலிக் கொண்டாட்டங்கள்
எல்லாமே விற்பனைக்காக!

எங்கே அவர்கள்? –
இந் நாட்டுக்காய்ப் பெருமைப் படுவோர்!

பிரகாசமாய் ஒளிரும் இந்த அறைகளில்....
நடனத்தின் மணி ஒலிகள்,
கனக்கும் இதயங்களுடன்
தபலாவின் தட்டொலிகள்,
ஆன்மாவை இழந்த இவ்வறைகள்
இருமல்களை எதிரொலிக்கும்!

எங்கே அவர்கள்? –
இந் நாட்டுக்காய்ப் பெருமைப்படுவோர்!

இந்த மலர்ச்சரங்கள், இந்தச் சுவர்கள் –
இரத்தக் கறைகளுடன்;
சிதையும் இவ்வுடல்கள்,
மதிப்பிழந்த இம் முகங்கள்....

எங்கே அவர்கள்? –
இந் நாட்டுக்காய்ப் பெருமைப் படுவோர்!

முதியமனிதர் இங்கே வந்து போவர்,
இளையோருங்கூட இங்கே தங்கிச் செல்வர்.
புதல்வர்கள், மரியாதையான தந்தையர்,
கணவன்மார்....!

இவர்கள் எம் மனைவியர்,
எமது தங்கையர், எங்கள் அன்னையர்!

எங்கே அவர்கள்? –
இந் நாட்டுக்காய்ப் பெருமைப்படுவோர்!

ஏவாளின் இப்புதல்வியர்,
ராதையின் – யசோதையின் இப்புதல்வியர்,
ஸீலேகாவின் இப்புதல்வியர்,
கடவுளின் இக் குழந்தைகள்....
உதவிக்காய்த் தேடுவர்!

எங்கே அவர்கள்? –
இந் நாட்டுக்காய்ப் பெருமைப் படுவோர்!

கூப்பிடுங்கள் இந் நாட்டின்
எல்லாத் தலைவரையும்! –
வஞ்சகச்செயல்களை அவர்களுக்குக் காட்டுங்கள்!
நேர்மை இழந்த இத் தெருக்களைக் காட்டுங்கள்!
கூப்பிடுங்கள்....
இந் நாட்டுக்காய்ப்
பெருமைப்படும் எல்லோரையும்!

■ கெகிறாவ ஸுலைஹா



தற்கொலையின் திசைபால் பறத்தல் சில்வியா ப்ளாத்- ஒரு பார்வை


சில்வியா ப்ளாத் அமெரிக்காவின் அற்புதமான எழுத்து ஆளுமை. விக்டோரியா லூகாஸ் என்ற பெயரிலும் அவர் அறியப்பட்டிருந்தார். அமெரிக்காவின் பொஸ்டன் பிரதேசத்தே 1932, ஒக்டோபர் 27இல் பிறந் தார். அதிகமான அவரது மனத்துயரங்கள், இடர்கள், உளக்கிடக்கைகள் இளவயதிலேயே அவரை உலகோர் மத்தியிலிருந்து பிரித்துக் கொண்டு விட்டது. பெப்ரவரி 11, 1963 இல் தன் முப்பதாம் வயதில் தற்கொலை செய்து வாழ்வை முடித்துக் கொள்கிறார் சில்வியா.

ஆக்கத்திறனுக்கும், மனத்துயருக்கும் அப்படி யென்ன ஒற்றுமை என்று உளவியல் அறிஞர்கள் மண்டையைப் பிய்த்துக் கொள்கிறார்கள். பலரது மரணங்கள் இப்படியோர் கேள்வியை அவர்களுக்கும், நமக்கும் கொணர்ந்து தந்திருக்கின்றன. "தீயில் எரியும் இல்லங்களில்தான் நாம் ஒவ்வொருவரும் வாழ் கிறோம். தீயணைப்புத் திணைக்களங்களுக்கெல்லாம் அழைப்பு விடுத்து முடிக்க முடியாத தீ இது." என்று சொல்லி மிகுந்த மனஉளைச்சலில் தன் வாழ்வை முடித்துக்கொண்ட நாடக எழுத்தாளர் டென்னிஸீ வில்லியம் ஆகட்டும், "காலைப்பொழுது புலருகையில் எதையோ தொலைத்துவிட்டதாய் உணர்கிறேன். முகங்கள் இறந்து கிடக்கக் காணுகிறேன் நான்.. சிலவேளை நான் சந்தித்த மனிதர்கள் என்னைக் காணவில்லை போலும்..." என்று தனித்திருத்தல் பற்றிப் புலம்பிச் சொல்லி தன் பதினேழாம் வயதில் எழுதுவதை நிறுத்திக் கொண்ட ஆர்தர் ரிம்பவுட் ஆகட்டும், "ஒரு விசாலித்த கறுப்பு உறக்கம் என் வாழ்வு நெடுகிலும் வியாபித்திருக்கிறது. உறக்கம்... எல்லா நம்பிக்கை களும் உறங்குகின்றன. போலவே எல்லா விருப்பங் களும்..." என்று கூறி குடித்துக் குடித்தே தன் வாழ்வை வறுமைக்குள் தொலைத்த பவுல் வெர்லைன் ஆகட்டும் அனைவருமே சொல்லொணாத் துயரத்தில் வதை யுண்டவர்கள்தான்.

அவ்விதம் வதையுண்ட இன்னும் பலர் தற் கொலையில் வாழ்வை முடித்திருக்கிறார்கள். உதாரணம் சொல்வதாயின், "அச்சத்தின் பாதையில் நாம் பயணிக் கக் கடமைப்பட்டிருக்கிறோம்" என்று சொன்ன அமெரிக்காவின் அற்புதமான எழுத்தாளர் ஜோன் பெர்ரிமன் (1914-1972) மனசஞ்சலங்களால் போதைக்கு அடிமைப்பட்டு, 90 அடிகள் ஆழங் கொண்ட மிசிசிப்பி ஆற்றின் பனியுறை மேற்குக் கரையோரத்தே, குதித்து மாண்டு போனார் வழியில் சென்றோருக்கெல்லாம் கையசைத்தபடியே 1972 ஜனவரியில்.

போலவே, வேர்ஜினியா வுல்ஃப் (1882-1941) தன் மேலாடைப் பாக்கெட்டில் கற்களை நிறைத்துக் கொண்டுபோய் "ஒவ்ஸ்"நதியில் குதித்து தற்கொலை புரிந்து கொண்டார். அவரது கணவருக்காய் இறுதியாய் அவர் எழுதிவைத்த கடிதம் ஒன்று இப்படிப் பேசுகிறது.

"அன்பானவரே, மறுபடியும் நான் புத்தி பேதலித்திருக்கிறேன். இத்துயரப்பொழுதில் நாமிரு வரும் முன்னம் போலப் ஒன்றித்துப் பயணிப்பது சாத்திய மில்லை. போலவே, பைத்தியத்திலிருந்து மீளும் வகை யும் அறியேன். நான் குரல்களைக் கேட்க ஆரம்பித்திருக் கிறேன். என்னால் மனதை ஒருமுகப்படுத்த முடிய வில்லை. ஆதலினால் மிகச்சிறப்பென்று தோன்றுகின்ற இவ்வழிமுறையை நான் தெரிந்தெடுத்தேன். உங்களால் தரச் சாத்தியப்பட்ட எல்லா மகிழ்வுகளையும் நீங்கள் தரச் செய்தீர்கள். எவரும் வர முடியா எல்லைகளுக்கெல்லாம் நீங்கள் வந்தீர்கள். இது போன்றதொரு புத்தி சுவாதீன மற்ற பிணியில் இருந்து கொண்டு எவரும் மகிழ்ச்சி கரமாய் வாழ்ந்து விட முடியாது. தொடர்ந்தும் என்னால் போராட முடியவில்லை. உங்கள் ரம்மியங்களையும்



என்னால் தொலைக்கிறீர்கள் நீங்கள். நான் இல்லை யெனில் நீங்கள் இதைவிட இயங்கலாம். என்னால் இதைச் சரியாக எழுதவும் முடியவில்லை. எதையும் வாசிக்கவும் முடியவில்லை. என் வாழ்வின் எல்லாச் சந்தோஷங்களையும் உங்களுக்கு வழங்கத் தலைப்படு கிறேன் நான். நம்ப முடியாதளவு நல்ல மனிதனாய் பொறுமையோடு ஜீவிதம் பகிர்ந்தீர்கள். என்னை இந்தளவுக்குக் காப்பாற்றிக் கொணர முடிந்தது உங்களால் மட்டுமே. அனைத்தும் என்னை விட்டுப் போயாயிற்று உங்கள் நற்குணங்கள் தவிர. இதற்கப்பா லும் உங்கள் வாழ்வை நான் வீணாக்க விரும்பவில்லை. நானும் நீங்களும் ஒன்றித்திருந்து அடைந்த மகிழ்ச் சியை வேறு எவரும் அடைந்திருக்கச் சாத்திய மில்லை..."

"த பேல் கிங்" கையெழுத்துப் பிரதியை வைத்துவிட்டு, டேவிட் கூபொஸ்டர் வெலாஸ்(1962-2008) கலிபோர்னியாவில் தன் இல்லத்தில் தூக்கு மாட்டிக்கொண்டு இறந்து போனார்.

"எதிர்காலம் என்பது முதுமைபோன்றது; நோயும், வலியுமானது. எனக்கோ சாந்தி வேண்டியிருக் கிறது. ஆதலினால் இதுவே வழி" என்று கூறி இறந்து போனார் நாடக தயாரிப்பாளர் ஜேம்ஸ் வேல்.

மரணம்...! அதுபோல மோசமானது வேறெது வுமில்லை. அதற்கு முன் வந்து வதைக்குமே அது பற்றிய பயம்...அது தவிர..." என்று சொல்லி தன் உடலை பல இடங்களில் தானே வெட்டிக் கொண்டு இறந்து போனார் கி.பி.நான்காம் நூற்றாண்டு கவி செனேகா. ஏர்னஸ்ட் ஹெமிங்வே தன்னையே தன் துப்பாக்கியால் சுட்டு மாய்த்துக் கொண்டார்.



ஹன்டர் எஸ் தொம்ஸன், ஏர்னஸ்ட் ஹெமிங்வே போலவே இறக்கிறார் மனைவிக்கு இப்படிக் குறிப்பெழுதி விட்டு, "இனி ஒரு விளை யாட்டும் கிடையாது. இனி குண்டுகள், துப்பாக்கிகள் கிடையாது. இனி நடைப் பயிற்சி அவசியப்பட மாட் டாது. வினோதங்களும் கிடையாது. இயல்பாய் இரு. இது உன்னை காயப்படுத்தக் கூடாது"

ஆன் செக்ஸ்டன் மரணம் பற்றி இப்படிச் சொல்கிறார்,"நான் வோட்டர் கலர் ஆவேன்... நான் கழுவுகிறேன்" கார்பன் மொனோ ஒக்ஸைட்டு வாயுவை ஓடும் காருக்குள் நிரப்பிக் கொண்டு அவர் தன்னை அழித்துக் கொண்டார். ஆத்மார்த்த துயரங்கள் ஆக்கத் தின் அடிப்படை என்கிறது கிரேக்கச் சிந்தனை. எது எப்படியிருப்பினும், இடர்தோய்ந்த அவர்களது வாழ்வு, அவர்களது எழுத்தின் பகுதியாக இருப்பதை அவர்களது வாசகன் இலகு வில் புரிந்து கொள்ளக்கூடும்.

சில்வியா ப்ளாத் அனுபவித்த பதற்றமான ஜீவிதம் எம் கண்களை ஈரப்படுத்தும். மனதை கனதிப் படுத்தும். நிறைவுறாத் தேடலின் பெருமூச்சுகளால் அவரது வாழ்வுவெளி நிரம்பிக் கிடக்கிறது.

"கடவுளே, ஜீவிதம் தனிமையை என்னமாய் நிறைத்துக் கிடக்கிறது..!ஆழ்உறக்கத்துள் நம்மை கொண்டுபோய் ஆழ்த்தும் தூக்க மாத்திரைகளா கட்டும், காரணமேயில்லாத கொண்டாட்டங்கள், ஒன்று கூடல் கள், சந்திப்புகள் அவற்றினூடே ஒலிக்கும் மனங்கவர் இசையாகட்டும், நாம் அனைவரும் அணிந் திருக்கிற பொய் பூண்ட புன்னகை முகங்கள் ஆகட்டும், உங்கள் ஆன்மாவையே கொண்டுபோய் கொட்டத்தக்க நேசம் என்று கருதி நீங்கள் மிகவும் ஆராதித்தவர், உங்களை அதிர்ச்சியில் உறைய வைக்கிறாற் போல அசிங்கமாய், குரூரமாய், கேவலமாய், வெளிப்படும்போது எல்லாமே அர்த்தமற்றதாகிக் காட்சிப்பிழை காட்டுமே.... அப்போதெல்லாம் ஜீவிதம் தனிமையை என்னமாய் நிறைத்துக் கிடக்கிறது...!!" அவரது "The Bell Jar' நாவலில் இப்படி எழுதும் அவர் தன்வாழ்வை முப்பது வயதுக்குள் முடித்துக் கொள்ள இது மாதிரியான துரோகங்கள் தந்த பதகளிப்பே காரணம் என நேர்மையுடன் ஒத்துக் கொள்கிறார்.

மேலும் அவர் எழுதுகிறார், "மரணம் அழ கானது. மென்மையான கபில நிறப் பூமியின் மீதில் தத்தமது தலைகளைச் சுற்றிப் புல்வெளிகள் தலை யாட்ட, மௌனத்தையே எங்கும் செவிமடுத்தபடி நாளை இன்றி நேற்றுகளும் இன்றி, காலம் மறந்து, வாழ்வை மன்னித்து, சமாதானத்தில் உறைந்து கிடத்தல் அழகே யானது...."

சுற்றியிருந்தோரால் மிகவுமே தான் நேசிக்கப் பட்டதை உணர்ந்திருந்தார் சில்வியா பிளாத். அற்புத மான கலையாளுமை கொண்டிருந்தார் அவர் சிறுவயதி லிருந்தே. ஒரு கவிஞையாய், நாவலாசிரியையாய் வலம் வந்தார். ஸ்மித் கல்லூரியில் கற்றார். தன் வாழ்வை ஒரு மரத்தோடு ஒப்பீடு செய்கிறார் ஒரு கவிதையிலே இப்படி,

"என் கனவு ஒரு விருட்சத்தை
எனக்குக் காட்டுகிறது.
அது என் வாழ்க்கை எனும் விருட்சம்.
ஒரு கிளை என் மணமகனாய் வரப்போகும் ஆண்
அதன் இலைகளே என் பிள்ளைகள்
மற்றொரு கிளை என் எழுத்து வாழ்க்கை.
அதன் ஒவ்வொரு இலையும் என் கவிதைகளாம்
இன்னுமொரு கிளை என் ஒளிமிகும் கல்வி.
ஆற அமர சாவகாசமாய் நான் தெரிய முயற்சிக்கிறேன்
எனினும் இலைகளோ பழுப்பாகி உதிர்கின்றன
மரம் வெறுமையாகிறவரை..."

சில்வியா தந்தையின் மரணத்துக்கு முன்னம் குதூகலமாய் இருந்திருக்கிறார். சில்வியா ப்ளாத்தை தந்தை ஒட்டோ ப்ளாத்தின் மரணம் வெகுவாய் பாதித்தது. "Daddy" கவிதை அது பற்றிச் சொல்லும். எட்டு வயதிலேயே முதல் கவிதை வெளியாயிற்று. 1951இல் ஒரு புனைகதை போட்டியில் பரிசு வென்றார். மனக் குழப்பங்களாலும் கூடவே வதையுண்டார். மருத்துவக் கண்காணிப்புக்கு அடிக்கடி உட்படுத்தப்பட்டார். "The Bell Jar', 'Ariel', 'Daddy', 'Johnny Panic and the Bible of Dreams', 'Crossing The Water', 'Winter Trees', 'Three Women', 'The Colossus' அவரது புகழ் பூத்த படைப்புகள் ஆகும். மரணம், சுயமழிதல், தனித் திருத்தல், அடையாளந் தொலைத்தல், கனதி, மௌனம் போன்றன அவற்றின் வெளிப்பாடுகளாய் மிளிர்ந்தன. கேள்விகளால் திடுமென எழுந்து, அவமானத்தில் குலுங்கியதை, அருவருப்பில் உறைந்தமையை அவரது படைப்புகள் அழுதழுது வாசகனோடு பேசிற்று. அவரது "Ariel" இருபதாம் நூற்றாண்டில் அதிகமாய்ப் படிக்கப்பட்ட கவிதைத் தொகுதி என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

இருபது வயதில் ஒரு கல்லூரி மாணவி யாயிருக்கும் போதே சில்வியா முதலாவது தற்கொலை முயற்சியை மேற்கொண்டார். இறுதியான தற் கொலைக்கு முன்னம் தோற்றுப்போன இரண்டு தற் கொலை முயற்சிகள் சில்வியாவுக்கு இருந்திருக் கின்றன. 1953களில் வைத்தியசாலையோடு வாழ்வு கழியுமளவு பிணிவாட்டிற்று. அவர் அது பற்றி இப்படிப் பேசுகிறார், "என் அம்மாவின் முகம் ஆழ்ந்த சிந்தனை யில் மிதந்தது. வெளிறிக் கிடந்தது வதங்கிய நிலவாய். என் இருபதாம் பிறந்தநாளில் முதலும் இறுதியுமான அவளது மனநல மருத்துவமனைக்கான விஜயம்... மகள் மனநல மருத்துவ மனையில்! நான் அதைத்தான்- அதை மட்டும் தான் அவளுக்குச் செய்திருந்தேன். இப்போதும் அவள் தெளிவாய் தீர்மானித்துத்தான் இருந்தாள் என்னை மன்னித்துவிட...."

1955இல் ஆங்கிலக் கவி டெட் ஹூக்ஸை மணம் புரிந்தார். 1960களில் கணவரோடு இங்கிலாந்து சென்றார். "The Colossus' அவரது முதல் கவிதைத் தொகுதியாகும். துயர் படிந்து கிடந்தது அவர்களது இல் வாழ்வு. வேறு ஒரு பெண்ணுடன் உறவு வைத்துக் கொண்டிருக்கிறார் தன் கணவன் என அறிந்து துவண்டார் சில்வியா. சில்வியாவின் தாய் தன் மகளை அன்பாய் வைத்திருக்குமாறு டெட் ஹூக்ஸை கெஞ்சி யிருக்கிறார். "நான் அவளை சித்திரவதை செய்ய மாட்டேன்" என உறுதிப்பாடு வழங்கியிருக்கிறார் ஹூக்ஸ். கணவருக்கு சமைத்துப் போடுவதில் அதிகம் ஆர்வம் காட்டினார் சில்வியா ப்ளாத்.

"என்னை முத்தமிட்டுப்பார்
நான் எந்தளவு முக்கியம் என்பதை உணர்வாய்.."

என்றெல்லாம் அவர் எழுதிய காதல் கவிதை களையும் மீறி இருவர் பிரிவும் தவிர்க்க முடியாத தாயிற்று. 1962இல் கணவரைப் பிரிந்து தனிமையுடன் வாழ்ந்தார். தன் மூன்று வயதுக் குழந்தையையும், ஒரு வயதுக் குழந்தையையும் தன் பொறுப்பிலேயே எடுத்து வந்தார். வறுமையும், பிணியும் துரத்தின சில்வியாவை. "The Bell Jar" 1963இல் வெளியாயிற்று. பெரும்பாலும் அவரது சுயசரிதம் சொல்வதாய் அமைந்த அவரது



இந்நாவல் அவரது மன சஞ்சலங்கள், குழப்பங்கள் பற்றிப் பேசிற்று. கடைசி மூன்றாண்டுகளும் வெகுவேக மாய் நோய்மறந்து நிறைய எழுதினார். 1962இல் புலிட்சர் விருதினை வென்றார். முரண்பாடான தந்தை, மகள் உறவு பற்றி நிறைய இடங்களில் பேசினார். கண்டிப்பு நிறைந்தவரான தன் தந்தை எப்போதும் அன்பை மறைத்தே வந்ததை பல கவிதைகளில் சொல்கிறார் சில்வியா ப்ளாத்.

"இறத்தல் ஒரு கலை. மற்றெல்லாமும் போலவே" என்று அடிக்கடி சொல்லிவந்தார் சில்வியா.

"நான் என் கண்களை மூடுகிறேன்
முழு உலகும் இறந்து விழுகிறது.
நான் கண்களைத் திறக்கின்றேன்
அவையனைத்தும் மறுபடி ஜனனிக்கின்றன..."

"மனதை விட்டு வெளியேறிப்போக ஒரு வழியில்லையா...?" தன்னையே கேட்கிறார் சில்வியா. சில்வியா தன் இறுதிப்பயணத்தைத் தீர்மானிக்கிறார். பக்கத்தறையில் படுக்கவைத்திருக்கிற குழந்தைகள் இருவருக்கும் துளியும் போகாதபடி ஈரச்சாக்குகளால் தன் அறையை இறுகப் பூட்டிக்கொண்டு வாயு அடுப்பின் மீது தன் தலையைக் கிடத்தி காபன் மொனோ ஒக்ஸைட்டை சுவாசித்துக் கொண்டே மரணத்தை தழுவிக் கொள்கிறார் சில்வியா ப்ளாத்.


"நான் கடவுளோடு பேசுகிறேன் ஆனால் ஆகாயமோ வெறுமையாய்க் கிடக்கிறது...." சில்வியா வின் வரிகள் மனதைப் பிழிகின்றன.

இறுதியாய் அயல்வீட்டுக்காரரிடம் சில்வியா ப்ளாத் "காலையில் எத்தனை மணிக்கு வேலைக்குப் போவீர்கள்...?" என்று கேட்டதையும், அந்த அயல் வீட்டுக்காரருக்கு அவர் எழுதி வைத்துப்போன ஒரு தொலைபேசி எண்ணுட னான "Call Dr.Horder" என்ற துண்டுக் காகிதமும் வாழ வதற்கான கனவொன்றும் இறுதிக்கட்ட தற்கொலைக் கான பறத்தல் போதிலும் சில்வியாவுக்குள் இருந்திரு க்குமா என்கிற கேள்வியை உள்ளவரை சுமந்திருக்கும் உலகு.



உயிருக்குப்பின்

தமிழ்க்கவி



"நாங்களும் போப்போறம்" என்றவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள் அவள்.

" பேயா உனக்கென்ன விசரே...அங்கால நடக்கிறது தெரியுமே? ஏமாத்திப்போட்டு கொண்டே யாழ்ப்பாணத்துக்க விடுறாங்களாம்."

" ம் ...இவர் போய்ப்பாத்தவர்." என்றவன், "சும்மா எல்லாந் தங்களுக்குத்தான் தெரியுமெண்டு கதைக்கிறான்." என்று முடித்தான்.

" உனக்கு இனிமேச்சொல்லேலாது இன்னும் இவங்கள் வெல்லுவங்கள் எண்டு பாக்கிறியோ"

"நான் அப்பிடி பாக்கேல்ல எல்லாரோடயும் ஒத்தது எங்களுக்கும் நடக்கட்டும்."

" இன்னும் எத்தின நாளைக்கடா கஞ்சிக் கொட்டில், கஞ்சிய நம்பி வாழுறது. எந்த நிமிசம் என்ன நடக்குமெண்டு தெரியா..." இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே 'கிறீச்'சென்ற சத்தத்துடன் எறிகணையொன்று இவர்களை கடக்க இருவரும் பதுங்குகுழிக்குள் பாய்ந்தார்கள். 'விசுக் விசுக்'கென ரவைகள் பாய்ந்தன. தொடர்ந்து கூச்சல் கேட்டது.

"என்னடா கிட்டவே" என்றவாறே தலையை தூக்கினான் ஒருவன்.

"அண்ணை புண்ணியங் கிடைக்கும். உதுக்கயே கிடவுங்க தலையத்தூக்காதையுங்க. மருந்தில்ல, ஆஸ்பத்திரியுமில்ல தெரியுந்தானே காயப்படாம கிடவுங்க" பக்கத்திலிருந்த பங்கரிலிருந்து சசி கத்தினாள்.

"அக்கா சசியக்கா...சிவராசண்ணைக்கு ரவுண்ஸ் கொழுவீட்டுது"

" எங்கினைக்க"
"தெரியேல்ல
கொண்டோடுறாங்கள்"
உயிர்கள் போய்க்
கொண்டிருந்தாலும், யாரும் அதை பொருட்படுத்தாமல் திரிந்தனர். பட்டால் சாவு படாதவரை விடுப்பு பார்த்தல்.

இரண்டு மூன்று நாட்களாக மழை வேறு வானத்தை பொத்துக் கொண்டு பெய்தது. இருபுறமும் நீர் தேங்கிநின்று. அதன் நடுவேயிருந்த பொக்கணை வீதி மிதப்பது போலத் தோற்றம் காட்டியது. சண்டை வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தது. இயற்கைக் கடன்களைக்கூட செய்ய முடியவில்லை. இரவு முழுதும் பெய்த மழையில் பதுங்கு குழிகளும் மலசல கூடக்குழிகளும் இரண்டறக் கலந்து விட்டன.

பொக்கணைப் பிள்ளையார் கோவில் கடந்து சிறு வயல் வெளியிருந்தது. ஒரு மண்வெட்டியும் கையில் ஒரு யூ. எஸ்.ஏ. பேணியில் தண்ணீரும் கொண்டு போனால். ஒரு பொளி மண்ணை வெட்டிவிட்டு அதில் மலங்கழித்துவிட்டு மண்ணை மூடிவிட்டு கொண்டு போன தண்ணீரில் கழுவிவிட்டு வருவதே வழக்கமாயிற்று. இதற்காக மறைப்புகள் எதுவும் இல்லை என்பதுடன் ஆண்பெண் சமத்துவமும் நிலவியது இப்படியே கடற்கரையிலும் நடந்தது.

"தட்டிக்குமேல தட்டி கட்டி மறைச்சு வளத்த பெண்புரசுகள் இப்ப வெட்டவெளியில... விட்டிட்டுப் போயிராலாமடா...." கமலாக்கா பெடியள அருட்டினா.

சசி தன் பதுங்குழியை விட்டு வெளியே வந்தாள். இனி அவள் கஞ்சிக் கொட்டிலுக்குப் போகவேண்டும். "இனி விறகும் நனைஞ்சிருக்கும் சங்கீதாவும் வர யில்ல என்ன செய்யப் போறனோ" என்ற அச்சம் சசியை வேகமாக நடக்க வைத்தது.

அந்த வயல் வெளியைக் கடந்து மேடேறினாள். நெருக்கமான குடில்களின் ஊடே நடந்து வலையர்மடம் செல்லும் மண்வீதியை தொட்டவள், திரும்பி வலையர்மடம் நோக்கி நடந்தாள்.

கஞ்சிக் கொட்டிலில் எடுத்துப் போட்டிருந்த விறகு தூவானம் பட்டு நனைந்திருந்தது. எல்லாமே பனை வட்டுக்கள். பக்கத்தில் நெருப்பெடுத்து அடுப்பை மூட்டி கஞ்சிக்கான அண்டாவை வைத்து நீரை வார்த்தாள். அருகிலிருந்து சுமனும், நிசாவும் ஓடி வந்தனர். தத்தம் கைகளில் கொண்டு வந்த விறகு சுள்ளிகளை அவளிடம் நீட்டி

"இந்தாங்க சசியக்கா இன்னும் பொறுக்கிக் கொண்டு வாறம்." என்றனர்.

" வேண்டாம் வேண்டாம், போய் பங்கருக்க இருங்க ஆர் உங்கள வெளியால வரச் சொன்னது?"என்று சசி அதட்டிய போதே அவர்களுக்கு மேலாக எறிகணையொன்று கீசிக் கொண்டு சென்றது.

"டேய் படு, படு என்னடா தலைய நிமித்திக் கொண்டு நிக்கிறாய்?" இரவாழிச்சுக் கத்தினாள் ஒருத்தி.

" அது அங்கால கடல் பக்கம் அடிக்கிறானெணை"அந்த இளைஞன் அசைந்து கொடுக்க வில்லை. தொடர்ந்து மேலும் சில எறிகணைகள் கடலில் விழுந்தன. ஒவ்வொரு எறிகணை விழவும் கடல்நீர் அரைப்பனை உயரத்துக்கு நேராக எழுந்து சிதறாமல் மீண்டும் அப்படியே கடலில் இறங்கும் காட்சி மிக அற்புதமானது. வேடிக்கை பார்ப்போர் பரவசமடைவர்.

"சுக் எப்பிடி எழும்புது பார்"

" ம்...இப்ப எழும்பின னெண்டா வாடா பங்கருக்க" தாய் கத்தினாள். இவ்வளவு ஈடாட்டத்துக்கும் நடுவில் கஞ்சி தயாராகி விட்டது சிறுவர்கள் பெரியவர்கள் என பாத்திரங்களுடன் வரிசை போட்டார்கள். போராளிகளின் கஞ்சிக் கொட்டில்கள் ஒவ்வொரு வீதிகளிலும் இருந்தன... மக்கள் பட்டினியால் சாகாமல் ஒருவேளை கஞ்சி குடிக்க முடிந்தது. இதற்குள் வேறொரு போராளியும் துணைக்கு வந்துவிடவே கஞ்சி விநியோகத்தை முடித்தாள் சசி. வயிற்றைப் புரட்டியது. அவளுக்கு கஞ்சி மீத மில்லை. அதனால் எதுவும் உண்ணவில்லை.

அரசியற்றுறைப் போராளிகள் பகலில் கஞ்சிக் கொட்டில்களில் கஞ்சி வைத்துப் பரிமாறவும் மாலை ஆறமணியானால் இரவில் கரையோரச் சென்றிக்கும் செல்ல வேண்டியிருந்தது. அவளுக்கு இன்று கடற்கரை பாது காப்பில் இரவுச் சென்றி. ரைபிளை எடுத்துக்கொண்டு காவலரணுக்கு சென்ற போது கொஞ்சம் நேரமாகி விட்டது. மதன் அதட்டினான்.

"ஆடி அசைஞ்சு வாங்க இப்ப நேரமென்ன" அவள் எதுவும் பேசவில்லை. பகல் முழுதும் அந்தப் பகுதி எறிகணையில் அதிர்ந்து கொண்டிருந்தது. கடல் வழியாக ராணுவம் வரவாய்ப்பில்லை. மக்கள் அந்த வழியாக தப்பியோடுவது நடந்து கொண்டிருந்தது. படகுக் காரர்கள் பெருந் தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டு மக்களை இந்தியாவிற்கோ பெரும்பாலும் யாழ்ப்பாணத்திற்கோ கொண்டு சென்று கரையேற்றினர்.

ஆனந்தபுரம் பச்சைப்புல் வெளி, இரணைப்பாலை பகுதிகளில் சண்டை அமந்தறையாக நடந்து கொண்டிருந்தது. காடுகளற்ற அந்த பொக்கணை வெளியில் பனைகளும் ஓலைகளை இழந்திருந்தன. திடீர் திடீரென பாய்ந்து வரும் எறிகணைகளும் இப்போது பழக்கப்பட்டு விட்டன. வெடித்துவிட்டதுதானே என் தலையைத்தூக்கினால "பீஸ்" (எறிகணைச்சிதறல்) கொண்டு போய் விடும். உடலையோ அல்லது உயிரையோ.

மழை மேகங்கள் மறுபடி அழுகி ஒழுகத் தொடங்கிவிட்டன. பனங் குத்திகளின் இடைவெளிகளில் கசிந்த நீர் முதுகை நனைத்தது. திரும்பிய பக்கமெல்லாம் இருள் நீக்கமற நிறைந்திருந்தது. திடீரென வெளியே பரபரப்பு தெரிந்தது. மக்கள் சளசளத்தவாறே சாரி சாரியாக ஓடிக் கொண்டிருந்தனர்.

சசி பக்கத்து பங்கரை நோக்கி குரலிட்டாள்.

"அண்ணை அண்ணை என்ணண்ணை சத்தம். சனம் ஓடுது போல" பதிலில்லை.

"இரு நான் போய் பாத்துக் கொண்டுவாறன்" சங்கேத மொழியில் பக்கத்து காவலரணை நோக்கி கூச்சலிட்டவாறே ஓடிய சசி தரப்பால் கூரைக்கு இறுக்கிய கூனியில் தடக்குப்பட்டு குப்புறக் கவிழ்ந்தாள். இதற்குள் அருகில் விழுந்த கொத்துக் குண்டொன்று சடசடவென வெடிக்கவாரம்பித்தது.

ஓடிக்கொண்டிருந்த மக்களிடையே கூச்சல் எழுந்தாலும் அவர்கள் ஓடிக் கொண்டேயிருந்தார்கள்.

"ஓடு....ஓடு."

"ஓடாத காயப்படுவாய் பங்கருக்க வா"

" பங்கரெல்லாம் பத்தியெரியுது அதுக்க கிடவாம வெளியால வாங்க"

சசிக்கு முன்னிருந்த காவலரண்கள் கைவிடப் பட்டிருந்தன. தாங்கள் மட்டுமே இருப்பதை உணர்ந்தவள் திரும்பவும் தனது காவலரணுக்கு ஓடினாள். அங்கே தன்னுடன் இருந்த போராளியை காணவில்லை. மீனா... மீனா...அவள் அந்த குடிலில் தடவிப்பார்த்தபோது கையில் எதுவோ பிசு பிசுவென்று...அவள் கையை உதறிக் கொண்டாள் கையில் ஒரு தசைத்துண்டு...நாக்குலர்ந்து அண்ணத்தில் ஒட்டிக்கொள்ள மேலும் தடவ சிதைந்த உடல் அவளை ஓடு ஓடு என உள்மனம் விரட்டியது.

ஓடினாள். கூடாரங்கள், பதுங்கு குழிகள், அதன் முளைக்கட்டைகள் கயறுகள் எனக்கடந்து "படீர்"அவள் விழுந்த குழியை மண்ணும் கரிப்புகையும் மூடின. எழுந்து ஓட ஒரு உடல் தன் அசைவை நிறுத்தும் இறுதிக்கணத்தில்.,

"என்ர பிள்ள என்ர...."அவளருகே அந்த இருளிலும் நெளிந்து கொண்டிருந்தது ஒருவயது மதிக்கத்தக்க குழந்தை. ரைபிளை தோளில் போட்டவள் குழந்தையை கையிலெடுத் தாள். ரவைகள் கீசிக் கொண்டிருந்தன. வலையர் மடம் கடந்து ஒரு பத்துமீட்டர் போயிருப்பாள் போராளியுடன். எதுவோ அவள்முன் வெடித்தது. அவள் தூக்கி வீசப்பட்டாள்...ஓரிரு நிமிடத்தில் அவள் நிமிர்ந்தாலும், அருகே என்ன முனகல் ஒரு போராளி கிடந்து முனகினான்.

சசி அவனை நெருங்கினாள். அவனை உலுப்பினாள்.

"ஆமி கிட்ட வந்திட்டான். எழும்பு ஓடு ஓடு" அவன் அவளுடைய சட்டையை பற்றிக்கொண்டான்.

" ஏலாது...ஏலாது என்ர ரெண்டு காலும்...."

"அவள் செய்வதறியாது திகைத்தாள்அவனை தூக்கிச் சென்றாலும் மருத்துவமனை கிடையாது.

" அக்கா...நான் பிடிபடக்கூடாது. ரைபிள் வச்சிருக் கிறாய் என்னை சுட்டுப்போட்டுப்போ...கும்பிட்டன், சுடு" மூச்சிரைக்க அவன் கெஞ்சினான்.

"நான் மாட்டன் மாட்டன்" வேகமாக எழுந்தாள். அவன் பெருங் குரலெடுத்து அலறினான்.

"சுடக்கா...உன்னை கும்பிட்டன் சுடக்கா.. சுடு..."

அப்போதுதான் நினைவு வந்தவளாக தான் கொண்டு வந்த குழந்தை தன்னிடமில்லையென்பதை அறிந்தாள். "என்ர பிள்ளை என்ர பிள்ளை..." மணலில் பிறாண்டி பிறாண்டி உருண்டு தேடினாள். "பிள்ளை பிள்ளை" என்றவளின் காலடியில் மரக்குத்திபோல தட்டுப்பட்டதை திகைத்துப் பார்த்தாள். விறைத்திருந்த குழந்தையின் சடலம். அவளிடமிருந்து ஒரு நிம்மதிப் பெருமூச்சு எழுந்தது.

நிதானமாக ரைபிளை எடுத்தாள். சேப்டியை தட்டி ஓட்டோவில் விட்டாள். சேம்பரில் ரவையை ஏற்றினாள். அவனை நோக்கி ரைபிளை நீட்டியபடி அவன் முகத்தை தேடினாள் இருளில் தெளிவில்லை. விரல் ரிகரைத் தட்டியது இருபத்தெட்டு ரவைகளும் அவனுடலை நோக்கிப்பாய்ந்தன. ரைபிளை தூக்கி வீசிவிட்டு ஓடிக் கொண்டிருந்த சனத்துடன் கலந்தாள்.ஆங்காங்கே கிடந்த உடல்கள் எவரையும் எதுவும் செய்யவில்லை. உடல்சோர அவள் தன் விடுதியை அடைந்தாள் அதுவும் காலியாகியிருந்தது...



தெருவோரக் கிளிஞ்சல்கள்...

சுதந்திரம் பெற்ற தேசம்
நிரந்தர விடிவே இன்றி
அவசரம் கொண்ட வாழ்வில்
சஞ்சல நிலையில் இயங்கும்.

வாழ்வியல் கூழல் வகுத்த
தாழ்வுடை மக்கள் பல்லோர்
நாளெலாம் விதியின் வழியின்
வீதியில் வாழப் பெற்றார்.

உறவுகள் இழந்த மனிதர்
உரிமைகள் இல்லா முதியோர்
துறவுகள் பூண்டவராய்
தெருவினில் பிச்சை ஏற்றார்.

அழுக்கு ஆடை அணிந்தே முழுகாத மேனி கொண்டு
இழுக்கில்லை இதுவே வாழ்வென
பழுத்த பழங்களும் பாதையிலே!

உடுக்க உடையுமற்று
உண்ண உணவுமின்றி
படுக்கும் தெருவோரக் கிளிஞ்சல்கள்
வடுக்களாய் வாழ்வில் தெரிகிறதே!

குப்பைத் தொட்டி உணவு
கொட்டிக் கிடந்தால் எடுத்து
எட்டுப் பேராயினும் கூடி
கொட்டாது புசித்து கொள்வார்.

பள்ளிப் படிப்பும் இன்றி
பாதையிலே படுத்துறங்கும் .
சின்னஞ் சிறார் நிலையும்
நெஞ்சை வருத்துறதே!

ஏக்கங்கள் பெருமூச்சாகி
இனியென்ன வாழ்வென்று
தாக்கமே கொண்டவர்கள்
தம் வாழ்வைக் கடத்துகின்றார்
ஏக்கம்தான் வாழ்வு
இதற்கு யார் முடிவெடுப்பார்?

வதிரி.சி.ரவீந்திரன்

வெறுமை

நாளை இந்தச் சோலையில்
நான்குவழிச்சாலை வந்துவிடும்
இனிக் காக்கைகளின் ஓலங்கள்
கேட்காது.

குருவியினங்கள் தங்கள்
கூட்டை மாற்றிக் கொள்ளும்
குயிற்பாட்டாற் கண் விழித்த காலை
வாகன இரைச்சலால்
இமை திறக்கக் கூடும்


புல்லைத் தின்ற மாடுகள்
வெறுமையைச் சந்திக்கும்
சுள்ளியில் பூத்த மலரின்
தேனைச் சுவைத்த ஈக்கள்
விபத்தின் விளைச்சலால்
பிணத்தில் விருந்துண்ணக்கூடும்
தென்றல் வந்து தீண்டிய தேகத்தில்
இனி
அனல் காற்று வீசக்கூடும்

ஆடு மேய்க்க
அங்கே செல்லத் தேவையில்லை
ஆற்றை வீதி புதைத்தாயிற்று
பாகப் பரிவினையால் வரும்
பங்காளிச் சண்டை இனி இல்லை
உனக்கும் எனக்கும் ஏது பாகம்?

எங்கள் வம்சாவளியையே
பயமுறுத்தி வந்த
வயற்காட்டு "சுடலை மாடன் சாமி"
வாய்ப்பூட்டுப் போட்டு
மண்ணில் புதைந்து போனார்.

வரிசையாய் நின்ற பனை மரங்களை
பாடத்திலே பயிலக்கூடும்
இனியென்ன
வாய்க்கரிசி போடக் கூட
வடநாட்டில் கையேந்துவோம்

– என். தர்மராஜ்(இந்தியா)



மூன்று கவிதைகள்

1.
எனது
சிறை
பத்துஅடிதான் – ஆனால்
நீயோ
பத்து பேர்ஸ் நீளம்
கொண்ட
சிறைக்கைதி

2.
மழைக்குருவி
மீண்டும்
சோகமாயிருந்தது
ஏனெனில்
வானம் இப்பொழுது
வெளித்து விட்டது

3.
அரச மரக்
கிளைகளில்
மஞ்சள் பறவை
அங்கேயும்
இங்கேயும்
துள்ளி துள்ளி
பறந்தது – இப்பொழுது
காவியுடை
காற்றில்
சுழன்றாடியது

சிங்கள மூலம்: மொ.ல.செனெவிரத்ன
தமிழில்: வர்ணன்

நா.யோகேந்திரநாதனின் நீந்திக்கடந்த நெருப்பாறு



எம். சந்திரகாந்தா

இலங்கைத் தமிழர் பெரும்பான்மையாக செறிந்து வாழ்ந்து வருகின்ற வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த மூன்று தசாப்தங்களாக கோராத்தாண்டவமாடிய கொடுநாச யுத்தம் முடிவுக்கு வந்த பின் இது தொடர்பாக கணிசமான நூல்கள் வெளிவந்த முள்ளன. அந்நியர் ஆட்சியிலிருந்து சுதந்திரமடைந்த பின்னர் கடந்த அறுபது ஆண்டுகளாக பேரினவாதத்தின் பிடிக்குள் சிக்கி தமது உரிமைகளை இழந்து அதற்காக அகிம்சை வழியில் போராடி எதுவும் பலனளிக்காத பட்சத்தில் அடக்குமுறைக்கு எதிராக ஆயுதம் ஏந்தி விடுதலைக்காக போரிட்ட தமிழரின் வீர வரலாறும் உலகின் கவனத்தை ஈர்த்தது. ஆயுதப் போர் கால் நூற்றாண்டுக்கு நீடித்து, ஆட்சியாளரினாலும் அந்திய சக்திகளின் உதவியுடனும் 2009ம் ஆண்டில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் அமைதியின்றி இராணுவ ஆக்கிரமிப்புக்குள் தமிழ் மக்களின் வாழ்வு தொடர்கின்றது. நடந்து முடிந்த தமிழ்மக்களின் விடுதலைப் போரில் ஏற்றமும் இறக்கமுமாக வெற்றி தோல்வி மாறி மாறி என நீடித்த யுத்தம் இறுதியில் விடுதலைப்போராட்ட தலைமகனின் மரணத்துடன் முடிவுக்கு வந்தது. தமிழரின் வீரமும், தியாகமும் விட்டுக் கொடுக்காத யுத்த தந்திரோபாய நடவடிக்கைகளும் அரசுக்கு பெரும் சவாலாக இருந்தது. மிகப்பெரும் எடுப்பிலான இறுதியுத்தத்தில் இறங்கிய இராணுவம் நவீன யுத்த ஆயுதங்கள் சகிதம் தனது நேச நாடுகளின் பேருதவியுடன் வெற்றியைச் சுவைத்தாலும், விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பது இலகுவாக இருக்கவில்லை. இந்த சமரின் நகர்வுகளை வெகு துல்லியமாக எடுத்துச் சொல்லும் வீரவரலாற்று நவீனமாக வெளிவந்துள்ளன இந்த போர்வரலாற்று நெடுங்கதை ஒரு சுவையான நாவலாக வடிக்கப் பட்டுள்ளது. "நீந்திக் கடந்த நெருப்பாறு" என்ற மகுடத்தில் 600 பக்கங்களில் வெளிவந்துள்ள இது இறுதியுத்த நகர்வின் இரண்டாம் கட்டம். இன்னும் ஒரு பாகம் வெளிவர இருப்பதாக இந்த நாவலின் ஆசிரியர் நா.யோகேந்திரநாதன் குறிப்பிட்டுள்ளார். முதற்பாகத்தின் தொடர்ச்சியாக அந்த நாவல் வளர்கின்றது.

ஆரம்ப காலத்தில் ஒரு மார்க்சிய வாதியாக இருந்த யோகேந்திரநாதன் முற்போக்கான பல சிறுகதைகளை எழுதியதோடு விளிம்புநிலை மக்களின் விடிவுக்கான போராட்டங்களிலும் கலந்து கொண்டவர். ஒரு நாடக ஆசிரியராக, நடிகராக, தயாரிப்பாளராக இலக்கியப்பயணத்தை தொடர்ந்த இவர் தமிழர் விடுதலைப்போராட்டத்தின் தன்மையை உணர்ந்து, அதன் ஆதரவாளராக மாறினார். ஒரு பத்திரிகையாளராகவும் பணியாற்றிய இவர் குறும்படங்கள் தயாரிப்பதிலும் ஈடுபட்டார். வடமராட்சி கரணவாய் கிராமத்தில் பிறந்தாலும் அரைநூற்றாண்டுக்கு மேலாக கிளிநொச்சியில் வாழ்ந்தவர். கோர முகங்களை இறுதிவரை தரிசித்த இவர் அதன் பரிமாணங்களையும் களநிலைமைகளையும் தெரிந்து யதார்த்தமாக இந்த நாவலை எழுதியுள்ளார்.

ஈழத் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தின் இறுதி யுத்தத்தின் தரிசனமாக அமைந்துள்ள இந்த நாவலில் போராளிகளின் வீரம் செறிந்த வரலாறும் அவர்கள் பயணித்த கரடுமுரடான பாதைகளும் தியாகங்களும் பேசப்படும் அதேவேளை போர்க்காலத்தில் மக்கள் அனுப்பவித்த சொல்லொணாத் துயரமும்,இழப்புகளும், இடப்பெயர்வுகளும், பசி, பட்டிணியும் என அனைத்து அம்சங்களும் இந்த நாவலில் பேசப்படுவது சிறப்பம்சம். பண்பட்ட மூத்த எழுத்தாளரான நா.யோகந்திர நாதன் தனது எழுத்தாற்றலினால் இந்த நாவலை சுவை குறையாமல் அழகியலோடு அமைந்ததாக எழுதியுள்ளார். இதனால் வாசிப்பவர் அதிலே விரைவிலேயே ஒன்றி விடுவது ஆச்சரியமல்ல. உணர்ச்சிகரமான எழுத்துக்களைப் படிக்கும்போது உள்ளம் நெகிழ்ந்து நெஞ்சில் உருக்கம் ஏற்படுகின்றது. சம்பவங்களும், உரையாடல்களும், சூழலும் வாசகரை ஒன்ற வைத்து விடுகின்றது. யுத்தகள நிலைக்கு சமாந்தரமாக ஒரு விவசாய குடும்பத்தின் கதையும் இணைந்ததாக சொல்லப்படும் இக்கதையில் வன்னி மண்ணின் வாழ்வு முறையும், பண்பாடும், சூழலும், அன்பும், குடும்ப உறவு, காதல், நட்பு என்பனவும் சுவையாக பின்னிப் பிணைந்துள்ளது. போரின் தாக்கத்தினால் சின்னாபின்னப் படும் மக்களின் வாழ்வும் இழப்புக்களும் இடப்பெயர்வுகளும் யுத்த நகர்வோடு இணைந்து தரிசனமாகின்றன. போராளிகளின் இலட்சிய வெட்கையுடனான தியாகப் பயணத்தில் அவர்கள் புரியும் ஆபத்தான வீர செயற்பாடுகளும் எதிர் கொள்ளும் எதிரியின் தாக்குதல் பிரச்சினைகளும் வெற்றிகளும் பின்னடைவுகளும் இழப்புக்களும் அங்கவீன மடைந்தலும், ஓய்வொளிச்சலற்ற போரும், உணவும் வழங்க தாமதமாகும் போது ஏற்படுகின்ற பசிகொடுமையும், இதற்கு மத்தியிலும் போரிட வேண்டிய நிலைமையும் என பலவும் நிதர்சனமாக எழுத்து மூலம் காட்சிப்படுத்தப் படுகின்றன.

பாலம்பிட்டியில் வாழும் ஒரு விவசாயக் குடும்பம் கடின உழைப்பால் நிம்மதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. காலம் காலமாக கை கொடுக்கும் தோட்டப்பயிர்ச் செய்கையை மண்ணெண்ணை தட்டுப்பாட்டுக்கு மத்தியிலும் தொடர்ந்து செய்கின்றது. அந்தக் குடும்பத்தின் தலைவரான பரமசிவம் மனைவி பார்வதி, இளைய மகன் சுந்தரம், முருகப்பர் என அளவான குடும்பம். மூத்த மகன் சங்கரசிவம் போராளியாகி இணைந்து போர்க்களத்தில் நிற்கிறான். அவன் போராளியாக இணைந்த போது அழுது புலம்பிய பார்வதியும், கவலைப்பட்ட பரமசிவமும் பின்னர்

போராட்டத்தின் பங்களிப்பின் அவசியம் உணர்ந்தவர் களாக போராளிகளை நேசிக்கிறார்கள். மலையகத்தி லிருந்து இடம் பெயர்ந்து குடியேறிய பெருமாள், வேலம்மா குடும்பமும் இவர்களது தோட்டத்தில் நிரந்தரமாக கூலிவேலை செய்து வருகிறார்கள். அவர்களது மகளான முத்தம்மாவுக்கும் சுந்தரத்துக்கும் இடையே காதல் மலர்கின்றது. மலையக மற்றும் சாதி வேறுபாடுகளால் இந்த காதல் திருமணத்தில் முடியாதென முத்தம்மா கலங்கினாலும் சுந்தரம் அவளுக்கு தைரியமூட்டி எப்படியும் தான் அவளை மணப்பேன் என வாக்குறுதி கொடுக்கிறான். இவர்கள் அனைவரும் யுத்த தாக்குதல் களால் இடம்பெயர நேர்கின்றது.

யுத்த களத்தில் நிற்கும் பரமசிவத்தின் மூத்த மகனான சங்கர சிவத்தை சுற்றி போராளிகளின் கதை இன்னொரு புறம் நகர்கின்றது. சிவம் என்று அழைக்கப் படும் அவனுக்கு இன்னொரு போராளியான கணேஸ் நெருங்கிய நண்பன். இவருவரும் படைப்பிரிவு அணி தலைவர்களாக வீரதீரத்துடன் செயற்பட்டு தளபதிகளின் பாராட்டுதல்களையும் பெற்று தொடரந்து கடினமான போர்க்களங்களில் பல தடவை இராணுவத்தினின் முன் னேற்றத்தை தடுக்கின்றார்கள். போராட்டத்தில் இணைந்த பெண் போராளிகளின் வீரதீர செயற்பாடு களும், அவர்கள் எதிர்கொள்கின்ற சவால்களும் நிதர்சனமாக நாவலில் வடிக்கப்பட்டுள்ளமை இன்னொரு சிறப்பம்சமாகும். போராளியான கணேஸ், பெண்போராளி யான ரூபாவை நேசிக்கிறான். அவர்களது கட்டுப்பாடான காதல் கதை இன்னொருபுறம் சொல்லப்படுகிறது. உக்கிரமான போர் நடவடிக்கை ஒன்றில் போது கணேஸ் விழுப்புண் அடைகிறான். அவன் இறந்து விடுவானோ என்று சிவம் துடிக்கிறாள். அப்படி தான் இறந்தால் ரூபாவை திருமணம் செய்யவெண்டுமென சிவத்திடம் வேண்டும் கணேசை மறுத்து அப்படி ஒன்றும் நடாக்காது; நீ குணமாகிவிடுவாய் என்று சிவம் எடுத்துச் சொல்கிறான். கணேஸ் ரூபாவிடம் இதே கோரிக்கையை முன் வைக்கிறான். அவளும் மறுக்கிறாள்.

கணேஸ் மருத்துவ சிகிச்சையினால் குணமடை கிறான். ஆனாலும் இடுப்புக்கு கீழே செயலிழந்தவனாகி விடுகிறான். தான் களத்தில் நின்று மறுபடியும் போரிட முடியாததை எண்ணி கலங்குகிறான். அவனைப் பராமரிப்பதற்காக நின்ற ரூபாவையும் போர்க்களத்திற்குப் போ என கட்டாயப்படுத்தி அனுப்புகிறான்.


இந்த நாவலில் இன்னொரு சிறப்பு அம்சமாக பெண் ஆண் சமத்துவத்தை, போர் பெண்களுக்குத் தந்த பெண்விடுதலையை நிகழ்வுகளினூடே பிரச்சாரமின்றி யேகோந்திரன் தரிசனமாக்கியுள்ளமையை குறிப்பிடலாம். அண்மையில் வந்த இன்னொரு பிரபல மூத்த எழுத் தாளரின் நாவலில், விடுதலைப்புலி முக்கிய உறுப்பினர் ஒருவர் போராளியான தன் படித்த மனைவியை கொடுரப்படுத்துவதாக எழுதியமைக்கு பதிலடியாக இந்த நாவலில் பெண்போராளிகளை அவர்கள் எவ்வளவு மதித்து அவர்களது உரிமைகளை ஏற்று நடப்பதாக யோகேந்திரநாதன் காட்டியுள்ளார்.

போராளிகளான ஆண்கள் பெண்களுக்கு இடையிலான உறவு எவ்வளவு கட்டுப்பாட்டுடனும், கண்ணியத்துடனும் அதேவேளை நட்புடனும் இருந்து வருவதை சுட்டியுள்ளார். ஆண்களைக் கொச்சைப்படுத்தி பெண்விடுதலைக்கு குரல் கொடுக்கும் எழுத்துக்களை வடிப்பவர்கள் போர்க்காலம் பெண்களின் சமவுரிமைகளை எவ்வளவு தூரம் வளர்த்துள்ளது என்பதனையும், வீட்டுச்சிறைக்குள் இருந்த பெண்களின் வாழ்வு ஆற்றல் ஆளுமை என்பனவும் அவர்களது கருத்துக்களை ஏற்கும் நிலைமையும் மேலோங்கிய உண்மை நிலையையும் மறந்தவர்களாக இருக்கிறார்கள். போராளிகளும் இச்சமூகத்தின் பிரதிநிதிகள் தான். எனினும் அவர்கள் புடம்போடப்பட்வர்களாக இருக்கின்றனர்.

இந்த நாவலில் வருகின்ற வதனி, மங்களா உள்ளிட்ட ஒவ்வொரு பெண் பாத்திரமும் இயல்பாக நட்புற வுடன் ஆண்களுடன் பழகுவதும் அவர்களிடையே விருப்பம் எதுவுமின்றி கள்ளம் கபட மற்றவர்களாக இருப்பதும் போருக்கு தம்மை ஒப்புக்கொடுத்த அவர்களின் மனக் போக்கை தெளிவு படுத்துவதாக உள்ளது. தோல்விகளைக் கண்டு துவண்டு போகாமல் அடுத்தக்கட்ட நகர்வுக்கு தயாராகும் அவர்களின் ஓர்மம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஈழப்போர் சார்ந்த நாவல்கள் போரின் கொடூரத்தையும் மக்களின் உயிர் உடமை இழப்புக்களையும் இடப்பெயர்வும் அது தொடர்பாக எதிர் கொள்ளும் சிரமங் களையும் ஓரளவு சிறப்பாக வெளிப்படுத்திய போதிலும் கள நிலைமைகளையும் போராளிகளின் கடின களமுனை வாழ்வையும் போதியளவு சித்திரிக்கவில்லை எனலாம். இப்பகுதி பேசாப்பொருளாக இருந்தமைக்கு கள அனுபவமின்மையும் போராளிகளுடன் நெருக்கமான உறவின்மையும் காரணங்களாக குறிப்பிடலாம். இந்த வகையில் யோகேந்திரனின் தேடலும் கடின உழைப்பும் களம் பற்றிய பார்வையை வெளிப்படுத்தியுள்ளது. எனவே போர்க்கள நிலை பற்றி தெளிவாக பேசுகின்ற முக்கிய நாவலாக நீந்திக்கடந்த நெருப்பாறு திகழ்கின்றது. வரலாற்றுடன் இணைந்திருந்த போதிலும் யோகேந்திர நாதனின் கதை சொல்லும் ஆற்றலும் சம்பவகோர்வை களும் எழுத்து நடையும் இந்நூலிக்கு அழகு சேர்க்கின்றது. உணர்ச்சிகரமான கட்டங்களுக்கு உதாரணமாக, இராணுவத்தின் கையில் சிக்கிய இளம் பெண்போராளி வதனி காப்பரணிலிருந்த போராளியிடம் "டேய் என்னைச் சுடடா... என்னைச் சுடடா" என்று குளறுவதைக் குறிப்பிட்லாம். இராணுவத்தின் கையில அகப்பட்டு சின்னாபின்னப்பட்டுச் சாகக் கூடாது என்பதற்காக அவளது கூற்றை ஏற்று சக போராளியான வதனியை மலையவன், கட்டிப்பிடித்து இராணுவச்சிப்பாயுடன் சேர்த்து சுட்டுக் கொல்கிறான். இதனால் அவனுக்கு ஏற்பட்ட மன உழைச்சல் உருக்கமாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

போரில் தமிழர் தரப்பு தோற்றமைக்கு துரோகங் களும் காட்டிக் கொடுப்புக்களும் ஒரு புறம், கொண்டு நிறுவனங்களினூடான சர்வதேச ஊடுருவல் மறுபுறம், அரசுக்கான நேச நாடுகளின் உதவிகள் போராளிகளின் எண்ணிக்கை இராணுவத்துடன் ஒப்பிடும்போது மிக குறைவாக இருந்தமை இன்னொருபுறம் என பல காரணங்களை குறிப்பிடலாம். மக்களின் பெரும் ஆதரவு இருந்த போதிலும், இது ஒரு மக்கள் போராட்டமாக மாறவில்லை என்பதையும் தோல்விக்கான காரணமாக நோக்குகிறார். களத்தில் பலியான போராளிகள், இராணு வத்தினர் போலன்றி அப்பாவி பொதுமக்கள் பலர் இலக்கு வைக்கப்பட்டதும், மக்கள் குடியிருப்புகள் மீதான கண் மூடித்தனமான குண்டு வீச்சுக்களும் ஷெல் அடிகளும் அப்பாவி இளைஞர்களின் கைதுகளும் இனவாத அரசின் செயற்பாடுகளாக இருந்தன. மக்களின் துன்பம் பற்றி சிந்திக்காமல் யுத்தவெற்றி ஒன்றே இலக்கு என மனிதாபி மானமற்ற முறையில் புரியப்பட்ட யுத்தங்களை தரிசன மாக்கி ஆளும் வர்க்கத்தினரை ஆவேசமாக சாடும் நாவலாசிரியரின் துணிச்சல் பாராட்டப்படவேண்டியதாகும்.



காலங்கள் செய்யும் கோலங்கள்

முருகபூபதி

தொழில் நுட்ப வளர்ச்சியினால் நன்மைகளும் தீமைகளும் ஏற்படுவதை அவதானித்து வருகின்றோம். கால மாற்றம் நமக்களித்த வரப்பிரசாதங்கள் அநேகம். அதேசமயம் அந்த வரப்பிரசாதங்களை புரிந்து கொள்ள முடியாமலும் அனுபவிக்கமுடியாமல் திணறுபவர்களையும் அன்றாடம் காணமுடிகிறது.

நான் வீரகேசரியில் பணியாற்றிய காலத்தில் வெள்ளீய அச்சு எழுத்துக்கள் கோர்க்கப்பட்டு, பக்கங்கள் வடிவமைக்கப்பட்டுத்தான் பத்திரிகைகள் வெளியாகின. அச்சுக்கூடங்களும் கொம்பசிட்டர் என்ற அச்சுக்கோப் பாளர்களை நம்பித்தான் இயங்கின.

சிலம்புச்செல்வர் ம.பொ.சிவஞானம், எழுத் தாளர் விந்தன் ஆகியோர் தமது வாழ்வை அச்சுக் கூடத் தின் கொம்பசிட்டர்களாகத்தான் தொடங்கினார்கள். ஜெயகாந்தன் அச்சுக்கூடங்களில் ஒப்புநோக்காளராக (Proof Reader) இருந்தவர்.

1988 இற்குப்பின்னர் வீரகேசரி அச்சுக் கூடத்தில் திடீரென்று எதிர்பாராத மாற்றங்கள் நேர்ந்து, பல அச்சுக் கோப்பாளர்கள் தொழிலை இழக்க நேரிட்டது. கணினியின் அறிமுகம் அவர்களை அங்கிருந்து அந்நியப்படுத்தியது.

அச்சமயத்தில் நான் அவுஸ்திரேலியாவிலிருந்து அங்கு தொழிலை இழந்தவர்களுக்காக வருந்தினேன். அவர்களுக்கு தெரிந்த ஒரே தொழில் அச்சுக்கோர்ப்பது தான். திடுதிப்பென அவர்கள் தொழிலை இழந்தபோது மிகவும் சிரமப்பட்டார்கள்.

அவர்களுக்கும் குடும்பம் இருக்கிறதல்லவா? சிலர் வெளிநாடுகளுக்கு பறந்தனர். சிலர் வேறு தொழில் களுக்கு சென்றனர். சுமார் பதினொரு வருடங்களின் பின்னர் இலங்கை திரும்பி, குறிப்பிட்ட அச்சுக் கோப்பாளர் களின் நிலையை ஆராய்ந்தேன். ஒருவர் எழுதும் ஆற்ற லும் விளையாட்டுத்துறை பற்றிய தகவல்களும் தெரிந்த வராயிருந்தமையால், வீரகேசரி ஆசிரியபீடத்திலேயே விளையாட்டுத்துறை நிருபராகியிருந்தார்.

மற்றும் ஒருவருக்கு ஒளிப்படத்துறையில் அனுபவம் இருந்தமையால், தொடர்ந்து திருமணங்கள் மற்றும் பிறந்த தினக்கொண்டாட்டங்களுக்குச்சென்று படம் பிடித்து வாழ்க்கையை ஓட்டினார். பின்னாளில் சொந்தமாகவே ஒரு ஸ்ரூடியோவை அமைத்துக் கொண்டதுடன், வீடியோ தொழில் நுட்பத்திலும் தேர்ச்சி பெற்றார். அத்துடன் நில்லாமல், தனது மகளை கணினி தொழில் நுட்ப பயிற்சிகளுக்கு அனுப்பி, தேர்ந்த பக்க வடிவமைப்பாளராக்கிவிட்டார். அந்த யுவதி கொழும்பில் ஒரு பிரபல அச்சகத்தில் தனது பணியை மிகவும் சிறப்பாக தொடருகின்றார். பல எழுத்தாளர்களின் நூல்கள் மற்றும் இதழ்களையும் அழகாக வடிவமைக்கின்றார்.

ஒரு அச்சுக்கோப்பாளர் மலையகத்திலிருந்து பூக்களை வரவழைத்து பூமாலை கட்டி திருமணவீடு களுக்கும் இதர வைபவங்களுக்கும் கொடுப்பதுடன், மலர் களினாலேயே அழகிய மண வறைகளும் செய்து வாடகைக்கு விடுகிறார்.

மற்றும் ஒருவர் சைவஹோட்டலில் சர்வராகி விட்டார். இவ்வாறு தமக்குச்சம்பந்தமில்லாத வேலை களுக்குச்சென்று தங்களையும் தங்கள் குடும்பத்தையும் முன்னேற்ற அரும்பாடுபட்டனர்.

பேனையையும் பேப்பரையும் விட்டால் வேறு எந்தத் தொழிலும் தெரியாத நான், திடீரென்று புலம் பெயர முற்பட்டபோது எனது அம்மா, கண்ணீர் விட்டார்கள். அவருடைய கண்ணீருக்கு காரணமிருந்தது. முன் பின் தெரியாத ஒரு அந்நியதேசத்தில் தனது மகன் என்ன செய்து தனது குடும்பத்தை காப்பாற்றப்போகின்றான்? என்ற கவலை அவர்களை அரிக்கத்தொடங்கியிருந்தது.

"அம்மா அழவேண்டாம். அவுஸ்திரேலியாவில் அப்பிள் தோட்டங்கள் இருக்கின்றன. அங்கு சென்று அப்பிள் பிடுங்கியாவது எனது குடும்பத்தை பார்த்துக் கொள்வேன்" என்றேன்.

ஆனால், இதுவரையில் நான் அந்தத் தொழிலுக் குச் செல்லாமல், இங்கு அப்பிள் சாப்பிடுகின்றேன். அப்படியாயின் என்ன தொழில் செய்தாய் ? என்று நீங்கள் கேட்கலாம் அல்லவா? முதலில் ஒரு Australian Textile Printing Company. அதன்பின்னர் பல்வேறு தொழிலகங்களிலும் வேலைசெய்துவிட்டு ஓய்வுபெறும் வயதில் இளைப்பாறி விட்டேன்.

எனினும் எனக்கு வீரகேசரியில் வாய்ப்புத் தந்து சோறுபோட்ட தொழிலை மறந்துவிடாமல், இன்றும் எழுதிக்கொண்டே இருக்கின்றேன். ஓய்வூதியம் சோறு தருகிறது. எந்தச் சன்மானமும் கிடைக்காத எழுத்து – ஊடகத்துறை வாழ்க்கை திருப்தியைத் தருகிறது.

காகிதாதிகளுக்கும் பேனைகளுக்கும் ஓய்வு கொடுத்துவிட்டு, கணினியில் எனது விரல்கள் தொடர்ந்து தட்டப்படுவதனால் எழுத்துக்களும் தேய்ந்து மறைந்து விட்டன. எதனைத்தட்டினால் எந்த எழுத்துவரும் என்ற தேர்ச்சி பெற்றாயிற்று.

கணினி எனக்கு தற்காலத்தில் பெரும் வரப் பிரசாதம்தான். ஆனால், மூத்த எழுத்தாளர்கள் சிலர் தங்கள் முதுமைக்காலத்திலும் – இன்றும் காகிதத்தில் எழுதிக் கொண்டுதானிருக்கிறார்கள். அவர்களுக்கு கணினியும் இணையத்தளங்களும் அந்நியமாகித்தான் இருக்கின்றன.

அவுஸ்திரேலியாவுக்கு வருகை தந்த பல முதிய எழுத்தாளர்களுக்கு தமிழ் உலகில் இயங்கும் இணைய இதழ்கள், வலைப்பதிவுகள் குறித்தெல்லாம் பாடம் நடத்தினேன். அவர்களை அத்தகைய ஊடகங்களை தொடர்ந்து பார்க்குமாறும் அறிவுறுத்தினேன்.

கடந்த ஜனவரி மாதம் 6 ஆம் திகதி எங்கள் மூத்த எழுத்தாளர் தெணியான் அவர்களுக்கு 77 வயது பிறந்தது. நேரத்தைக்கணித்து அவருடன் தொடர்பு கொண்டு வாழ்த்திப்பேசினேன். நான் அவரை என்றைக்குமே "மாஸ்டர்" என்றுதான் அழைப்பேன்.

"மாஸ்டர் மனமார்ந்த வாழ்த்துக்கள். இன்று உங்களை வாழ்த்திவிட்டு உங்களைப்பற்றிய ஒரு பதிவை எழுதி மின்ஊடகங்களுக்கு அனுப்பவிருக்கின்றேன். எனது கணினியில் தெணியான் என்று அழுத்தியதும் உங்களைப்பற்றிய ஏராளமான தகவல்களும், நீங்கள் சம்பந்தப்பட்ட பல அபூர்வமான படங்களும் கிடைக் கின்றன." என்றேன். அவர் இதுகேட்டு ஆச்சரியப்பட்டார்.

இவ்வாறு உலகம் சுருங்கிவிட்டது. ஒரு காலத்தில் என்சைக்கிளோபீடியா தொகுப்புகளை வீடுகளில் காட்சிக்கு வைத்திருந்து அவற்றில் தேடுதல் நடத்தினோம். அந்தக்காலம் மலையேறிவிட்டது.

எனினும் இன்றும் தமிழ்த்திரைப்படங்களில் என்சைக்கிளோபீடியா பிரதிகளை வீடுவீடாக எடுத்துச் சென்று விற்பனை செய்யும் பிரதிநிதிகளை பார்க்கின்றோம். என்வசம் இருந்தவற்றை இந்த கணனியின் வருகைக்குப் பின்னர் முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி நூலகத்திற்கு ஒப்படைத்து விட்டேன்.

(இங்குதான் முன்னர் தோழர் வி. பொன்னம் பலம் எழுத்தாளர்கள் நிலக்கிளி பாலமனோகரன், செ. யோகநாதன் ஆகியோர் ஆசிரியர்களாக பணியாற்றினார் கள் என்பதையும் மறந்துவிடமுடியாது.)

மாணவர்களும் கைத்தொலைபேசி ஊடாக முக நூலில் சஞ்சரிக்கும் காலத்திற்கு வந்துவிட்டனர். படச் சுருளில் திரைப்படங்களை ஒளிப்பதிசெய்த காலம் மறைந்து, டிஜிட்டல் முறைக்கு வந்தபொழுது, இயக்குநர் பாலு மகேந்திராவும் இந்தபுதியதொழில் நுட்பத்தை கற்கநேர்ந்தது.

அவுஸ்திரேலியாவில் வெளியாகும் அக்கினிக் குஞ்சு இணைய இதழ், வரம்தோறும் மூத்த ஈழத்து எழுத் தாளர்களின் குறிப்பிடத்தகுந்த சிறுகதைகளை வெளியிடு கிறது. இது இலங்கையில் பலருக்கும் தெரியாத தகவல். இலங்கையர்கோன், வயித்திலிங்கம், சம்பந்தன் முதல் வ. அ. இராசரத்தினம், தெளிவத்தை ஜோசப் வரையில் அவர் களின் தேர்ந்தெடுத்த கதைகள் பதிவாகிவிட்டன. இந்தப் பத்தியை எழுதும்வேளையில் தருமு சிவராமின் காடன் கண்டது டொமினிக் ஜீவாவின் பாதுகை ஆகிய சிறுகதைகள் பதிவேற்றப்பட்டுவிட்டன.

தருமு மறைந்துவிட்டார். கொழும்பு மட்டக்குளி யாவில் வதியும் எங்கள் ஜீவாவுக்கு இந்தச்செய்தி தெரியாது. அவருக்கு 90 வயதாகிவிட்டது. வயதுக்கேற்ற உடல் உபாதைகளுடன் அவர் ஓய்விலிருக்கிறார்.

இன்றைய நவீன கணினி உலகஅதிசயங்களில், மற்றும் பல வரப்பிரசாதங்களும் பெருகியிருக்கின்றன. ஆனால், அவற்றை எத்தனைபேர் அறிவார்?

சமகாலத்தில் நானும் ஒரு பிரச்சினையை எதிர் நோக்குகின்றேன். என்னை உலகின் பல நாடுகளிலிருந் தும் தொடர்புகொள்பவர்கள், "முகநூல் இருக்கிறதா? வாட்ஸ் அப் இருக்கிறதா..?" எனக் கேட்கும் போது, சுருங்கி விடுகின்றேன். "என்னிடம் அவை இல்லை" என்றதும், நான் இன்னும் ஒரு கற்கால மனிதன் என்றும் கருதுகின்றார்கள்.

அந்தத் தொழில்நுட்பத்தை சொல்லித் தருவ தற்கு பலர் என்னருகில் இருந்தபோதிலும், ஏனோ, புதிய புதிய உலகத்திற்குள் பிரவேசிப்பதற்கு மனம் தயங்கு கிறது. ஆனால், மின்னல்வேகத்தில் துரிதகதியில் இந்த ஊடகங்கள் தகவல்களை பரிமாறிக்கொள்கின்றன.

எனது பேத்திக்கு நான்குவயது. பெற்றவர்கள் வாங்கிக்கொடுத்த ஐபேர்டில் அதற்குரிய Pass Word ஐ தட்டிவிட்டு தனக்கு விருப்பமான இணைப்புகளுக்கு துரிதமாக சென்று புதைந்து விடுகிறாள். அதனை எவ்வாறு இயக்குவது என்பது எனக்குத்தெரியாது.

"வீட்டில் மின்குமிழ் செயலிழந்துவிட்டால், அதனை மாற்றவும்தனக்குத் தெரியாது" எனச் சொன்னவர்தான் கேரள இலக்கிய மேதை தகழி சிவ சங்கரன் பிள்ளை. இத்தனைக் கும் அவர் ஒரு வழக்கறிஞர்! அவருக்கு இந்திய சாகித்திய அகடமி விருது கிடைத்திருக்கும் தகவல் கூட தெரியாம லிருந்தவர்தான் அவருடைய மகள்! இது எப்படி இருக்கிறது?

ஒருசமயம் கவியரசு கண்ணதாசன் இசையமைப் பாளர் எம்.எஸ்.விஸ்வநாதனை அழைத்துக்கொண்டு சோவித் நாட்டுக்குச்சென்றார். அங்கே மாஸ்கோவில் பணியிலிருந்த தமிழகத்தவர் ஒருவர், இவர்களை வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தார். அங்குசென்றபோது, அவர் தாம் மாஸ் கோவில் பொறியியலாளராக இருப்பதாகச்சொன்னதும், விஸ்வநாதன், இரகசியமாக கண்ணதாசனிடத்தில், "அண்ணே எங்க ஊரிலிருந்து இவ்வளவு தொலைவு வந்து சைவஹோட்டலில் பொறிக்கிற வேலையை பார்க்கிறாரா இந்த மனுஷன்!?" எனக் கேட்டாராம்.

பொறியிலுக்கும் – பொறிக்கும் உணவுக்கும் பேதம் தெரியாத மெல்லிசைமன்னருக்கு ருஷ்யாவின் தேசிய கீதம், குறிப்புகள் ஏதும் இன்றி மாஸ்கோ மியூசியத்தில் இசைக்கத்தெரிந்திருக்கிறது!

இவ்வாறு கற்றதையும் பெற்றதையும் கல்லாததை யும் கற்கவிரும்பாததையும் பட்டியல் இட்டுக் கொண்டே செல்லமுடியும். தமது படைப்புகள் வெளிநாடுகளில் இணைய இதழ்களில் வரும் செய்தியை அறியவே முடியா மல் பல மூத்த படைப்பாளிகள் இலங்கையில் இருக்கின்ற போது, முகநூலிலும் ட்விட்டரிலும் வாட்ஸ் அப்பிலும் மூழ்கியிருக்கும் இளம் தலைமுறையினரிடம் நான் அந்நியமாகி இருப்பதும் சுகமான அனுபவம்தான்.!

காலம் கொன்ற நினைவுகள்...

பிரசன்னராஜ்

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் நான் படித்த கிராமத்துப் பள்ளிக்கூடத்தைக் காணும் போதெல்லாம் சடுதியில் ஞாபகத்துக்கு வருபவன் அப்போது என்னுடன் கூடவே படித்த குஞ்சன் தான்.

அந்தப் பள்ளிக்கூடம் ஐந்தாம் வகுப்பு வரை இருந்தது. எமது கிராமத்துப் பிள்ளைகளுக்கான ஆரம்ப பள்ளி கூடமும் அதுதான். சுற்றி வர கருகரு வென வளர்ந்த பனைகள் நெடுதுயர்ந்து போய் நின்றன. அந்தப் பனங்கூடலுக்குள் தான் எங்கள் பள்ளிக்கூடம் இருந்தது. நாலு பக்கமும் அலம்பல் வேலி. அலம்பல் தடிகளை நெருக்கமாகக் குத்திச் சாத்தி குறுக்காக பனை மட்டைகளால் வரிச்சுப் பிடிக்கப்பட்டிருக்கும். யாரும் பாய்ந்து வெளியே போகாத படிக்கு உயரமான வேலிகள். ஒரு சின்னக் கட்டிடத்தில் தான் பள்ளிக் கூடம் இயங்கியது.

பள்ளிக் கூடத்துக்கு வடக்குப் புறமாக கண்ணுக்கெட்டியதூரத்தில் காத்தவராயர் கோவில். அங்கு நாலாபக்கமும் கிளையெறிந்து சதா நிழல் பரப்பி நிற்கும் ஆலமரமொன்று நின்றது. சடைத்துப் போய் விழுதெறிந்த ஆலமரத்தைப் பார்க்க குளிர்ச்சியாக இருக்கும். எனது வகுப்புத்தோழர்களின் கோடை காலப் பொழுதுகள் அங்கே தான் கழியும். கிட்டிப்புல், விளையாடுவது, மாபிள் போளை அடிப்பது, விழுது களில் தொங்கி ஊஞ்சலாடுவதெல்லாம் அங்குதான்.

மாரிகாலம் வந்தால் எங்களுக்கு ஒரே கொண்டாட்டம் தான். துள்ளலும் மகிழ்ச்சியுமாக இருக்கும்.

கோயிலுக்கு முன்னேயுள்ள வயல்காணி மழை வெள்ளத்தால் நிறைந்து விடும். ஒரு பெரிய குளம் போல எங்கள் இடுப்பளவுக்கு நீர் முட்டியிருக்கும். அதில் ஒரு வகையான மீன்கள், நீர்பாம்புகள், வெள்ளைக் கொக்குகள் எல்லாம் சஞ்சரிக்கும். ஓங்கி வளர்ந்து நிற்கும் பனைகளின் நிழல்கள் நீரில் விழுந்து பிரதி பலிப்பதும், வெள்ளைக் கொக்குகள் கூட்டம் கூட்ட மாக வந்து தாழப் பறந்து சிறகடிப்பதும் ரம்மியமான காட்சிகள். நீர்ப் பாம்புகள் வேகமாக வந்து தலைநீட்டிப் பார்த்து விட்டு, நீரில் அமிழ்ந்து மறைந்து விடும். மீன்கள் திடீரென்று துள்ளியெழுந்து திசை மாறிப் பாயும். அப்போதெல்லாம் நீரில் இறங்கி மீன்களைப் பிடிக்கப் போய் தோற்று விடுவோம். வேகம் கொண்டு நீந்திச் செல்லும் நீர்ப்பாம்பு யாரையும் தீண்டாது. கையால் பிடிக்குமளவுக்கு அது பச்சைத் தண்ணிப் பாம்பு என்பதை தெரிவித்தவன் குஞ்சன் தான். சமயங் களில் அவன் கையால் பிடித்துமிருக்கிறான். அதன் பிறகு பயம் எங்களைத் தொற்றிக் கொள்ளவில்லை.

எங்களுக்கெல்லாம் தலைச்சனாகக் குஞ்சன் இருந்தான். மதானித்து நிற்கும் ஒற்றை வடலி போல வாகன உடற்கட்டுடையவன். வகுப்பு வரவு இடாப்பில் அவன்பெயர் குமரேசன். வீட்டில் செல்லமாக குஞ்சன் என அழைக்கப்போய் அதுவே நிலைத்து விட்டது. பருமனிலும், பலத்திலும் எங்களை விட வீச்சானவன். உண்மையில் ஏழாம் வகுப்பில்தான் படிக்க வேண்டியவன். இருமுறை பெயில்விட்டு எங்களுடன் தங்கி விட நேர்ந்தது. பள்ளிக் கூடத்துக்கும் பிந்தித்தான் வருவான்.



எங்கள் வகுப்பாசிரியை சிவபாக்கியம் ரீச்சர் எப்போதும் புனிதம் பேணும் ஆசாரசீலர். சுத்தம், சுகாதாரம் பார்ப்பதில் கராரானவர். எப்போதும் பிராமணப் பெண்போல காட்சி தருபவர். ஒருமுறை குஞ்சனைத் தண்டிக்கப்போக, அவன் தகப்பனைக் கூட்டி வந்து நியாயம் கேட்க வைத்து விட்டான். அதன் பின், எதுசெய்தாலும் ரீச்சர் அவனைக் கடிந்து பேசுவதில்லை. மற்றைய ஆசிரியர்களும் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டனர். ஆனாலும் பள்ளிக்கூடத்தில் சிரமதானம், புறக்கிருத்திய வேலைகள் என்று வந்தால், கலைத்துக் கலைத்து அவனிடம் சுளுவாக வேலை வாங்கி விடுவார்கள்.

அவனும் அடிக்கடி காயப்பட்டு காலில், கையில் கட்டுப் போட்டுக் கொண்டு வந்து நிற்பான். அவனில் ஒருவகை முரட்டுத்தனமும், அலட்சியமும் குடி கொண்டிருக்கும். தலைமை ஆசிரியருக்கு மட்டும் அடங்கிப் போவான். அவர் பலமுறை அவனை பிரம்புடன் துரத்திய காட்சிகள் இப்போதும் நினைவில் நிற்கிறது.

ஆசிரியர் வகுப்புக்குப் பிரசன்னமாகாத வேளைகளில், வகுப்பை அமைதியாக வைத்திருப்பதும் அவன் தான். அந்தப் பொறுப்பை தானாகவே சுவீகரித்து விடுவான். இடைவேளை நேரம் தண்ணீர் குடிப்பதற்கு வகுப்பில் தள்ளுமுள்ளு ஏற்படும். பானையின் மேல் வைக்கப்பட்ட றப்பர் கோப்பை அடிக்கடி காணாமல் போகும். ஒவ்வொரு தடவையும் அதைத் தேடிக் கொண்டு வந்து தருவான்.

இதனால் சமயங்களில் ஆசிரியர்களிடம் நல்ல பெயரையும் எடுத்து விடுவான்.

நவராத்திரி பூசை வந்தால் அந்த ஒன்பது நாட்களும் எங்களுக்கு விடுமுறை மாதிரி இருக்கும். அதுவும் கடைசி நாள் பூசைக்கு நிறையப்பூக்கள் தேவைப்படும். பல குழுக்களாகப் பிரிந்து பூக்கள் சேகரிக்க ஊர்மனைக்குள் போவோம். எங்களுக்கு குஞ்சனே வழிகாட்டுவான். எங்களுக்கும் அவனுடன் போவதில் அலாதிப் பிரியமாக இருக்கும். அவன் முதலில் வியாபாரிமூலைப்பக்கந்தான் கூட்டிச் செல்வான். வீரபத்திரர் கோயிலை அண்மிக்கமுன் வளைவில் ஒரு இறக்கம் வரும். அந்த இறக்கத்தில் ஆளையாள் முந்தி ஓடிச் செல்வது மகிழ்ச்சியான தருணங்கள். கோவிலை அண்டியிருக்கும் மரங்களின் நிழலில் ஆறியிருப்போம். தாகமெடுக்க கோயில் கிணற்றை எட்டிப் பார்ப்போம். ஆழங்குறைந்த சிறிய கிணறு. பார்க்க வினோதமாகத் தெரியும். கோவிலுக்கு வருகிறவர்கள் மனம் இரங்கினால் தண்ணீர் குடிப் போம். கைமண்டையில் வயிறு முட்டக் குடிப்போம். நாங்கள் அப்போதெல்லாம் கொடி பிடித்து நீர் அள்ளக் கூடாதென்பது நியதி. நாங்கள் வேறை ஆக்களாம். இதையும் குஞ்சன் சொல்லித்தான் தெரியும். தன் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள அம்மன் கோவிலிலும் அப்படித்தானாம். கிணத்துக்குக் கிட்ட போக முடியாதாம்.

விளையாட்டு முடியக் களையாறிவிட்டு ஊர் மனைக்குள் போவோம். குஞ்சன் தான் முன்னே செல்வான். அங்கு எல்லாமே கல்வீடுகளாக இருக்கும். பார்த்து வியந்து போவேன். மதில்களுக்கு மேலால் விதவிதமான பூக்கள் இதழ் விரித்திருக்கும். வீடுகளின் வெளிக்கேற் உட்பக்கமாக இழுத்துப் பூட்டப் பட்டிருக்கும். நாய்கள் அவிழ்த்து விடப்பட்டிருக்கும். எங்களைக் கண்டு அவை ஆக்ரோசமாகக் குரைத்தபடி யிருக்கும்.

"ஐயா...ஐயா... பூசைக்குப் பூப்புடுங்கலாமே... பள்ளிக் கூடத்திலிருந்து வாறம்"

முதலில் பவ்வியமாக குரல்கொடுப்பான் குஞ்சன். நாங்களும் அதை வழிமொழிவோம். ஓயாத நச்சரிப்பைத் தாங்க இயலாது. சில வீடுகளில் பூப்பறிக்க அனுமதிப்பார்கள். இன்னும் சிலர் ஏசிக் கலைத்து விடுவார்கள். குஞ்சன் அவர்களுடன் பதிலுக்கு தர்க்கப் பட்டுக் கொள்வான். பூக்கள் சேகரித்து முடிய கடற் கரைக்குப் போவோம். அதுவும் கூப்பிடுதூரத்தில் தான் இருந்தது. இரகசியமாகத்தான் எங்களைக் கூட்டிப் போவான் குஞ்சன். யாருக்கும் சொல்லக்கூடாதென்ற மிரட்டல் வேறு. அவனுக்குப் பின்னால் ஓடிப் போவோம். கரையைத் தொட்டுச் செல்லும் நீரில் காலை நனைப்போம். கடலில் மிதந்து வரும் பாய்மரக் கப்பல்களை அதிசயித்துப் பார்ப்போம். அவை அலை களின் தாலாட்டில் அசைந்து அசைந்து வருவதைப் பார்க்க மனம் குதூகலிக்கும்.

அங்கு சிப்பிகள், சோகிகள், சங்குகள், கணவாய் ஓடுகள் கரை ஒதுங்கிக் கிடக்கும். ஓடியோடிப் பொறுக்கியெடுப்போம். கணவாய் ஓட்டினால் சிலேற் அழிக்கலாமென்று முதலில் எனக்குச் சொல்லித் தந்தவனும் குஞ்சன் தான். எல்லாம் முடியக் கட்டுப் பாடாக பள்ளிக்கூடத்துக்குக் கூட்டி வந்து விடுவான்.

குஞ்சன் வழியெங்கும் எம்.ஜி.ஆரின் பாட்டுக் களையே பாடிக் கொண்டு வருவான். அப்போ தெல்லாம் வகுப்பு எம்.ஜி.ஆர், சிவாஜி ரசிகர்களால் தன்னை பிரிந்திருக்கும். எம்.ஜி. ஆருக்குத்தான் இரசிகர்கள் அதிகம். சமயங்களில் ரசிகர்களிடையே தர்க்கம் முற்றி மோதல்களிலும் முடிவதுண்டு. நான் சிவாஜியின் ரசிகனாகவே இருந்தேன். குஞ்சனுடன் தர்க்கம் வந்தால் இணங்கிப் போவேன்.

குஞ்சனுடனான அந்தக் கடைசிச் சந்திப்பும், சம்பவமும் இன்றும் பசுமையாக மனதில் நிற்கிறது.

நல்ல ஞாபகம். அது ஒரு மழைநாள். காலைப் பிரார்த்தனை முடிந்து வகுப்பில் அமர்ந்திருந்தோம். முதல் மணி அடிக்க சிவபாக்கியம் ரீச்சர் பாடத்துக்கு வந்து விட்டார். சுற்றாடல் பாடம் ஆரம்பித்து விட்டது. அப்போது தான் பதுங்கிப் பதுங்கி வந்த குஞ்சன் வாசலில் நின்று எட்டிப் பார்த்தான். ரீச்சர் அவனை முறைத்து விட்டு உள்ளே வா எனச் சைகை காட்டினார். வகுப்பில் அவனுக்கு மட்டும் தான் இப்படியான சலுகைகள் கிடைக்கும்.

உள்ளே வந்தவன் சுற்றும் முற்றும் பார்த்தான். என்னைக் கண்டு சிரித்து விட்டு விறுக்கென வந்து பக்கத்தில் அமர்ந்து கொண்டான். வகுப்பில் என்னுடன் தான் ஒட்டிக்கொள்வான். மற்றவர்கள் அருகில் அண்டுவது குறைவு. ஆரம்பத்தில் அவனிட மிருந்து வரும் பழக்கப்படாத வாடை அருவருப்பாகித் தான் இருந்தது. நாளடைவில் அவனது நல்ல இயல்பு களும் தெரிய வர அந்த வாடையும் பழகிப் போனது. அவனது தொந்தரவுகளையும் சகித்துக் கொண்டேன்.

புத்தகப் பையை வாங்கிலில் வைத்து விட்டு என்னை எச்சரிக்கையோடு பார்த்தான்.

ரீச்சர் செல்லப்பிராணிகள் பற்றி கற்பித்துக் கொண்டிருந்தார். பலரும் கைகளை உயர்த்தி தத்தமது செல்லப்பிராணிகளை சொல்லிக் கொண்டனர். ரீச்சரும் அவற்றைக் கரும்பலகையில் காட்சிப்படுத்தியபடி இருந்தார்.

"ரீச்சர்... ரீச்சர்... என்ரை செல்லப்பிராணி அணில்" என உற்சாகமடைந்தவனாய் எழுந்து நின்று சத்தமாகக் கூறினான். என்னையும் பெருமிதத்துடன் பார்த்தான்.

முன் வாங்குகளில் இருந்தவர்கள் திரும்பிப் பார்த்துச் சிரித்தனர். முன் வாங்கில்காரர் எப்பவும் கெட்டிக்காரர்கள் என்பது பலரதும் கணிப்பு. நானும், குஞ்சனும் எப்பவும் பின் வாங்கில் தான்.

குஞ்சன் அவர்களை ஒரு பார்வை பார்த்தான். மிரட்டுவது போலிருந்தது. உடன் எல்லோரும் அடங்கிப்போய் அமைதியாகி விட்டனர்.

"கெட்டிக்காரன் குமரேசன் சொல்லிறதும் சரிதான். அணிலையும் செல்லப்பிராணியாக வளர்க்கலாம் சிலர் அப்படி வளர்க்கிறார்கள்தான். அதுவும் எங்கடை சூழலிலுள்ள அழகான பிராணிதானே..."

ரீச்சர் அவனுக்கு ஆதரவாகக் கூறினார். அவனுக்குக் கிடைத்த அங்கீகாரத்தால் மகிழ்ந்து போய் நின்றான். எல்லோரையும் மிதப்புடன் பார்த்துவிட்டு அமர்ந்தான்.

சிவபாக்கியம் ரீச்சர் கரும்பலகையில் எழுதத் திரும்பியபோது, கண்களால் ஜாடை காட்டினான். புத்தகப்பையை சிறிது திறந்தான். பையில் கீச்... கீச்... என்ற சத்தம் அனுக்கமாகக் கேட்டது. ஆவல் மீதூர இன்னும் அவனை நெருங்கி அமர்ந்தேன். அது ஏதோ வொரு பிராணிதான் என ஊகித்துக் கொண்டேன்.

குஞ்சன் நிமிர்ந்து என்னைப் பார்த்தான். எச்சரிக்கையுடன் புத்தகப்பையை அருகில் கொண்டு வந்தான். மெதுவாகக் கையை விட்டேன். அது பஞ்சுப் பொதி போல மெதுமெதுப்பாக இருந்தது. சத்தமும் அடங்கிப் போய் மெலிதாகக் கேட்டது.

"பள்ளிக்கூடம் முடிய வெளியில் எடுத்துக் காட்டுறன்" எனக் கூறிவிட்டு புத்தகப்பையை தன்னுடன் வைத்துக் கொண்டான்.

பள்ளிக்கூடம் முடியும் வரை, புதையலைக் காப்பது போல, கையில் கவனமாக இருந்தான்.

கடைசி மணி அடித்துவிட, என்னையும் இழுத்துக் கொண்டு நேரே காத்தவராயர் கோயில் ஆலமரத்தடிக்கு ஓடி வந்தான். வரும்போது திரும்பித் திரும்பி பார்த்தபடி வந்தேன். பாலன், அமுதன், சிவனொளி, ஓடையான், தயா, அருமை எல்லோரும் பின்னே வந்தார்கள்.

ஆலமர நிழலில் நின்று கொண்டு பையைத் திறந்து காட்டினான்.

அணில்... சிறிய அணில்... அது வெண் சாம்பல் நிறத்தில் அழகாக இருந்தது. முதுகில் மூன்று கோடுகள் தெரிந்தது. மிரண்டபடி எங்களைப் பார்த்து கீச்... கீச்... என்றது.

குஞ்சன் அதைத் தன் உள்ளங்கைகளில் வைத்து வேடிக்கை காட்டினான்.

எனக்கும் அதன் மென்மையை ஸ்பரிசிக்க ஆவலேற்றபட்டது. ஆசையுடன் கையை நீட்டினேன்.

"வேண்டாம் இது துள்ளி ஓடி விடும்" எனக் கூறி மறுத்து விட்டான்.

"நாளைக்கு உனக்கு கிளி கொண்டு வாறன். கவனமா வளப்பியாடா"

தலையசைத்து விட்டு வியந்து போய் அவனைப் பார்த்துக் கேட்டேன்.

"உண்மையா... தருவியா"

"உன்னட்டைக் கூடு இருக்காடா..."

"இல்லை" என்றேன்.

"சரி. என்ரை கூட்டுக்கை விட்டுத்தாறன். வெள்ளண வா. ஒருதருக்கும் சொல்லாதை"

ஒரு கணம் யோசித்து விட்டுச் சொன்னான்.

"குஞ்சன் கிளிக்கு சாப்பாடு என்ன வைக்கிறது"

"நான் கொவ்வைப்பழந்தான் வைக்கிறனான்"

வீட்டுக்குப் பக்கத்தில் பின்னொச்சியோலைப் பக்கம் சொத்திச் சாத்திரியாரின் வளவுக்கை கொடி கொடியாக படர்ந்திருக்கும் கொவ்வை நினைவில் முளையிட்டது.

எங்களுக்குப் பின்னால் ஓடி வந்தவர்களும் தயங்கித் தயங்கி ஆலமர நிழலுக்கு வந்து சேர்ந்தார்கள்.

குஞ்சனும் பெருமிதம் கொண்டவனாக, அணிலை கையில் வைத்து சாகசம் காட்டிக் கொண்டிருந்தான். கூட்டம் இன்னும் கூடி விட்டது.

அவ்வேளை, குஞ்சனைக் குறி வைத்து கல் ஒன்று திடீரென வந்து விழுந்தது. சற்றுப் பெரிய கல்தான். கோவிலுக்குப் பின்பக்கமிருந்து வந்தது. அவனில் பட்டதும் சற்றுத் தடுமாறி விட்டான். அதேவேகத்தில், அணில் கையிலிருந்து நழுவி ஆலமரத்துக்கிளைக்குத் தாவி விட்டது.

நான் திரும்பிப் பார்த்தேன். யாரோ கோயிலின் பின்பக்கமாக மறைவது தெரிந்தது. குஞ்சனும் அதனைக் கண்டு விட்டான். எங்களைத் தள்ளிவிட்டு ஓடினான். அங்கே ஒளிந்திருந்த விக்கி மேல் திடீரெனப் பாய்ந்து கீழேதள்ளி விட்டான். அவன்மேல் ஏறியிருந்து பல முறை அடித்தான். வலி தாங்க மாட்டாமல் அலறிய விக்கியைப் பார்க்க எனக்குப் பாவமாக இருந்தது. அவன் முகத்தில் கிறல் விழுந்து இரத்தம் கசிந்தது. அவன் தினமும் அணிகின்ற நீல நிறச்சேட்டும் கிழிந்து போய் விட்டது.

"நாளைக்கு வாடா. அம்மாவைக் கூட்டிக் கொண்டு வந்து பெரிய வாத்தியாரட்டை சொல்லுவன்" குஞ்சனின் பிடியிலிருந்து ஒருவாறு தன்னை விடுவித்த விக்கி சொல்லிக் கொண்டு ஓடினான்.

"மாடு தின்னி... ஊத்தையா..." கடைசி ஆயுதத்தையும் வார்த்தைகளாக வீசிவிட்டு ஒழுங்கைக்குள் ஓடி மறைந்து விட்டான்.

சண்டை முடிய மனக்குழப்பத்துடன் வீட்டுக்குப் போனோம்.

அன்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வர வில்லை. புரண்டு புரண்டு படுத்தேன். காற்றில் பனைஓலைகளின் சரசரப்பும், இராக் குருவிகளின் ஒலிகளும் கேட்டன. மனம் குஞ்சன் வாக்களித்த கிளி மீது மையமிட்டுக் கொண்டிருந்தது.

அடுத்தநாள் என்றுமில்லாதபடி

நேரத்துடனேயே பள்ளிக்கூடம் வந்து விட்டேன். வழமையாக அவன் வரும் பாதையில் காத்திருந்தேன். நேரமும் கடந்து கொண்டிருந்தது. மாணவர்கள் அணிஅணியாக வந்து கொண்டிருந்தனர். பிந்தி வந்தால் பெரிய வாத்தியாரிடம் மாட்டிவிட நேரிடும் என்ற பயம் அவர்களுக்கு. குஞ்சனைத் தேடினேன் அந்தக் கூட்டத்தில் அவனில்லை. சிலர் என்னுடைய வகுப்புத்தோழர்கள். என்னைப் பார்த்து சிரித்து விட்டுப் போனார்கள். குஞ்சனைப் பார்க்கும் ஆவல் எனக்கு. வழி விட்டு பாதை ஓரம் நின்று பரக்கப் பரக்கப் பார்த்தேன்.

அவனைக் காணவில்லை.

சிலவேளை தெற்கே விளாத்திக் கூடல் பக்க மிருந்து வருகிறானா எனப் பார்க்க அந்தப் பாதையில் சிறிது தூரம் ஓடிச் சென்றேன்.

மணி அடிக்கப்போகும்நேரமும்நெருங்கி விட்டது.

அவசரமாகச் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இராசையா வாத்தியாரும் என்னைப் பார்த்தபடி கடந்து போனார். எங்களுக்கு ஆங்கில பாடம் படிப்பிக்கிறவர்.

"டேய்... மணி அடிக்குதடா வா..." என அந்தப் பாதையில் வந்த சிவனொளி கையைப் பிடித்து இழுத்தான்.

குஞ்சனின் நினைவிலிருந்த எனக்கு மணி யடித்தது காதில் விழவில்லை.

அவனுடன் வருகின்ற கோபால், மணி, ரூபன், ஜெயக்கொடி எல்லோரும் வந்துவிட்டார்கள். ஏமாந்து போய் பள்ளிக்கூடத்துக்கு ஓடி வந்தேன்.

காலைப் பிரார்த்தனைக்காக மாணவர்கள் கூடியிருந்தனர். முடிவில் தலைமை வாத்தியார் நற்சிந்தனை வழங்கினார்.

அன்று கடுகடுத்த முகத்துடன் அவர் பேசியது இன்றும் ஞாபகத்தில் இருக்கிறது. ஆசிரியர்களது முகங்களிலும் சோகம் கவிந்திருந்தது.

சிவபாக்கியம் ரீச்சரும் அடிக்கடி சேலைத் தலைப்பினால் கண்களை ஒற்றிக் கொண்டு நின்றதும் நினைவில் நிற்கிறது.

காலைக்கூட்டம் கலைய வகுப்பு வந்து வாங்கி லில் புத்தகப்பையை வைத்துவிட்டு நிமிர்ந்தேன்.

சிவனொளிதான் ஓடி வந்து சம்பவத்தைக் கூறினான்.

பட்ட பனையில் ஏறி கிளி பிடிக்கப் போய், அது பாதியில் முறிய குஞ்சனும் கீழே விழுந்து இறந்து விட்டதாகக் கூறினான்.

இதைக்கேட்ட நான் இதயம் அதிர்ந்து போய் நீண்ட நேரம் அழுதேன். பாவம் குஞ்சன். எனக்காக கிளி பிடிக்கப் போய் இத்துயரம் நிகழ்ந்து விட்டதேயென்ற குற்றவுணர்வு உறுத்திக் கொண்டிருந்தது. பல நாளாக நிம்மதியற்றுத் திரிந்தேன். இப்போதும் அந்தப் பள்ளிக் கூடத்தை காணுகிற வேளையில் குஞ்சனின் நினைவுகளே மனதை அலைக்கழிக்கிறது.


அந்தப் பள்ளிக்கூடம் அன்றிருந்தது போல வல்ல இன்று. பல மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. கட்டடங்கள் புதிதுபுதிதாக முளைத்து சுற்றவும் மதில் கள், பெரிய இரும்புக்கேற், வாயிலில் முகப்பு வளைவு, கிணறு, மின்சாரம் என பல வசதிகள் கூடி விட்டன. மாணவர்களும் சீருடையில் அழகாக வருகிறார்கள்.

ஆனாலும் குஞ்சனுடன் பொளுதளந்த அந்தக் காத்தவராயர் கோவில், பெரிய ஆலமரம், வெள்ளம் முட்டி நின்ற வயல் காணி, பாதைகள் இன்னும் மிச்சம் மீதியாக, அன்றிருந்தது போல இருப்பது, மனதுக்கு இதமளிக்கிறது.

குழல் இனிது

காகிதப் பூ போன்றுதான்
அழகன்றி ஒன்றுமில்லை
உதிர்ந்தாலோ
கெடுசொல் பேசுவோர்க்கு
இன்னுமொரு பதம்


இப்படியெல்லாம் இருந்தும்
அக்கினியின் குழைவை
ஆற்றுப்படுத்திய நிலத்தின்
மீந்த கூட்டுடன்
உறைபனி தடவியதே போல்
உணர்வு கொண்டது...
நக்கீரரை வம்பிழுத்த
நெகிழ் கூந்தலது
உன் விரல் கோதலில்



வி. லட்சுமி (சென்னை – இந்தியா)

இனமுரண்பாட்டு அரசியல் ஆவணங்களை பின்தள்ள வைக்கும் நாவல் ஞானசேகரனின் "எரிமலை'

எம்.கே.முருகானந்தன்



"அந்த இளைஞர்களில் ஒருவன் மதிலால் ஏறி உள்ளே குதித்தான். வெளியே நின்ற இளைஞன் தன் தோளின்மேல் சாய்திருந்த வனைத் தூக்கி மதிலின் மேலால் அவன் உள்ளே இறங்குவதற்கு உதவி செய்துவிட்டு தானும் உள்ளே குதித்தான்.

டொக்டர் மகேசன் பதற்றத் துடன் "ஆர் நீங்கள் என ..."

டொக்டர் மகேசனில் என்னை நான் இனங் கண்டு நாவலில் மூழ்கிப் போனேன்.

எத்தனை கெடுபிடியான நாட்கள். பதற்றமும் சஞ்சலமும் பயத்துடன் கூடவே ஆட்கொள்ள கையறு நிலையில் இயங்கிய பொழுதுகள். இயக்கங்கள் பல பன்றிபோல குட்டிபோட்டு தான் தோன்றித்தனமாக நடந்த காலம், துரோகி, காட்டிக்கொடுப்பவன் போன்ற முத்திரைகளுடன் தெருநாய் போல சுடப்பட்ட அப்பாவிகளின் குருதி வீதிகளில் செங்கம்பளம் போர்த்திய காலம். டிரக்குகளில் செல்லும் அரச ராணுவத்தினர் வீதியால் செல்லும் பொதுமக்களை அடித்து குருதி கக்கவைத்த பொழுதுகள். சுற்றிவளைப்புகள் கைதுகள் போன்ற அடாவடித் தனங்கள் மலிந்து கிடந்தன.

வங்கிக் கொள்ளையுடன் தான் கதை ஆரம்பிக்கிறது. எனது மருத்துவமனைக்கு அரை மைல் தூரத்தில் இருந்த புலோலி ப.நோ.கூ.ச வங்கியில் நடந்த கொள்ளை நினைவில் வந்தது. திகில் நிறைந்த பொழுதுகள்.

ஆம். மருத்துவர்கள் அதுவும் தனியார் வைத்தியர்கள் மத்தளம் போல இரு பக்க இடிகளையும் தாங்கிக் கொண்டு பணி செய்ய வேண்டிய ஆபத்தான கால கட்டமாக இருந்தது.

80 களின் நடுப்பகுதியில் யாழ் குடாநாட்டில் நிலவிய பதற்றமான அரசியல், பாதுகாப்புச் சூழலை மையமாக வைத்துப் புனையப்பட்ட நாவல்தான் ஞானசேகரனின் எரிமலை. டொக்டர் மகேசன் போராளி ஒருவனின் காயத்திற்கு, இராணுவத்திற்கு தெரியாமல் மறைத்து வைத்து சிகிச்சை அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதும் அது தொடர்பான சம்பவங்களுமே நாவலின் முக்கிய கதைப் பொருளாகும்.

ஆனால் அதற்கு அப்பால் இனப் பிரச்சனையின் அடிமுடி தொடும் விரிந்த நாவல். 'எரிமலை' அனல் வீச ஆரம்பித்தவேளை. கதைச் சம்பவங்கள் குடாநாட்டிற்குள் நடப்பவையாயினும் நாடளாவிய அரசியல் பரிமாணம்கொண்ட படைப்பு

இலக்கிய ஆர்வலர்கள் மட்டுமன்றி, எமது பிரச்சனையில் ஆர்வம் கொண்ட அனைவரும் படிக்க வேண்டிய நூல் என்பதில் ஐயமில்லை. ஆயினும் இளைய தலைமுறையினர் கட்டாயம் படிக்க வேண்டியது. ஏனெனில் இளைஞர்கள் பலருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை ராணுவத்திற்கும் இடையேயான போர் பற்றிய செய்திகளும் அனுபவமும் மட்டுமே உண்டொழிய பிரச்சினையின் ஆணிவேரை கண்டுணரும் வாய்ப்புக் கிட்டியிருக்கவில்லை. இந்த நாவல் அவற்றை வெறும் தகவலாக அன்றி உயிரோட்டமுள்ள பாத்திரங்களாக, நாவலின் பேரங்கமாக, வரலாற்று ஆவணமெனத் தருகிறது. அதே நேரம் விறுவிறுப்பாக நகரவும் செய்கிறது. ஆரவாரமற்ற தெளிவான நடையுடன் சுவையாக வாசிக்கத் தூண்டுகிறது

உண்மையில் அவற்றை வெளிப்படுத்தும் வண்ணம் சிருஸ்டிக்கப்பட்ட பல்வேறு பாத்திரங்கள் நாவலாசிரியரின் ஆக்கத் திறனுக்கு சான்றாக அமைகிறது. முக்கியமாக செல்லையா மாஸ்டர், மற்றும் சமூக வியல் பேராசிரியையான திருமதி விமல்சிறி, தொழில் முகாமைத்துவ ஆலோசகர் திரு விமல்சிறி ஆகியோருக்கு இடையேயான உரையாடல் முக்கியமானது. செல்லையா மாஸ்டர் தமிழ் அரசியலில் மிகுந்த ஈடுபாடும், சரித்திர ரீதியான அறிவும், அகிம்சை ரீதியான அணுகுமுறையும் கொண்டவர். தமிழர் விடுதலைக் கூட்டணி அபிமானி. திருமதி விமல்சிறி பேராசிரியர் மட்டுமல்ல. எழுத்தாளரும் கூட.

இந்த உரையாடல்கள் ஊடாக இனப்பிரச்சனையின் சரித்திரம் மட்டும் சொல்லப்படவில்லை. அதுவும் ஒரு பக்க பார்வையாகச் சொல்லப்படவில்லை என்பதே நாவலின் பலமாக உள்ளது.. தமிழ் மக்களின் விடுதலை ஆர்வமும் அரசியல் சுதந்திர வேட்கையும் வெளிப்படுத்தப்படும் அதே நேரம் சிங்கள மக்களின் பார்வை எப்படி இருக்கிறது என்பதையும் அறிய முடிகிறது.

48ல் சுதந்திரம் கிடைத்த ஓராண்டுக்குள் கிழக்கு மாகாணத்தில் பட்டிப்பளையை கல்லோயா

வாக்கி சிங்கள குடியேற்றத்துடன் ஆரம்பித்த தமிழர் மீதான நில ஆக்கிரமிப்பு முதல் தனிச்சிங்கள சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என தொடர்ந்தமை எவ்வாறு தமிழர் மீதான ஒடுக்குமுறையாக விஸ்வ ரூபம் எடுத்தது என்பதை நூலாசிரியர் மாஸ்டர் ஊடாக வரலாற்றுப் பதிவு செய்வது குறிப்பிடத்தக்கது

மற்றொரு புறம், தீவிரவாத சிந்தனைகளை கொண்ட செல்லையா மாஸ்டரின் மகன் ஊடாக விடு தலைப் போராளிகளின் உணர்வு கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

வெற்றிலை குதப்பிக் கொண்டிருக்கும் ஒரு முதியவள்- கிழவி பாத்திரம்- மனதோடு ஒட்டிக் கொள்கிறாள். இராணுவத்தினரின் அத்துமீறலுக்கு எதிரான அவளது கோபமும், போராளியை மறைப்ப தற்கு அவள் காட்டிய சமோசித புத்தியும் மலைக்க வைக்கிறது. அன்றிருந்த சாதாரண மக்களின் மனஉணர்வுகளுக்கு அவளை ஒரு முன்மாதிரியாகவும் சொல்லலாம் போலிருக்கிறது.

யதார்த்தத்தை மீறி உணர்வு பூர்வமாக சிந்திப்பதால் இனமுரண் பாடு விரிவடையுமே அன்றி மக்களுக்கு நன்மை தராது. எனவே கூடிய வகையில் நிதானமாகச் செயற்பட வேண்டும் என்ற நடு நிலைச் சிந்தனை டொக்டர் மகேசன் மற்றும் அவரது மைத்துனரான சந்திரன் ஊடாக வெளிப்படுகிறது.

இன்னொரு விதத்தில் பார்க்கும்போது நாவலின் நாய கனாக சந்திரனை அல்லது டொக்டர் மகேசனையே கொள்ள வேண்டும் என்ற போதும் இனப் பிரச்சினையே நாவலின் பாடு பொருளாக அமைந்து விடுகிறது.

வாக்கு வேட்டை அரசியல் வாதிகளின் காலத்திற்கு முன்னர் தமிழ் சிங்கள மக்களிடையே நெருக்கமான உறவு இருந்தது, அந்நிய ஆதிக்கத்திற்கு முற்பட்ட காலத்தில் இனத்துவேசம் இருந்த தில்லை. எல்லாளன் துட்டகமுனு போரானது ஆட்சி அதிகாரத்திற்கு ஆனதே ஒழிய இனரீதியானது அல்ல. அதனால்தான் எல்லாள னுக்கு சமாதி அமைத்து மக்களை வணக்கம் செலுத்தச் செய்தான் போன்ற விடயங்களையும் நாவல் உரையாடல் ஊடாக தொட்டுச் செல்கிறது.

தமிழ் சிங்கள உறவானது திருமண ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததை பற்றி மிக நுணுக்கமாக நூலாசிரியர் வெளிப் படுத்தியிருந்தார். இரசித்து வாசித்தேன். இலங்கையின் கடைசி மன்னன் விக்ரமராஜசிங்கன் ஒரு தமிழன் என்பது முதல் பல சிங்கள அரசர்களின் பட்டத்து ராணிகளாக தென்னிந்திய தமிழ் ராசகுமாரர்களே இருந்திருப் பதை நாங்கள் அறிவோம்.

அரச மட்டத்தில் மட்டுமல் சாதாரண மக்களிடையே கூட அத் தகைய மண உறவுகள் இருந்திருக் கின்றன.

"எனது பாட்டியின் படம் ஒன்று வீட்டில் இருக்கிறது. அதில் அவர் தமிழ் பெண்களைப் போலத் தான் சேலை அணிதிருந்தார். சில நகைகள் கூட தமிழ்ப்பெண்கள் அணியும் நகையை ஒத்திருக்கின்றன..."

"ஒரு வேளை உங்கள் பாட்டி ஒரு தமிழ்ப் பெண்ணாகவும் இருந் திருக்கலாம்..."

ஆசிரியர் தன் கருத்தை வாசகர்களிடம் திணிக்காமல் பாத்தி ரங்களின் உரையாடல் ஊடாக நாசூக்காக சொல்லியிருப்பதை கருத் தூன்றி வாசித்தால் நீங்களும் இரசிப்பீர்கள்.

அதே போல கதை நடக்கும் காலகட்டத்திலும் ஏன் இன்றும் கூட, சிங்கள தமிழ் கலப்புத் திருமண உறவுகள் எவ்வளவு பிரச்சினை மிக்க தாக இருக்கிறது என்பதை வேறொரு இடத்தில் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறார். சந்திரன் அனுலாவை வெளிப்படையாக வைபவரீதியாக திருமணமாகச் செய்யாமல் ரெஜிஸ்டர் ஆபீசில் செய்ய இருப் பதை சொல்வதன் மூலம் அவ்வாறு உணரவைக்கிறார்.

அரசாங்கமும் ஊடகங்களும் ஒரு பக்க பார்வையே கொடுப்பதால் பல சிங்கள் மக்களுக்கு இராணுவத் தினரின் கொடிய முகம் தெரிவ தில்லை. கதாநாயகர்கள் என்று அவர் களைக் கொண்டாடிக் கொண்டிருக் கிறார்கள். நேரடியாக அனுபவித் தால்தான் அவர்களின் கொடூர முகத்தை திருமதி விமல்சிறி போல உணர்வார்கள்.

"அவன் (இராணுவ வீரன்) சூட்கேசை அப்படியே போட்டுவிட்டு பக்கத்தில் இருந்த பிளாஸ்டிக் கூடையை கிளறத் தொடங்கினான். அப்போது சுடுதண்ணிப் போத்தல் கூடையிலிருந்து வெளியே நழுவி ரோட்டில் விழுந்து நொருங்கியது. அதனைக் கவனித்த திருமதி விமல்சிறிக்கு கோபம் பொத்திக் கொண்டு வந்தது.

"இவர்களுக்கு கண் கூடத் தெரியாது போலிருக்கிறது. காட்டு மிராண்டித்தனமாக நடக்கிறார்கள்." பட்டால்தான் புரிகிறது என்பதை நிகழ்வுகளூடாக சுட்டிக் காட்டு கிறார். நேரடியாகச் தன் கருத்தை வலிந்து புகுத்தவில்லை.

நோயாளிகளில் அக்கறை கொண்ட அவர்களது பிரச்சினை களை புரிந்து நடக்கும் பாத்திரமாக டொக்டர் மகேசனை படைத்திருக் கும் அதே நேரம் அன்று நிலவிய மருத்துவ முறைகள், அன்று உபயோகிக்கப்பட்ட மருந்துகள் என பதிவு செய்யப்பட்டிருப்பதை பார்க் கும் போது அது அந்த காலகட்டத்து நினைவுகளில் என்னை நீந்தித் திளைக்கவைத்தது.

ஞானசேகரன் ஒரு சிறந்த நாவலாசிரியர் என்பதை அவரது ஆரம்ப நாவலான குருதிமலையி லிருந்து அறிந்திருக்கிறோம். இந்த நாவல் ஒரு சிறந்த படைப்பாக உரு வாவதற்கு அவரது எழுத்தாளுமை யுடன், மருத்துவனாக பெற்ற அனுப வங்களும் உதவியிருக்கின்றன. ஆனால் அவை எல்லாவற்றுக்கும் மேலாக அவரது நிகழ்கால அரசி யல் அறிவும் வரலாற்று ஈடுபாடும் இந்த நாவல் காலத்தைக் கடந்து நின்று நிலைக்கவைக்கின்றது.

இந்த நாவல் சிங்கள மொழி பெயர்ப்பில் வர இருப்பதாக அறி கிறேன். பக்கம் சாராமல் நடுநிலை யோடு எழுதப்பட்டிருப்பதால், இப் பிரச்சினையில் அவர்களுக்கு அன்னியமான பல்வேறு முகங் களையும் அறிந்த கொள்ளவும் அவர்கள் பார்வையை விரிவடைய வும் செய்யும் என்பதால் வரவேற்கத் தக்கது. துறைசார்ந்தவர்களை மட்டு மின்றி சாதாரண சிங்கள மக்களின் மனங்களிலும் மாற்றம் ஏற்படுத்தக் கூடிய படைப்பு

நீங்களும் கட்டாயம் படியுங் கள். சுவையும் பயனும் இணைந்து கிடைக்கும் இத்தகைய படைப்புகள் அத்திபூத்தாற் போலத் தான் படைக் கப்படுகின்றன.

நாவலைப் படைத்த ஞான சேகரன் அவர்களுக்கு எனது பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

அதிகரித்து வரும் வேகம் எனக்கு நன்றாக விளங்கியது. பல வருடங்களுக்கு முன்பென்றால் இவ்வளவு வேகமாகச் சுவர்கள் நெருங்கி வரவில்லை. அந்நாட்களில் சுவர்கள் தொலைவில் இருந்ததால், அவை வேகமாக நெருங்குவது எனக்கு அவ்வளவு விளங்காதிருந்திருக்கலாம்.

இவ்வாறாக சுவர்கள் என்னை நோக்கி நெருங்குவதை நான் அவதானிக்காது இருந்திருந்தால்.. என்று எத்தனை தடவை நான் எண்ணியிருக்கிறேன். இருந்தும் எதிர்பாராத வகையில் சுவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக என்னை நோக்கி வருவதைக் கண்டேன். அன்று முதல் எப்போதோ ஒருநாள் அவை பயங்கர மாக மோதி, நான் தகர்ந்து சப்பையாகி விடுவே னென்ற பயம் என்னைத் தொற்றிக் கொண்டது.

நான் இந்தச் சுவர்களுக்கிடையில் எப்படி சிக்கிக் கொண்டேன் என்பது எனக்கு சரியாகப் புரியவில்லை. என்னை இங்கே சிறைப்படுத்தியது கடவுளாக இருக்க வேண்டும் என்றே ஒரு காலத்தில் நான் கருதினேன். பிறிதொரு காலகட்டத்தில் இது எனது தலைவிதிப்படி நடைபெறுவதாக இருக்கலாமென்று எண்ணினேன். யாருக்குத் தெரியும் ஒருவேளை அப்படி இருக்கலாம். சில நேரங்களில் அதிகம் பேர் செய்வது போல் எல்லாவற்றையும் அம்மா அப்பாவின் தலையில் சுமத்திவிட்டுப் பேசாமல் இருந்து விடுவேன்.

என்னை இதற்குள் சிறைப்படுத்திய ஆரம்ப நாட்களில் இது ஒரு பரந்த விசாலமான வெளி. எந்த எல்லையும் தெரியவில்லை. நான்கு பக்கமும் மிக நீண்டே தெரிந்தது.

கிழே நிலம். மேலே ஆகாயம். அந்நாட்களில் நான் இதற்குள்ளே செய்யாதது எதுவுமில்லை. அழுதேன்... சிரித்தேன்... ஊர்ந்தேன்... தவழ்ந்தேன்... இருந்தேன்... நடந்தேன்... ஓடினேன்... பாய்ந்தேன்... விளையாடினேன்... நடனமாடினேன்... இவ்வாறே நினைத்ததெல்லாம் செய்தேன். இதற்குள்ளே இருபது வருடங்கள் கழிந்த பின்பே என்னைச் சுற்றி நான்கு சுவர்கள் இருப்பது எனக்க ஓரளவு தெரியவந்தது.


இன்னும் சிலகாலம் சென்றபோது தான் அந்த நான்கு சுவர்களும் மெல்ல மெல்ல என்னை நோக்கி வருவதை புரிந்து கொண்டேன். அன்று முதல் எனது சாதாரண வாழ்க்கை சிக்கலாகியது. தன்னைத் தகர்த்து தூள்தூளாக்குவதற்காக மெல்ல மெல்ல நெருங்கி வரும் நான்கு சுவர்களுக்கு மத்தியில் இருந்து கொண்டு ஒரு மனிதனால் நினைத்த வாழ்க்கையைக் கொண்டு நடாத்த முடியுமா என்ன?

தகர்ந்து தட்டையாகிப் போவதை உணர்ந்து கொண்ட நாளிலிருந்தே, நான் பைத்தியம் போல் துடித்ததெல்லாம் அந்த மோசமான தலைவிதியிலிருந்து விடுபட ஏதாவதொரு வழியைத் தேடிக் கொள்ளத்தான்.

இப்பொழுது நிலைமை மிக மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. இதனுள்ளே சிறைப்பட்டு இப்போதைக்கு நாற்பது வருடங்களாகின்றன. கடந்த காலம் முழுவதுமே மெல்ல மெல்ல நெருங்கி வந்த நான்கு சுவர்களும், எந்தவித அனுதாபமும் காட்டாமல் எனக்கு நடமாடவிருந்த கொஞ்ச நிலப் பரப்பையும் பறித்துக் கொண்டு விட்டது.

நான்கு சுவர்கள்

சிங்கள மூலம் : பிரியலால் கொக்கலகே
தமிழில் : திக்குவல்லை கமால்



முன்பு நீண்டு பரந்ததாக நான் நினைத்திருந்த அந்தப் பெருவெளி ஒரு மைதான அளவுக்கு அமுங்கியது. இன்னும் சிறது காலம் செல்கையில் ஒரு மண்டபம் போன்ற பகுதியே எனக்கு எஞ்சியது. இறுதியாக ஒரு சாதாரண அறையளவு இடமே எனது எல்லையாகி விட்டது.

அந்தச் சுவர்கள் வானத்தை நோக்கி உயர்ந்து கிடந்தன. விடுதலைக்கு ஒரே வழி சுவர்களுக்கு மேலால் பாய்ந்து செல்வதுதான். இருந்தும் சுவர் களுக்கு மேலாகப் பாய்ந்து செல்ல எனக்கு ஒரு வழி யும் இருக்கவில்லை. வரவர அதிவேகத்தோடு அச்சுவர்கள் நெருங்கின. போகிறபோக்கைப் பார்த் தால் இன்னும் பத்து வருடமளவில் நான்நிச்சமாக இந்தச் சுவர்களுக்குள் அகப்பட்டு சிதைந்து போவேன். அதிலிருந்து தப்பிக் கொள்ள ஒரு வழிமுறையையும் நினைக்க முடியாத நான் பைத்தியம் பிடித்தது போல் ஆனேன்.

மேலும் இரண்டொரு வருடங்கள் நகர்கை யில் மேலும் சுவர்கள் நெருங்கி எனக்கு எஞ்சியிருந்த அறையளவு இடம் இன்னும் சிறிதாகியது. என்னைச் சுற்றியிருந்த. நான் விரும்பிய... ஆசைப்பட்ட... நான் சம்பாதித்த பொருட்களுடன் இன்னுந்தான் உள்ளே இருப்பது கடும் சிரமம் என்பது எனக்கு விளங்கியது. எனக்கு எஞ்சியுள்ள சின்னஞ்சிறுஇடத்தில் அப்பொருட்களுடன் மென்மேலும் சிரமத்திற்குள்ளாக நேர்ந்தது. தொடர்ந்தும் விடுதலைக்காகப் போராடு வாராயின், அந்தப் பொருட்களை அகற்றிகொஞ்ச காலமாயினும் வாழ்வதற்காக சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டுமென எண்ணினேன்.

எனது தலைமயிரொன்றைப் பிடுங்கிக் கொண்டேன். பரீட்சார்த்தமாக அதனை எப்படி விசாலாமென்று பார்த்தேன். எப்படியென்று தெரிய வில்லை! நான்கு பக்கமும் பிரமாண்டமான சுவர்கள். கீழே கரடுமுரடான நிலம். எனக்குள்ளிருந்து பெருமூச் சொன்று வெளியேறியது. பயம் காரணமாக என்னை அறியாமலேயே மேலே பார்த்தேன். சுவர்களுக்கு மேலே தெரிந்த வெளியே ஒரேயொரு வழி. நான் சும்மாதான் தலை மயிரைச் சுருட்டி மேலே வீசிப் பார்த்தேன்.

என்ன ஆச்சரியம்... அந்தத் தலைமயிர் வேக வேகமாக மேலே ஈர்க்கப்பட்டு சட்டென்று காணாமல் போயிற்று. நான் அவசரஅவசரமாக எனது தலை மயிர்களை எல்லாம் பிடுங்கிப் பிடுங்கி மேலே வீசினேன். கணப்பொழுதில் அவை காணாமல் போய் விட்டன. அதாவது, என்னால் தொடர்ந்து நகர்ந்து நொறுங்குவதற்கு எதிராக போராட முடியும் என்பது உறுதியாகி விட்டது.

அவர்கள் எனக்கிருந்த சொற்ப பரப்பையும் விழுங்கிக் கொண்டிருந்தமையால், என்னைச் சுற்றிக் குவிந்திருந்த எனது பொருட்களை எல்லாம் அகற்றி, கூடிய சிக்கிரம் வெற்றிடத்தை உருவாக்கிக் கொள்வதே புத்திசாலித்தனம். அதனால் நான் எனது உடைமைகளை எல்லாம் ஒவ்வொன்றாக வெளியே வீச முடிவு வெய்தேன்.

முதன்முதலில் நான் எனது காரைத்தான் தூக்கினேன். அது புத்தம் புது எலியோன் கார். இன்றும் கடன் கூடக் கட்டி முடியவில்லை. நான் கண்ட பலநூறு கனவுகள் ஒன்று சேர்ந்தே அக்கார் என் கைக்கு எட்டியது. அதனால் அதனை வீசிவிட மனம் இடம்தரவே இல்லை. இந்தக் காரை எப்படியாவது வைத்துக் கொள்ள வேண்டுமென ஒரு கணம் நான் நினைத்தேன். ஆனாலும் என்ன? அப்போதுதான் சுவர்கள் மேலும் இரண்டு மூன்றடி முன்னே வந்துள்ளதை அவதானித்தேன்.

எனக்கு இன்னும் அதிக காலமில்லை. இவற்றை எல்லாம் எறிந்து விட்டு, என்னைச் சூழவுள்ள இடத்தை ஒழுங்குபடுத்திக் கொள்ளாவிட்டால், இன்னும் சில மணித்துளிகளில் கூட நான் தகர்ந்து நொறுங்கிப் போக வாய்ப்புண்டு நான் உடனே எனது எலியான் காரை மேலே எறிந்தேன். அது நொடிப் பொழுதில் மறைந்து போய் விட்டது.

அடுத்ததாக நான் எனது வீட்டைத் தூக்கிய போது அதனுள்ளிருந்த எனது அம்மா, அப்பா, மனைவி, மகன், மகள் எல்லோருமே கீழே விழுந்து விட்டனர். இது மூன்று மாடி வீடு. வீட்டின் சுவர்கள் இவ்வளவு காலமாக நான் உழைத்த ரூபாய் நாணங் களினால் தான் கட்டப்பட்டிருந்தன. யன்னல் பிடவை கள் ஆயிரம் ரூபாய்த் தாள்களால்தான் தைக்கப்பட்டி ருந்தன. நான் பைத்தியம் பிடித்தவனாக வீட்டையும் தூக்கி வீசினேன். அதுவும் காணாமல் போய் விட்டது.

இதற்கிடையில் நான் முக்கியமான விடய மொன்றை அவதானித்தேன். நான் இவற்றை எல்லாம் ஒவ்வொன்றாக வீசிக் கொண்டிருந்தபோது நான் கு சுவர்களுக்கிடையிலான சிறிய இடம் வரவர குறுகிக் கொண்டு வந்தது. நான் இருந்த நிலமும் சிறிது சிறிதாக மேலே எழத் தொடங்கியது. அதாவது நான் எனது பொருட்களை வெளியே வீசவீச, நான் கொஞ்சம் கொஞ்சமாக சுவர்களின் உச்சத்தை நோக்கி உயர்ந்தேன். இவ்வாறு தொடர்ச்சியாக மேலே சென்றால், சிலபோது சுவர்களை உச்சத்தை அடைந்துவிடலாம். அதேவேளை தொடர்ந்தும் நான்கு சுவர்களும் வரவர நெருக்கமாவ தால், செய்வதொன்றை சீக்கிரமாகவே செய்து விட வேண்டுமென்ற கட்டம். அதனால் எனக்கென்றிருந்த எல்லாவற்றையுமே கடும் கோபத்தோடு வீசத் தொடங்கினேன்.

மிக முக்கியமென்று கருதி நான் என்னருகிலேயே வைத்திருந்த அந்தப் பையையும் வீசினேன். பையில் காணப்பட்ட கிழிசலினூடாக மாக்ஸிய வாதம், அமைப்பியல் வாதம், பின் நவீன வாதம் மட்டுமன்றி, சின்னி சின்ன வாதங்கள் பலவும் சேர்ந்து கீழே விழுந்துவிட்டன. விடவில்லை அவற்றையெல்லாம் பொறுக்கிப் பொறுக்கி மீண்டும் வீசினேன். கூடவே எனது கவிதை, சிறுகதை, நாவல், சித்திரம் போன்ற வற்றால் நிரம்பிய ஃபைல்களையும் எறிந்தேன். மதுபானப்போத்தல், சிகரட் அடிதுண்டுகள், அண்மை யில் டாக்டர் வழங்கிய மருந்து வகைகளையும் வீசினேன். விருப்பமே இன்றி சைமன் நவகத்தேகமவின் புத்தகங்களையும், சுனிலின்... விக்டர் ரத்நாயக்கவின் பாடல்களையும் கண்களை இறுகி மூடிக் கொண்டு வீசினேன்.

இப்போதைக்கு நான் கவனிக்கத்தக்க மட்டத்திற்கு உயர்த்தப்பட்டிருந்தேன். மிகவும் மகிழ்ச்சி என்னவென்றால், சுவர்களின் உச்சி ஓரளவுக்கு எனக்குத்

தெரியக்கூடியதாக இருந்தது. சற்று நின்று நான் கொஞ்சம் களைப்பாறினேன். அப்போதுதான் சுவர்கள் நான்கும் கையெட்டும் தூரத்தில் இருப்பதைக் கவனித்தேன். தகர்த்து நொறுங்கும் கட்டம் மிக அருகாமையில்... இனியென்ன களைப்பாறல்?

இன்னும் எஞ்சியிருந்த சிலவற்றையும் ஒவ்வொன்றாக அருகே இழுத்தேன். பழைய காதலிகள் சிலர் ஒளிந்து கொள்ள முயற்சித்தனர். விடுவேனா? எல்லோரையும் பிடித்து வெளியே தள்ளினேன். அவர்களுக்குள் மறைந்திருந்த அழுகிகள் சிலரையும் கூடவே தூக்கி எறிந்தேன்.

அதன் பின்னர் கல்லாகிப் போய் என்னையே பார்த்துக் கொண்டிருந்த நண்பர் கூட்டமொன்றுக்கும் என் கைகளால் பறக்க வேண்டி நேர்ந்தது.
தொடர்ந்து...

"அம்மா அப்பாவைக் கூட இப்படி வீசலாமா?" என்று என்னிடம் யாரும் கேட்க வேண்டாம். இப்படிச் சப்பையாகிப் போவதை நீங்கள் பார்த்திருந்தால், என்னிடம் இப்படியொரு கேள்வியை ஒருபோதும் கேட்க மாட்டீர்கள். நான் கடும் சினத்தோடுள்ளேன். எனக்கு இதிலிருந்து விடுபட்டு சுதந்திரமடைவதே அவசியமாக உள்ளது. கொடூரமாகத் தகர்ந்து நொறுங்கிப் போவதிலிருந்து தப்பிக் கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறான நான் எனக்கென்றிருந்த எல்லாவற்றையுமே வெளியே வீசியபின்னர், நான்கு சுவர்களின் உச்சியிலிருந்தேன். நான்கு சுவர்களின் உள்ளேயும் அதன் வெளியேயும் ஒரு சூன்ய நிலையே காணப்பட்டது. இப்பொழுது நான்கு சுவர்களுக்கும் எனக்குமிடையே ஓர் அங்குல இடைவெளியே எஞ்சியிருந்துது. அதேபோல் நான் இங்கிருந்து வெளியேறிவிட சிறுகால அவகாசமே எஞ்சியிருந்தது. நான் ஒரு கணப்பொழுதாவது தாமதித்தால், நான்கு சுவர்களுக்குள் அகப்பட்டு முட்டை ஓடுபோல் துகள்களாகி விடுவேன். எனக்கென்றிருந்த எல்லாவற்றையுமே வீசியெறிந்துவிட்டேன். சரி, இனி நான் இங்கிருந்து வெளியேறுவது எப்படி?

இப்பொழுது இந்த நான்கு சுவர்களுக்கிடையே எஞ்சியிருப்பது சூன்ய நிலையும் நானும் மாத்திரமே. ஆஹா நான். என்னுடையதென்று சொல்லிக் கொள்ளக் கூடிய மிகப்பெறுமானமுள்ள விடயம், இன்னும் இந்த நான்கு சுவர்களுக்கு மத்தியில் தான் இருக்கிறது. ஆமாம் "நான்".

இப்படித் தகர்ந்து நொறுங்குவதிலிருந்து தப்பிக் கொள்வதென்றால், இந்த நான்கு சுவர்களிடமிருந்து விடுபடுவதென்றால், நான் செய்ய எஞ்சியிருந்த ஒரேயொரு விடயம் "என்னை" இவ்விடத்தால் அகற்றிவிட வேண்டுமென்பது சட்டென்று எனக்கு விளங்கியது.

"என்னை" அகற்றுவதென்பது அவ்வளவு இலகுவானதல்ல. முன்பு வீசியெறிந்த எல்லாற்றையும் விட "நான்" மிகவும் பாரமானது. இருந்தும் "என்னை" வெளியேற்ற நான் உச்சக்கட்ட முயற்சியில் ஈடு பட்டேன். அந்தக் கணத்திலேயே நான்கு சுவர்களதும் பலத்த நெருக்குவாரம் எனக்கு விளங்கியது. மெல்ல மெல்ல நான் துடிப்பதும் எனக்கு விளங்கியது. சற்று முன் சூன்ய நிலை என்று சொன்னேன் அல்லவா? அது கூட இல்லாமல் போக ஆரம்பித்து விட்டது போல!

எதற்கும் கொஞ்சம் அமைதியாகக் காது கொடுங்கள். சிலவேளை எனது எலும்புகூட நொறுங்கிப் பொடிப் பொடியாகும் சத்தம் உங்களுக்கு கேட்கக்கூடும்

வலி இரா

நிலவின் ஒரு துளி மாலைக் குளிரில் சிந்திய போது
உதிரும் இலைகளின் கவிஞனாக மாறினேன்.
முடிவற்ற வனங்களில்
எண்ணற்ற நிறங்களில்
காலம் இந்தத் தெருவைக் கவிஞனாக்குகிறது

ஒரு மரம்.
ஒரேயொரு மரம்.


வேரில் நான்.
துயர் ததும்பும் முகத்துடன்
இலையில்
நீ.



சேரன்

■ க. சட்டநாதன்

உயிரில் கலந்த வாசம்



27

எனது முதலாவது சிறுகதைத் தொகுதி 'மாற்றம்' எண்பதாம் ஆண்டு ஆனி மாதம் வெளிவந்தது. சாவகச்சேரி யில் திருகணித அச்சகம் அதைப் பிரசுரித்தது. செலவு ஆறாயிரம் ரூபாய் தான். அந்தப் பணத்தை, இலங்கை வங்கி யில் உனது தாலிக் கொடியை அடகு வைத்து. வரதா நீதான் எனக்குத் தந்தாய். எனது முயற்சிகளை அசட்டை செய்யாது, நீ எப்பொழுதும் உயர்வாக மதித்து வந்தாய் என்பதற்கு இது அசல் உதாரணம்.

தொகுதி வந்ததும் அதைப் படித்து விட்டு: "ஆறு கதைகள் தானாப்பா... ஆனாலும் ஆறும் முத்துக்கள்!" என்றாய்.

நீ தொடியில்லாமல் பாடசாலைக்கும் வேறு விஷேச வைபவங்களுக்கும் போய் வந்தாய். அப்பொழு தெல்லாம் மனக் கூச்சமோ கசங்கலோ இல்லாமல் உன்னால் இருக்க முடிந்தது. இது எனக்கு அதிக வியப்பைத் தந்து. நீ , வியப்பை என் உள் மன ஆழம் வரை விதைக்கும் பிறவி என்பது எனக்குத் தெரியும்.

சிறுகச் சிறுகப் பணம் சேர்த்து இரண்டு வருடங் களின் பின்னர் தாலிக் கொடியை வங்கியில் இருந்து மீட்டது நீதான். புத்தகம் விற்று வந்த காசையும் உன் வசமே நான் தந்தேன். அது உனக்கு உதவியாக இருந்திருக்கும்.

மாற்றம் சிறுகதைத் தொகுதிக்கு வெளியீட்டு விழாவென எதுவும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவில்லை.

எஸ்.பொ. அவர்களைக் கொழும்பில் எதேச்சை யாகச் சந்தித்த சந்தர்ப்பத்தில் "உனது மாற்றம் சிறுகதைத் தொகுதிக்கு மட்டக்களப்பில் வெளியீட்டு விழா நடத்துவமா?" எனக் கேட்டார்.

நான் "ம்..." சொன்னேன். அவருக்கு அந்தப் பதிலே போதுமானதாக இருந்தது.

அன்புமணி அவர்களது தலைமையில், இன்னும் சில எழுத்தாள நண்பர்களது உதவியுடன், மட்டு நகரில் வெளி யீட்டுவிழா நடைபெற்றது. தொகுதி பற்றிச் சிறப்பாகவே பலரும் பேசினார்கள். எஸ்.பொ. மாற்றம் கதை சிறுகதை தானா? எனக் கேள்வி எழுப்பிய போதும் - யாழ். மண்ணின் - மண் மணக்கும் கதை இது என்று கூறினார்.

மாற்றம் தொகுதியைத் தொடர்ந்து, மேலும் எனது சில சிறுகதைத் தொகுதிகள் ஒன்றன் பின் ஒன்றாக வெளி வந்தன.

28

தமிழீழ விடுதலைப் போராட்டத்தாலும் இலங்கை ராணுவத்தின் கெடுபிடியாலும் வடக்குக் கிழக்கு மட்டுமல்ல, நாடு முழுவதும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருந்தது. பலதுடன், போக்குவரத்து வசதியும் சீரற்று இருந்தது. பாடசாலை மட்டுமல்ல வங்கி, கோவில் என்று எங்கு போவதானாலும் பல சிரமங்களை வரதா எதிர் கொண்டாள்.

திடீரெனத்தான் அவள் அந்தத் தீர்மானத்துக்கு வந்தாள். "சைக்கிள் ஓடினால் தான் என்ன...?" அவளது மனம் ஆதங்கப்பட்டது. உடனடியாகவே புதிய ஏசியா சைக்கிள் ஒன்றை வாங்கிக் கொண்டாள். லேடீஸ் சைக்கிள். ஓடிப் பழகு வதற்கு முன்னதாகவே சைக்கிள் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டது. பக்கத்து வீட்டு நண்பர் பாஸ்கரன் தான் அதை அவளுக்கு வாங்கித் தந்தார். "சைக்கிளுக்குச் செலவழித்தது உருப்படியான விஷயமடா...!" வாயூறி யூறித் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஓடிப் பழகுவதற்கு அவள் எனது உதவியை எந்தச் சந்தர்ப்பத்திலும் நாடவில்லை. இது விஷயத்தில் எனக்குப் போதிய அனுபவ ஞானம் இல்லை என்பது அவளது முடிவாக இருந்தது. தானாகவே முயற்சி எடுத்துக் கொண்டாள். எங்களது வீடு மாடி வீடு. மாடியில் உள்ள ஹோலில் தான் அவளது பயிற்சி ஆரம்பமானது. முதன் முதலில் அவள் சைக்கிள்பெடலில் கால் வைத்து, தெத்தித் தெத்தி ஓடிப் பார்த்தாள். அந்தப் பயிற்சி இரண்டு நாட்களுக்கு மேலாகத் தொடர்ந்தது. மூன்றாம் நாள் அவளாகவே சைக்கிள் சீற்றில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். அடுத்த முயற்சியாகப் பெடலைக் கால்களால் மிதித்து ஓடிப்பார்த்தாள். அப்பொழுதெல்லாம் அவள் விழுந்து விடக்கூடாது என நினைத்தவனாய், சீற்றின் பின்புறமாகப் பிடித்து நான் உதவி செய்தேன். எனது உதவி ஏதுமில்லாமல் அவளால் ஓட முடிந்தது. விமலனது கடைக்குப் பக்கமாக உள்ள கை ஒழுங்கை வரை சைக்கிளை எடுத்துச் சென்றவள், அதில் ஓடிப் பழகினாள். ஓரளவு பழக்கம் வந்ததும் வீட்டின் முன் உள்ள வீதியில் இறங்கினாள். வீதியில் ஓடிப் பழகியவள், ஒரு தவறைத்திரும்பத் திரும்பச் செய்தாள். நடுவீதியை அண்மித்த பகுதியில் வசம் இழந்தவளாய் பிறேக் பிடித்து இறங்கினாள். "கரைக்குச் சென்று இறங்க வேணும் அம்மா..." என்று நான் சொன்னதும் "சரிதானப்பா... நீங்க சொல்லிறது..." என்று ஒத்துக் கொண்டு, தனது தவறைத் திருத்திக் கொண்டாள். சைக்கிள் பழகின வேளையில் நான்

கூறியவற்றுள் அதை மட்டும் தான் அவள் செவிமடுத்தாள். எனது பிற ஆலோசனைகள் எல்லாமே சிறுபிள்ளைத்தன மானவையாக அவளுக்குத் தோன்றியதோ என்னவோ தெரிய வில்லை. அவளது சிரிப்பு அதைத்தான் எனக்கு உணர்த்தியது.

ஓரளவு நன்றாக ஓடிப் பழகியவள், "நல்லூராணிட்டைத் தான் முதலிலை போக வேணும்..." என்றாள். நல்லூர் வரைக் கும் அவளுக்குத் துணையாக நானும் கூடவே போனேன்.

ஓரளவு நல்ல பயிற்சி வந்ததும் அவளால் பாட சாலை போய் வர முடிந்தது. இன்னும் - சந்தை, வங்கி எனப் போய் வந்தாள். இந்தச் சைக்கிள் சவாரி அவளுக்குப் பிடித் திருந்தது. குதூகலம் தருவதாயும் இருந்து.

நாட்டின் நிலைமை மேலும் மோசமடைந்த நிலை யில், கோட்டையில் இருந்து ஊர்மனைக்குள் ஷெல் அடித்தார்கள். ஷெல்கள் பட்டணப் பகுதியிலும் இன்னும் சற்று உள்ளாக கந்தர்மடத்திலும் நல்லூரிலும் கூட வந்து விழுந்தன. ஒரு சில ஷெல்கள் பாடசாலையிலும் வந்து விழுந்தன என்பதை நான் அறிந்து கொண்டேன்.

உசாரான வரதா:

"இனி முடியாதப்பா...! எனக்குப் பயமா இருக்கு... நான் இருவது வருஷம் சேவையாற்றீற்றன். நான் ஓய்வு எடுக் கலாம். தமிழாசிரியராக இருந்ததிலும் பார்க்க மனையியல் பயிற்றப்பட்ட ஆசிரியராக இப்ப.... இந்தப் பள்ளிக்கூடத்தில இருக்கிறதுதான் சரியான சிரமமாயிருக்கு. முறிய வேண்டி யிருக்கு... எனக்கு எல்லாமே போதுமப்பா...!" என்றாள்.

"ஏதாவது சின்னப் பள்ளிக்கூடத்துக்கு மாற்றம் எடுத்து வேலை செய்யலாம்...!" இது நான்.

"வேண்டாம் ராசா...!"

உரிய வயதுக்கு முன்னதாக அவள் ஓய்வு பெற்றது, சம்பள விஷயத்தில் பெரிய நஷ்டத்தை அவளுக்கு ஏற்படுத்தி யது. ஒரு சந்தர்ப்பத்தில் அரசு அளித்த படிப்பணமான எழு நூற்றைம்பது ரூபாய் கூட அவளுக்குக் கிடைக்காமல் போனது.

ஓய்வு பெற்றாலே போதும் என்று இருந்தவளுக்கு எதுவுமே பெரிதாகப் படவில்லை.

"வெலை செய்யாமலே கிடைக்கிற சம்பளம் தானே பென்சன்... இது எனக்குப் போதும்... உங்கட சம்பளமும் இருக்குதானே..."

கூறியவள் சிரித்தாள். அதை ஆமோதிப்பதுபோல நானும் சிரித்து வைத்தேன்.

அவள் தன்னை நோயாளியாக எப்பொழுதும் கருதியதில்லை. எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு மேலே மேலே நிமிர்ந்து நகர்ந்து செல்லும் இயல்பு அவளுடையது. குடும்பச் சொத்தான நீரிழிவு நோய்க்கு ஆட்பட்டிருந்தவள், அவ்வருத்தத்தினை ஒட்டிய இரத்த அழுத்தம், கொலஸ்ரோல் என்று இன்னும் சில நோய்களோடும் மல்லாடினாள். எதற்கும் அவள் அசங்குவதோ கசங்குவதோ இல்லை. மருத்துவரின் ஆலோசனையின் படி மருந்துகளை எடுப்பதில் எப்பொழுதும் அவள் கவனம் சிதறுவதில்லை.

சாயி வள்ளலும் நல்லூர்க் கந்தனும் தன்னைப் பார்த்துக் கொள்வார்கள் என்று சொல்லுவதுடன் அதனை முழுமையாக அவள் நம்பவும் செய்தாள்.

நாம் இருவரும் கவலைகள் இல்லாமல் இருந்தோ மென்று சொல்ல முடியாது. அடுத்து வந்த சில வருஷங்கள் சோதனை தருபவையாகவே எங்களுக்கு இருந்தன. அப் பொழுதும் என்னைத் தாங்கிய படி அவளால் நிமிர்ந்து நிற்க முடிந்தது. அது தான் அவளது அச்சல் அசலான இயல்பாகும்.

29

மன அமைதியும் குதூகலமும் தொலைந்த ஆண்டாகவே அந்த எண்பது எனது தலையில் விடிந்தது.

அந்த வருஷம் ஜூலை மாத வேலை நிறுத்தத்தில், பங்கு கொண்டு நான் வேலை இழந்தேன்.

வேலை நிறத்தத்துக்கு முன்னான சில தினங்கள் எனக்குப் பதகளிப்புடையனவாக இருந்தன.

அந்த வேலை நிறுத்தம் தென்னிலங்கைத் தொழிற் சங்கங்களால் ஏற்கனவே முன் எடுக்கப்பட்ட போதும் யாழ்ப்பாணத்தில் இலங்கைஆசிரியர் சங்கமும் இன்னும் சில எழுதுவினைஞர் சங்கங்களும் இருபத்தியோராம் திகதியே களத்தில் குதித்தன. தமிழாசிரியர் சங்கம் எதையும் கண்டு கொள்ளவில்லை. அது எனக்கு எதுவிதமான ஆச்சரியத்தையும் தரவில்லை. வேலை நிறுத்தம் என்றாலே காத தூரம் ஓடி ஒதுங்கிக் கொள்பவர்கள் தானே அவர்கள்!வேலை நிறுத்தம் செய்ய உத்தேசித் திருந்த நாளுக்கு முதல்நாள், பாடசாலையில் இருந்து வந்த நான், முகம் கூடக் கழுவிக் கொள்ளாது, வீட்டுக் குள்ளேயே முடங்கிக் கிடந்தேன். அது ஒரு வகையில் ஒரு பாதுகாப்புணர்வையே எனக்குத் தந்தது.

திடீரென இப்படி ஒதுக்கமானது எனக்கு வியப்பாக இருந்தது. அதேசமயம் கூச்சமாகவும் இருந்தது.

இந்த உணர்வலையெல்லாம் சங்க நிர்வாக குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டதால் ஏற்பட்ட எதிரொலியா...? கலக்கத்துடன் மறுநாள் நடந்த கொமிட்டிக் கூட்டத்துக்குப் போனேன். கூட்டத்துக்கு எட்டுப்பேர் தான் வந்திருந்தார்கள். அதில் நானும் அமைப்புச் செயலாளர் என்ற ரீதியில் கலந்து கொண்டேன். கூட்டத்தில் எதையுமே வெளிக் காட்டாது தொட்டுத் தோய்த்துக் கொள்ளாது எல்லாரும் கவனமாக நடந்து கொண்டார்கள். இருந்த போதும் அங் கொன்றும் இங்கொன்றுமாய்ப் பலவீனமான, உடைப்பட்ட குரல்கள் கரகரக்கவே செய்தன.

"இந்த மாதம் சம்பளத்தை எடுத்துப் போட்டு "ஸ்ரைக்" பண்ணினால் என்ன...?"

"நான் எக்ஸ்ரென்சனில இருக்கிறன். என்னாலை ஏலாது...!"

"இதை... இந்த யோசனையைக் கொஞ்சம் தள்ளிப் போட்டால் என்ன...?"

"வேலை போனால் போனது தான்...! உவங்கள் திருப்பித் தரவா போறாங்கள்?"

"சிவா, தேவா, சண், செந்தில், தியாகு, இவை தான் ஸ்ரைக் பண்ணுவினம்"

கூட்ட முடிவில் எல்லாருமே ஒரு முடிவுக்கு வந்தது போலவும் வராதது போலவும் கூடிக் கூடிப் பேசி விட்டுக் கலைந்து சென்றார்கள்.

சங்கத் தலைவர் சுந்தரலிங்கம் கள்ளத்தனமாய் ஏதேதோ சால்ஜாப்புச் சொல்லி வேலை நிறுத்தத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

ஜூலை இருபத்தொன்று வசதியான நாள் என்பது மட்டும் அனைவரது நினைவிலும் தங்கிவிட்டது.

விழிப்புக் கண்ட போது மாலையாகி விட்டதை உணர்ந்தேன். படுக்கை தீயாய்த் தகித்தது. யாரையும் பார்ப்ப தற்கும் உளம் கலந்து கதைப்பதற்கும் விருப்பமில்லாதவனாய் கிணற்றடி வரை சென்று, முகம் அலம்பித் திரும்பிய எனக்கு, மாமி தேநீர் தந்தார்; வாங்கியப் பருகிய படி அவரைப் பார்த்துக் கேட்டேன்:

"நான் ஸ்ரைக் பண்ணிறது மாமிக்கு விருப்பமா...?"

"என்ன இது... இதுக்கெல்லாமா இப்படி அழுவார் மாதிரி...?"

கேட்ட மாமி காலியான பேணியை எடுத்துக் கொண்டு உள்ளே போய் விட்டார்.

என்னுடன் இது பற்றி மனசு தொட்டு இசைவாகப் பேச ஒருவருமே இல்லாதது போலிருந்தது.

நேற்று மாலை வீட்டுப் பக்கம் போன போது, ஐயா பார்வையிலேயே கேலியைத் தொற்ற வைத்துக் கொண்டு வருத்தியது மாதிரி இருந்தது.

அம்மா தான் ஏதோ சற்றுப் பரிதவித்த மாதிரி இருந்தது. அதுவும் விளங்கம் ஏதுமில்லாத தவிப்பு.

வீட்டை விட்டு வெளியே வந்த என்னைத் தழுவிய காற்றுச் சற்று இதமான சிலுசிலுப்பைத் தந்தது.

"ஏன் இன்னும் வரதா பாடசாலையில் இருந்து வரவில்லை. ஏதோ விழா என்றவள் அதனால் தான் லேற்றா? இந்த நெருக்குவாரத்துக்கு வரதா மட்டும் தான் ஆறுதல் தர முடியும்...!"

***

இரவு முழுவதும் நித்திரை இல்லாமல் உழன்ற என்னை ஆறுதல் படுத்தும் வகையில் உரையாடிய வரதா எனது துயரங்களையும் மன அழுத்தங்களையும் தணிப்ப தற்குத் தீவிர முயற்சி எடுத்தும் பலன் ஏதுமில்லாமலே போய் விட்டது.

காலையில் பள்ளிக்கூடப்பக்கம் போகாது, பொது சன நூல் நிலையம் வரை போனேன். அன்றைய நாள் முழுவதும் அங்கேயே எனக்குச் செலவாகியது.

வேலை நிறுத்தத்தில் சக ஆசிரியரும் நண்பரு மான சண் கலந்து கொண்டது பற்றிப் பின்னர் அறிந்து கொண்டேன்.

30

எழுதுபவன் எப்பொழுதும் பயணம் செய்து கொண்டே இருக்க வேணும். பயண அனுபவங்கள் அவனைப் புடம் போடுவதோடு எழுதுவதற்கான அருட்டு ணர்வையும் உந்துதலையும் தருகிறது. இயல்பாகவே இது விஷயத்தில் நான் கள்ளன். எந்தத் தொலைவான பிரயாணத்தையும் சத்திராதித் தனமானது என நினைப்பவன். ஆனால் வரதா அப்படி அல்ல, அதை வரப் பிரசாதமாகவே கருதுபவள்.

பொதுவாக நமது பயணம் இந்தியாவுடனும் மலேசியாவுடனும் மட்டுப் படுத்தப்பட்ட ஒன்றாகும். வரதா மட்டும் அவளது சகோதரர்களின் அழைப்பின் பேரில் நைஜீரியா, யூ.கே. கனடா போன்ற நாடுகளுக்குப் போய் வந்திருக்கிறாள். அவள் என்னை விட்டுவிட்டுத் தனியாகப் போய் வந்ததில் மிகுந்த கவலை கொண்டிருந்தாள்.

அவளது தென்னிந்தியப் பயணங்கள் என்னுட னானவை. அத்துடன் அவை குறிப்பிடத் தக்கவையும் கூட.

திருமணமான கையுடன் எங்களது பயணம் ஆரம்ப மானது. முதல் பயணம் 1972 இல். ஒன்பது நாட்கள் தான்! அந்த நாட்களில் தென்னகம் முழுவதும் ஒரு சுற்றுச் சுற்றிய துடன் - பெங்களூர் புட்டப்பர்த்தி ஆகிய இடங்களுக்கும் போனோம். இருவருமே அரச ஊழியர்களாக இருந்தபடியால் லீவு எடுத்திருந்தோம். லீவு முடிந்த மறுதினமே நாம் வேலைக் குத் திரும்ப வேண்டும். அந்த நெருக்கடி எங்களிருவரையும் பாறாங்கல்லாய் அழுத்தியது.

தலைமன்னாரில் இருந்து, கப்பலில் கடல் பயணம். பின்னர் தனுஷ்கோடியில் இருந்து சென்னை வரை ரயிலில்... சென்னையில் இருந்து ஓர் அறு நூறு ரூபாயுடன் நமது தென்னகச் சுற்றுலா தொடங்கியது.

திருச்சி வந்த நாம், திருச்சியில் மலைக்கோயிலைப் பார்த்தோம். அங்கிருந்து தஞ்சாவூர். தஞ்சையில் சோழ மன்னன் இராசராசன் கட்டிய பெரிய கோயில். பின்னர் மதுரை மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருப்பரங் குன்றம். அங்கிருந்து பழமுதிர் சோலை, பழனி என முருகனது ஆறுபடை வீடுகளில் சிலதைப் பார்த்தோம். அடுத்துத் திருநெல்வேலி, நெல்லையப்பர் கோயில், செந்தூர் என்று தரிசனம் கிட்டியது. மீளவும் மதுரை வந்து திருச்சி வழி பெங்களூர் பயணப்பட்டோம். பெங்களூர் White field ல் சாயிபாபாவின் கோயிலைப் பார்த்தோம். கோடை விடு முறைக்காக பாபா white field வருவதுண்டு. அவர் அங்கு வராத தால் புட்டப்பர்த்திக்கு, பாபாவைத் தரிசிப்பதற்கு பயண மானோம். பாபாவிலோ ஏனைய தெய்வங்களிலோ அதிக ஈடுபாடு எனக்கு இல்லாத போதும் அவளுக்காக நான் இழு பட்டேன். அவள் தான் அந்த வகையில் எனக்கு இயங்கும் சக்தியாக விளங்கினாள்.

பாபாவில் நான் crazy யாக இல்லாத போதும் அவரது ஆன்மீகமும் சர்வ மத இணக்கமும் எனக்கு நிரம்பப் பிடித் திருந்தது. அவரது சர்வமத அங்கீகாரமும் அது சார்ந்த அவரது உழைப்பும் எனக்குப் பெரும் கவர்ச்சியாக இருந்தன.

புட்டப்பர்த்தியில் நாம் விரும்பாத சில விஷயங்கள் நடந்தன். அவற்றை நான் கூறுவது அவசியம். புட்டபர்த்தியில் காலை, மதியம், இரவு ஆகிய வேளைகளில் மிகவும் குறைந்த கட்டணத்துக்கு உணவு வழங்கப்படுகிறது. குறைவான பணத்துக்கு அங்கு தரப்படும் சிட்டையைப் பெற்று உணவு உண்ண முடியும். ஒரு சமயம் - முதல் நாள் வாங்கிய சிட்டைகள் இருந்ததால் அவற்றை நான் பயன்படுத்தினேன். முன்னரும் இப்படிச் செய்த அனுபவம் எனக்கு இருந்தது. அங்கு நின்ற தடித்த உருவமுடைய பரிசோதகர் ஒருவர் எனது சிட்டையைப் பார்த்து விட்டு வெளியேறுமாறு என்னைக் கண்ணிய மேது மில்லாமல் விரட்டினார். நான் வைத்திருந்தது போலியான சிட்டை என்பது அவரது வாதமாக இருந்தது. அவர் பேசிய மோழி எனக்குப் புரியாததால், நான் சற்று உரப்பாகவே ஆங்கிலத்தில் "நீங்கள் பாபாவின் தயைக்கும் தயாள குணத்துக்கும் முரணாக நடந்து கொள்ளுகிறீர்கள்", என்று சத்தமிட்டேன். அது தார்மீகமானது என்பதைப் புரிந்து கொண்ட வயது முதிர்ந்த பிறிதொரு பரிசோதகர் எனக்கு அருகாக வந்து, சாந்தமாக எனது முதுகில் தடவியபடி, தவறு எங்களுடையது தான்,,, இவர் புதியவர் இவருக்காக நான் மன்னிப்புக் கோருகிறேன் என்றார். என்னுடன் தர்க்கித்தவர் வைத்த குற்றச்சாட்டு நான் நேற்றைய சிட்டையைப் பயன் படுத்தினேன் என்பது தான். தவறு அவருக்கு அந்தப் பெரியவ ரால் சுட்டிக் காட்டப்பட்டபோது, அவரும் என்னிடம் மன்னிப்புக்கோரி நின்றார். அவை எல்லாமே எனக்குத் தர்ம சங்கடம் தருவதாயிருந்தது. இது குற்றம் அல்ல, தற்செயலாக நடந்த தவறென்பதை நான் புரிந்து கொண்டேன்.

வரதா எப்பொழுதும் எந்தச் செயலைச் செய்தாலும் தீர்க்கமாகவும் துல்லியமாகவும் செயற்படும் இயல்புடை யவள். எதைச் செய்ய விரும்பினாலும் உடனடியாகச் செய்ய விரும்புபவள். அவரை இவரைக் கேட்பதோ, அதன் படி நடப்பதோ அவளால் முடியாத காரியம். வெளிநாட்டவர்கள், குறிப்பாக ஆங்கிலேயர்கள் உணவருந்தும் உணவகத்தைக் கண்டதும் தயக்கம் ஏதுமில்லாமல் அதனுள் நுழைந்தாள். அவளுடன் நானும் இழுபட்டேன். என் வழி எப்போதுமே அவள் வழி தான்.

"பணமிருக்கா...?" - இது நான்.

"ம்... எல்லாம் இருக்கு..." வசதியான ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து உட்கார்ந்து கொண்டு என்னையும் உட்காரும் படி கூறினாள். நான் இருந்ததும் பிளேட்டொன்றை எடுத்தாள். அவளைப் பார்த்து நானும் எடுத்துக் கொண்டேன்.

ஆங்கிலப்பாணி உணவாக இருந்த போதும் அசைவம் ஏதுமில்லை. சைவ உணவு தான்.

வெளிநாட்டவர்களுக்கான உணவு நமக்கு பிடிக்குமா? எங்களுக்குத் தெரியாமலே இருந்துத. உணவு வகைகள் பல தரப்பட்டன:

அரைத்துப் பிசைந்த உருளைக் கிழங்கு, உருளைக் கிழங்கு வறுவல், ரot vegetable sausage, Chocolate Pudding, முளை கொண்ட பயறு, துருவிய பச்சைக் கரட், பீன்ஸ் கலவை, பச்சைப் பட்டாணி, வெங்காயத்துண்டுகள், அவித்த அவரை, பிட்ஸா.

அவற்றிலிருந்து சிறிது சிறிதாக நாம் இருவரும் எடுத்துக் கொண்டோம். விருப்பமில்லாமலே விழுங்கி னோம்.

எல்லாமானதும், அப்பிளும் அன்னாசியும் கலந்த ஒரு கசப்பான, சீனி சேர்க்கபடாத ரசத்தை அருந்தினோம்.

வரதாவின் கூத்துக் கெல்லாம் வளைந்து கொடுத்தது எனது தவறு என்பது எனக்குத் தெரிந்தது. பணம் செலுத்தும் இடத்துக்கு வந்த போது, வரதா முழிசாட்டத்துடன் திணறினாள். நாம் உண்ட காலை உணவுக்கான செலவு இரண்டாயிரத்து முந்நூறு எனக் கவுண்டரில் இருந்த காசாளர் சொன்னார். கையில் இரண்டாயிரம் தான் வரதா வைத்திருந்தாள். அந்தப் பணத்தைக் கொடுத்ததும், "முந்நூறு" என்றார் காசாளர். "எடுத்து வருகிறேன்..." என்றாள் வரதா. "பரவாயில்லை உங்களது வசதி போல..." என்றார் அவர்.

"நல்ல மனிசனப்பா..." என்று கூறியவள். என்னுடன் வெளியே வரும் பொழுது, புறுபுறுத்துக் கொண்டே வந்தாள் "இந்தப் பிச்சைச் சாப்பாட்டுக்கு இரண்டாயிரமா...?"

"பட்டுத்தெளிந்தால் தான் உனக்குப் புத்தி வரும்..." சிரித்தபடி நான் கூறினேன். அதைக் கேட்டதும் என்னை நிமர்ந்து பார்த்துச் சிரித்தாள். அவளது சிரிப்பில் சொக்கிய நான் அவளது வலது கரத்தைப் பற்றியபடி நடந்தேன். அப்பொழுது சாயி மடத்துச் சேவகி ஒருத்தி ஓடி வந்து "கையை விடுங்கள்.." என்றாள்.

ஏன் என்பது போல அந்தச் சேவகியை வரதா பார்த்தாள். அந்த மௌனமும் பார்வையும்ஆயிரம் ஆயிரம் அர்த்தங்களை அவளுக்கு... அந்தச் சேவகிக்கு உணர்த்தி இருக்குமோ...?

31

எத்தனை தரம் நம் இருவரது தென் நாட்டுப் பயணம்! எல்லாச் சந்தர்ப்பங்களிலும் திருக்கோவில்களையே தரிசனம் செய்தோம். தரிசனம் என்பதிலும் பார்க்க, அவளது திருவுலாவுக்கு நான் அநுசரணையாக மட்டும் இருந்தேன் என்பது தான் உண்மை. ஒரு பயணத்தின் போது முருகனின் ஆறு படை வீடுகளை - சிலவற்றிற்கு முன்னர் போயிருந்த போதும் மீளவும் போய்த் தரிசனம் செய்தோம்.

திருத்தலங்களில் கடற்கரையோரம் இருந்த திருச்சீரலைவாயும் சிறு குன்று சார்ந்திருந்த திருத்தணியும் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. தணிகைச் செல்வன் தெய்வானையுடன் சாந்த சொரூபியாய் இருந்தது என்னுள் ஆழ்ந்த அமைதியை ஏற்படுத்தியது. அந்த அம்மனில் வரதாவைக் கண்ட பிரமை எனக்கு.

ஒரு சமயம் சென்னை செல்வதற்கு எங்களுக்கு விமானம் கிடைக்கவில்லை. கவிதா பயண ஏஜென்சி எங்களுக்கு திருவனந்தபுரம் போவதற்கான பயணச்சீட்டுக் களைத் தந்தது. முன்னர் எப்பொழுதும் திருவனந்தபுரம் போகாததால் இருகை கொண்டு சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டோம்.

திருவனந்தபுரம் சென்று விமானத்தில் இருந்து இறங்கியதும் - விமான ஒடு பாதையில் நடந்து, விமான நிலையக் கட்டடத்தை நோக்கி நகர்ந்தோம். அப்பொழுது காகக் கூட்டம் போல அங்கு வந்து இறங்கிய பயணிகளை மொய்த்த படி சிலர் தொல்லை தந்தார்கள். அவர்களுக்கு வேண்டிய தெல்லாம் - குடிபானப் போத்தல்களும், ஏலமும், கராம்பும் தான். எங்கள் வசம் அவை இல்லை என்ற போதும் அவர்களது தொல்லை தீர்ந்த பாடாய் இல்லை. சுங்கப் பகுதிக்குள் அவர்காளல் எப்படி வரமுடிந்தது என்பது ஒருவகையில் எங்களுக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

திருவனந்தபுரம் எங்களுக்கு பெரிய அளவில் பிடித்திருந்தது. ஊரில் இருப்பது போன்ற உணர்வையே நாம் பெற்றோம். பாடசாலைப் பிள்ளைகள் -குறிப்பாகப் பெண் பிள்ளைகள் நீளமான பாவாடை சட்டையில் இருந்தார்கள். வீடுகளின் அமைப்பும் யாழ்ப்பாணத்து வீடுகள் போலவே இருந்தன. வீடுகள் நாட்டு ஓடுகளாலும் பீலி ஓடுகளாலும் வேயப்பட்டிருந்தன. மொழியும் ஓரளவு யாழ்ப்பாணத்தவர்கள் பேசுவது போன்ற உச்சரிப்பு முறையைக் கொண்டிருந்தது.

இரண்டு நாட்கள் வரை மலையாள மண்ணில் தங்கி இருந்தோம். இத்தினங்களில் சில இடங்களுக்குப் போய் வந்தோம். எங்களது அசைவில் அதிக வேகம் இருந்தது. கோவாளம் கடற்கரை, திருவனந்தபுர நகரம் ஆகியவற்றைப் பார்த்தோம்.

திருவனந்தபுரத்தின் விஷேசமே அநந்த பத்மநாபர் கோயில்தான். ஈழத்தில் நடைமுறையில் உள்ளது போல அந்தக் கோயிலினுள் புகும் போது, வேட்டியுடன் தான் போக வேண்டும். மேற்சட்டை அணியக் கூடாது. இதற்கு வசதியாக கோயில் முன்பாக வேட்டி இரவல் தரும் இடங்கள் இருந்தன. அழுக்கான அந்த வேட்டிகள் பிடிக்காததனால் என்னிடம் இருந்த வேட்டியை உடுத்திக் கொண்டேன்.

கோயிலின் உள்ளே சென்றதும் எங்களை முழுமை யாகக் கவர்ந்தது அங்கிருந்த ஆயிரம் தீபங்கள் தான். அத்தீபங் கள் சுடர் விட்டதை அகமும் முகமும் மலர இருவரும் பார்த்து ரசித்தோம். அத்துடன் திரு அரங்கனை மனம் கசியத் தரிசித்தோம்.

கடை வீதியில் ஊரில் உள்ளது போல சீமாட்டி என்ற பெயருடன் ஒரு துணிக்கடையைக் கண்டோம். வரதா குதூகலித்தவளாய் கடையினுள் நுழைந்தாள். பொதுவாகப் புடவைக் கடைகளில் அவள் கொள்வனவு செய்வதில்லை. துணிகளைப் புரட்டிப் புரட்டிப் போடுவதில் அவளுக்கு அலாதியான பிரியம் இருந்தது. சீமாட்டியில் மட்டுமல்ல இன்னும் சில துணிக்கடைகளிலும் அவள் ஏறி இறங்கினான்.

"இதெல்லாம் வேண்டாமே" என்று எனக்கு இருந்தது.

கோவளம் கடற்கரை அமைதியானது. அலைகள் அங்கு சினந்து சீறுவதில்லை. கரை முழுவதும் தங்குவதற்கான ஓலைக் குடில்கள் இருந்தன. அத்தகைய குடிலொன்றில் சில மணித் துளிகள் நாம் ஓய்வு எடுத்தோம். நொறுக்குத் தீனி எங்களுக்குத்துணையாக இருந்தது.

திருவனந்தபுரத்தில் இருந்த போது இன்னுமொரு முயற்சியில் நான் ஈடுபட்டேன். நகரத்தில் அமைந்திருந்த உப மின்னிலையங்களின் படிகளில் எல்லாம் ஏறி இறங்கினேன். சிவனே என்று வரதாவும் என்னுடன் ஏறி இறங்கினாள். உபமின் நிலையங்களை நாடி அலைந்தெல்லாம் - திருவனந்தபுரம் தந்த தமிழ் எழுத்தாளர் நீல பத்மநாதனை காண்பதற்குத்தான். உதவிப் பொறியியலாளராகப் பணியாற்றி வரும் அவரை என்னால் சந்திக்க முடியவில்லை. நாவல்கள், சிறுகதைகள் இன்னும் சில மொழி பெயர்ப்பு நூல்கள் மூலமே அவர் எனக்கு அறிமுகமாகி இருந்தார். அவரைச் சந்திக்க நான் ஆவல் கொண்டிருந்தபோதும் அது முடியாமல் போய் விட்டது. உப மின் நிலைய ஊழியர்கள் கூட அவரைப் பற்றி ஏதும் அறியாதவர்களாகவே இருந்தார்கள். இது எனக்கு மிகுந்த ஏமாற்றத்தையே தந்தது.

கேரளாவில் இருந்து கோயம்புத்தூர் வந்த நாம், வரதாவின் உடனாசிரியையாக வேம்படி மகளிர் கல்லூரியில் இருந்தவரும் சிநேகிதியுமானஇந்திராணி வீட்டில் ஒரு நாள் நின்று; தஞ்சாவூர், பின்னர் சிதம்பரமெனப் பயணப் பட்டோம். சிதம்பரத்தில் இருந்து வரதா அதிகம் விரும்பிய அபிராமிப்பட்டர் வாழ்ந்து மறைந்த திருக்கடவூருக்குச் சென்று அபிராமி அம்மையைத் தரிசித்தோம். பட்டர் அபிராமி அந்தாதி எனும் அருட்பாவை அருளிச் செய்து ஆராதித்தது இத்திருத்தலத்தில் தான் என்பதை வரதா கூறி, நான் அறிந்து கொண்டேன். எந்த அம்மன் சந்நிதிக்குச் சென்றாலும் அம்பிகையின் அவ்வந்தாதிப் பாடல்களை - நிலத்தில் வேர் பாச்சியது போல் இருந்து. பாராயணம் செய்வது வரதாவின் வழக்கம். அம்பிகையிடமென்றில்லை எந்தத் தெய்வத்திடமும் அவள் ஆட்பட்டு விடுவது அவளது குண இயல்பு.

தெய்வங்கள் மீது மிகுந்த ஈடுபாடுகாட்டும் வரதாவே தெய்வம் மாதிரித்தான், அந்த அம்சம் அவளோடு ஒட்டி இழைந்த ஒன்றாகும்.

32

பின்னர் வந்த ஆண்டுகளான 2002தொடக்கம் 2009 வரையிலான காலம் - மக்களது வாழ்க்கையைப் பெரிய அளவில் சிதம்பச் செய்து விட்டது. உயிர் வாழ்தலே அர்த்தம் இல்லாதது போல எங்களுக்கு ஆகிவிட்டது. செய்வதறியாது திகைத்து நிற்பதைத் தவிர எங்களுக்கு வேறு வழி தெரிய வில்லை.

நானும் வரதாவும் கூட எல்லாவற்றையும் இழந்து விழி பிதுங்கி நின்றோம். பதை பதைப்புடன் நாட்களை எண்ணிக் கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் வரதா என்னைப் பார்த்துக் கேட்டாள்:

"இப்படி ஒரு நெருக்கடி தமிழர்களுக்கு ஏனப்பா வந்துது? ஐப்பத்தாறில தனிச் சிங்களச் சட்டம் - ஹர் எதிர்புப் போராட்டத்தை அடுத்து வந்த இனக் கலவரம். பின்னர், எழுவத்தி ஏழு, எண்பத்தியொண்டு, உச்சமாக எண்பத்தி மூண்டு எண்டு வந்த கலவரங்களில தமிழர்களின்ரை உயிரும் உடமையும் பெரும்பான்மைச் சமூக இனவாதிகளாலும் காடையர்களாலும் சூறையாடப் பட்டன...?"

"எல்லாமே எங்கடை தலைவிதியப்பா...! கடவுளாலை கூட அதை மாத்தி அமைக்க முடியேல்லை..."

வரதாவை ஆமோதித்தவனாய் நான் துக்கப் பட்டேன்.

"எழுபதுகளின் கடைக் கூறிலும் எண்பதுகளின் ஆரம்பத்திலும் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் சூழ்நிலை ஏற்பட்டது. அது தீவிர மடைந்ததால் திம்புப் பேச்சு வார்த்தையும் அதனைத் தொடர்ந்து ஜே.ஆர். ராஜிவ் அமைதி ஒப்பந்தமும் ஏற்பட்டது."

"ஒப்பந்தத்தின்படி... வடகீழ் மாகாண இணைப் புடன் கூடிய மாநில சுயாட்சி ஓரளவு அதிகாரப் பகிர்வுடன் - கிடைக்கக் கூடியதாக இருந்துது. அதனைத் தமிழ்த் தலைமை யும் தலைவரும் இழுத்தடித்ததால் எல்லாமே தலை கீழாகியது... திலீபனின் அருமந்த உயிர்தான் - அந்த முறிவு களுடனும் சிதைவுகளுடனும் காவு கொள்ளப்பட்டது."

எனது கருத்தை எதிரொலிப்பது போல வரதா அங்கலாய்த்தாள்.

"அதிகாரமில்லாத மாகாண சபை...!"

"என்ன மாகாண சபையாயிருந்தாலென்ன. பெடியள் அதை ஏற்று, அதிகார வரம்புகளை அகலிக்க அரசை நிர்ப்பந்தித் திருக்கலாம்"

"தமிழீழக் கனவுகளுடன் இருந்தவர்களுக்கு இதெல்லாம் பத்தியப்படுமா என்ன? எல்லாமே வீணடிக்கப் பட்டு விட்டதாகவே நான் நினைக்கிறன்."

வரதாவின் குறை சொல்லலை மறுதலிப்பது போல நான் சொன்னேன்:

"நாம... நம்ம அருந்தமிழர்கள் பட்டு உத்தரிக்க வேண்டுமென்பது விதி"

"இல்ல... விதியில... மதியால் வென்றிருக்க முடியும். இயக்கத்துக்கு போர்வல்லபம் இருந்த அளவுக்கு அரசியல் வலலபமும் இணங்கிப் போகும் இயல்பும் இல்லாமல் போய் விட்டது"

அவளது அந்தப் பேச்சு சற்று அதிகமானதாகவே எனக்குப்பட்டது.

"ஈழக்கனவு நிறைவேறக்கூடிய சாத்தியம் எந்த சந்தர்ப்பத்திலும் கிட்டவில்லை. சர்வதேச வல்லூறுகளின் வல்லாதிக்கமும் காந்தி தேசத்தின் சதிச் செயலும் எம் தலைமையையும் மக்களையும் முள்ளிவாய்க்கால் வரை இழுத்துச் சென்று நிலத்தோடு நிலமாய் அரைத்து விட்டது. அதுதான் உண்மை. முள்ளி வாய்காலெனும் பொறியில் அகப்பட்ட லட்சோபா லட்சம் மக்கள் எல்லாவற்றையும் இழந்ததுடன் தம் உயிரையும் இழந்தார்கள்"

"தமிழ் மக்கள் மட்டுமா... அவர்களுடைய நம்பிக்கைச் சுடரான தலைவரும் அருமந்த மனைவியும் குழந்தைகளும் அழிக்கப்பட்ட துயரம் "வரலாறாகி விட்டது"

"தமிழர் வீரம் இப்படி... இப்படி வரலாறாக மட்டும் தானாக முடியும் என்பது தான் நியதி போலும்..."

எனது மனக் கொதிப்பின் வெம்புதல்கள்.

"இது நம்பிக்கை வரட்சியா...?இல்லை இல்லை, சர்வ தேச ஒடுக்குதலின் முன் நமக்கு எதுவுமே சாத்தியமில்லை என்பதைத் தான் இது உறுதிப்படுத்தியுள்ளது."

அவளது பேச்சை ஆதரித்தபடி நான் தொடர்ந்தேன்:

"இன்று வரை தமிழர் தம் போராட்டமும் நோக்கமும் தென்பகுதி மக்களால் - ஒரு சிலரால் - அருந்தலாக உணரப் பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட போதும் மாறி மாறி ஆட்சிக்கு வரும் தென்பகுதி அரசுகளாலும் பேரின வாதத் தலைவர் களாலும் கொச்சைப்படுத்தப்பட்டபடியே தான் இருக்கிறது"

"ஒரு கடலோடி வீர மகனால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் ஒரு வித அதீத கற்பனைக்கூறுகளைக் கொண்டதாக இருந்த போதும் - தமிழர் தம் வீரத்தை, தமிழரது வரலாற்றுப் பக்கங்களில் அழுத்தமாகவே பதிவு செய்திருக் கிறது"

கவலை தோய்ந்து வரதாவின் முகத்திலும் குரலிலும் ஒரு விதமான பெருமிதம் சேர்ந்து இழைந்தது... அவ்வுணர்வு என்னையும் அழுத்தமாகப் பற்றிக் கொண்டது.

33

வரதா நினைவுகளில் நிறைந்து பொலிபவள். அவளுடன் வாழ்ந்த வாழ்கை எப்பொழுதும் எனக்குத் தெவிட்டுவதில்லை. அவள் நிறைகுடம். குறைகளேதுமற்ற பெரு வடிவம். எதையுமே பார்த்துப் பார்த்து நறுவிசாயச் செய்யும் பக்குவத்துடன் இறுதி வரை என்னுடன் இருந்தவள். வாழ்ந்தவள்.

அவள் என்னை விட்டுப் பிரிந்து மூன்றாண்டுகள் ஆகி விட்டன. இருந்தும், அவளது கைபட்ட, கால்பட்ட, கண்பட்ட இடமென்று எல்லாமே அவளது நினைவுகளை என்னுள் கிளர்த்தியபடியே இருக்கின்றன.

வீட்டில் அவளது இருப்பு ஒவ்வொரு பொருளிலும் கனிந்து கசிந்து பரிமளிக்கிறது.

அவள் உடனிருந்த காலத்தில் வீடு காற்று உட்புகுந்து அலம்பும் இடமாக எப்பொழுதும் இருந்தது. வீடு முழுமையும் சுகந்தம் வீசும் வகையில், பூமணங்கமழும். ஃப்பிறெஷ்னர் பயன்படுத்துவாள். கழிப்பறையில் பினோல் மணம். குளிய லறையில் எயர்விக் என அலுப்புச் சலிப்பற்ற ஏற்பாடுகள்!

"வரதா நீ பத்துவயதின் பின்னர் சைவ உணவு உண்ணத் தொடங்கி விட்டாய். ஆனாலும் எனக்காகச் சில சமயம் அசைவ உணவு சமைப்பாய். எனது சுவையறிந்து உன்னால் சமைக்க முடிவது அதிசயம் தான். கறிக்கு உப்புப், புளி, காரமென எல்லாமே எப்படி அசத்தலாய்!"

"உனது கைதொட்ட Walking sticks இரண்டும் தேடு வாரற்று இங்கு வீட்டில் கிடக்கின்றன. அவற்றைப் பார்க்கும் பொது மனசு பொங்கிப் பொங்கி விம்முறுகிறதே அம்மா!"

"ஹோலில் உள்ள ஷோக்கேசில் எத்தனை ரகமான பொம்மைகள். தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மைகளைக் கண்டு விட்டால் நீ குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பது எனது நினை வோடு ஆகி விட்டவையாகும். விகடம் ஏதேனுமென்றால் போதும் போதுமென்றாகி விடும் உனக்கு. வயிறு புண்ணாகும் வரை சிரிப்பாய்."

"முன் கூடத்தில் மேற்குச் சுவரில் தொங்க விடப்பட்டிருக்கும் தாத்தாவினதும் பாட்டியினதும்

பொம்மைகள் - அவர்களின் தலைகள் மட்டும் தான் - என்னமாய் உனக்குப் பூரிப்பினை தந்திருக்கின்றன. கிழவியின் விஷமச் சிரிப்பும் கிழவனின் கண்களில் கசிந்து வரும் ஈரலிப்பும் உன்னைப் பாடாய்ப் படுத்தியிருக்கின்றன."

"உனது அடுப்படி எவ்வளவு தூய்மையும் ஒழுங்கும் உடையது. அந்தப் பேணுகை எல்லாம் உன்னால் முடிந்தவை தான்! பொருட்கள் இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டிய மாதிரி மிகவும் செட்டாக இருக்கும். காஸ் அடுப்புகள் இரண்டு வைத்திருந்தாய். அது மட்டுமா அவண், றோஸ்ரர், மிக்ஸி கிறைண்டர் என்ற எல்லாமே உனது தேவை கருதிச் சேகரமானவை. சகலதையும் பெற்றுச் சகலதுமாய் இருந்தவள் நீ! புகட்டில் உட்கார்ந்த படி நீ சமைப்பது எவ்வளவு அழகு...! விருந்து என்று வந்து விட்டால் உனது சமையலில் அறுசுவை மிளிரும். விருந்தோம்பும் பண்பு உனக்கு இயல்பானதாய் வந்துவிட்ட ஒன்று. உனது தளர்ச்சி யற்ற முயற்சிகளுக்கு உனது நோய் எப்பொழுதுமே தடையாக இருந்ததில்லை."

"ஒரு மனையியில் ஆசிரியை என்பதை படுக்கை விரிப்புப் போடுதல் தொடங்கி தளபாட ஒழுங்கு செற்றி செற் இருக்க வேண்டிய இடம், அவற்றின் குஷன்களின் தன்மை, ஜன்னல், கதவுச் சேலைகள் அவற்றின் நிறம் எதிலுமே உனக்கு மிகுந்த கவனம் இருந்தது. சுவருக்குப் பூசும் பெயின்ற், தொட்டு தரைக்குத் தடவும் பொலிஷ், கதவுகள், ஜன்னல்களுக்கான வாணிஷ் வரை உனது ரசனையும் தேர்வும் மிகவும் மெச்சத்தக்கன.

"காலந்தோறும் நீ பாவித்தவை அனைத்துமே எனது பாவனைக்குரியவை ஆகி விட்டன. அவை: Pantry cupboard நிறைந்திருக்கும் எவர்சில்வர்ப் பாத்திரங்களா? வீடு, ஜன்னல், கதவுகளை பொலிஷ் பண்ணும் தூரிகைகளா, பாத்ரூம் கழுவும் பிறஷா, Wash basin அடைக்கும் பட்சத்தில் அடைப்பெடுக்கும் இரும்புக் கம்பியா, நீ மருந்து வில்லைகள் வைத்துப் பாவித்த பிளாஸ்ரிக் டப்பாக்களா? இன்னும் இன்னும் எத்தனை பொருட்கள் இப்பொழுது எனது பாவனைக்குரியவை ஆகி விட்டன"

"எதையும் பார்த்துப் பார்த்துச் செய்யும் இயல் புடையவள் நீ! அதைப் போலவே நானும் இப்பொழுது உன்னைப் போலவே எதையும் பார்த்துப் பார்த்துச் செய்வதற்குப் பழக்கப்பட்டு விட்டேன்."

"வீடு முழுவதுமே உனது கை பட்டுக் கசிந்த வாசமே இன்றுவரை பரிமளிக்கின்றது. நீ என்னுடன் இருப்பதான உணர்வையே இந்த வாசம் தருகிறது. வீடு முழுமையும் நிரம்பித் ததும்பும் உன்னைப் பிரிந்து விட்டதான உணர்வு எனக்கு இல்லை. இந்நிலை பிரிவென்பது எமக்கு எப் பொழுது இல்லை... இல்லை என்பதை உணர்த்துவது தானே...!"

34

இரண்டாயிரத்திப் பதினைந்து பங்குனி நாலாம் திகதி நாமிருவரும் கொழும்பு புறப்பட இருந்தோம். அதற்கு முதல்நாள், மூன்றாம் திகதி மாலை வரதாவின் ஒன்றுவிட்ட தம்பி ஞானேஸ் காலமாகி விட்ட செய்தி எங்குளுக்குக் கிடைத்தது. அவர் எங்களிருவரிலும் மிகுந்த வாரப்பாடுடையவர். சிறாம்பியடி ஒழுங்கையில் இருக்கும் அவரது வீட்டுக்கு உடனடியாகச் சென்றோம். அவருடைய மனைவியும் மகளும் செய்வதறியாது சித்தங்கலங்கி நின்றார்கள். அங்கு சென்ற வுடன் உயிர் நீத்த ஞானேஸின் உடலை வரதா நீரினால் துடைத்து ஒடி கொலோன் போட்டுச் சுத்தம் செய்தாள். அவரது நண்பர் தயாளனின் உதவியுடன் உடை மாற்று வித்தாள். சகல ஒழுங்குகளையும் செய்த பின்னர் நாங்கள் இருவரும் இரவு பதினொரு மணியளவில் வீடு திரும்பினோம். மறுதினம் காலை சாவிட்டுக்குச் சென்று. ஞானேஸின் உடலைப் பார்த்தோம். கரணவாய்க்குருக்கள் வருகை தந்து, கிரியைகளை ஆரம்பித்ததும் ஞானேஸின் துணைவியாரிடம் விடை பெற்றுக் கொண்டோம்.

நாம் எக்ஸ்பிரஸ் புகையிரதத்தில் பயணப்பட இருப்பது அவருக்குத் தெரியும்.

"எக்ஸ்பிரஸ்... எக்ஸ்பிரஸ் எண்டு எல்லாரும் சொல்லுகினமப்பா அதில போய்ப் பார்ப்பமா..." எண்டு அவள் தான் சொன்னாள். பயணத்தின் போது எதுவும் பேசாமல் வந்தவள். திடீரென என் பக்கமாகத் திரும்பி, "சாவீட்டுக்குப் போயிட்டு வந்து பயணம் செய்யக்கூடாது எண்டு சொல்லு வினம்... அது கூடாதாம். சரி அதுக்கு நாம என்ன செய்யேலும்... பயண ஒழுங்கைத் தள்ளிப் போடேலாது தானே...!"

அவளே கேள்வி கேட்டு, அவளே பதிலும் தந்தாள். அவள் நினைத்தது போல, அவளது கொழும்புப் பயணம் அமையவில்லை. பயணத்தின் பின்னர் அவள் உயிருடன் ஊர் திரும்பி வரவில்லை. அவள் வணங்கிய தெய்வங்கள் அனைத்தும் அவளைக் கைவிட்டு விட்டன.

ரயிலில் இருந்தபோது கந்தர்மடம் கந்த சாமி மாமாவின் கடைக்குட்டி எங்களுடன் சக பயணியாகப்" பயணம் செய்தார். அவர் தகப்பனாரைப் போல விகடமாகப் பேசும் பேர்வழி. அவர் ஏதோ சொல்ல இயல்பாகவே Quick witted ஆன வரதாவும் மறுத்தான் அடித்தாள். மகிழ்ந்து சிரித்த அவர் அவளது பயணம் பற்றிக் கேட்டறிந்தார்.

"நல்ல வடிவா ஒப்பரேசன் நடக்கும். நல்லூர்க் கந்தன் அருள் எப்பொழுதும் உங்களுக்கு இருக்கும்" என வாழ்த்தினார்.

கொழும்பு செல்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக அவள் உறவினர் எல்லாரையும் கந்தர்மடத்திலும் வேலணையிலும் பழம் றோட்டிலும் போய்ப்பார்த்தாள். அவளது பெறாமக்களான அனுவும், அபியும் வைத்தியர்களாக யாழ்.போதனா வைத்தியசாலையில் வேலை பார்த்தார்கள். அவர்கள் இருவருக்கும் வரதாவின் கொழும்புப் பயணமும் osteoporasis முழங்கால் மூட்டுத் தேய்வு வருத்தத்துக்கான சத்திர சிகிச்சையும் உவப்பானதாக இருக்கவில்லை. அவர்களது ஆட்சேபனைகளை ஏற்காமல் சிரித்து மழுப்பியதுடன் எல்லாவற்றையும் கடவுள் பார்த்துக் கொள்வார் என்று பதிலும் தந்தாள். எல்லாரையும் பார்த்துத் திரும்பியவள், அவளது சின்ன மாமியின் கடைக்குட்டித் தங்கையான கமலாவையும் போய்ப் பார்த்தாள். அவள் மிகவும் இயக்கம் கெட்ட நிலையில் பலவீனமாக இருந்தாள்.

"கமலா! ஒரு பத்துநாள் தான் கொழும்பில நிப்பன்... சத்திர சிகிச்சை முடிந்ததும் திரும்பி வருவன்... வந்ததும் என்னுடன்... எங்க வீட்டில வந்து நீ இருக்கலாம்..." என்று கூறி விட்டு வந்தாள். ஆனால் அவள் வர முடியாமலே போய் விட்டது. கமலாவும் வரதாவின் உயிர் பிரிந்த பின்னர், மூன்றாம் நாளளவில் உயிர்பை முடித்துக் கொண்டாள்.

வரதா நீ குறைகள் இல்லாதவள். அப்படி எதவாது இருந்தாலும் அதை நிவர்த்தி செய்து நிமிர்ந்து வரக்கூடியவள். பூரண நிறைவை நீ நாடியதால் தான் முதல் காலின் சத்திர சிகிச்சை செய்து வெற்றி பெற்றாய். அதனால் தான் இரண்டாவது காலையும் சிகிச்சைக்கு உட்படுத்த விரும்பினாய். அதை அறிந்து கொண்டு உனது தம்பி கமல் உன்னை டொக்டர் பார்ணக்கலவிடம் அழைத்துச் சென்றார். பத்தாம் திகதி பார்த்த அவர் மறுநாளே, அதாவது பதினோராம் திகதி சத்திர சிகிச்சைக்கு நாள் குறித்தார். எல்லாமே, ஏன் அவசர அவசரமாக நடந்தன. உனது தம்பியும் உன்னோடு உதவியாக நிற்காது சீமைப்பக்கம் போய் விட்டார்.

உனது சத்திர சிகிச்சை மிகவும் பிரபலமான ஆசிறி சேர்ஜிக்கலில் தான் நடந்தது; நாலு மணி அளவில் உன்னைச் சூழ உனது உறவுகள், உனது பெரியண்ணர், கமலின் மகள் மீரா, எனது தம்பியின் மகன் சுபேன், இந்துவின் மகள் அனு நின்றார்கள். எல்லாருமே வைத்தியர்கள். இருந்தும்,

அவர்களால் உன்னைக் காப்பற் முடியவில்லை. அன்று இரவு பன்னிரெண்டு மணிக்கு முன்பின்னாக உனக்கு நாவறட்சி ஏற்பட்டது. உன்னால் எதுவுமே முடியவில்லை. நல்லூர் கந்தனையே உனது வாய் சதா அரற்றிக் கொண்டிருந்தது. உனது கரங்கள் என்னை இறுகப் பற்றியபடி.. மருத்துவமனையில் உனது H.O. வாக இருந்த வைத்தியர் துடை நடுங்கியாகவும் எடுப்பார் கைப்பிள்ளையாகவும் இருந்தார். அவர், ஒரு வகையில் உனது உயிர் பிரிவதற்கு முதற் காரணராக இருந்திருப்பாரா...? I.C.U.வில் - அதி விசேட சிகிச்சைப் பிரிவில் - காலதாமதமாகத் தான் உன்னைச் சேர்த்தார்கள். உனது இனிய உயிர் பதின்மூன்றாம் திகதி காலை ஏழு மணியளவில் பிரிந்தது. உனது உயிர் பிரிந்து விட்டது என்பதை வைத்தியர் ஒருவர் வந்து எனக்கும் பெரிய மச்சானுக்கும் கூறினார். I.C.U.வில் கிடந்த உன்னை எட்டிப் பார்த்தேன். எனது இனிய துணை மூச்சு வாங்குவது போல இருப்பதைக் கவனித்தேன். அங்கு நின்ற மருத்துவரிடம் அது பற்றிக்கேட்டேன்:

"இல்ல... உயிர் பிரிஞ்சிட்டுது... வென்றிலேற்றரில் இருப்பதால் தான் அப்படி..." என்றார்.

எனது துணைவி இனிமேல் என்னுடன் இருக்க மாட்டாள் என்பதை உணர்ந்து உறைந்து போனேன். சூனியத்துள் அமிழ்ந்து போன உணர்வு தான் என்னுள் எஞ்சியது.

என் வாழ்வில் நான் கண்டடைந்த பேரழகு. பிரம்மாவின் அபூர்வ சிருஷ்டி. மாசற்ற அன்பை அமுதாய்ச் சொரிந்த அரசி. எனக்காகவே படைக்கப்பட்ட ஜீவ ரசம். என் கண்முன்னாலேயே கரைந்து விட்டதை என்னால் தாங்க முடியவில்லை.

அடிவயிற்றில் திமிறிக் கொண்டு வந்த பெரும் கேவல் என்னை நிலைதடுமாற வைத்தது. உயிர் அழிந்த சட உணர்வே அப்பொழுது என்னுள் திகைந்தது.

எனது வரதா, வரது, வரதுக் குட்டி பாரம் முழுவதையும் இறைவனிடம் இறக்கி வைத்து விட்டுப் போய் விட்டாள்; என்னைப் பற்றிய அக்கறைகள் எதுவுமில்லாமல்.

வரது, உன்னுடன் வாழ்ந்த பசுமையான நாட்கள் எனக்குப் போதுமானவை. இதை என்னால் இப்பொழுது சிறுகச் சிறுக உணர முடிகிறது.


குன்று சரிய முடியுமா...? அது இயல்பானது தான் என்பதை, காலவெளியில் கரைந்து நீ எனக்கு உணர்த்தி விட்டாயம்மா!

முற்றும்.

அந்நியமாதல்

சதகன்

ஊசியிலைக் காடுகளில்
இலையுதிர் காலம்.
கருவேல மரத்தில்
கருப்பஞ்சாறு
வடிகிறது.
ஆகாசப் பொத்தல் வெளிகளில்
ஒசோனின் துர்நாற்றம்.
தூக்கணாங்குருவி ஒன்று
தூரதேசம் போகிறது.
மயிர்கொட்டி
நெளியும் புழுவாய்
அடிவயிற்றில்
அருவருப்பு.
நொதியம் சுரந்து
நுரையீரலை
அரிக்கிறது.
சஹாரா மணற்பரப்பில்
அக்கரை சென்ற
படகுக்காய்
காத்திருக்கும் நான்,
ஊர் நடப்புகளில்
ஒன்ற மாட்டாதவனாய்.



செ.அன்புராசாவின் "மனுவுக்கு மனு" கவிதைத் தொகுதி குறித்த மனப்பதிவுகள்



வெற்றி துஷ்யந்தன்

தமிழ் படைப்புச் சூழலில் இன்று வரைவிலக் கணங்களிற்கு அப்பாற்பட்டு பல்வேறு இலக்கிய வகையறாக்களும் இயங்கி வருகின்ற சூழலில் மிகப் பிரதானமாக கவிதைஇலக்கியம் பல்வேறு மாறுபாடு களையும் வேறுபாடுகளையும் கொண்டு பயணிக்கின்ற ஒன்றாக மாறியிருக்கின்றது. மனத்தின் எழுச்சிகளிற் கான வெளிப்பாடாய் எழும் வரிகள் தாமாகவே தமக்கான எழுத்தின் வடிவங்களை தீர்மானிக்கின்றன. அதையே இன்றைய விமர்சகர்களில் பெரும்பா லானோர் வடிவமாற்றம், கட்டுடைப்பு என தாமறிந்த வற்றை சாதாரண ஒரு படைப்பாளியின் எழுத்தில் கூட புகுத்திவிட அவர்கள் அனை தொடர முடியாத சூழமைவுகளிற்கு கூட வந்து விடுகிறார்கள். ஆக கவிதையை பொறுத்தமட்டில் படைப்பாளியின் சாதாரண மனவெழுச்சியின் வெளிப்பாடாகவே எழுத்தை தீர்மானிக்கின்றது அப்படியான ஒரு சூழலில் எங்கள் கைகளுக்கு கிடைத்த செ. அன்புராசா அவர்களின் "மனுவுக்கு மனு" என்னும் கவிதைத் தொகுதி மனத்தின்பால் பல்வேறுபட்ட சிந்தனா தெறிப்புகளை தந்து நிற்கின்றது.

பல்வேறு தள பரிமாணங்களிலும் சிறப்புற இயங்கும் செ.அன்புராசா அவர்கள் எழுத்துத்தளத்தை பொறுத்தவரையில் தனக்கென்றொரு பாணியை வைத்திருக்கின்றார். அதனை இந்தத் தொகுதியினூடே நன்கறியக்கூடியதாக உள்ளது. மிக தத்துரூபமான அட்டைப்படத்தோடு வெளியாகியிருக்கும் இந்த நூலில் பல்வேறு உணர்வுநிலை சித்திரிப்புக்களை சொல்லக்கூடிய பல கவிதைகள் இருக்கின்றன. வரிகளை நீட்டிக் கொண்டிருக்காமல் இரண்டு மூன்று அடிக்குள் கூட நல்ல சிந்தனைக்குரிய விடயங்களை தருகிறார். குறிப்பாக, "இரவும் இனிதே" கவிதை யில்,9பக்48)

இரவை ஏன் வெறுக்கிறாய்
இரவில்லாத பகல்
இனிமையா...?

என்ற கவிதையிலும், அடுத்து மண்பற்று என்ற கவிதையில்(பக்.67)

ஒருவனுக்கும்
சொந்தம் இல்லாததை
ஒவ்வொருவனும்
உரிமை கொண்டாடுகின்றார்!

என்கின்ற கவிதைகள் யதார்த்த பூர்வமான உண்மை களை, உணர்வாக தருகிறார் கவிஞர்.

ஏற்கெனவே பல மூத்த கவிஞர்கள் சொல்வது போல கவிதை இன்று கடிவாளம் இல்லாத ஒன்றாய் தான்நினைத்தது போல பல்வேறு ஆடையணிந்து வருகின்ற ஒன்றாக மாற்றமடைந்து விட்டது. அதிலும் உரையாடல் தன்மை முயற்சிகள் கூட என்று அதனை மிக அழகாக வெளிப்படுத்துகின்ற உத்தியின் காரணமாக சுவை பட தெரிகின்றது. அந்த வகையில் செ. அன்புராசா அவர்கள் ஒருத்தருக்கும் ஓதிப்போடாத உனக்கு மட்டும்தான்" என்ற கவிதையில்,

அடியேய்
அறிஞ்சனியே...

என்று தொடங்கி மிக அழகாக அதனை கொண்டு செல்கிறார். இந்த அருமையான மொழிநடை ஒவ்வொரு வீடுகளிலும் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் ஆச்சிகளையும், பாட்டிகளையும் ஒருதரம் நினைவில் கொண்டு வருகின்றது.

கிட்டதட்ட இருபது ஆண்டுகளை அண்மிக்கும் செ.அன்புராசா அவர்களின் எழுத்துப்பயணத்தில் அவர் ஏலவே பல நூல்களை எழுத்து தளத்திற்கு நிரம்பவே தந்திருக்கின்றார்.

மனுவுக்கு மனு என்னும் இந்த தொகுதியில் உள்ள ஒவ்வொரு கவிதைகளும் புரையோடிப் போன எமது சமூக வாழ்வில் இடம்பெறும் பலவற்றை துகிலுரித்து காட்டுகிறது. சாதிய முரண்பாடு, அரசியல், ஆற்றாமை, நிலத்தின் வலிகள் என ஒவ்வொரு தளத்திலிருந்தும் பல்வேறு கேள்விகளை பதிவு செய்கின்றது. கவிஞரின் அறச்சீற்றம் பல்வேறு கவிதைகளிலும் தெரிகின்றது. குறிப்பாக "வேண்டுவது என்னவோ என வேண்டுகை செய்கிறேன்"(பக்.70) என்ற கவிதையில்,

"உன்னை
வீணாக்கியவர்களை
வெட்டிச் சரிக்க வேண்டும்
சுட்டுத்தள்ள வேண்டும்
கட்டித் தூக்க வேண்டும்
குத்திக் குதற வேண்டும்"

என்றபடியாக மனத்தின் ஆக்கிரோஷத்தை சிறப்பாக கவிதைக்குள் கொண்டு வந்திருக்கின்றார்.

உண்மையிலும் தொகுத்து நோக்குகின்றபோது எழுத்துலக அனுபவத்தை மிகச்சிறப்பாக கவிதைக்குள் கொண்டு வந்திருக்கும் கவிஞர், எல்லா உணர்வுகளை யும் தனக்கு வாலாயமான மொழியில் ஒரு வடிவத்திற்குள் கொண்டு வந்திருக்கின்றார். பாமரர்களிற்கும் புரியக் கூடிய இந்த மொழிநடையே இவரின் வெற்றி என்பேன். நல்ல பல விடயதானங்களை, யாரும் சொல்லாத தொடாத விடயங்களையெல்லாம் தொட்டதினூடே அவரின் சமூக அக்கறையை புரிய முடிகின்றது. பல்வேறு ரக மக்களுடனும் நித்தம் பழகுகின்ற செ. அன்பு ராசா அவர்கள் போன்றவர்களினூடே சில விடயங்கள் வெளிவரும் போது அவை உண்மையின் தரிசனங்களாக படைப்பினூடே வாழக் கூடியன. ஆக மொத்தத்தில் நல்ல பல மனவுணர்வுகளை தரக்கூடிய தந்த ஒரு படைப்பை சுவைத்த மனநிறைவை இந்த தொகுதி தருகிறது. தொடர்ந்த இன்னும் பல எழுத்துக்களை எதிர்பார்க்க தோன்றுகிறது.

பேசும் இதயங்கள்

(1)

ஆசிரியர், ஜீவநதி
அன்புடையீர்
1

ஜீவநதி 124ஐ முழுதாகக் காணக் கிடையாத போதும் பத்பநாப ஐயர் பற்றி என் குறிப்பிற்கு யேசு ராசாவின் எதிர்வினையைக் கே.எஸ். சிவகுமாரனின் தயவிற் கேள்விப்பட்டேன். அத்தொடர்பில் நான் கூறியவற்றைச் சற்று விளக்க எழுதுகிறேன்.

"நூலை ஆராதித்தல்" எனுந் தலைப்பில் 2016இல் வந்த ஐயருடைய பவள விழா வெளியீட்டில் எனது முதற் கவிதை நூலை வெளியிட அவர் காட்டிய ஆர்வம் பற்றி விரிவாக எழுதியிருந்தேன். நெடுங் காலமாக அவர் வேண்டிய போதெல்லாம் மறுக்காது பல்வகை விடயங்களை வழங்கியபோதும், ஐயர் என்னை ஏனோ நினைவு கூரவில்லை. அதைப் பற்றி நான் சினக்கவில்லை. ஏனெனில் எனக்கு எப்போதும் அவரிடம் மரியாதை உண்டு.

1970-80களில் ஐயரும் அவருடன் இயங்கி யோரும் அக்கறை காட்டிய 'இடதுசாரிகள்' (1990 மட்டி லிருந்து ஒரு கட்சிக்கு வெளிப்பட ஆதரவு தெரிவிக்கும் நான் உட்பட) அப்போது கட்சி அடையாளமற்றோர் அல்லது கட்சிகளினின்று ஒதுங்கி யோர். ஒரு சிலர் கம்யூனிஸ்ற் கட்சிகளை வன்மமாகக் கடிந்தோர். மற்றப்படி, (1980கள் வரை தமது "தமிழ்த் துரோகப் பாவங்களைக்" களையாத சிவத்தம்பியும் புதுவை இரத்தினதுரையும் உட்பட) இடதுசாரிக் கட்சி அடையாளமுள்ளோரை அவர்கள் எட்டத்திலேயே வைத்தனர்.)

தமிழீழம் என்பது அசாத்தியம் என வட்டுக் கோட்டைப் பிரகடனத்துக்கு முன்பிருந்தே கூறி வந்தேன். இன்றுந் தமிழீழக் கனாக் காட்டி மக்களை ஏய்ப்போரைக் கடிகிறேன்.

"கிளை நுனியில் நின்று கிளையை வெட்டினாற் கீழே விழுவாய்" என்றவனைச் சினந்த பரமார்த்த குரு வின் மூடச் சீடனுக்கு, விழுந்த கையோடாவது உண்மை அரைகுறையாக விளங்கியது. விழுந்த பின்னுஞ் சினங் காட்டுவோர் பற்றிச் சிரிப்பேனே யொழியச் சினக்க மாட்டேன்.

புலம் பெயர்ந்த பின்பு ஐயர் சம்பந்தப்பட்ட தொகுப்புகளைப் பார்ப்போருக்கு அவர் புறக்கணித் தாரா இல்லையா என விளங்கும். எனினும் முழுப் பழியையும் அவர் மீது போட இயலாது. லக்ஷ்மி ஹோம்ஸ்ற்றோம் தொகுத்த "The Penguin Book of Tamil Poetry: The rapids of a great river" நூலில் முருகையனும் பாரதிதாசனும் உட்பட முக்கியமான சில கவிஞர்கள் விடுபட்டதைக் கடிந்து நான் Third Eye இணையச் சஞ்சிகையில் எழுதியதை லக்ஷ்மியும் அறிவார், ஐயரும் அறிவார். பிற தொகுப்புத் தெரிவுகள் பற்றிச் செல்வா கனகநாயகத்திடமும் முறையிட்டிருக்கிறேன். அவருடைய இறுதித் தொகுப்புப் பற்றி நான் முன் வைத்த குற்றச் சாட்டை அவர் பெருந்தன்மையுடன் ஏற்றார்.

பத்மநாப ஐயர் யாரிடம் கடன்பட்டுத் தன்னை ஒரு அரசியற் போக்குடன் நெருக்கினாரென விசாரிக்க இது இடமல்ல. அவருடைய நூல் வெளியீட்டு ஆர்வம் அவரை அப்போக்கினுட் சிக்க வைத்தது என்பதை விட வேறு விளக்கமேதும் ஐயருக்குப் பெருமை தராது.

இலங்கை இன்னமும் சீனக் கடன்பொறியிற் சிக்கவில்லை எனவும் சீனாவை விட யப்பானுக்கே அது நேரடியாயும் மறைமுகமாயும் மிகக் கடன்பட்டுள்ளது எனவும் பலர் விளக்கியுள்ளனர். இந்த நாடு எக் கடன் பொறியிற் சிக்குவதும் எந்நாட்டின் ஆதிக்கத்துக்கு உட்படு வதும் எனக்கு உவப்பல்ல என யேசுராசா அறிவார்.

2

குறும்பா என்பது லிமரிக் (limerick) எனும் பொது வாகச் சற்று விரசமான நகைச்சுவைக் கவிதை வடிவின் தமிழ்ப் பிரதி. அது பாடுதற்கானது. எனவே அதன் சந்தக் கட்டுப்பாடு இறுக்கமானது. அது ஏறத்தாழ

தானான தன்னன தானனா
தானான தன்னன தானனா
தன்னா தன்னனனா
தன்னா தன்னனனா
தானான தன்னன தானனா

என அமையும். அத்துடன், வரிகள் 1,2,5இன் ஈற்றிலும் 3,4இன் ஈற்றிலும் எதுகை வரும்

மஹாகவி அதைத் தமிழில் எடுத்தாண்ட போது,

தந்தனன தந்தனன தானா
தந்தனன தந்தனன தானா
தந்தனன தந்தனன
தந்தனன தந்தனன
தந்தனன தந்தனன தானா

எனும் வகையில் (3+3+2; 3+3+2; 3+3; 3+3; 3+3+2 அசைகள் வருமாறு) மாற்றியமைத்ததோடு வரிகள் 1,3,5இல் எதுகையைத் தமிழ்க் கவிதை முறைக்கேற்ப வரியின் முதலிலும் ஆங்கிலக் கவிதை முறைக்கேற்ப வரிகள் 1,2,5இன் ஈற்றிலும், வரிகள் 1-2இற்கும் 3-4இற்கும் முதற் சொற்களில் மோனைப் பொருத்தத்துடனும் எழுதினார்.

அவரைப் பின்பற்றி எழுதிய பலர் அவ்வளவு கட்டிறுக்கமாக எழுதவில்லை. பிற சந்த வடிவங்களை முயன்றோர் உளர். எனினும் உருவத்திலும் உள்ளடக்கத்தி லும் யாரும் மஹாகவியை மீறியதாக நான் எண்ண வில்லை. இடையிடையே சிலர் குறும்பாக்களை எழுதிய போதும் நமது சூழலில் அது ஒரு வேடிக்கைப் பாட்டு மரபாக நிலைபெறவில்லை. தமிழரின் நகைச்சுவை யுணர்வு பற்றி அது எதையுங் சுட்டுகிறதோ என நிச்சயமில்லை.

ஜீவநதி (122, 123) இதழ்களில் எஸ். சிவசேகரனின் குறும்பா முயற்சி வரவேற்கத்தக்கது. சந்த ஒழுங்கு இடையிடை பிசகுவதைத் தவிர்க்கக் கவனங் காட்டின் செய்யுள்கள் சிறப்பாக அமையும்.

- அன்புடன் சி. சிவசேகரம்

(2)

ஆசிரியர், ஜீவநதி
அன்புடையீர்
1

122ம், 123ம் இதழ்களின் குறும்பாக்கள் பற்றிக் குறிப்பிட்ட பின், 124ம் இதழில், பாலமுனை பாரூக்கின் செய்நேர்த்தியான குறும்பாக்கள் மூன்றைக் கண்டேன். வருந்துமாறு, Limerick வடிவற்ற ஆங்கில மொழிபெயர்ப்பு

களில் உள்ள மொழிபெயர்ப்புக் கோளாறுகளும் இலக்கணப் பிழைகளும், சென்ற தசாப்தத்தில், மர்ஹூம் இக்பாலின் கவிதைத் தொகுதியொன்றிற் சேர்த்த குறைபாடான மொழிபெயர்ப்புகளால் நூல் தர மிறங்கியமையை நினைவூட்டின.

2

தேவகாந்தனின் நாவல்கள் இரண்டை முன் வைத்த குறிப்பிற் சுய-தணிக்கையின் தோற்றுவாய் பற்றி ந. இரவீந்திரனின் விளக்கங்கள் குழப்பமானவை. சுய-தணிக்கை தமிழுக்குப் புதிதல்ல. பேசாப் பொருள் ஒவ்வொன்றும் அதை வெளிப்படப் பேச இயலும் வரை சுய-தணிக்கைப்பட்டது. பயத்தாலன்றி, ஒருவர் மனம் நோதலைத் தவிர்க்கவோ பொதுநலன் கருதியோ சுய-தணிக்கை நிகழலாம். தேவகாந்தன் சுய-தணிக்கையில் இறங்கினாரா, விடுதலைப் புலிகளை நேசித்ததால் விடயங்களைப் பேசாது தவிர்த்தாரா என்பது விசாரிக்கத் தக்கது. தொட்டதற்கும் புலிகளைச் சாடுவோருக்கு அவரின் புலிப் பாசத்தைச் செரிப்பது கடினம். அவரைக் 'கட்டுடைக்கும்' இரவீந்திரனுஞ் சிறிது சுய-தணிக்கையில் இறங்கியுள்ளாரென ஐயுறுகிறேன்.

அது போக, இந்திய, இலங்கை இராணுவ ஒட்டுப் படைகளாய் இயங்கிய 'விடுதலை இயக்கங்கள்' பற்றி இரவீந்திரனின் கவனமான மௌனம் சுய-தணிக்கையா, வேறெதுவுமா?

தலித் இலக்கியப் பிதாமகனாக என்.கே. ரகு நாதனை உயர்த்த அவரெடுக்கும் முயற்சி பலவீனமானது. உயர்சாதிப் பிரமுகர் ஒருவரின் சாதிய நயவஞ்சகத்தை "நிலவிலே பேசுவோம்" சிறுகதை பேசுகிறது. அன்று போராட்ட உணர்வுடன் சாதியத்தைச் சாடிய கதை சொல்லிகளில் நீர்வேலி பொன்னையனும் டானியலும் கணேசலிங்கனும் முக்கியமான சிலர். தமிழகத் தலித் இலக்கியப் போக்கினர் சிலர் டானியலைச் சிறப்பித்தமைக் குக் காரணங்கள் பல. அக் கவனிப்பு இங்கே சில மன உளைச்சல்களை ஏற்படுத்தியதைப் பலரும் அறிவர்.

3

அலெக்ஸ் பரந்தாமன் மூன்று அனுபவங்களை வைத்து 'மெத்தப் படித்தோரென' அவர் கருதும் மூவருக்குத் தீய நோக்கங் கற்பிக்கிறார். பிரச்சினையின் ஒரு தரப்பின் அவதானத்தை வைத்து எவரும் வலிந்து அடையும் முடிபுகளை விவாதிப்பது என் தேவையல்ல. எனினும், சில பொது உண்மைகளைக் கூறுவது தகும்.

தம்மைப் பெரும் படைப்பாளிகளாகக் கருதித் தம்மை ஆதரிப்பது மற்றோர் கடனென மயங்கும் படைப் பாளிகள் உளர். இலக்கிய ஏடுகளையோ நூல்களையோ வெளியிட்டுக் கைநட்டப் படுவோரே இந் நாட்டில் மிகுதி யென அவர்கட்கு விளங்காது. எப்படியாவது ஒரு நூலை வெளியிடும் ஆசையால் அல்லற்படுவோரின் அவலத் துக்கு இரங்கிச் சில நூல்களையேன் பதிப்பிக்கும் நன் நெஞ்சங்கள் இன்னமும் உள. ஆனால் நமது பெரிய பிரச்சினைகள், தரமான தமிழ் வாசிப்புப் போதாமையும் படைப்பாளிகளின் மொழியாற்றலின் சரிவும் என்பேன்.

அதேவேளை, படைப்பாளியின் பலவீனத்தைப் பாவித்துப் பிரசுரச் செலவிற் பகுதியையும் முதற் சில நூல்-வெளியீட்டு நிகழ்வுகளின் வருமானத்தையும் வாரிச் சுருட்டும் தமிழகத்துப் பிரசுரப் 'புரவலர்களும்' பதிப்புரிமை யைத் தமதாக்கிக் கூடிய விலையிற் குறைந்த தொகையிற் பிரதிகளை அச்சிட்டுப் பணந் திரட்டும் சான்றோரும் உளர். உண்மையறிந்தும் 'சுய-தணிக்கை' செய்யும் மேலோரும் உளர்.பிறரை ஏய்க்க ஒருவர் மெத்தப் படிக்கத் தேவை யில்லை. அரசியல் உலகத்தையும் வர்த்தக உலகத்தை யும் விடக் கேடுகெட்டது இலக்கிய உலகம் என நொந்த சுந்தர ராமசாமி, அரசியற் பிரமுகராகவோ வர்த்தகப் பிரமுகராகவோ வளர முயலாததால் அவ்வாறு சொன்னார் போலும். அவரை ஒரு இலக்கிய விக்கிரகமாக்கும் நிறுவன முயற்சிகள் கடும் முனைப்புறும் இவ்வேளை அவர் வாழ்ந்திருந்தாற் தன் கருத்தை மாற்றியிருப்பாரோ?

ஒரு படைப்பின் பெறுமதிக்குத் தனிமனித மன நிறைவு ஒரு அளவுகோல். சமூகப் பயன் இன்னொன்று. வணிகப் பெறுமதி உட்படப் பிறவும் உள. ஒருவரின் எதிர்பார்ப்பு அவரின் ஏமாற்றத்தின் அளவுகோலாகலாம்.

"தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்பது நோக்கத்தக்க கூற்று.

4

"இண்டைக்கும் இரவு வரும்" கதையில் மேற்கோட் குறிகள் தாறுமாறாகவுள்ளன. இவ்வாறான பிசகுகளை யாராவது கவனிப்பது சஞ்சிகைக்கு நல்லது.

- அன்புடன் சி. சிவசேகரம்.

(3)

ஜீவநதி ஆசிரியருக்கு,


தமிழ்த் தேசியத்தையும் பிரதான போராட்டச் சக்தியையும் விமர்சனம் என்ற பெயரில் கொச்சைப் படுத்தும் முயற்சிகள், 2009 ஆம் ஆண்டின் பின்னர் ஆங் காங்கே நடைபெறுகின்றன. ந. ரவீந்திரனும் அத்தகைய முயற்சியில் 'துணிச்சலாக' ஈடுபட்டு வரும் ஒருவரே! 'ஜீவநதி' கலை இலக்கிய இதழைத் தனது அரசியலுக்குத் தந்திரமாக அவர் பயன்படுத்தியுள்ளார். அவருக்கு விரி வாகப் பதிலளித்து, 'ஜீவநதி'யின் பக்கங்களை (அவரைப் போலவே) வீணடிக்க நான் விரும்பவில்லை! ஆனால், சுருக்கமாக எனது பதிலைப் பதியவேண்டியுள்ளது. 'புலிப் பக்தர்கள்' என அவர் கிண்டல்பண்ணுவது போல், நீண்ட காலமாக ஈழத் தமிழர்களைத் தேசிய இனம் அல்லவெனக் கூறிவந்த 'சீனப் பக்தர்' திருக்கூட்டத்தில் ஒருவர்தான் அவர் எனச் சொல்ல, இன்னொருவருக்கு அதிகநேரம் எடுக்காது! ஒடுக்குவோரையும் ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடு வோரையும் (மார்க்சியவாதியான!) ரவீந்திரன் ஒரே நிலை யில் வைக்கிறார்!; ஒடுக்கப்படுவோரின் அழிவுகளுக்குத் தமிழ்த் தேசியத் தலைமையே காரணம் என்பதன்மூலம், பேரினவாத அரசை மறைமுகமாக (தந்திரத்துடன்?) அழிப்புக்களின் பொறுப்பிலிருந்து விடுவிக்கிறார்!. ரஷ்யாவிலும் சீனாவிலும் எல்லாம் ஏதோ "சுத்தமான' போராட்டம் நடைபெற்றதென மூடத்தனமாக இன்னும் நம்பும் அவர்தான், இங்கு நடைபெற்ற சில தவறுகளை மட்டும் (வேறும் சிலரைப் போல) பெரிதுபடுத்துகிறார்! எப் போதும் ஒடுக்கப்படுவோர் பக்கம் நிற்கவேண்டிய மார்க்சிய நோக்குநிலையுடன் - நட்பு ரீதியான விமர்சனத்தை முன்வைக்காமல், பகைமை ரீதியான விமர்சனத்தையே வெளிப்படுத்துகிறார்! தவிர, பரந்துபட்ட தமிழ் மக்களின் ஆதரவை ஒருபோதும் பெற்றிராமல், அறிக்கைகளிலும் கட்டுரைகளிலும் வெறும் "பேனாப் புரட்சி" வீரர்களாகவே இத்தகையவர்கள் இருப்பது, ஈழத்து வரலாறு! ஈழத்தில், மகத்தான தமிழ்த் தேசியப் போராட்டத்தின்போது நடை பெற்ற வியத்தகு சாதனைகள் - தியாகங்கள் - மாற்றங் களில் ஒன்றையேனும் ஏற்றுக்கொள்ளாத (இயங்கியல் வாதிகளாம்!!!) இவர்கள், யதார்த்தவாதிகள் அல்ல நேர்மையாளரும் அல்ல! தமது கடந்தகாலத் தவறான அரசியல் கொள்கைகள் - செயற்பாடுகளின் தோல்வி களினால் ஏற்பட்ட 'தாழ்வுச்சிக்கல்' காரணமாய் மேற் கிளம்பும் வக்கிரக் கருத்துக்களையே தொடர்ந்தும் இவர்கள் சொல்லுவார்களானால், பரந்துபட்ட ஈழத் தமிழ் மக்களிடமிருந்து மேலும் அந்நியப்படுவது நிஜம்!

- சு. மாறன்

செல்லமுத்தூஸ்

நெல்லியடி மாநகரில் .....

வரலாறு படைக்கும் ஆடைகளின் சாம்ராஜ்ஜியம்.



பிரதான வீதி நெல்லியடி

0212263238

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.